with familiar spirits, பிதிர்தரிசி.
Con-sūm'a-ble, *a.* செலவிடக்கூடிய,அழியக்கூடிய.
Con-sūme', *v. a.* அழித்தல், எரித்தல், நாசப்படுத்தல், அறுத்தல்.
to destroy, நிருமூலமாக்குதல், அழித்தல், தீர்த்தல், நாசப்படுத்தல்.
to devour, பட்சித்தல், தின்னல்.
as fire, எரித்தல், சுடுதல், தீய்த்தல், தகித்தல், பட்சித்தல்.
to use up, or exhaust, செலவழித்தல், செலவுபண்ணுதல்.
Con-sūme', *v. n.* மெலிந்துபோதல், உக்கிப்போதல், சிதைதல், தேய்தல், அற்றுப்போதல்.
to be exhausted, சமைதல், செல்வழிதல், தீர்தல், மாளுதல்.
Con-sūm'er, *s.* அழிப்போன், செலவிடுவோன், பட்சிப்போன்.
Con-sūm'ing, *a.* பட்சணிக்கிற, பட்சிக்கிற, அழிக்கிற, தேய்க்கிற.
Con'sum-māte, *v. a.* சித்தியாக்குதல்,தீர்த்தல், நிறைவேற்றுதல், முடித்தல்.
to be consummated, தீர்தல்,நிறைவேறுதல், முடிதல், சித்தியாதல்.
Con-sum'mate, *a.* தீர்க்கமான, திருத்தமான, திட்டமான, நிறைவான, பூரணமான.
Con-sum'mate-ly, *adv.* தீர்க்கமாய், திருத்தமாய், திட்டமாய், பூரணமாய்.
Con-sum-mā'tion, *s.* நிறைவு, அனுகூலம், நிறைவேற்றம், பூரணம், தீர்ப்பு, முடிவு.
of marriage, விவாகசித்தி.
Con-sump'tion, *s.* அழிவு, சேதம், கேடு, நைவு, தேய்வு.
actual, சென்றசெலவு.
the disease, கயரோகம், ஈழை, சயரோகம், சயநோய், சயபித்தம்.
of money, பணச்செலவு.
of stores, &c., செலவு, சமைதல்.
Con-sump'tive, *a.* மெலிகிற, கயரோகமுள்ள, சயரோகமுள்ள.
Con-sump'tive-ly, *adv.* கயரோகமாய், மெலிவாய்.
Con-sump'tive-ness, *s.* கயரோகத்தன்மை, ஈழைத்தன்மை.
Con-tab'u-lāte, *v. a.* பலகைபரவுதல், மச்சுப்பரவுதல்.
Con'tact, *s.* கூட்டம், சங்கம், ஒற்றுமை, பரிசம், ஊறு,

to come in contact, முட்டுதல், படுதல், தொடுதல், ஒட்டுதல், தட்டுப்படுதல், பரிசித்தல்.
Con-tā'gion, s. தொற்று, பற்று, பரிசம்.
Con-tā'gious, a. தொற்றுன, ஒட்டத்தக்க, பிடிக்கிற.
disease, தொற்றுநோய்.
fever, தொற்றுக்காய்ச்சல்.
Con-tā'gious-ness, s. தொற்றுகை, பற்றுகை, பிடிக்கை, ஒட்டுகை.
Con-tāin', v. a. கொள்ளல், அடக்குதல், பிடித்தல்.
Con-tāin', v. n. இச்சையடங்குதல், அமைதல்.
Con-tāin'a-ble, a. கொள்ளத்தக்க, கொள்ளக்கூடிய, அடங்கக்கூடிய.
Con-tām'in-āte, v. a. கறைப்படுத்தல், அழுக்காக்குதல், அசுசிப்படுத்தல், தீட்டாக்கல்.
Con'tam-in-ate, a. பழுதாக்கப்பட்ட, கறைப்படுத்தப்பட்ட.
Con-tam-i-nā'tion, s. தீட்டு, அசுசி, கறை.
Con-temn', v. a. இகழுதல், கொஞ்சப்படுத்துதல், நிந்தித்தல், பழித்தல், கிஞ்சிற்படுத்தல்.
Con-tem'ner, s. இகழ்வோன், நிந்தனைகாரன், பழிப்போன், விதூஷிகன்.
Con-tem'per, v. a. அமைத்தல், பதப்படுத்தல், தணித்தல்.
Con-tem'per-a-ment, s. தணியுந்தன்மை, மத்திமசீருக்குவருகை,
Con-tem'per-āte, v. a. தணித்தல், பதப்படுத்தல்.
Con-tem-per-ā'tion, s. சமநிலையாக்குஞ்செயல், தணிப்பு.
Con-tem'plate, v. a. தியானித்தல், சிந்தித்தல், ஆராய்தல், நினைத்தல், அனுசந்தித்தல்.
Con-tem-plā'tion, s. தியானம், சிந்தனை, ஆராய்ச்சி, அனுசந்தானம், நினைவு, யூகிப்பு, யோகம்.
Con-tem'pla-tive, a. தியானமுள்ள, சிந்தனையுள்ள, நினைவுள்ள.
Con-tem'pla-tive-ly, adv. தியானமாய், நினைப்பாய், சிந்தனையாய், யூகிப்பாய்.
Con'tem-plā-tor, s. தியானக்காரன், தியானவான், யோகி.
Con-tem-po-rā'ne-ous, } a. ஏககாலத்திலுள்ள,
Con-tem'po-ra-ry, } சகவாசமுள்ள, தற்காலத்திலுள்ள.
Con-tem'po-rā-ry, s. சககாலவாசி, தற்காலசீவி.
Con-tempt', s. அசட்டை, நிந்தனை, நிந்தை, இகழ்ச்சி, அவமதிப்பு, பழிப்பு, நிஸ்காரம், அலட்சியம்.
Con-tempt'i-ble, a. நிந்திக்கப்படத்தக்க, நிஸ்கரிக்கத்தக்க, நீசத்துவமான.
Con-tempt'i-ble-ness, s. இழிவு, நீசத்துவம்.
Con-tempt'i-bly, adv. இழிவாய், நீசமாய், அற்பமாய்.
Con-tempt'u-ous, a. நிந்திக்கிற, தூஷிக்கிற, இகழ்கிற.
behavior, நெறிப்புநடை, வீம்புநடை, இடம்பம்.
remarks, பரிகாசப்பேச்சு, பழிச்சொல், இழிவுச்சொல், அவமதிச்சொல்.
Con-tempt'u-ous-ly, adv. இகழ்ச்சியாய், பரிகாசமாய், அவமதியாய்.
Con-tempt'u-ous-ness, s. இகழ்ச்சி, பரிகாசம், அவமதிப்பு, வீம்பு.
Con-tend', v. n. பொருதல், சண்டைசெய்தல், பிணங்குதல்.
in argument, தருக்கித்தல், விவாதஞ்செய்தல்.
in war, போராடுதல், யுத்தஞ்செய்தல், மலைதல்.
Con-tend'er, s. வாதாடி, தருக்கசாலி, சண்டைக்காரன், விரோதி.
Con-tent', s. மனத்திருத்தி, திருத்தி, பூரிப்பு, அமைதி, மனரம்மியம்.
as contents, (*which see.*) அடக்கம்.
Con-tent', v. a. பிரியப்படுத்தல், மனரம்மியமாக்கல்.
Con-tent', a. மனரம்மியமான, பூரிப்பான, ஆறுதலான.
Con-tent'ed, a. திருத்தியுள்ள, போதுமென்றமனமுள்ள.
to be contented, பூரித்தல், மனரம்மியப்படுதல்.
Con-tent'ed-ly, adv. மனரம்மியமாய், மனஆறுதலாய், அமைதியாய்.

Con-tent'ed-ness, s. மனஅமைவு, மனரம்மியம்,மனப்பூரிப்பு,மனவாறுதல்.

Con-ten'tion, s. வாக்குவாதம், விவாதம், பிணக்கம், முரண்டு.
quarrel, சண்டை, குழப்பம், பிணக்கு.

Con-ten'tious, a. குழப்பமுள்ள, சண்டையுள்ள, வாக்குவாதமுள்ள.

Con-ten'tious-ly, adv. சண்டையாய், குழப்பமாய், தருக்கமாய்.

Con-ten'tious-ness, s. குதர்க்கம், சண்டைத்தனம், முரட்டுத்தனம், தருக்கஞ்செய்கிறகுணம்.

Con-tent'less, a. சமாதானமில்லாத, ஆறுதலில்லாத, மனரம்மியமற்ற, அமைவற்ற.

Con-tent'ly, adv. சமாதானமாய், ஆறுதலாய், அமைதியாய், இரம்மியமாய்.

Con-tent'ment, s. மனரம்மியம், அமைதி, பரிபூரணம், திருத்தி, பூரிப்பு.

Con'tents, s. அடக்கம், அடங்கியவைகள்.
of a book, அடக்கம், பொழிப்பு.
of a box, உள்ளடங்கியபொருள்கள்.
of a field, பரப்பு.
of a letter, சீட்டுவாசகம், காகிதத்தின்பொழிப்பு, உடல்வாசகம்.

Con-term'in-ate, a. ஒரெல்லையுள்ள, சரிமட்டமுள்ள.

Con-term'in-ous, a. எல்லையுள்ள, மட்டுள்ள, அடுத்த, அயலான.

Con'test, s. சண்டை, போர், யுத்தம்.
in words, வாதம், விவாதம், வாக்குவாதம்.

Con-test', v. சண்டைபிடித்தல், பொருதல்.
to dispute, வாக்குவாதம்பண்ணல், எதிர்நியாயம்பேசல்.

Con-test'a-ble, a. சண்டைக்கேதுவான, வாக்குவாதமுள்ள, தருக்கம்விளைவிக்கிற, யுத்தமுண்டாக்கத்தக்க.

Con-test-ā'tion, s. சண்டை, யுத்தம், தருக்கம்.

Con-test'ing-ly, adv. சண்டையாய், வாக்குவாதமாய், இகலாய்.

Con-test'less, a. சண்டையில்லாத, தருக்கத்துக்கிடமில்லாத, வழக்கற்ற.

Con'text, s. தொடர்ந்தவசனம், தொடுத்தகருத்து, குளகவாக்கியம்.

Con-text', a. பின்னப்பட்ட, நெருங்கிய.

Con-text'ure, s. பின்னல், பன்னினஇயல், சம்பந்தம்.

Con-ti-gū'i-ty, Con-tig'u-ous-ness, s. கிட்டு மானம், அயல், அருகு, சமீபம், அண்டை.

Con-tig'u-ous, a. சமீபமான, அடுத்த.

Con-tig'u-ous-ly, adv. அடுக்க, நெருங்க, அயலாக, அணுக.

Con'ti-nence, Con'ti-nen-cy, s. இச்சையடக்கம், நிறை, நெறி, சுத்தம்.

Con'ti-nent, s. கண்டம், தேசம், வருடம்.

Con'ti-nent, a. இச்சையடக்கமுள்ள, மனரம்மியமான, நெறியுள்ள, நிறையுள்ள.

Con-ti-nent'al, a. கண்டத்துக்கடுத்த, தேசத்துக்கடுத்த.

Con'ti-nent-ly, adv. நெறியாய், கற்பாய், சுத்தமாய்.

Con-tin'gence, Con-tin'gen-cy, Con-tin'gent, s. இடையூறுடைமை, சந்தேகம், நிச்சயமில்லாமை, தற்செயலானது, இடைச்சம்பவம்.

Con-tin'gent, a. இடையூருன, தற்செயலான.

Con-tin'gent-ly, adv. தற்செயலாய், இடைச்சம்பவமாய்.

Con-tin'u-al, a. இடைவிடாத, ஓயாத, நித.

Con-tin'u-al-ly, adv. நித்தியமாய், இடைவிடாமையாய், நிலையாய், தொடர்ச்சியாய்.
very often, அடிக்கடி, விடாப்பூட்டாய்.

Con-tin'u-al-ness, s. விடாப்பூட்டு, நிதம், இடைவிடாமை.

Con-tin'u-ance, Con-tin-u-ā'tion, s. இடைவிடாமை ஓயாமை, நீடிப்பு, தொடர்ச்சி, சந்ததம்.

Con-tin'u-ā-tor, s. நிலைநிற்கிறவன், ஓயாதவன், விடாதுநிற்பவன்.

Con-tin'ue, v. a. நிலைப்படுத்தல், தரிக்கச்செய்தல்.

a series, தொடுத்தல்.
Con-tin'ue, *v. n.* நிலைத்தல், நிற்றல், தங்குதல், நீடித்தல், தொடர்தல்.
Con-tin'u-ed-ly, *adv.* நெடுக, விடாமல், தினமும், அனுதினமும், இடைவிடாமல்.
Con-tin'u-er, *s.* நிலைநிற்கிறவன், தொடர்வோன்.
Con-tin'u-ing, *a.* தரிக்கிற, நீடிக்கிற, நிலைநிற்கிற.
Con-ti-nū'i-ty, *s.* நீடிப்பு, ஓயாமை, விடாமை, தொடர்ச்சி.
Con-tin'u-ous, *a.* தொடர்ச்சியுள்ள, நிலையுள்ள.
Con-tin'u-ous-ly, *adv.* நெடுக, விடாப்பூட்டாய், தொடையாய்.
Con-tort', *v. a.* திரித்தல், திருக்குதல், முறுக்குதல்.
Con-tor'tion, *s.* திரிப்பு, திருகல், முறுக்குகை.
of the nerves, வலிப்பு.
of a serpent, நெளிதல், புரள்தல்.
Con-töur', *s.* பரும்படியாய்வரைந்தகுறிப்பு, சாயல், ஆகிருதி, மாதிரி, சாங்கம்.
Con'tra, *adv.* எதிராய், மாறாய், எதிர்மறையாய், விரோதமாய்.
attraction, எதிர்கருஷணம், எதிரிழுப்பு.
Con'tra-band, *s.* கள்ளச்சாமான், கள்ளவியாபாரம், கள்ளச்செட்டுக்குவிரோதமானபிரமாணம்.
Con'tra-band, *a.* கள்ளச்செட்டான, தடைபண்ணப்பட்ட.
goods, கள்ளச்சரக்கு, கள்ளஉடைமை.
Con'tra-band-ist, *s.* கள்ளவியாபாரி.
Con'tract, *s.* உடன்பாடு, பொருத்தம், உடன்படிக்கை, கட்டு, நியமம்.
by job, குத்தகை.
Con-tract', *v. a.* சுருக்குதல், குறைத்தல், ஒடுக்குதல், குறுக்குதல், நெருக்குதல்.
to betroth, மணவாக்குக்கொடுத்தல்.
to cramp, &c., பிடித்தல், கொளுவுதல், சுளுக்குதல், நெருக்குதல்.
a bargain, பொருந்துதல், உடன்படிக்கைபண்ணுதல்.
a debt, கடன்படுதல், கடன்வாங்குதல், கடன்சுமத்தல்.
a job, குத்தகையாய்ப்பொருந்துதல.
a quality, கொள்ளுதல், பிடித்தல்.
rays, as setting sun, குவித்தல், கூப்புதல், கிரணஞ்சுருக்குதல்.
rust, &c., கறைபிடித்தல், களிம்புபிடித்தல், கறள்பிடித்தல்.
Con-tract', *v. n.* சுருங்குதல், குறைதல், ஒடுங்குதல், குறுவுதல், உடன்படிக்கைபண்ணுதல்.
as a flower, குவிதல், கூம்புதல்.
to be contracted, as the limbs, குறண்டுதல், வாங்குதல்.
Con-tract'ed, *a.* சுருங்கின, ஒடுங்கின.
as agreed, வாக்குப்பண்ணப்பட்ட.
Con-tract'ed-ly, *adv.* சுருங்க, சுருங்கி, ஒடுங்கி, நெருங்கி.
Con-tract'ed-ness, *s.* நெருக்கம், ஒடுக்கம்.
as stinginess, பிசுனம், உலோபம்.
Con-tract'i-ble, *a.* சுருங்கத்தக்க.
Con-tract'i-ble-ness, *s.* சுருங்கத்தக்கதன்மை.
Con-trac'tion, *s.* சுருக்கம், நெருக்கம், ஒடுக்கம், அடக்கம், இடுக்கம்.
as sin, பாவஞ்சுமத்தல், பழிப்படுதல்.
of a nerve, &c., சுளுக்கு, வலிப்பு, வாங்கல்.
by gout, rheumatism, &c., வாதமுடக்கம், வாதப்பிடிப்பு.
Con-tract'or, *s.* பொருத்தக்காரன், உடன்படிக்கைபண்ணுவோன்.
Con-tra-dict', *v. a.* மறுத்தல், எதிர்த்துப்பேசுதல், தடுத்தல், ஆட்சேபித்தல்.
one's self, கூறியதைமறுத்துக்கூறல், மறுத்துரைத்தல்.
Con-tra-dic'tion, *s.* எதிர்ப்பேச்சு, மறுப்பு.
inconsistency, ஒவ்வாமை, ஒத்திராமை, இசையாமை.
of a witness, சாட்சிமாறுபடுகை.
Con-tra-dic'tion-al, *a.* ஒவ்வாத, பொருந்தாத.
Con-tra-dict'o-ri-ly, *adv.* எதிராய், விரோதமாய், மாறுபாடாய், எதிரிடையாய்.
Con-tra-dict'o-ri-ness, *s.* எதிரிடை.

Con-tra-dict'o-ry, *a.* விரோதமான, எதிரிடையான, மறுக்கிற.
Con-tra-dis-tinct', *a.* வேற்றுமையான, எதிரான, மாறுன.
Con-tra-dis-tinc'tion, *s.* வேற்றுமை, எதிர், மாறுபாடு.
Con-tra-dis-tinct'ive, *a.* வேற்றுமையான, மாறுன.
Con-tra-dis-tin'guish, *v. a.* எதிரொத்துப்பார்த்தல்.
Con-tra-in-di-cā'tion, *s.* எதிர்க்குறிப்பு.
Con-tra-pōse', *v. a.* எதிராகவைத்தல்.
Con-tra-po-si'tion, *s.* எதிர்நிலை.
Con'tra-ries, *s. (pl.)* எதிரானவைகள், மாறுனவைகள்.
Con-tra-rī'e-ty, *s.* எதிர், விரோதம்.
Con'tra-ri-ly, *adv.* எதிராய், பகையாய், விரோதமாய், மறுதலையாய்.
Con'tra-ri-ness, *s.* எதிர், பகை, விரோதம்.
Con-trā'ri-ous, *a.* எதிரான, விரோதமான.
Con'tra-ri-wīse, *adv.* எதிராய், மாறுய்.
Con'tra-ry, *s.* எதிர், எதிரிடை, விரோதம், மற்றைப்புறம்.
Con'tra-ry, *a.* எதிரிடையான, விரோதமான, மற்றைப்புறமான.
Con'träst, *s.* விரோதஉவமை.
Con'träst', *v. a.* எதிர்வைத்தல், வேற்றுமைதோன்றவைத்தல்.
Con-tra-vēne', *v. a.* எதிர்த்தல், தடுத்தல், குறுக்கேவருதல், விரோதித்தல்.
Con-tra-vēn'er, *s.* எதிரி, தடைசெய்வோன், மறுப்போன், விரோதி.
Con-tra-ven'tion, *s.* எதிர்ப்பு, தடுப்பு, மறுப்பு, விரோதிப்பு.
Con-tra-ver'sion, *s.* எதிர்ப்பக்கமாகுகை, மறுபக்கமாகுகை.
Con-trib'u-ta-ry, *a.* இறைகொடுக்கிற, ஆயங்கொடுக்கிற, துணைசெய்கிற.
Con-trib'ute, *v. a.* உதவுதல், ஈதல், ஒத்தாசைசெய்தல்.
Con-trib'ute, *v. n.* உதவுதல், எதுவாகுதல், கொடுத்துதவுதல்.
Con-tri-bū'tion, *s.* உதவி, உபகாரம், நன்கொடை, ஈகை.
 box, மகமைப்பெட்டி, ஈட்டப்பெட்டி.
 as levy, வரி, இறை, கப்பம்.
 of money, மகமை, பணக்கொடை.
Con-trib'u-tive, *a.* ஏவுகிற, ஒத்தாசையுள்ள, சகாயஞ்செய்கிற.
Con-trib'u-tor, *s.* உதவிக்காரன், ஒத்தாசைக்காரன், உபயோகி.
 of property, கொடையாளன், உபகாரி.
Con-trib'u-to-ry, *a.* உதவிசெய்கிற, உபகரணமான, உபயோகமான.
Con'trīte, *a.* நைவுள்ள, நொருங்கின, பச்சாத்தாபமுள்ள; துக்கமுள்ள.
 mind, நைந்தமனம், பச்சாத்தாபமுள்ளமனம்.
Con'trīte-ly, *adv.* நைவாய், மனஸ்தாபமாய்.
Con'trīte-ness, *s.* பச்சாத்தாபம், மனஸ்தாபம்.
Con-tri'tion, *s.* மனநோ, மனநைவு, மனஸ்தாபம், பச்சாத்தாபம்.
Con-trīv'a-ble, *a.* யோசிக்கத்தக்க, யோசிக்கக்கூடிய.
Con-trīv'ance, *s.* உபாயம், சூழ்ச்சம், சூத்திரம்.
 as fiction, &c., கட்டுக்கதை, கற்பிதகத்தியம்.
Con-trīve', *v. a.* உபாயம்பண்ணுதல், சூழ்ச்சிபண்ணுதல், இயற்றுதல், தொடுத்தல்.
Con-trīv'er, *s.* சூழ்ச்சக்காரன், மனோபாவிகன், மனோகற்பிதன்.
Con-trōl', *s.* கணக்குப்புத்தகம், பேரேடு, இடாப்பு.
 as power, ஆளுகை, நடத்துகை, தத்துவம்.
Con-trōl', *v. a.* ஆளுதல், கட்டுப்படுத்தல், கீழ்ப்படுத்தல், கையாளுதல், அடக்குதல், நடத்துதல்.
Con-trōl'la-ble, *a.* அடங்கக்கூடிய, கட்டுப்படுத்தக்கூடிய, ஆளப்படக்கூடிய, நடத்தப்படக்கூடிய.
Con-trōl'ler, *s.* ஆளுகைசெய்வோன், விசாரணைக்காரன், மேல்விசாரணைக்காரன், கண்காணி, கத்தன்.
Con-trōl'ler-ship, *s.* கண்காணிப்பு, ஆளுகை, கத்தவ்வியம்.
Con-trōl'ment, *s.* ஆளுகை, அடக்குகை, கட்டாயம்பண்ணுகை, கீழ்ப்படுத்துகை.

as opposition, எதிரிடை, விரோதம்.
Con-tro-ver'sa-ry, *a.* தருக்கமுள்ள, விவாதமுள்ள.
Con-tro-ver'sial, *a.* தருக்கமான, வாதான, வாக்குவாதமுள்ள.
Con-tro-ver'sial-ist, *s.* தருக்கசாலி, வாக்குவாதி.
Con'tro-ver-sy, *s.* தருக்கம், வாது, வாக்குவாதம், வழக்கு, வியாச்சியம், விவாதம்.
Con'tro-vert, *v. a.* எதிர்பேசுதல், எதிர்நியாயம்பேசுதல், தருக்கித்தல், மறுத்தல், விவாதம்பண்ணுதல்.
Con'tro-vert-er, Con'tro-vert-ist, *s.* தருக்கசாலி, எதிர்வாதி, வாக்குவாதி, மறுத்துரைப்போன், விவாதி.
Con-tro-vert'i-ble, *a.* தருக்கத்துக்கிடமான, அசாத்தியமான, பிசகான.
Con-tu-mā'cious, *a.* முரணுன, அமையாத, அடங்காத, கீழ்ப்படியாத, கேளாத, வசையாத.
to be contumacious, எதிருரைத்தல், முரண்டுபண்ணுதல், பிடிவாதம்பண்ணுதல்.
Con-tu-mā'cious-ly, *adv.* இறுமாப்பாய், கேளாமையாய், முரணாய், முரட்டாட்டமாய்.
Con-tu-mā'cious-ness, *s.* அடங்காமை, பிடிவாதமானதன்மை, குறும்புத்தனம்.
Con'tu-ma-cy, *s.* பிடிவாதம், அமையாமை, கேளாமை, முரண்டு.
in law, அடாதது.
Con-tu-mē'li-ous, *a.* இறுமாப்புள்ள, அகந்தையுள்ள, பெருமையுள்ள, நிந்தையுள்ள, குறும்புள்ள.
Con-tu-mē'li-ous-ly, *adv.* நிந்தையாய், இறுமாப்பாய்.
Con-tu-mē'li-ous-ness, *s.* இடும்பு, இகழ்வு, நிந்தை, இடக்கு.
Con'tu-me-ly, *s.* இறுமாப்பு, நிந்தை, நிந்தைப்பேச்சு.
Con-tūse', *v. a.* நோப்படுத்துதல், தகர்த்தல், நெரித்தல், நொறுக்குதல், நசுக்குதல், காயப்படுத்துதல், இடித்தல்.
Con-tū'sion, *s.* இடிப்பு, தகர்ப்பு, நசிப்பு, நொறுக்கு, மாவாக்குகை.
in surgery, நசிவு.

Co-nun'drum, *s.* சித்திரப்பேச்சு, நொடி, விடுகதை, சிலேடை.
Con-va-les'cence, *s.* சுகம், சொஸ்தம்.
Con-va-les'cent, *a.* சொஸ்தமடைகிற, சுகமாகிற.
to be convalescent, சுகங்காணுதல், சுகப்படுதல்.
Con-vēn'a-ble, *a.* சங்கமிக்கத்தக்க, கூடத்தக்க.
Con-vēne', *v. a.* கூட்டுதல், சேர்த்தல்.
Con-vēne', *v. n.* கூடுதல், சேர்தல்.
Con-vēn'er, *s.* சேர்ப்போன், சங்கத்திற்கழைப்போன்.
Con-vēn'i-ence, Con-vēn'ien-cy, *s.* இசைவு, ஏற்றதன்மை.
as commodiousness, சாவகாசம், சுகம், வசதி, சகாயம்.
Con-vēn'ient, *a.* ஒத்த, இசைவான, சாவகாசமான, வசதியான, சரிப்படுகிற.
time, opportunity, ஏற்றசமயம், ஒத்தசமயம், நற்சமயம், சாவகாசமானதருணம், தற்சமயம்.
to be convenient, ஒத்துக்கொள்ளுதல், வசதியாயிருத்தல்.
Con-vēn'ient-ly, *adv.* இசைவாய், தகுதியாய், இலேசாய், சுகமாய், சாவகாசமாய், வசதியாய்.
Con-vēn'ing, *s.* கூடுகை, சங்கமிக்கை.
Con'vent, *s.* துறவோர்கூட்டம், முனிவர்வாசம், சன்னியாசிமடம்.
Con-vent'i-cle, *s.* கூட்டம், சிற்சங்கம், இரகசியகூட்டம்.
Con-vent'i-cler, *s.* சிற்சங்கானுசாரி, துராலோசனைக்குச்சேருகிறவன்.
Con-ven'tion, *s.* சபைசேருகை, சேர்மானம், ஐக்கம், உடன்பாடு, கூட்டம்.
Con-ven'tion-al, *a.* வழக்கமான, உடன்பாடுள்ள.
terms, பரிபாஷை, குழூஉக்குறி, சங்கேதம்.
Con-ven'tion-a-ry, *a.* உடன்பாடுள்ள, உடன்பிடிக்கையுள்ள.
Con-ven'tion-er, *s.* கூட்டத்தான், சங்காத்தி.
Con-ven'tion-ist, *s.* உடன்பிடிக்கைபண்ணுகிறவன்.
Con-vent'u-al, *s.* சன்னியாசி, சன்னியாசிமடவாசி.

Con-vent'u-al, *a.* முனிவர்வாசத்துக்கடுத்த, துறவோர்நிலைக்குரிய.
Con-verge', *v. n.* கிட்டுகிறது, மையம் நாடுகிறது, குவிகிறது.
Con-verg'ence, *s.* மையத்துக்குவருகை, குவிவு.
Con-verg'ent, *a.* மையம்நாடுகிற, மருவுகிற, அணைகிற, கிட்டுகிற.
Con-vers'a-ble, *a.* சம்பாஷணையுள்ள, கூடிப்பேசுகிற, ஊடாட்டமான.
Con-vers'a-ble-ness, *s.* வாசாலம், வசனுப்பியாசம், சம்பாஷிக்குங்குணம்.
Con-vers'a-bly, *adv.* சம்பாஷணையாய்.
Con'ver-sant, *a.* நடமாட்டமான, பரிட்சையான, பழக்கமான, ஊடாட்டமான, பயிற்சியான.
to be conversant, ஊடாடுதல், பழகுதல், பயிலுதல், அப்பியாசமாதல்.
Con-ver-sā'tion, *s.* சமவாதம், சம்பாஷணை, சல்லாபம், பரிமாற்றம்.
as intercourse, பழக்கம், சகவாசம், சம்வாசம்.
Con-ver-sā'tion-al, *a.* சமவாதத்துக்கடுத்த, சம்பாஷணைக்கடுத்த.
Con'verse, *s.* சம்பாஷணை, நடமாட்டம், ஊடாட்டம், பரிமாற்றம்.
familiarity, கிரீடை, சையோகம்.
Con-verse', *v. n.* பேசுதல், சம்பாஷித்தல், கதைத்தல், அளவளாவுதல்.
to associate, சகசரிதம்பண்ணுதல்.
Con'verse, *a.* எதிரான, மாறுன.
Con'verse-ly, *adv.* எதிராய், மறுதலையாய்.
Con-ver'sion, *s.* மாறுதல், சீரடைதல், விகாரப்படுதல்.
change of side, மறுகட்சிப்படுதல்.
in theology, மனந்திரும்புதல், சீர்ப்படுதல், நெறிப்படுதல், குணப்படுதல்.
Con-vers'ive, *a.* சம்பாஷணையுள்ள, ஊடாட்டமான.
Con'vert, *s.* மனந்திரும்பினவன், அன்னியமதத்திற்சேர்ந்தவன்.
Con-vert', *v. a.* மாற்றுதல், குணப்படுத்துதல், சீர்ப்படுத்துதல், திருப்புதல்.
to apply to one's own use, கவர்தல், அபகரித்தல்.
Con-vert', *v. n.* திரும்புதல், சீர்ப்படுதல், மனந்திரும்புதல்.
Con-vert-i-bil'i-ty, *s.* பின்னொன்றாகக்கூடியது, வேறுபடுத்தக்கூடியது, மாற்றக்கூடியது, மாறக்கூடியது.
Con-vert'i-ble, *a.* மாறக்கூடிய, பதிலாகநிற்கக்கூடிய, ஒன்றுக்கொன்றுபதிலான, விகாரப்படத்தக்க, பிரதிபாவியமான.
Con-vert'i-bly, *adv.* மாற்றுக்குமாறுய், இணையாய், இணைக்கிணையாய், பிரதிபாவியமாய்.
Con'vex, *s.* புறவளைவுள்ளது.
Con'vex, *a.* புறங்கவிந்த.
Con-vex'ed-ly, *adv.* புறங்கவிவாய்.
Con-vex'i-ty, *s.* புறங்கவிவு.
Con'vex-ly, *adv.* புறங்கவிவாய், புறங்கவிந்தவடிவாய்.
Con'vex-ness, *s.* (*see* Convexity.) புறங்கவிந்தவடிவு.
Con-vex'o-con'cāve, *a.* புறவளைவுமுட்குடைவுமுள்ள, அகமும்புறமுங்கவிந்த.
Con-vey', *v. a.* கொண்டுபோதல், கொண்டுவருதல், செலுத்துதல், கொடுத்தல், புறப்படுத்தல்.
sentiments, அருத்தங்கொள்ளுதல்.
to shore, or to bliss, கரைப்படுத்துதல், கரையேற்றுதல்.
Con-vey'ance, *s.* வாகனம், ஊர்தி.
by letter, உறுதிச்சீட்டு, செல்.
Con-vey'an-cer, *s.* உறுதிபண்ணிக்கொடுப்போன்.
Con-vey'an-cing, *a.* அடைமுறிபண்ணுகை.
Con-vey'er, *s.* கொண்டுபோகிறவன், வாகனம்.
Con'vict, *s.* சிறைப்பட்டவன், குற்றவாளி.
Con-vict', *v. a.* குற்றவாளியாகத்தீர்த்தல்.
Con-vic'tion, *s.* குற்றவுணர்ச்சி.
as opinion, மனநிதானம், மனஎண்ணம்.
Con-vict'ive, *a.* குற்றத்தையுணரத்தக்க.
Con-vince', *v. a.* உணர்த்துதல், விளக்குதல், காண்பித்தல், குற்றத்தையுணர்த்தல், அறிவுறுத்தல்.
to be convinced of, நிச்சயித்தல், துணிதல், நிசப்படுதல்.

Con-vince'ment, *s.* குற்றமுணர்த்துகை.
Con-vin'cer, *s.* குற்றத்தையுணர்த்துகிறவன், அறிவிக்கிறவன்.
Con-vin'ci-ble, *a.* குற்றத்தையுணர்த்தத்தக்க, அறிவிக்கத்தக்க.
Con-vin'cing-ly, *adv.* உணர்த்தத்தக்கதாய், நிச்சயப்படுத்தத்தக்கதாய்.
Con-vin'cing-ness, *s.* உணர்த்துந்தத்துவம்.
Con-viv'i-al, *a.* விருந்துள்ள, உற்சவமுள்ள, விழாவுள்ள, ஆடம்பரமுள்ள, கொண்டாட்டமுள்ள, அட்டோலிக்கமுள்ள, ஆலிக்கையுள்ள, களிப்புள்ள.
Con-viv-i-al'i-ty, *s.* உல்லாசம், கொண்டாட்டம், ஆடம்பரம், அட்டோலிக்கம்.
Con'vo-cāte, *v. a.* வரவழைத்தல், கூட்டுதல்.
Con-vo-cā'tion, *s.* அழைப்பு, கூட்டம், சங்கம், சங்கிரகம்.
Con-vōke', *v. a.* சங்கங்கூட்டுதல், அழைத்தல், அழைப்பித்தல்.
Con'vo-lute, Con'vo-lu-ted, *a.* சுருட்டின, உருட்டுள்ள, திரட்சியான, உருட்சியான.
Con-vo-lū'tion, *s.* திரிப்பு, திரிவு, சுருட்டு, சுருள், உருட்சி.
Con-volve', *v. a.* சுற்றுதல், திரித்தல், சுருட்டுதல்.
to be convolved, திரிதல், சுருளுதல், உருளுதல்.
Con'voy, *s.* துணைஞர், காவலர், மெய்காவலர்.
Con-voy', *v.* கூட்டிக்கொண்டுபோதல், துணைப்போதல், காவலாய்ப்போதல், கூடப்போகுதல்.
Con-vulse', *v. a.* இசித்தல், இழுத்தல், வலித்தல்.
as to shake, குலுக்குதல்.
to be convulsed, குறண்டுதல், வலித்தல், வாங்குதல், ஈர்த்தல்.
Con-vul'-sion, *s.* இசிவு, இசிப்பு, இழுப்பு, நரம்புவாங்கல், வலிப்பு, சன்னி.
as tumult, சந்தடி, குழப்பம்.
Con-vul'sive, *a.* வலிப்புள்ள, குறண்டுகிற, இசிவுள்ள.
fits, வலி, இசிவுசன்னி.
Con-vul'sive-ly, *adv.* இசிவாய், வலியாய், குறண்டலாய்.
Cō'ney, Cō'ny, *s.* குழிமுயல்.
Coo, *v. a.* கூவுதல், ஏங்கல்.
Coo'ing, *s.* கூவுகை.
Cook, *s.* சமையற்காரன், பாகதாரி, சுயம்பாகன்.
Cook, *v. a.* சமைத்தல், அடுதல், ஆக்குதல், பாகம்பண்ணுதல்.
to be cooking, சமையலாதல், பாகமாதல், வேதல்.
Cook'er-y, *s.* சமையல்வேலை, பாகவேலை, மடைவேலை.
the science, மடைநூல்.
Cook'-house, Cook'-room, *s.* அடுக்களை, மடைப்பள்ளி, சமையல்வீடு, பாகசாலை, அட்டில்.
Cook'ing, *s.* சமையல், பாகம், சுயம்பாகம்.
Cook'-māid, *s.* சமையற்காறி.
Cool, *s.* குளிர்ச்சி, சீதளம், ஈரம், தண்மை, பசுமை, சாந்தம், தளி.
Cool, *v. a.* குளிரப்பண்ணுதல், ஆற்றுதல், தணித்தல், ஈரப்படுத்தல்.
Cool, *v. n.* தணிதல், ஆறுதல், குளிர்தல், ஈரித்தல்.
Cool, *a.* சீதளமான, குளிர்ந்த, ஈரமான, பசுமையான, சாந்தமான.
water, குளிர்ந்தநீர், தண்ணீர்.
winds, குளிர்காற்று, சீதவாதம்.
Cool'er, *s.* அனலாற்றி, வெப்பாற்றி, வெதுப்படக்கி.
Cool'-head-ed, *a.* அமைவடக்கமுள்ள, ஆராய்வுள்ள, வேகமற்ற, தண்மையான, சாந்தமான, தண்ணளியான.
Cool'ish, *a.* சற்றுக்குளிர்ந்த, புல்லீரமான.
Cool'ly, *adv.* குளிர்ச்சியாய், அமைவாய், அமைவடக்கமாய், ஆராய்வாய், தண்மையாய்.
Cool'ness, *s.* குளிர், குளிர்மை, ஈரம், தண்மை, பசுமை, சீதளம்.
as want of friendship, நட்பில்லாமை.
Coom, *s.* ஒட்டறை, புகையுறை.
as matter working from the boxes of wheels, பண்டியுருளிலிருந்துகக்கும் நிணக்கறை.

Coop, *s.* கரப்பு, கூடு, பஞ்சரம், குயிலாயம், குடம்பை, ஊற்றல், கோழி முதலியவடைக்குங்கூடு.
Coop, *v. a.* கரப்பிலடைத்தல்.
Coop′er, *s.* மரத்தொட்டிமுதலானவைகளைச்செய்யுந்தச்சன், கூடுமுடைவோன்.
Coop′er-age, *s.* மரத்தொட்டிமுதலியவைகளைச்செய்யுந்தொழில்.
Co-op′er-āte, *v. a.* கூடச்செய்தல், கூட்டுவேலைசெய்தல், உடன்வேலைசெய்தல்.
Co-op-er-ā′tion, *s.* உடன்வேலை, கூட்டுவேலை, உபகரணம், கூட்டுவியாபாரம்.
Co-op′er-a-tive, *a.* உடன்வேலையுள்ள.
Co-op′er-ā-tor, *s.* உடன்வேலைகாரன், கூட்டுவேலைகாரன், உபயோகி.
Co-or′di-nate, *a.* ஒத்த, ஒப்பான, சமமான.
Co-or′di-nate-ly, *adv.* ஒத்ததாய், ஒப்பாய், சரியாய், இணையாய், சமநிலையாய்.
Co-or′di-nate-ness, Co-or-di-nā′tion, *s.* } சமநிலை, சரிநிலை, ஒப்பு, சரி, நிகர், இணை.
Coot, *s.* கருநாரை.
Cop, *s.* சிகரம், நுனி.
as tuft, குடுமி, சூடு.
Co-pär′ce-na-ry, Co-pär′ce-ny, *s.* } உடன்பங்கு, உடன்சுதந்தரம், சமசுதந்தரம், சரிபங்கு.
Co-pär′ce-ner, *s.* உடன்பங்காளி, உடன்சுதந்திரன்.
Co-pär′cing, *s.* (*see* Coparcenary.) சமசுதந்தரம்.
Co-pärt′ment, *s.* (*see* Compartment.) அடுத்தஅறை, அடுத்தபாத்தி, ஒத்தஅறை, ஒத்தபாத்தி.
Co-pärt′ner, *s.* உடந்தையாளி, உடன்கூட்டாளி, கூட்டாளி, உடன்பங்காளி, சமபாகி, சகிதன்.
Co-pärt′ner-ship, *s.* உடன்கூட்டு, உடன்பங்கு, கூட்டுத்தொழில், கூட்டாளி.
Cōpe, *s.* தலைமூடி, வானவிரிவு, ஆகாயவிரிவு.
sacerdotal, குருவஸ்திரம்.
Cōpe, *v. a.* மேலார்ப்புப்பிடித்தல்.
Cōpe, *v. n.* எதிர்தல், இகலுதல்.
Co-per′ni-can, *a.* சூரியமண்டலசாத்திரத்துக்குரிய, கொப்பர்நீக்கஸ்அறிந்த.
Cop′i-er, *s.* (*see* Copyist.) பார்த்தெழுதுவோன், பிரதியெழுதுகிறவன், சவாதுகாரன், பிரதிபத்திரிகன்.
Cōp′ing, *s.* ஆரல்வேய்வு.
Cō′pi-ous, *a.* நிறைவுள்ள, பூரணமான, திரளான, பூர்த்தியான.
to be copious, நிறைவாகுதல், கதித்தல், செழித்தல், மிகுத்தல்.
Cō′pi-ous-ly, *adv.* மிகுதியாய், நிறைவாய், செழிப்பாய், கதிப்பாய், ஏராளமாய்.
Cō′pi-ous-ness, *s.* பூரணம், சம்பூரணம், நிறைவு, செழிப்பு, தாராளம், பொலிவு, பொம்மல், மிகுதி, ஏராளம்.
of a language, பூரணபாஷியம், சொல்மாட்சி, சொல்வண்மை, சொல்வளம்.
Cop′ped, *a.* சிகரம்போன்ற, சிகரமுள்ள, நுனியுள்ள.
Cop′per, *s.* செம்பு, தாம்பிரம்.
as boiler, கடாரம், கொப்பரை.
Cop′per, *v. a.* செப்புத்தகடுதைத்தல், செப்போடிடல்.
Cop′per, *a.* செம்பான, தாம்பிரத்தன்மையான.
coin, செம்புநாணயம், செப்புக்காசு.
color, செவப்பு, செம்புநிறம்.
sulphate of, or blue vitriol, துருசு.
sub acetate of, or verdigris, காளிதம், வங்காளப்பச்சை.
Cop′per-as, *s.* அன்னபேதி, மயிற்றுத்தம்.
Cop′per-ish, *a.* செம்புள்ள, செம்பிருக்கிற, செம்புபோன்ற.
Cop′per-plāte, *s.* செப்புத்தகடு.
Cop′per-smith, *s.* கன்னான், கஞ்சகாரன்.
Cop′per-y, *a.* செம்புள்ள, செம்புகலந்த, தாம்பிரங்கலந்த.
Cop′pice, *s.* தூற்றுக்காடு, குறுங்காடு, பறட்டைக்காடு, சிறுதூறு.
Cop′ple-stōnes, *s.* திரண்டகற்கள், கடைசார்க்கற்கள், அணைகற்கள்.
Copse, *s.* (*see* Coppice.) குறுங்காடு, இறும்பு.

Cop'u-la, *s.* புணர்மொழி, இசைச்சொல், சந்து.
Cop'u-lāte, *v. n.* அணைதல், கலத்தல், கூடுதல், சேர்தல், தோய்தல், ஆலிங்கனம்பண்ணுதல்.
Cop-u-lā'tion, *s.* கலவி, ஆலிங்கனம், சையோகம், மைதுனம், புணர்வு, சங்கமம்.
Cop'u-la-tive, *a.* இசைகிற.
conjunction, கூட்டிடைச்சொல், எண்ணும்மை, உம்என்னுமிடைச்சொல்.
Cop'y, *s.* சவாது, பிரதிச்சீட்டு, அசல்சீட்டு, அனுரூபபத்திரம்.
as likeness, போலி, பிரதிரூபம்.
for a child, உறுப்பு, அசல்.
rough, சரவையெழுத்து.
Cop'y, *v. a.* பெயர்த்தெழுதுதல்.
as a child, பார்த்தெழுதுதல்.
as imitate, பின்செல்லுதல், பின்பற்றுதல், பின்தொடர்தல்.
Cop'y-book, *s.* உறுப்பெழுத்துப்புத்தகம், அசல்புத்தகம்.
Cop'y-er, Cop'y-ist, *s.* } அசல்எழுதுவோன், பார்த்தெழுதுவோன்.
Cop'y-rīght, *s.* புத்தகஉரித்து, செய்யுட்சுதந்திரம்.
Co-quet', Co-quette', *s.* } நேசங்காட்டிஎய்ப்பவள், சரசக்காரி, மயக்கி, மருட்டி.
Co-quet', *v. a.* நேசங்காட்டிஎய்த்தல், மயக்குதல், மருட்டுதல்.
Co-quet'ry, Co-quet'tish, *a.* } மருட்டு, லீலை, சரசலீலை, மருட்டுகிற, மோகங்காட்டிஎய்க்கிற.
Cor'al, *s.* முருகைக்கல்.
as precious stone, துப்பு, பவளம், பளகம்.
Cor'al, *a.* முருகைக்கல்லுள்ள, பவளம்போன்ற, பவளமான.
Cor'al-line, *s.* கொக்கைக்கல்.
Cor'al-tree, *s.* பவளச்செடி.
Corb'an, *s.* காணிக்கை, பலி.
as basket, மகமைப்பெட்டி, தருமப்பெட்டி.
Corb'el, *s.* போதிகைக்கட்டை, தம்பத்தலைக்கும்பம்.
a short block in a wall, சுவர்மாடம், சுவருத்திரம்.
Cord, *s.* கயிறு, தாம்பு, பழுதை, புரி.
of gold, பொற்சரடு, பொன்ஞாண்.
in scripture, பந்தபாசம், கண்ணி.
of wood, நீளம்எட்டடியும்அகலமுயரம்நன்னான்குஅடியுமுள்ளதடிக்கட்டு.
Cord, *v. a.* கட்டுதல், முழஅளவாற்கட்டுதல், பந்தித்தல்.
to cord wood, விறகுமுதலியகட்டுகிறது.
Cord'age, *s.* கப்பற்கயிறுகள்.
Cord'ate, Cord'ā-ted, *a.* } இரத்தாசயம்போன்ற.
Cord'i-al, *s.* பெலன்கொடுக்குமருந்து, சஞ்சீவி, தயிரியம்.
Cord'i-al, *a.* தாராளமுள்ள, நேசமுள்ள, உற்சாகமுள்ள, இரம்மியமுள்ள.
affection, உட்பிரியம், உள்ளன்பு.
Cord-i-al'i-ty, *s.* தாராளம், பரிவு, அன்பு, உற்சாகம்.
Cord'i-al-ly, *adv.* உற்சாகமாய், நேசமாய், நன்மனசோடே.
Cord'i-al-ness, *s.* ஐக்கம், பூரணமனம்.
Cord'māk-er, *s.* கயிறுமுறுக்குகிறவன், தாமணிக்காரன்.
Cōre, *s.* அகப்புறம், குடர்.
of a boil, ஆணிச்சீ, சீழ்.
the heart of a tree, அகவயிரம், அகக்காழ், ஞாழல், சம்பம், காழ்.
Co-ri-ā'ceous, *a.* பதனிட்டதோலான, பதனிட்டதோல்போன்ற, வலித்த.
Co-ri-an'der, *s.* கொத்தமல்லி, தணிகம்.
Co-rinth'i-ān-or'der, *s.* சிற்பத்தொழில்வகையிலொன்று.
Co-rī'val, *s.* எதிரி, போரி, எதிராளி, எதிர்வேகி.
Cork, *s.* குச்சு, அடைக்குங்குச்சு.
a tree, ஓர்விதக்கிடைச்சி.
Cork, *v. a.* குச்சிட்டடைத்தல்.
Cork'-screw, *s.* குச்சிடுக்கி, சங்குதிருகி, அடைப்பெடுக்குமுறுக்காணி.
Cork'y, *a.* நசுநசுத்த, நசுங்கலான, கிடைச்சிப்பட்டைபோன்ற.
Cor'mo-rant, *s.* நீர்க்காகம், காரண்டம்.
a glutton, பேருண்ணன்.
Corn, *s.* தானியம்.
growing, பயிர்.

indian, சோளம், சொன்னல்.
on a foot, or hand, ஆணி, காய்.
Corn, *v. a.* உப்பிடுதல்.
Corn′-bin, *s.* பத்தாயம், குதிர், குலுக்கை.
Corn′e-a, *s.* கருவிழியின்மேற்றோல்.
Cor-nēl′ian, *s.* (*see* Cornelion.) ஓர்வகைவயிரக்கல்.
Corn′e-ous, *a.* கொம்புள்ள, கோடுள்ள.
Cor′ner, *s.* மூலை, கோணம், கோடி, குடா.
of a field, குடாக்கை.
of the mouth, கடைவாய்.
Cor′ner-stōne, *s.* மூலைக்கல், கோடிக்கல், சேமக்கல்.
Cor′ner-wīse, *a.* மூலைநாராசமாய்.
Corn′et, *s.* காளம், எக்காளம், ஆம்பல், வயிர், பூரிகை.
Corn′fiēld, *s.* விதைநிலம், விளைபுலம்.
Corn′flōor, *s.* களம்.
Cor′nice, *s.* கம்பிவேலை, சித்திரக்கம்பி. கபோதகம்.
Cor-nic′u-late, *a.* கொம்புள்ள, கோடுள்ள, முட்புறமுள்ள.
Cor-nig′er-ous, *a.* கொம்புள்ள, முடியுள்ள.
Corn′less, *a.* தானியமில்லாத.
Corn′-mill, *s.* திரிகை, எந்திரக்கற்கள்.
Corn′-stack, *s.* போர், சூடு.
Corn′y, *a.* கொம்புள்ள, தானியமுள்ள, தானியம்விளைவிக்கிற.
Cor-ol′la-ry, *s.* சாத்தியம், அனுமானவுரை, அருத்தாபத்தி.
Co-rō′na, *s.* பரிவேடம்.
Cor′o-na-ry, *a.* கிரீடத்துக்கடுத்த, சிரச்சோடுள்ள.
Cor-o-nā′tion, *s.* இராசாபிஷேகம், பட்டாபிஷேகம், கிரீடதாரணம், முடிசூட்டு.
as pomp, அபிஷேகவிழா.
Cor′o-ner, *s.* துன்மரணஆராய்ச்சிக்காரன்.
Cor′po-ral, *s.* யுத்தசேவகன்.
Cor′po-ral, *a.* சரீரமுள்ள, சரீரத்துக்கடுத்த, தேகமுள்ள.
being, தூலதேகி, சடசீவி.
Cor-po-ral′i-ty, *s.* தூலத்துவம், சடத்துவம்.
Cor′po-ral-ly, *adv.* சடத்துக்கடுத்ததாய், தேகத்தோடு.
Cor′po-rate, *a.* கூடிய, ஒற்றுமையான, ஒன்றுபட்ட, சங்கமுள்ள.
Cor′po-rate-ly, *adv.* கூட்டமாய், சங்கமாய், ஒன்றுபட்டு.
Cor′po-rate-ness, *s.* கூட்டநிலை, சங்கத்தன்மை, ஒன்றிப்பு.
Cor-po-rā′tion, *s.* கூட்டம், ஏககூட்டம், ஐக்கசங்கம்.
Cor-pō′re-al, Cor-pō′re-ous, *a.* சடமுள்ள, தேகமுள்ள, பூதியமுள்ள, ஸ்தூல.
Cor-pō′re-al-ist, *s.* சடவாதி, மாயாவாதி.
Cor-pō′re-al-ly, *adv.* சடமுள்ளதாய்.
Cōrps, *s.* அணி, யூகம், படைவகுப்பு.
Corps, Corpse, *s.* சவம், பிணம், பிரேதம்.
Cor′pu-lence, *s.* தூலிப்பு, தசைப்பு, கொழுப்பு, தெளிவு, பருமை, நெய்ப்பு.
Cor′pu-lent, *a.* கொழுப்பான, தசைப்பற்றுள்ள.
person, காத்திரம்பருத்தவன், பருத்தவன், ஸ்தூலதேகி.
to be corpulent, கொழுத்தல், நெய்த்தல், தசைத்தல், பருத்தல்.
Cor′pus-cle, *s.* அணு.
Cor-rā-di-ā′tion, *s.* கிரணக்குவிவு.
Cor-rect′, *v. a.* சீர்திருத்துதல், பிழைதிருத்தல், சீர்ப்படுத்தல், குணப்படுத்தல், பரிகரித்தல்.
to chastise, கண்டிதம்பண்ணுதல், அடித்தல், தண்டம்பண்ணுதல், சிட்சித்தல்.
a fault, குற்றந்தீர்த்தல், குற்றநிவிர்த்திபண்ணல்.
Cor-rect′, *v. n.* திருந்துதல்.
Cor-rect′, *a.* திருத்தமான, திட்டமான, தீர்க்கமான, சரியான, செம்மையான, செவ்வையான, நிதார்த்தமான, நிதானமான, நேரான.
person, நிதானி, செவ்வியன்.
pronounciation, சொற்றிருத்தம், திருத்தஉச்சரிப்பு, அட்சரசுத்தஉச்சரிப்பு.
to be correct, சரிப்படுதல்.

Cor-rec'tion, *s.* திருத்தம், கண்டிதம், கண்டிப்பு, சிட்சை, தண்டம்.
Cor-rec'tion-al, *a.* திருத்தப்படத்தக்க, திருத்தத்துக்கேதுவான.
Cor-rect'ive, *s.* திருந்துந்திராணி, சீர்ப்படுத்துந்தத்துவம்.
Cor-rect'ive, *a.* திருத்துந்திராணியுள்ள, சீர்ப்படுத்தத்தக்க.
Cor-rect'ly, *adv.* திருத்தமாய், சீர்மையாய், நேராய், சரியாய், செவ்வையாய், பொருத்தமாய்.
Cor-rect'ness, *s.* திருத்தம், நேர்மை, செம்மை, சீர், உண்மை, நிதானம்.
Cor-rect'or, *s.* திருத்துவோன், நேராக்குவோன், சீர்ப்படுத்துவோன்.
Cor're-late, *v. n.* ஒன்றுக்கொன்றிசைதல், கூட்டுறவாதல்.
Cor-rel'a-tive, *a.* இனமான, பற்றுகிற, ஒன்றுக்கொன்றுரிய, சம்பந்தமான.
duty, obligation, &c., உரிமை, உரித்து, உரிமைக்கடன்.
meaning, or idea, புடைக்கருத்து, தொடர்கருத்து.
Cor-rel'a-tive, *s.* இனம், இசைவு, முறை, சம்பந்தம், எதிர்நிலை.
Cor-rel'a-tive-ly, *adv.* இனமாய், இசைவாய், எதிர்நிலைச்சம்பந்தமாய்.
Cor-re-spond', *v. n.* ஒத்திருத்தல், ஒத்துவருதல், இசைதல், பொருந்துதல், சரிவருதல், சேர்தல், இணங்குதல்.
by writing, காகிதமெழுதல், சீட்டுப்போக்குவரத்துப்பண்ணுதல்.
Cor-re-spond'ence, *s.* இசைவு, ஒப்பு.
by letter, காகிதசம்பாஷணை.
friendly, கொள்கை, இஷ்டம், நேசவூடாட்டம்.
Cor-re-spond'ent, *s.* கொள்கைக்காரன், சீட்டுப்போக்குவரத்துப்பண்ணுவோன்.
Cor-re-spond'ent, *a.* அடுத்த, தகுமான, ஒத்த, பொருந்திய.
Cor-re-spond'ent-ly, *adv.* இசைவாய், ஒத்து.
Cor-re-spon'sive, *a.* பொருந்திய, ஏற்ற, தகுந்த.
Cor'ri-dōr, *s.* சுற்றுச்சாலை.
Cor'ri-gi-ble, *a.* சீராக்கக்கூடிய, ஆக்கினைக்கேதுவான.

Cor-rī'val, *s.* (*see* Corival.) எதிரி.
Cor-rī'val-ry, *s.* போரிசத்தன்மை, எதிரித்தனம்.
Cor-rob'o-rant, *s.* சுகாவிழ்தம், பெலன்கொடுக்குமருந்து, சஞ்சீவினி.
Cor-rob'o-rāte, *v. a.* உறுதிப்படுத்துதல், திடப்படுத்துதல், வலியுறுத்தல், தாபித்தல், நிறுத்தல்.
Cor-rob'o-rate, *a.* பெலப்படுத்துகிற, திரப்படுத்துகிற.
Cor-rob-o-rā'tion, *s.* உறுதி, திடன், திடனிச்சயம், பலம், உருபகம்.
Cor-rob'o-ra-tive, *s.* பெலன்கொடுக்குமருந்து.
Cor-rob'o-ra-tive, *a.* பலப்பிக்கத்தக்க, உரப்பிக்கத்தக்க, திடப்படுத்தத்தக்க, நிச்சயப்படுத்தத்தக்க.
Cor-rōde', *v. a.* அரித்தல், தின்னல், சிதைத்தல், கரைத்தல்.
Cor-rō'dent, *s.* காரமருந்து, அரிப்பது, கரைப்பது.
Cor-rō'dent, *a.* சிதைக்கிற, குறைக்கிற, தேய்க்கிற, அரிக்கிற.
Cor-ro-di-bil'i-ty, *s.* அரிக்கப்படுந்தன்மை.
Cor-rō'di-ble, *a.* சிதையத்தக்க, குறையத்தக்க, தேயத்தக்க.
Cor-rō'sion, *s.* சிதைப்பு, அரிப்பு, பட்சிப்பு, கரைப்பு.
Cor-rō'sive, *s.* காரம், கரிப்புள்ளது, காரமுள்ளது.
Cor-rō'sive, *a.* காரமான, அரிக்கிற, குறைக்கிற.
plaster, காரச்சீலை.
seton, காரத்திரி.
sublimate, சவ்வீரம்.
Cor-rō'sive-ly, *adv.* கரிப்பாய், கார்ப்பாய், அரிப்பாய்.
Cor-rō'sive-ness, *s.* உறைக்குந்தன்மை, கார்ப்பு, கரிக்குந்தன்மை.
Cor'ru-gant, *a.* சுரிக்கக்கூடிய, திரையத்தக்க, திரையக்கூடிய.
Cor'ru-gāte, *v. a.* சுருக்குதல், நெரிபிடித்தல், திரைத்தல், மடித்தல்.
to become corrugated, சுருங்குதல், திரைதல்.
Cor-ru-gā'tion, *s.* சுருக்கு, திரைவு.
by age, சுருக்கு, திரை.

Cor-rupt′, *v. a.* அழித்தல், கெடுத்தல், பழுதுபண்ணல், பாழாக்குதல், கற்பழித்தல், கன்னித்துரோகஞ்செய்தல்.
a word, மருவுதல், சிதைதல்.
Cor-rupt′, *v. n.* அழுக்காகுதல், ஊழ்த்தல், கெடுதல், உட்குதல், பதனழிதல்.
Cor-rupt′, *a.* பாழான, கெட்ட, பழுதுள்ள, நாறலான, உழுத்த, பாழ்த்த, ஊசின.
Cor-rupt′er, *s.* கெடுப்போன், அழிப்போன், பழுதாக்குவோன்.
Cor-rupt-i-bil′i-ty, *s.* பழுதாக்கக்கூடிய தன்மை, பாழ்படுந்தன்மை, பாழ்ந்தனம்.
Cor-rupt′i-ble, *a.* பழுதாகக்கூடிய, அழிவுள்ள.
Cor-rupt′i-ble-ness, *s.* பழுதுபடக்கூடியதன்மை.
Cor-rupt′i-bly, *adv.* பாழ்படும்படி, தீங்காய், ஊசத்தக்கதாய்.
Cor-rup′tion, *s.* பதனழிவு, சிதைவு, பழுது, ஊசல், உக்கல், ஊழ்ப்பு, சீத்தை.
of a word, மரூஉமொழி.
Cor-rupt′ive, *a.* பழுதாக்கத்தக்க, கெடுக்கத்தக்க, கெடுக்கிற, பதனழிக்கிற.
Cor-rupt′less, *a.* கெட்டுப்போகாத, பழுதாகாத, பதனழியாத.
Cor-rupt′ly, *adv.* கேடாய், பழுதாய், பாழாய், தீங்காய், பாடாய்.
Cor-rupt′ness, *s.* அழுகுகை, கீழ்மை, பாழ், ஊழ்ப்பு.
Cor′sāir, *s.* கள்ளக்கப்பற்காரன், கப்பற்சோரன்.
Corse, *s.* பிரேதம், பிணம், சவம்.
Corse′let, *s.* மார்க்கவசம், அரணம்.
Cor′set, *s.* கச்சு, பிணிகை, இரவுக்கை.
Cor′tege, *s.* பரிசாரகர், பரிவாரர், பரிசனர், பரிவாரம்.
Cor′tex, *s.* மரப்பட்டை.
Cor′ti-cal, Cor′ti-cā-ted, *a.* } பட்டைபோன்ற, புறச்சொறியுள்ள.
Co-rus′cant, *a.* பளீரிடுகிற, பளபளத்த, மினுக்கமான.
Cor′us-cāte, *v. n.* இலங்குதல், மினுங்குதல், ஒளிவீசுதல், பளபளத்தல், துலங்குதல், பளிச்சிடுதல், பளிச்சுப்பளிச்செனல், பளீர்பளீரெனல்.
Cor-us-cā′tion, *s.* இலக்கம், பளபளப்பு, எறிப்பு, ஒளி, துலக்கம், மின்.
Cor-vette′, *s.* யுத்தப்படவு.
Co-sē′cant, *s.* கோடித்திரிசாதரம்.
Cō′-sīne, *s.* கோடிச்சியை, கோடிச்சா.
Cos-met′ic, *s.* சிறப்பிக்குமருந்து, அங்கராகம், அலங்காரப்பூச்சு.
Cos-met′ic, *a.* சிறப்பிக்கிற, அழகுசெய்கிற, அலங்கரிக்கிற.
Cos-mog′o-nist, *s.* சகத்துற்பத்திசாத்திரி, அண்டசாத்திரி.
Cos-mog′o-ny, *s.* பிரபஞ்சத்தோற்றநூல், சகத்துற்பத்திசாத்திரம், சகத்துற்பத்தி.
Cos-mog′ra-pher, *s.* அண்டசாத்திரி, பிரபஞ்சநூலாசிரியன்.
Cos-mo-graph′ic-al, *a.* அண்டசாத்திரத்துக்குரிய.
Cos-mo-graph′ic-al-ly, *adv.* அண்டசாத்திரத்துக்கடுத்ததாய்.
Cos-mog′ra-phy, *s.* அண்டகோசம், அண்டசாத்திரம்.
Cos-mo-log′ic-al, *a.* அண்டசாத்திரத்துக்கடுத்த, அண்டத்துக்கடுத்த, அண்டகோசத்துக்கடுத்த.
Cos-mol′o-gy, *s.* அண்டசாத்திரம், அண்டகோசசாத்திரம்.
Cos-mo-pol′i-tan, Cos-mop′o-līte, *s.* } பரதேசி, சருவதேசமுஞ்செல்லத்தக்கவன், தேசாந்திரி.
Cos′set, *s.* கைத்தீனுண்டுவளரும்ஆட்டுக்குட்டி, கையுறையுண்டஆட்டுக்குட்டி.
Cost, *s.* செலவு, சென்றது, பொறுப்பு, விலை, கிரயம்.
as loss, நஷ்டம்.
of law-suit, வழக்குச்செலவு.
Cost, *v. a,* செல்லுதல், பொறுத்தல், செலவுபிடித்தல்.
Cost′ard, *s.* பேரப்பிள்பழம், தப்புவாப்பழம்.
Cos′tive, *a.* மலவரட்சியான, மலக்கட்டான, மலச்சிக்கான.
Cos′tive-ness, *s.* மலச்சிக்கு, மலபந்தம்.
Cost′less, *a.* செலவில்லாத, கிரயமில்லாத, விலையில்லாத.
Cost′li-ness, *s.* அதிகவிலையுடைமை, செலவு, கனசெலவு.

Cost′ly, *a.* அதிவிலையுள்ள, கனசெலவுள்ள, விலையேறின.
Cos-tūme′, *s.* கோலம், மாதிரி, சாடை.
Cot, *s.* குச்சு, குடில், குடிசை, சிற்றில்.
 a bed, தொட்டில், மஞ்சம்.
 for the finger, விரற்புட்டில், விரலுறை.
 for watching fields, இதணம், ஏதண்டை, குடில், அட்டாலை, பரண்.
Co-tan′gent, *s.* கோடிச்சாதரம்.
Cōte, *s.* ஆட்டுப்பட்டி, ஆட்டுக்கிடை, தொழுவம், தோழம்.
Co-tem-po-rā′ne-ous, *a.* ஒரேகாலத்திலுள்ள, தற்காலத்திலுள்ள, ஏககாலத்திலுள்ள, சககாலத்திலுள்ள.
Co-tem′po-ra-ry, *s.* ஒரேகாலத்தோன், தற்காலவாசி.
Co-tem′po-ra-ry, *a.* ஏககாலத்திலுள்ள, சககால.
Cott, *s.* தூங்குமஞ்சம், சப்பிரமஞ்சம், கட்டில்.
Cot′tage, *s.* குடில், குடிசை, சிற்றில், குடினை.
Cot′ta-ger, Cot′ter, *s.* சிற்றில்வாசி, குடிலில் வாழ்வோன்.
Cot′ton, *s.* பஞ்சு, பருத்தி, காற்பாசம், தூலம்.
 silk cotton, பஞ்சு, இலவம்பஞ்சு.
Cot′ton, *a.* பஞ்சாலாய, பஞ்சாலாக்கிய, பருத்தியாலாகிய.
 manufactory, machine, mill, பஞ்சுநூற்புடைவைமுதலியவைகளையுண்டாக்கும்இயந்திரம், காருகவியந்திரம்.
 plant, பருத்திச்செடி, காற்பாசம், இலவமரம்.
 yarn, or thread, பருத்திநூல்.
Cot′ton-y, *a.* பஞ்சுபோன்ற, பஞ்சுள்ள.
Co-tyl-ē′don, *s.* பருப்பு, வீசப்பிரதம்.
Couch, *s.* சயனபீடம், சாயுமஞ்சம்.
 as sofa, or settee, சாய்மணை, சாய்மானம்.
Couch, *v. a.* கண்படலமுரித்தல், ஒளித்திருத்தல், பதுங்கிக்கிடத்தல், படுத்துதல்.
Couch, *v. n.* பதிதல், பதுங்குதல், பாந்தல், சாய்தல், பணிதல், பதிவிருத்தல்.
Couch′ant, *a.* பதுங்குகிற, பாந்துகிற, பதுங்கிக்கிடக்கிற, ஒட்டிக்கிடக்கிற.
 as squatting, பதுங்குகிற, பாந்துகிற.
Couch′er, *s.* கண்படலமுரிக்கிறவன்.
Couch′-fel-lōw, *s.* சகசயனி.
Couch′ing, *s.* வணங்கல், தாழ்தல்.
Cöu′gar, *s.* புள்ளிப்புலி.
Cough, *s.* இருமல்.
 of a beast, கம்மல்.
 hooping cough, கக்குவான், குக்கல்.
Cough, *v. n.* இருமுதல்.
Could, *aux.* இயன்ற, கூடின.
Cōul′ter, *s.* (*see* Colter.) கொழு, காறு.
Coun′cil, *s.* சங்கம், கூட்டம், மந்தனம்.
 of state, மந்திரிகள், ஆலோசனைச்சங்கத்தார், மகாநடுவர்.
 as purpose, யோசனை, எண்ணம்.
 chamber, ஆஸ்தானமண்டபம், மந்தனமண்டபம்.
Coun′sel, *s.* யோசனை, ஆலோசனை, சூழ்ச்சி, தேர்ச்சி.
 decree, தீர்மானம், தீர்ப்பு.
 secret thoughts, அபிப்பிராயம்.
Coun′sel, *v. a.* யோசனைசொல்லுதல், எச்சரித்தல், இடித்துரைத்தல்.
 to take, உசாவுதல், ஆராய்தல்.
Coun′sel-a-ble, *a.* ஆலோசனைக்குச்செவிகொடுக்கிற, யோசனைக்குடன்படுகிற.
Coun′sel-or, *s.* ஆலோசனைக்காரன், அமைச்சன், மந்திரி, உசாவுதுணைவன்.
 as adviser, புத்திசொல்வோன், போதிப்போன், யோசனைசொல்வோன், உபதேசி, தேசிகன்.
Coun′sel-or-ship, *s.* மந்திரித்தனம், அமைச்சு.
Count, *s.* எண்ணல்.
 in law, முறைப்பாடு, குற்றச்சாட்டு.
 a noble man, இறைவன், குலமகன், தலைவன்.
 a title, ஓர்பட்டப்பெயர்.
Count, *v. a.* எண்ணுதல், இலக்கமிடுதல், கணித்தல்.
 to esteem, மதித்தல், கணித்தல், சங்கித்தல்.
 to impute, சாட்டுதல், சுமத்துதல், சார்த்துதல்.
 odd numbers, ஒற்றைபடவெண்ணுதல்.
 one by one, ஒவ்வொன்றாயெண்ணுதல்.

Count'a-ble, *a.* எண்ணப்படத்தக்க, எண்ணப்படக்கூடிய.

Coun'te-nance, *s.* முகம், முகரூபு, முகச்சாடை, முகச்சாயல்.
cheerful, &c., குளிர்ந்தமுகம், மலர்ந்தமுகம், சுமுகம், முகக்களை, முகக்குளிர்ச்சி.
look, தோற்றம், சாயல், பாங்கு.
fierce, or savage, கொடியமுகம், உக்கிரமுகம்.
as favor, கடாட்சம்,தயவு,தாட்சணை.
to keep in countenance, தேற்றுதல், உபகரித்தல், தயைபுரிதல்.
to put out of countenance, முகமுறித்தல், நாணவைத்தல், வெட்கப்படுத்தல்.

Coun'te-nance, *v. a.* திடப்படுத்தல், கடாட்சித்தல், உபகரித்தல், ஒத்தாசைசெய்தல்.

Coun'te-nanc-er, *s.* கடாட்சிப்போன், உபகாரி.

Count'er, *s.* எண்ணுவோன், கணிதன்.
a table, கணிதபீடம்.
in music, மத்திமவோசை.

Count'er, *adv.* எதிராய், எதிரிடையாய்.

Coun-ter-act', *v. a.* எதிர்த்தல், எதிரிடைபண்ணல், தடுத்தல்.

Coun-ter-ac-tion, *s.* எதிர்ப்பு, இடறு, தடை.

Coun'ter-at-trac'tion, *s.* எதிர்க்கவர்ச்சி.

Coun'ter-bal-ance, *s.* சமநிறை, பதிலீடு, ஒத்தநிறை.

Coun-ter-bal'ance, *v. a.* சமநிறையாக்கல், சரிக்கட்டுதல், சமநிலையாக்கல்.

Coun'ter-bond, *s.* பிணைமுறி,உத்தரவாதச்சீட்டு.

Coun'ter-chānge, *s.* பண்டமாற்று.

Coun'ter-chärm, *s.* எதிரேற்று.

Coun'ter-check, *s.* தடை, அதட்டு, எதிர்த்தட்டு, எதிரீடு.
as rebuke, அதட்டு.

Coun'ter-cur-rent, *s.* எதிர்நீரோட்டம், எதிர்ப்பாய்ச்சல்.

Coun-ter-ev'i-dence, *s.* எதிர்ச்சாட்சி, எதிரொப்பனை, எதிரத்தாட்சி.

Coun'ter-feit, *s.* கபடவேலை, கள்ளம், போலி, கிருத்திரமம், பாவனை, பேடசம்.
as a person, மாமாலி, கபடவேடன், வேஷக்காரன், வஞ்சகன், கள்வன்.

Coun'ter-feit, *v. a.* பாவனைகாட்டுதல், போலிபண்ணுதல், வேஷம்போடுதல், கள்ளஞ்செய்தல்.

Coun'ter-feit, *a.* கள்ள, போலியான, பொய்யான, மாமாலமான, வேஷமான, மாரீசமுள்ள.
coin, கள்ளக்காசு, செல்லாக்காசு, கள்ளநாணயம்.
habit, பொய்க்கோலம், மாரீசம், வேஷம்.
voice, போலிக்குரல், போலிச்சத்தம்.

Coun'ter-feit-er, *s.* கரவடன், மாரீசன், பேடசக்காரன், வேஷக்காரன்.

Coun'ter-feit-ly, *adv.* கள்ளமாய், போலியாய், கரவடமாய்.

Coun-ter-law'suit, *s.* எதிர்வழக்கு, எதிர்வியாச்சியம்.

Coun-ter-mag'ic, *s.* எதிரேற்று.

Coun'ter-mänd, *s.* எதிர்க்கட்டளை, மறுத்துரை.

Coun-ter-mänd', *v. a.* எதிர்க்கட்டளைபண்ணுதல், தடுத்தல், மறுத்துரைத்தல், மாற்றுதல்.

Coun'ter-märch, *s.* படைதிரும்பிப்போதல், படைபெயர்தல்.

Coun'ter-märk, *s.* எதிரடையாளம்.
a bill, கையொப்பம், இலச்சினை, புள்ளி.

Coun'ter-pāne, *s.* (*see* Counterpoint.) துப்பட்டி.

Coun'ter-pärt, *s.* சாயல், அயற்பகுதி, யூகிபாஷையின்மூலம், யூகிபாஷையின்துருவம்.
as copy, பிரதி.

Coun'ter-point, *s.* துப்பட்டி.
opposite point, எதிர்த்திக்கு, எதிர்நிலை, எதிர்நோக்கம்.

Coun'ter-poise, *s.* சமநிறையாக்கும்படிக்கல்.

Coun'ter-poise, *v. a.* ஒன்றுக்கொன்று சரிப்படுத்தல், சரிபாரமாக்குதல்.

Coun'ter-poi-son, *s.* மாற்றுமருந்து, எதிர்மருந்து.

Coun'ter-proof, *s.* சோதனைப்பத்திரம், திருத்தப்படுங்காகிதம்.

Coun'ter-sīgn, *s.* மாட்டறைவு.

on charters, bills, &c., காரியகாரனின்கையொப்பம், செல்லொப்பம்.
Coun'ter-sīgn, v. a. கையொப்பம்வைத்தல், செல்லொப்பம்வைத்தல், மாட்டறைதல், காரியகாரன்கையொப்பம்வைத்தல்.
Coun'ter-sig-nal, s. எதிர்க்குறிப்பு, மறுமொழிக்குறிப்பு.
Coun'ter-vāil, s. சமநிறை, சமபலம், பதில்.
Coun-ter-vāil', v. a. எதிர்த்தல், சரிக்குச்சரிக்கட்டல், பிரதியுபகாரஞ்செய்தல், பதிலளித்தல்.
Coun'ter-wŏrk, s. எதிர்க்கிரியை.
Count'ess, s. இறைவி, தலைவி, குலமகள்.
Count'ing-house, Count'ing-room, s. கணக்கேடுவைக்குஞ்சாலை, கணக்கர்சாலை.
Count'less, s. எண்ணிறந்த, அளவில்லாத, கணக்கில்லாத, அலகில்லாத.
Cŏun'tri-fi-ed, a. நாட்டுப்போங்கான, நாகரீகமற்ற, சிறப்பற்ற, நாட்டிடகமான.
Cŏun'try, s. தேசம், சீமை, நாடு, ஊர், நிலை, சமவாகம்.
inhabited, சனபதம்.
Cŏun'try, a. நாட்டுக்கடுத்த, தேயத்துக்குரிய.
man, நாட்டான், நாட்டுப்புறத்தான், நாட்டவன்.
parts, நாட்டுப்புறம்.
style, நாட்டுப்போங்கு, நாட்டுநடை, நாட்டிடகம்.
talk, ஊர்க்கதை.
usages, நாட்டுவழக்கம்.
Coun'ty, s. தேசத்திலோர்பிரிவு, நாடு.
Cŏup'le, s. இரண்டு, சோடு, இணை, துணை, தொடுவை.
Cŏup'le, v. a. இணைத்தல், பிணைத்தல், புணர்த்தல், சேர்த்தல், சோடுகட்டுதல், தொடுத்தல்.
to marry, விவாகம்பண்ணுதல்.
Cŏup'le, v. n. இணைதல், பிணைதல், புணர்தல், சேர்தல்.
Cŏup'let, s. ஈரடிப்பா.
Cŏup'ling, s. புணர்ப்பு, தொடுப்பு, பிணைப்பு, இணைப்பு.

Cŏur'age, s. தயிரியம், திடன், வீரம், ஆண்மை, முயற்சி, ஊக்கம், மனோச்சாகம்.
Cŏur-ā'geous, a. தயிரியமுள்ள, திடாரிக்கமுள்ள, வீரமுள்ள, ஆண்மையுள்ள, பராக்கிரமமுள்ள.
language, திடாரிக்கமானபேச்சு.
man, திடபுருடன், வீரவான், வீரன், தைரியவான், திடாரி, ஆண்டகை.
mind, திடமனம், திடநெஞ்சு.
Cŏur-ā'geous-ly, adv. ஆண்மையாய், வீரமாய், திடாரிக்கமாய்.
Cŏur-ā'geous-ness, s. வீரத்துவம், தைரியம்.
Cŏu'ri-er, s. தூதன், ஒற்றன், அஞ்சற்காரன்.
as news paper, பத்திரசாரணன்.
Cōurse, s. ஓட்டம், போக்கு, கதி, இலக்கு, போம்வழி, கிரமம், ஒழுங்கு.
direction, திக்கு, திசை, நேர்.
passing, நடை, செலவு.
race ground, பந்தயச்சாலை.
turn, order, &c., முறை, தவணை.
of animals, பாய்ச்சல், துள்ளு.
of conduct, ஒழுக்கம், ஒழுங்கு, ஆசாரம், கிரமம், நடத்தை, மார்க்கம், நடை.
of dishes, கிரமங்கிரமமாயிடும்உணவகை.
of heavenly bodies, கிரகவோட்டம், கிரகநடை, கிரககதி.
of yesterday, நேற்றளவு.
of water, நீரோட்டம், பெருக்கு.
in course of time, நாளிலே, நாள்வட்டத்தில்.
in course, successively, கிரமங்கிரமமாய்.
Cōurse, v. a. துரத்தல், கலைத்தல், தொடர்ந்தோட்டுதல்.
Cōurse, v. n. பாய்தல், துள்ளித்திரிதல், ஓடுதல்.
Cōurs'es, s. (pl.) கூறைப்பாய்கள்.
monthly, பூப்பு, மாதவிடை, சூதகம், இருது.
Cōurs'er, s. பந்தயக்குதிரை, பாய்மா, வாம்பரி, சரகாமி.
Cōurs'ing, s. வேட்டையாடல், வேட்டம்.

as water, நீர்ப்பாய்ச்சல்.
Cōurt, s. முற்றம், அரண்மனே, இராச தானி, இராசசமுகத்தார், கொலுமண் டபம்.
as favor, இராசதயவு, இராசானுக்கி ரகம்.
open building, முதல்மண்டபம், வச ந்தமண்டபம்.
as royalty, இராசதானி, மகாஸ்தலம், அத்தாணி, வேத்தவை, கொலுமண் டபம்.
of justice, நியாயத்தலம், நீதிஸ்தலம், பஞ்சாயம்.
as sitting, அரசிருக்கை, கொலுவீற் றிருக்கை.
of a temple, பிரகாரம்.
term for, நீதிவிசாரணைநாள்.
Cōurt, v. a. பிரியப்படுத்தல், வசப்படு த்தல், மணங்கேட்டல்.
Cōurt′e-ous, a. ஆசாரமுள்ள, உபசரிப் புள்ள, இணக்கமான, நல்லொழுக்க முள்ள, மரியாதையுள்ள.
Cōurt′e-ous-ly, adv. ஆசாரமாய், மரியா தையாய், நாகரீகமாய்.
Cōurt′e-ous-ness, s. ஆசாரம், மரியா தை, வழிபாடு.
Cŏurt′e-san, s. வேசி, விலைமகள், பொ துப்பெண், பரத்தை.
Cŏurt′e-sy, s. ஆசாரம், மரியாதை, நா கரீகம், உபசாரம்.
Courte′sy, s. ஸ்திரீகள்செய்யும்மரியா தை, ஸ்திரீவந்தனே.
Cŏurte′sy, v. n. ஸ்திரீகள்வந்தனைசெய் தல், மகளிர்ஆசாரஞ்செய்தல்.
Cōurt′-hand, s. நியாயஸ்தலங்களுக்கே ற்றஎழுத்து.
Cōurt′-house, s. நீதிஸ்தலம்.
Cōurt′ier, s. முகஸ்துதிகாரன், நயவ சனி.
Cōurt′līke, a. நல்லாசாரமுள்ள, நாகரீ கமுள்ள, யோக்கியமுள்ள.
Cōurt′li-ness, s. நாகரீகம், யோக்கியம், கைகோள், பிரபுத்துவம்.
Cōurt′ly, a. இராசசபைக்கடுத்த, பிர புத்துவமுள்ள, தாட்சணியமுள்ள, நாகரீகமான, முகமன்பேசுகிற.
Cōurt′ly, adv. சபைக்கடுத்தமுறையாய், நாகரீகமாய், ஆசாரமாய், இச்சகமாய்.

Court′-mär′tial, s. தளகத்தன், நீதிஸ்தல ம், படைஞர்ஞாயஸ்தலம்.
Cōurt′ship, s. மணங்கேட்டல், வசியம் பண்ணல்.
Cŏus′in, s. ஒன்றைவிட்டசகோதரம், மைத்துனன், சகோதரபுத்திரர்முறை ப்பெயர்.
Cōve, s. குடா, கோடி, ஒதுக்கிடம்.
Cōve, v. a. வில்வடிவாய்வளைத்தல்.
Cŏv′e-nant, s. உடம்படிக்கை, உடம் பாடு, பொருத்தம், ஏற்பாடு.
as vow, நிபந்தனே, பொருத்தனே, சங் கற்பம்.
Cŏv′e-nant, v. a. உடம்படுத்தல், உடம் படிக்கைபண்ணுதல், பொருத்தனே பண்ணுதல், ஏற்படுத்தல்.
Cŏv-e-nan-tee′, s. உடம்படிக்கைபெற் றவன், உடம்படிக்கைகொள்வோன்.
Cŏv′e-nan-ter, s. உடம்படிக்கைபண் ணுவோன், பொருத்தனேசெய்வோன்.
Cŏv′er, s. மூடி, உறை.
as pod, கோது, சக்கை, ஓடு.
as pretext, சாட்டு, போக்கு, மாயம்.
as sheath for young fruit, மடல்.
as shelter, ஒதுக்கிடம்.
for beasts, புதை, வளை, பதி.
Cŏv′er, v. a. மூடுதல், பொதிதல், மறை த்தல், போர்த்தல்.
to brood, அடைகிடத்தல்.
as a bull, &c., புணர்தல், பொலிதல்.
expenses, தீர்க்குதல், சரிக்கட்டுதல்.
up, or conceal, மறைத்தல், புதைத்து வைத்தல், பொதிதல்.
the eyes, கண்புதைத்தல், கண்பொ த்துதல், கண்முகிழ்த்தல், கண்மூடு தல்.
with an umbrella, கவித்தல், பிடித் தல்.
Cŏv′er-ing, s. மூடி, மறைவு, போர்ப்பு, போர்வை.
as canopy, வானி, வாசனி, மேலார்ப் பு, மேற்கட்டி, பன்னுங்கு, பன்னு ணம்.
an envelop, கோது, மூடி, புறணி, உ றை.
a tent, &c., கூடாரம், படாம்வீடு.
of fruits, &c., கோது, கூடு, மூடி, ஓ டு, கதம்பை, சக்கை.

Cŏv'er-let, *s.* துப்பட்டி.
Cŏv'ert, *s.* ஒதுக்கிடம், பதிவிடம்.
a hiding place, ஒளிமறைவு.
a thicket, தூறு, சிறுகாடு, இறும்பு.
Cŏv'ert, *a.* ஒளிப்பான, கபடமுள்ள.
Cŏv'ert-ly, *adv.* மறைவாய், இரகசியமாய், ஒளிப்பாய், கபடமாய்.
Cŏv'ert-ness, *s.* இரகசியம், ஒளிப்பு, மறைவு.
Cŏv'ert-ure, *s.* ஒதுக்கிடம்,ஒளிப்பிடம்.
Cŏv'et, *v. a.* இச்சித்தல், அவாவுதல், பிறர்பொருளைவிரும்பல்.
Cŏv'et-a-ble, *a.* இச்சிக்கத்தக்க, விரும்பத்தக்க.
Cŏv'et-ing, *s.* விருப்பு, இச்சிப்பு, ஆசை அவா.
Cŏv'et-ing-ly, *adv.* விருப்பமாய், ஆசையாய், இச்சையாய், அவாவாய்.
Cŏv'et-ous, *a.* அவாவுள்ள, விருப்பமுள்ள, ஆசையுள்ள, பிறர்பொருளிச்சையுள்ள.
man, பொருளாசைக்காரன்.
Cŏv'et-ous-ly, *adv.* இச்சையாய், விருப்பமாய், பிறர்பொருளிலவாவாய், அத்தவேடணையாய்.
Cŏv'et-ous-ness, *s.* பொருளாசை, அத்தாதுரம், அத்தவேடணை.
as stinginess, உலோபம், கிருபணம், கையிறுக்கம், பிசுனித்தனம், உலுத்தம்.
Cŏv'ey, *s.* விடைதுரத்தாதகோழியுங்குஞ்சும், புட்கூட்டம்.
Cō'ving, *s.* விற்சாய்ப்பு,விற்சரிவு, வில்வளைவானசாய்ப்பு.
Cŏv'in-ous, *a.* தந்திரமுள்ள, கள்ளமுள்ள, கள்ள.
Cow, *s.* பசு, கோ, ஆ, தேனு.
Cow, *v. a.* கலக்குதல், திகைக்கப்பண்ணுதல், தடுமாறச்செய்தல், அச்சுறுத்தல்.
to be cowed, கேருதல், கோழைபடுதல், மடிதல்.
Cow'ard, *s.* இளநெஞ்சன், பெண்ணன்.
Cow'ard, *a.* கோழையுள்ள.
Cow'ard-ice, / Cow'ard-li-ness, *s.* இளநெஞ்சு, அச்சக்குணம், வீரமின்மை, தைரியமின்மை, பயம், சுணைக்கேடு, பேதைமை, பெண்மை.
Cow'ard-līke, *a.* கோழையன்போன்ற, பெண்தன்மையுள்ள.
Cow'ard-ly, *a.* வீரமில்லாத, தைரியமற்ற, பயமுள்ள.
Cow'ard-ly, *adv.* பயமாய், தைரியமின்றி, பயந்து, கீழமையாய், பேதைமையாய், பெண்மைத்தனமாய்.
Cow'er, *v. n.* குனிதல், பணிதல்.
Cow'-dung, *s.* எரு, சாணி, சாணகம், ஆப்பி, ஆமயம்.
as fuel, வறட்டி, வறட்டி, எருஅடை.
Cow'herd, *s.* இடையன், ஆயன், கோபாலன்.
Cow'-house, / Cow'-stā-ble, / Cow'-stall, *s.* கொட்டில், ஆவேலி, ஆநிலை, ஆன்கொட்டில், தொழு, பட்டி, பசுக்கிடை, கோட்டம்.
Cow'-keep-er, *s.* ஆயன், இடையன்.
Cowl, *s.* சன்னியாசியின்கோலம், நீர்த்தொட்டி.
Cow'lick, *s.* நெற்றிச்சுழிமயிர்.
Co-wŏrk'er, *s.* உடன்வேலைகாரன், உபயோகி, அநுகாரகன், உபகிருத்தியன்.
Cow'-pox, *s.* கோவைசூரி.
Cow'ry, *s.* சோகி, அக்கு, பலகறை, மட்டி.
Cox'cōmb, *s.* கோப்புக்காரன், பிலுக்கன், கோலக்காரன், வீம்பன், குசாற்காரன், கோலாகலன், இடம்பக்காரன்.
Cox'cōmb-ly, *adv.* பிலுக்காய்,வீம்பாய்.
Cox-com'ic-al, *a.* உல்லாசமுள்ள, கோலாகலமுள்ள.
Coy, *a.* கூச்சமுள்ள, நாணமுள்ள.
to be coy, கூசுதல், நாணுதல்.
Coy'ish, *a.* அற்பகூச்சமுள்ள, அற்பநாணமுள்ள, ஒஞ்சிப்பான.
Coy'ly, *adv.* கூச்சமாய், நாணமாய், ஒஞ்சிப்பாய்.
Coy'ness, *s.* கூச்சம், நாணம், சங்கோசம்.
Cŏz'en, *v. a.* ஏய்த்தல், அபகரித்தல், எத்துதல், தந்தரம்பண்ணுதல்.
Cŏz'en-age, *s.* எத்து, அபகரிப்பு, ஏய்ப்பு, ஏமாத்து.

Cŏz′en-er, *s.* எத்தன், தந்தரி, அபகரிப்போன், அபகாரி.
Cō′zy, *a.* வசதியுள்ள, சாவகாசமான, இஷ்டகாமியமுள்ள.
Crăb, *s.* நண்டு, ஞெண்டு.
a morose person, வெடுக்கன்.
a sign of the zodiac, கர்க்கடகம்.
a wild apple, புளித்தப்புவா.
Crab′bed, *a.* கடுகடுப்புள்ள, வெடுவெடுப்புள்ள.
temper, கடாச்சங்காத்தம், குறும்புத்தனம், கரடு, கரடுமுரடானமனம், வெட்டெனவு.
to be crabbed, குறுக்கடியாய்ப்பேசுதல், வெட்டெனப்பேசல்.
Crab′bed-ly, *adv.* வெடுவெடுப்பாய்.
Crab′bed-ness, *s.* வெடுவெடுப்பு, செப்பமின்மை, கரடுமுரடு.
Crack, *s.* ஓட்டை, பொள்ளல், வெடிப்பு, நீக்கம்.
of thumb and finger, நொடி.
Crack, *v. a.* பிளத்தல், உடைத்தல், தகர்த்தல், வெடிக்கச்செய்தல்.
a joke, நளினமாய்ப்பேசல், நையாண்டிபண்ணுதல்.
the brain, மூழைகலக்குதல்.
the finger joints, நெட்டிமுறித்தல், நெட்டைவாங்குதல்.
the thumb and finger, நொடித்தல்.
Crack, *v. n.* வெடித்தல், பிளத்தல், விள்ளுதல், உடைதல், நெரிதல், படாரென்றுவெடித்தல்.
as a noise, படாரெனல், படாசெனல்.
to pieces, இடிதல், தகர்தல்.
as the finger joints, நெட்டைமுறிதல்.
Crack′-brāin-ed, *a.* பயித்தியம்பிடித்த, மதிகெட்ட, வீம்புள்ள.
Crack′er. *s.* சீனவெடி, பட்டாசு.
a biscuit, ஒருவிதஅடை.
an instrument, பிளப்பது, வெடிக்கப்பண்ணுவது.
Crack′ing, *s.* நெருநெருப்பு, படபடப்பு.
Crack′le, *v. n.* படபடத்தல், நெருநெருத்தல்.
Crack′ling, *s.* நெருநெருப்பு, படபடப்பு.
Crack′nel, *s.* ஓர்பண்ணிகாரம், கச்சாயம்.
Crā′dle, *s.* தொட்டில், பாலமஞ்சம்.
as infancy, சவலைப்பிராயம், பாலப்பருவம்.
songs, தாராட்டு, ஓலாட்டு, தாலாட்டு, ஆலாட்டு.
Crā′dle, *v. a.* தொட்டிலிற்கிடத்தல், மஞ்சத்திலிடுதல், தாலாட்டுதல்.
Crăft, *s.* தந்தரம், உபாயம், எத்து, மடிப்பு, கபடம்.
as skill, சாமர்த்தியம், வல்லபம்.
small vessels, தோணி, சம்பான், வத்தை.
trade, தொழில், வேலை.
Crăft′i-ly, *adv.* கபடமாய், தந்தரமாய், சூழ்ச்சமாய், உபாயமாய்.
Crăft′i-ness, *s.* வஞ்சகம், கரவடம், கபடம், சதியோசனை.
Crăfts′man, *s.* தொழிலாளி, கம்மாளன், கைவினைஞன்.
Crăft′y, *a.* நெரிடுள்ள, கரவடமுள்ள, வஞ்சகமுள்ள, உபாயமுள்ள, சூதுள்ள.
Crag, *s.* செங்குத்தானகன்மலை.
Crag′ged, *a.* பாறையும்பதிவுமுள்ள.
Crag′ged-ness, Crag′gi-ness, *s.* } கொத்தை, பாறை.
Crag′gy, *a.* பாறைநிறைந்த.
Cram, *v. a.* திணித்தல், அமுக்குதல், செருகுதல், அடைதல், சரையாப்பித்தல்.
Cramp, *s.* வலி, ஈர்ப்பு, இசிவு, குறண்டல், பிடிப்பு, கொளுவல், இழுப்பு.
in carpentry, அள்ளு.
in the leg, &c., சரணவாதம், குறண்டல்வாதம்.
to have cramp in the bowels, &c., கொளுவுதல், வலித்தல்.
as impediment, தடை, சிக்கு, நெருக்கம்.
Cramp, *v. n.* பிடிக்குதல், இழுக்குதல், கொளுவுதல், தடுத்தல்.
Cramp′-ī-ron, *s.* பற்றிரும்பு, அள்ளு.
Cran′ber-ry, *s.* கொட்டணைக்காய்.
Crāne, *s.* கொக்கு, நாரை.

of iron, பாரஞ்சாம்புமோரியந்திரம், தொம்மைக்கிலாசு.
as syphon, வளைந்தகுழல், நீர்வாங்கு கிறகுழல்.
Crā-ni-og'no-my, s. கபாலசாஸ்திரம், சிரசாமுத்திரிகம், சிரக்குறி.
Crā-ni-o-log'ic-al, a. கபாலநூலுக்குரிய.
Crā-ni-ol'o-gist, s. கபாலசாஸ்திரி.
Crā-ni-ol'o-gy, s. கபாலநூல்.
Crā-ni-om'e-ter, s. மண்டையளக்குங் கருவி.
Crā-ni-os'co-py, s. கபாலவித்தை.
Crā'ni-um, s. கபாலம், மண்டை.
Crank, s. சுழற்றுமச்சாணி, இயந்திரக் கைபிடி, வளைவு.
in speech, சுற்றுச்சுழற்சியானபேச்சு, கவுத்துவமானபேச்சு.
of iron, அள்ளு.
Crank, a. நிமிர்ச்சியுள்ள.
ship, குல்லாத்தோணி, தளஞ்சாய்ந் தோடுந்தோணி.
Crank'ness, s. ஒடுக்கம், நிமிர்ச்சி, இலேசாய்க்கவிழ்ந்தகை, வீரம், தைரியம்.
Cran'ny, s. வெடிப்பு, நீக்கம்.
as hole, கோறை, நுழை.
as rent, பீறல்.
Cran'ny, a. சந்தோஷமுள்ள, புகழத்தக்க.
Crants, s. கன்னிகைகளின்பிரேதஅலங்காரத்துக்குநாற்றியமாலை.
Crāpe, s. பட்டாடை.
Crāpe, v. சுருட்டிமுடிதல்.
Crap'u-lence, s. மதுபானஉவட்டு, குமட்டு, மதுமத்தம்.
Crash, s. மடமடப்பு, நெறுநெறுப்பு.
Crash, v. a. பொடியாக்குதல், நொருக்குதல், தகர்த்தல், தூளாக்குதல்.
Crash, v. n. நெறுநெறுத்தல், மளமளத்தல்.
Crash'ing, s. நெறுநெறுப்பு, மளமளப்பு.
Crā'sis, s. சுகிர்தம், சொஸ்தம்.
in grammar, சந்தியக்கரம், சந்தியாதேசம்.
Cratch, s. பசுத்தொட்டில், முன்னணை.
Crāte, s. மட்கலம்வைக்குங்கொட்டுக்கூடை.

Crā'ter, s. அக்கினிமலைப்பிளப்பு.
the name of a constellation, ஓர்தாராபந்தி.
Cräunch, v. a. நெறுநெறுத்தல், நெரித்தல்.
Cra-vat', s. கழுத்துக்குட்டை.
Crāve, v. a. அவாவுதல், கெஞ்சுதல், பின்சென்றுகேட்டல், ஆசித்தல்.
to solicit, மன்றாடிக்கேட்டல், இரத்தல், வருடிக்கேட்டல்.
Crā'ven, s. கீழ்மகன், ஏழை, சுணைகெட்டவன், இளநெஞ்சன்.
as cock, தோற்றசேவல்.
Crā'ven, v. a. பயமுறுத்தல், சுணைகெடுத்தல்.
Crāv'er, s. கெஞ்சுகிறவன்.
Crāv'ing, s. அவா, ஆவல், தேட்டம், கெஞ்சல், இரப்பு.
Crāv'ing-ly, adv. ஆவலாய், தாகமாய், அவாவாய்.
Craw, s. இரைப்பெட்டி, இரைப்பை.
De-tē-ri-o-rā'tion, *s.* இழிவு, கேடு, தளர்ச்சி, சிதைவு, தாழ்ச்சி, பின்னம், பேதிப்பு.
De-ter'ment, *s.* (*see* Deter.) மறிப்பு.
De-term'in-a-ble, *a.* அறியக்கூடிய, நிதானிக்கக்கூடிய.
De-term'in-āte, *v. a.* மட்டுப்படுத்துதல், நிதானித்தல்.
De-term'in-ate, *a.* எல்லையுள்ள, திட்டமான, தீர்க்கமான, நிலையுள்ள, எண்ணமுள்ள.
De-term'in-ate-ly, *adv.* திட்டமாய், தீர்க்கமாய், நிச்சயமாய், முடிப்பாய், உறுதியாய்.
De-term'in-ate-ness, *s.* நிச்சயம், உறுதி, தீர்க்கம், திட்டம்.
De-term-in-ā'tion, *s.* தீர்மானம், அறுதி, வரையறை, தீர்ப்பு, துணிவு, நிண்ணயம், நியமம், சங்கற்பம், முடிப்பு.
De-term'in-a-tive, *a.* மட்டுப்படுத்துகிற.
De-term'in-ā-tor, *s.* மட்டுப்படுத்துகிறவன், தீர்மானிக்கிறவன்.
De-term'ine, *v. a.* தீர்மானித்தல், நிச்சயித்தல், நிண்ணயம்பண்ணுதல், குறித்தல், வரையறுத்தல், உத்தேசித்தல், தீர்த்தல்.
to be determined, தீர்தல், முடிதல்.
De-term'in-er, *s.* தீர்மானம்பண்ணுவோன்.
De-ter'sion, *s.* (*see* Deterge.) சுத்தமாக்குகை, களங்கறுக்கை.
De-ter'sive, *s.* காரமருந்து.
De-ter'sive, *a.* சுத்தமாக்குகிற.
De-test', *v. a.* அரோசித்தல், வெறுத்தல், அருக்களித்தல், அருவருத்தல்.
De-test'a-ble, *a.* அருவருப்புள்ள, அரோசிப்புள்ள, தீழ்ப்பான, வெறுக்கப்படத்தக்க.
De-test'a-ble-ness, *s.* அருவருப்பு, அரோசிப்பு, வெறுப்பு.
De-test'a-bly, *adv.* அருவருப்பாய், தீழ்ப்பாய், வெறுப்பாய்.
Det-es-tā'tion, *s.* அருவருப்பு, வெறுப்பு, மனவீனம்.
De-test'er, *s.* அருவருக்கிறவன், வெறுக்கிறவன்.
De-thrōne, *v. a.* செங்கோலையழித்தல், ஆளுகையிலிருந்துநீக்குதல், பத்திராசனத்தால்விலக்குதல்.
De-thrōn'er, *s.* சிங்காசனத்தைவிட்டகற்றுவோன்.
De-thrōne'ment, *s.* செங்கோலழிவு, இராசத்துவநாசம்.
Det'i-nūe, *s.* அபகரிக்கப்பட்டபொருள்.
in law, சோதனைத்தத்துவம்.
Det'o-nāte, *v. n.* தொனித்தல், வெடித்தல்.
Det-o-nā'tion, *s.* வெடி, இடி, தொனி, துவனி.
Det'o-nīze, *v. a.* தொனிக்கச்செய்தல், வெடிக்கச்செய்தல்.
De-tort', *v. a.* திரித்தல், புரட்டுதல், முறுக்குதல்.
De-tor'tion, *s.* புரட்டு, முறுக்கு, திரிப்பு.
De-tract', *v. a.* இழுத்தல், குறைத்தல், கெடுத்தல், அவதூறுபண்ணுதல், கோள்சொல்லுதல்.
De-trac'tion, *s.* அவதூறுசெய்கை, புறங்கூறுகை, கோள், குறளை.
De-tract'ive, *a.* புறங்கூறுகிற, குறளைபேசுகிற, குறைக்கிற.
De-tract'or, *s.* குறைசொல்வோன், கோட்சொல்வோன், பின்புறணிக்காரன், கொண்டுணி.
De-tract'o-ry, *a.* குறையுள்ள, அவதூறான, பழிப்பான.
De-tract'ress, *s.* கோட்காரி.
Det'ri-ment, *s.* நஷ்டம், கெடுதி, கேடு, சேதம், அலாபம், தாழ்வு, பாடு, பின்னம், அபலம்.
Det-ri-ment'al, *a.* கேடான, நாசமான, நட்டமான.
De-tri'tion, *s.* தேய்ந்துபோகுகை, தேய்வு, உரோஞ்சுண்டுபோகுகை.
De-trūde', *v. a.* விழுத்துதல், வீழ்த்தல்.
De-trunc'āte, *v. a.* துண்டித்தல், பொல்லம்போடுதல்.
Det-run-cā'tion, *s.* துண்டிப்பு.

De-trū'sion, *s.* கீழேதள்ளிவிழுத்துகை, தாழத்தள்ளுகை.
Deū-ter-og'a-my, *s.* இரண்டாந்தாரமுடித்தல், இரண்டாம்விவாகம்.
Deū-ter-on'o-my, *s.* உபாகமம்.
Dev'as-tāte, *v. a.* கொள்ளையிடுதல், அள்ளுதல், பாழாக்குதல், பாழ்க்கடித்தல், அழிக்குதல், சங்கரித்தல், நிருமூலமாக்கல்.
Dev-as-tā'tion, *s.* அழிவு, பாழ், கொள்ளை, நிருமூலம், நாசம், சங்காரம்.
De-vel'op, *v. a.* காட்டுதல், வெளிப்படுத்தல், தோற்றுவித்தல், சிக்கறுத்தல்.
De-vel'op-ment, *s.* தோற்றம, உற்பத்தி, விளக்குதல், வெளிப்படுத்துதல்.
De-verg'ence, (*see* Divergence.) பிரிவு.
De-vest', *v. a.* உரிதல், களைதல், நீக்குதல், பறித்தல்.
in law, சுதந்தரபங்கம்பண்ணுதல், உரித்தகற்றல்.
De-vex', *a.* கவிகிற, வளைகிற.
De-vex'i-ty, *s.* கவிப்பு, சாய்வு, புறவளைவு, சரிவு, சாய்ப்பு.
Dē'vi-āte, *v. n.* தப்புதல், தவறுதல், வழுவுதல், பிசகுதல், கடத்தல், பிரிதல்.
as to stray, வழிவிலகிப்போதல்.
De-vi-ā'tion, *s.* தப்பு, தவறு, வழு, பிசகு, இழுக்கு, கோணல், தப்பிதம், பின்னம், பங்கம்.
from grammatical rule, இலக்கணவழு.
from a right line, சாய்வு, சரிவு, பிரிவு.
De-vīce', *s.* கற்பிதம், சங்கற்பம்.
in a bad sense, உபாயம், சூழ்ச்சம், சூது, சூழ்ச்சி, தந்திரம்.
ornamental, அலங்காரம், சித்திரம், வன்னிப்பு.
De-vīce'ful, *a.* சூழ்ச்சமுள்ள.
Dev'il, *s.* சாத்தான், பைசாசம், பேய், அலகை.
as a person, பேயன்.
in scripture, பிசாசுகள்.
Dev'il-ish, *a.* பேயாட்டமான, பேய்க்குணமான, துஷ்டமுள்ள.
Dev'il-ish-ly, *adv.* பேயாட்டமாய், பேய்க்குணமாய், துட்டமாய்.
Dev'il-ish-ness, *s.* பேயாட்டம், பேய்க்குணம், பேய்த்தனம்.
Dē'vi-ous, *a.* சுற்றுச்சுழற்சியான, சுழ்ச்சியான, திரிபுள்ள, தப்பான.
De-vĭr'gin-āte, *v. a.* கற்பழித்தல், அபிமானங்கெடுத்தல்.
De-vīs'a-ble, *a.* எண்ணக்கூடிய, யோசிக்கக்கூடிய, உபாயம்பண்ணக்கூடிய.
De-vīse', *s.* மரணசாதனம், பாகபத்திரிகை, மரணசாதனுஸ்தி.
De-vīse', *v. a.* கருத்தெடுத்தல், சட்டங்கட்டுதல்.
means, எத்தனம்பண்ணுதல், துருவம்பண்ணுதல், வழிவகைதேடுதல், புணர்த்தல்.
Dev'i-see, *s.* மரணசாதனவழியாய்ச்சுதந்திரம்பெற்றவன்.
De-vīs'er, *s.* யோசிப்போன், உபாயம்பண்ணுவோன், உபாயி, யூகி.
De-vīs'or, *s.* மரணசாதனமெழுதிவைப்போன்.
De-void', *a.* வெறுமையான, சூனியமான, இல்லாத, அபாவமான.
Dev-o-lū'tion, *s.* இறக்கத்திலுருளுகை, மாற்றிவைத்தல்.
De-volve', *v. a.* இறக்கத்திலுருட்டுதல், பொறுப்பித்தல், சுமர்த்துதல், ஒப்புவித்தல், பாரித்தல்.
as debts, &c., கடன்சுமர்த்துதல், பொறுப்பித்தல், தாக்குதல்.
De-volve', *v. n.* இறக்கத்திலுருளுதல், பொறுத்தல், சாடுதல், சுமர்த்தல், பாரித்தல், இறங்குதல்.
as evil, பழிசுமருதல்.
as a right, அடைதல், சேர்தல், உரித்தாதல், பொறுத்தல்.
De-vōte', *v. a.* நேர்த்திபண்ணுதல், நேர்தல், நைவேதித்தல்.
to consecrate, பிரதிட்டைபண்ணுதல், நேருதல்.
to doom, அழிவுக்கென்றுநேருதல்.
to enslave, ஆட்படுதல், அடிமைப்படுதல்
to give, இடுதல், ஈதல், ஒப்புக்கொடுத்தல், நியமித்தல், நேர்ந்துவிடுதல்.

De-vōt′ed-ness, *s.* நைவேதிக்கப்பட்ட தன்மை, நியமிக்கப்பட்டதன்மை, நேர்ந்ததன்மை.
Dev-o-tee′, *s.* அடியன், தொண்டன், தொழும்பன், தாசன், பத்தன், பத்தி விசுவாசி, வனவாசி.
as recluse, தபத்தி, தவசி, சந்நியாசி, தபோதனன், தாபதன், விரத்தன்.
De-vōt′er, *s.* பிரதிட்டைபண்ணுகிறவன், பத்தன்.
De-vō′tion, *s.* தேவபத்தி, பத்தி, வணக்கம்.
ardent affection, முயற்சி, ஊக்கம்.
rigorous, கடும்பத்தி, பத்திவைராக்கியம், உத்தமபத்தி.
De-vō′tion-al, *a.* பத்திக்கடுத்த, வணக்கமுள்ள.
De-vō′tion-al-ist, De-vō′tion-ist, *s.* பத்திமான், தபத்தி.
De-vour′, *v. a.* பட்சித்தல், ஆபோசனம்பண்ணுதல், குடித்தல், உண்ணல்.
as a beast, ஆவலாய்விழுங்குதல்.
as fire, தகித்தல், எரித்தல், பட்சித்தல்.
De-vour′er, *s.* பட்சணி, ஆவலாய்உண்போன்.
De-vour′ing, *s.* பட்சிப்பு, சங்கரிப்பு, ஆபோசனஞ்செய்கை.
De-vour′ing-ly, *adv.* பட்சிக்குந்தன்மையாய், சங்காரமாய்.
De-vout′, *a.* பத்தியான, வணக்கமுள்ள, ஞானமுள்ள.
De-vout′ly, *adv.* பத்தியாய், வணக்கமாய்.
De-vout′ness, *s.* பத்தி, தெய்வபத்தி.
Dew, *s.* பனி, இமம், துகினம்.
heavy, கனத்தபனி, இமப்படலம், கடும்பனி.
drop, பனித்துளி, பனித்திவலை, பனித்தூவல்.
Dew′-lap, *s.* தாடி, ஆரம்.
as wattle, அதர், அதள், களகம்பளம்.
Dew′y, *a.* பனியான, பனியுள்ள, பனிபோன்ற.
Dex-ter′i-ty, *s.* சாமர்த்தியம், சாதுரியம், கெட்டித்தனம்.
of hand, கைச்சித்திரம், கைச்சுறுக்கு, கைப்பழக்கம், கைவழக்கம், கைச்சாத்திரம்.
in an art, பயிற்சி, பழக்கம்.
in writing, கையோட்டம், கைத்துரிசு, கைவிரைவு, கைச்சுறுக்கு.
Dex′tral, *a.* வலக்கைக்கடுத்த.
Dex′trous, *a.* சம்பிரதாயமான, திறமான, பழக்கமான, பரிட்சையான, அப்பியாசமான.
Dex′trous-ly, *adv.* அப்பியாசமாய், சம்பிரதாயமாய், சீக்கிரமாய், சமர்த்தாய்.
Dhō′ny, *s.* (*see* Dony.) தோணி, சம்பான், படகு.
men, தோணிக்காரர், சம்பான்காரர்.
Dī-a-bē′tēs, *s.* நீரழிவு, சலக்கழிச்சல், சலரோகம்.
Dī-a-bol′ic-al, *a.* பேயாட்டமான, பேய்த்தனமுள்ள, கெட்ட, துட்ட, கொடிய.
Dī-a-bol′ic-al-ly, *adv.* பேய்த்தனமாய், பசாசின்குணமாய், துட்டமாய்.
Dī-a-bol′ic-al-ness, *s.* பேய்த்தன்மை, பேய்க்குணம்.
Dī-a-cous′tics, *s.* எதிரொலிச்சத்துவசாத்திரம்.
Dī-a-crit′ic-al, *a.* பிரிக்கிற, வேற்றுமையாக்குகிற, பிரித்துக்காட்டுகிற.
Dī′a-dem, *s.* முடி, கிரீடம், பட்டம்.
Dī′a-dem-ed, *a.* முடிதரித்த, பட்டஞ்சூட்டின.
Dī-ær′e-sis, Dī-er′e-sis, *s.* விசர்க்கம், அசைபிரிக்குங்குறி.
Dī-ag-nos′tic, *s.* நோய்களின்குணம், நோய்க்கூறுபாடு, குணபாடல், நோய்க்குறி.
Dī-ag′o-nal, *s.* மூலைவிட்டம், குறுக்குவரி.
Dī-ag′o-nal, *a.* விட்டமான.
line, விட்டரேகை.
Dī-ag′o-nal-ly, *adv.* கோணத்துக்குக்கோணமாய், எதிர்கோணமாய், மூலைக்குமூலை.
Dī′a-gram, *s.* வரிவடிவம், கோடு, சக்கரம், யந்திரம், வரிக்குறிப்பு, எந்திரம்.
to make diagrams, கோடுகீறுதல், வரிகீறுதல், இரேகித்தல்.
Dī′al, *s.* சூரியகடிகாரம்.
Dī′a-lect, *s.* பாஷை, பேதபாஷிதம், பாஷையின்விகாரம்.

Dī-a-lect′ic-al, *a.* பேதபாஷிதத்துக்கடுத்த.
argumental, தொடர்நியாயமுள்ள.
Dī-a-lect′ic-al-ly, *adv.* பாஷைப்போங்காய், பாஷைமுறைப்படி.
Dī-a-lec-ti′cian, *s.* தருக்கசாத்திரி, நியாயசாஸ்திரி.
Dī-a-lect′ics, *s.* தருக்கசாத்திரம், நியாயசாத்திரம்.
Dī′al-ing, *s.* சூரியகடியாரமுண்டாக்கும்நூல்.
Dī-al′o-gist, *s.* சல்லாபபாஷிதன்.
Dī-al′o-gīse, *v. n.* சல்லாபம்பண்ணுதல்.
Dī′a-logue, *s.* சல்லாபம், விஞவிடை, சம்பாஷணை.
Dī′al-plāte, *s.* சூரியகடியாரப்பலகை.
Dī-al′y-sis, *s.* அசைபிரிக்குங்குறி, விசர்க்கம்.
in medicine, மெலிவு, சோர்வு, நோய்ஞ்சல்.
Dī-am′e-ter, *s.* குறுக்களவு, விட்டம்.
apparent of a planet, கிரகமானம், விம்பம்.
Dī-a-met′ric-al, *a.* விட்டமான, குறுக்கான.
Dī-a-met′ric-al-ly, *adv.* விட்டமாய், நேராய்.
Dī′a-mond, *s.* வச்சிரம், வைரம், வைரமணி.
Dī-a-pā′son, *s.* சத்தசுரத்தின்மெட்டு.
in music, சரளிஅலங்காரம்.
Dī′a-per, *s.* சித்திரப்பட்டு, பின்னற்புடைவை, கைக்குட்டை, பரிவட்டத்துண்டு.
Dī-aph′a-nous, *a.* ஒளியுருவிப்போகக்கூடிய, தெளிவான, பழிங்குபோன்ற.
Dī-a-pho-rē′sis, *s.* மிகுவியர்வை, வியர்வைப்பெருக்கம்.
Dī-a-pho-ret′ic, *s.* வியர்ப்புறுமருந்து, வெயர்வையுண்டாக்குமருந்து.
Dī-a-pho-ret′ic, *a.* வியர்வையுண்டாக்கத்தக்க, வியர்ப்பிக்கிற.
Dī′a-phragm, *s.* ஈரலுக்குங்குடலுக்குநடுச்சவ்வு, ஈரற்றுங்கி.
Dī′a-rist, *s.* தினசங்கதிகாரன், தினசரித்திரகாரன்.
Dī-ar-rhē′a, *s.* வயிற்றுளைவு.
Dī-ar-rhet′ic, *a.* வயிற்றுளைவுண்டாக்குகிற.
Dī′a-ry, *s.* நாளாகமம், நாளாகமச்சட்டம், தினக்கணக்கு.
Dī-as′to-le, / Dī-as′to-ly, *s.* இரத்தாசயவிரிவு.
in grammar, நீட்டல்விகாரம்.
Dī-a-ton′ic, *a.* இசைவேற்றுமையுள்ள, விட்டிசையான.
Dib′ble, *s.* பாரை.
Dib′ble, *v. a.* கிண்டுதல், கிண்டிப்புதைத்தல்.
Dīce, *s.* (*pl.* of Die.) கவறு, தாயக்கட்டை, பாய்ச்சிக்கை.
box, தாயச்சிட்டி.
to cast dice, கவறுருட்டல், கவறெறிதல், பாச்சிக்கைபோடுதல்.
the spot on the side, தாயம், புள்ளி.
Dīc′er, *s.* தாயக்கட்டையுருட்டுகிறவன்
Dī-co-tyl-ē′don, *s.* முதிரைவருக்கம், பருப்புள்ளபயிர்.
Dic′tāte, *s.* கட்டளை, கற்பிதம், கற்பனை.
Dic′tāte, *v. a.* வாசகஞ்சொல்லுதல், வசனித்தல், கற்பித்தல், கட்டளையிடுதல், குறித்தல், சொல்லுதல்.
Dic-tā′tion, *s.* வாசகஞ்சொல்லுகை, கற்பித்தல்.
Dic-tā′tor, *s.* கட்டளையிடுவோன், கற்பிப்போன், வசனிப்போன், நிருபன்.
Dic-ta-tō′ri-al, *a.* சுயஅதிகாரமுள்ள, தன்னெழுச்சியான, தன்னிட்டமான, அமையாத.
Dic-tā′tor-ship, / Dic′ta-ture, *s.* பிரமாணத்துவம், நிருபத்துவம், பிரபுத்துவம், அதிகாரம், அதிகாரத்துவம், தத்துவம்.
Dic′ta-to-ry, *a.* பிடிவாதமான.
Dic′tion, *s.* வாசகப்போக்கு, வாசகம்.
Dic′tion-a-ry, *s.* அகராதி, சொற்பொருள்விரிக்குநூல்.
Dic′tum, *s.* தனுதுநிறுப்பு, கற்பிதம்.
Did, (*see* Do.) செய்த.
Di-dac′tic, / Di-dac′tic-al, *a.* படிப்பிக்கிற, கற்பிக்கிற, படிப்பனவுள்ள, அறிவுக்கேதுவான.
Di-dac′tic-al-ly, *adv.* அறிவுக்கேதுவாய், மனத்தெளிவுக்கேதுவாய், படிப்பனவாய், போதனையாய்.

Dīe, s. (*pl.* Dice.) பாய்ச்சிக்கை, கவறு, தாயக்கட்டை.
a stamp, கம்பட்டமுளை.
Dīe, v. n. இறத்தல், சாதல், மரித்தல், காலஞ்செல்லுதல், கெடுதல், மரணித்தல், மரணமடைதல், மாளுதல்.
as a vegetable, உலர்தல், வாடுதல்.
as a tree, படுதல், பட்டுப்போதல்.
in battle, &c., விழுதல், மடிதல்.
in numbers, சங்காரமாதல்.
to become vapid, as liquors, சாரமற்றுப்போதல்.
Dī'et, s. சாப்பாடு, உணவு, பத்தியம்.
drink, குடிநீர்.
strict, கடும்பத்தியம்.
an assembly, ஆலோசனைச்சங்கம், மந்தனம்.
Di'et, v. a. உணவூட்டல், உணவுகொடுத்தல்.
Dī'et, v. n. சாப்பிடுதல், பத்தியம்பிடித்தல்.
Dī'et-a-ry, s. பத்தியமுறை.
Dī'et-a-ry, a. பத்தியபோசனத்துக்குரிய.
Dī'et-er, s. பத்தியகாரன், பத்தியங்குறிப்போன்.
Dī-e-tet'ic, a. பத்தியத்துக்கடுத்த, பத்தியமுள்ள, பத்தியமுறையான.
Dif'fer, v. n. வித்தியாசப்படுதல், இரண்டுபடுதல், வேறுபடுதல்.
as opinions, பேதித்தல், மாறுகொளல், வேறுபடுதல்.
Dif'fer-ence, s. வித்தியாசம், வேற்றுமை, வேறுபாடு, திரிபு, பிரிவு, விகற்பம், விகாரம், பின்னம், பேதம்.
as dispute, தருக்கம், வழக்கு, விவாதம், வியாச்சியம்.
in logic, சாதிவிகாரம்.
in subtraction, சேடம்.
ground of, விவாதகாரணம்.
Dif'fer-ence, v. a. வேற்றுமைப்படுத்தல்
Dif'fer-ent, a. பலவிதமான, பலவகையான, பற்பல, பலபல.
aspect, திரிபுச்சாயல், விகாரமாதிரிகை.
countries, பற்பலதேசம், நானாதேசம்.
sort, பலவகை, நானாவிதம், பலவருக்கம், விவிதம்.
Dif-fer-en'tial, a. மகாசிறிய, அறக்குறைந்த.
Dif'fer-ent-ly, adv. பலவிதமாய், வேறாய், விகற்பமாய்.
Dif'fi-cult, a. பிரயாசமான, அருமையான, சோலியான, கற்கசமான, கடினமுள்ள, சங்கடமான.
question, உத்தரம்சொல்லற்கரியவினு, கட்டுவாக்கியம்.
style, &c., பொருள்மயக்கமானவாசகம், கருகலானவாசகம்.
meaning, விளங்காதபொருள், புதைபொருள், மறைபொருள்.
Dif'fi-cult-ly, adv. பிரயாசமாய், சங்கடமாய்.
Dif'fi-cul-ty, s. பிரயாசம், தொந்தரவு, வில்லங்கம், வருத்தம், கற்கசம், முட்டுப்பாடு, சங்கடம்.
in settling an account, சிக்கு, வில்லங்கம்.
of breathing, from over-eating, திட்டுமுட்டு, திக்குமுக்கு.
Dif'fi-dence, s. கூச்சம், நாணம், கோளை, சந்தேகம், நம்பிக்கையின்மை.
Dif'fi-dent, a. நம்பிக்கையில்லாத, கூச்சமுள்ள, ஒஞ்சிப்புள்ள.
person, கூச்சக்காரன், நம்பிக்கையற்றவன், கோளையன்.
to be diffident, கூசுதல், கோளைபடுதல்.
Dif'fi-dent-ly, adv. கூச்சமாய், கோளைத்தனமாய், நம்பிக்கையீனமாய்.
Dif'flu-ent, a. நிலையற்ற, நாற்றிசையும் பெருகுகிற.
Dif-fūse', v. a. வீசுதல், சிந்துதல், சிதறுதல், பரப்புதல், பரவுதல்.
as a fluid, சுவறல், ஊறுதல்.
to be diffused, பரம்புதல், பரவுதல், ஊறுதல்.
Dif-fūse', a. எங்கும்பரந்த, வியாபித்த.
Dif-fūs'ed-ly, adv. பரந்து, எங்கும்விரிவாய், வியாபகமாய்.
Dif-fūs'ed-ness, s. பரந்ததன்மை, வியாபித்திருக்கை.
Dif-fūse'ly, adv. விரிவாய், அகலமாய், சொல்விரிவாய்.
Dif-fūs'er, s. பரப்புவோன்.
Dif-fū'sa-ble, a. பெருக்கத்தக்க, பரம்பத்தக்க.

Dif-fū'sion, *s.* செறிவு, பரவுகை, வியாபகம், விரிகை.
Dif-fū'sive, *a.* விரியத்தக்க, பரம்பத்தக்க.
Dif-fū'sive-ly, *adv.* விரிவாய், பரப்பாய்.
Dif-fū'sive-ness, *s.* பரம்பத்தக்கதன்மை, விரியத்தக்கதன்மை, வியாபிக்கத்தக்கதன்மை.
Dig, *v. a.* கிண்டுதல், அகழுதல், தோண்டுதல், இடித்தல், கல்லுதல், தொடுதல், கோதுதல்.
graves, சவக்குழிவெட்டுதல்.
up, கிளப்புதல், கிளறுதல்.
down, or demolish, இடித்தல், தகர்த்தல்.
out, or from, குழிபறித்தல், குழிதோண்டுதல், கிண்டியெடுத்தல்.
through, கல்லுதல், அகழ்தல், துளைத்தல்.
Dī-gas'tric, *s.* மடிப்புவயிறு.
Di-gest', *s.* கட்டளைச்சட்டம், நியாயப்பிரமாணம், நியாயப்பிரமாணப்பொழிப்பு.
Di-gest', *v. a.* சமிப்பித்தல், சீரணிப்பித்தல்.
to arrange a subject, கோவைபண்ணுதல், ஒழுங்குப்படுத்துதல், மாலையாக்கல், முறையின்வைத்தல்.
to bear, without resentment, பொறுத்தல், சகித்தல்.
in the mind, தீர்ப்பாய்ப்படித்தல், கசடறக்கற்றல்.
Di-gest', *v. n.* சமித்தல், செரித்தல், சீரணித்தல்.
to be prepared by heat, அவிதல், புளுங்குதல்.
Di-gest'ed-ly, *adv.* ஒழுங்காய், வரிசையாய்.
Di-gest'er, *s.* ஒழுங்குப்படுத்துவோன்.
a medicine, சீரணிப்பிக்குமருந்து.
Di-gest-i-bil'i-ty, *s.* சீரணிக்கத்தக்கதன்மை.
Di-gest'i-ble, *a.* சீரணிக்கத்தக்க, சீரணிக்கக்கூடிய, செரிக்கத்தக்க, ஒழுங்குபடுத்தக்கூடிய.
Di-ges'tion, *s.* சமிப்பு, சீரணம், செரிப்பு, ஒழுங்கு.
Di-gest'ive, *s.* சீரணமருந்து.
in surgery, உபநாயம்.

Di-gest'ive, *a.* சீரணமாக்கத்தக்க, சமிப்பிக்கிற.
methodizing, ஒழுங்குப்படுத்துகிற, சீராக்குகிற.
Dig'ger, *s.* ஒட்டன், கல்லுவோன், தோண்டுவோன்.
Dīght, *v. a.* அலங்கரித்தல், ஒழுங்குப்படுத்தல்.
Dig'it, *s.* பங்கு, விரலிடை.
of the moon, சந்திரரேகை, சந்திரகலை, திதி.
in mathematics, தனியிலக்கம், அலகு.
Dig'it-al, *a.* விரலளவான, தனியிலக்கத்துக்குரிய.
Dī-glā'di-āte, *v. n.* சிலம்பம்விளையாடுதல், வாட்போர்செய்தல், வாளாற்சிரமம்பண்ணுதல்.
Dī-glā-di-ā'tion, *s.* சிலம்பம், வாளாச்சிரமம்.
Dig-ni-fi-cā'tion, *s.* உயர்ச்சியாக்குகை, மகத்துவமாக்குகை.
Dig'ni-fi-ed, *a.* மேன்மையாக்கப்பட்ட, மகத்தான, பெருமையிற்சிறந்த.
Dig'ni-fy, *v. a.* மகிமைப்படுத்துதல், உயர்த்துதல், சங்கித்தல், கணிசப்படுத்துதல்.
Dig'ni-ta-ry, *s.* குருப்பிரதானி.
Dig'ni-ty, *s.* பெருந்தகமை, மேன்மை, மகிமை, மகத்துவம், மாட்சிமை, சான்ருண்மை, உயர்ச்சி, கணிசம், பெருமிதம்.
of mien, பொலிவு, சம்பிரமநடை, கொலு, மகிமைப்பிரஸ்தாபம்.
in astrology, கிரகநோக்கு.
Dī'graph, *s.* ஈருயிர்மயங்கியும்ஒருயிரேயிசைக்குமெழுத்து.
Di-gress', *v. n.* வழிவிலகுதல், நேர்விலகுதல், பேசுங்காரியத்தில்விலகுதல்.
Di-gres'sion, *s.* விலக்குகை, தப்புகை, காரியம்விலகுகை, கோணுகை, பிரிகை.
Di-gress'ive, *a.* வழிவிலகுகிற, நேர்தப்புகிற, காரியந்தப்புகிற, பிரிகிற.
Di-gress'ive-ly, *adv.* வழிவிலக்காய், வழித்தவருய், காரியத்தப்பாய், பிரிவாய்.
Dī-jū'di-cāte, *v. a.* தண்டனைக்குத்தீர்த்தல்.

Dī-jū-di-cā'tion, s. தண்டனைத்தீர்ப்பு.
Dīke, s. வாய்க்கால், கால்வாய், கட்டு வாய்க்கால்.
a dam, வரம்பு, அணை, தீரம், குளக் கட்டு, ஏரிக்கரை, சேது.
Di-lac'er-āte, v. a. கிழித்தல், பீறுதல், பிரித்தல்.
Di-lac-er-ā'tion, s. கிழிவு, பீற்றல், பிரிவு.
Di-lap'i-dāte, v. a. இடித்தல், தகர்த்தல், அழித்தல்.
Di-lap-i-dā'tion, s. இடிவு, தகர்வு, பாழ், உடைவு.
Di-lap-i-dā'tor, s. அழிப்போன், நாசகன், பாழாக்குவோன்.
Di-lā-ta-bil'i-ty, s. விசாலிக்கத்தக்கதன்மை, விரியத்தக்கதன்மை, வீங்கத்தக்கதன்மை, ஊதத்தக்கதன்மை, பொருமுகை.
Di-lā'ta-ble, a. விசாலிக்கத்தக்க, வீங்கத்தக்க, பொருமத்தக்க, ஊதத்தக்க.
Dil-a-tā'tion, s. விரிவு, விசாலம், பெருக்கம், வீக்கம், பொருமல்.
Di-lāte', v. a. விரித்தல், விஸ்தரித்தல், விசாலம்பண்ணுதல், விபரமாய்ப்பேசுதல், பரப்புதல், பரப்பித்தல், வீக்குதல்.
Di-lāte', v. n. விரிதல், அகலல், பரத்தல், பரம்புதல், பருத்தல், தடித்தல், புடைத்தல், பெருகுதல், பொங்குதல், பொலிதல்.
in speaking, பாராட்டுதல், பருப்பித்தல், வன்னித்தல், விபரித்தல், விஸ்தாரமாய்ப்பேசுதல்.
Di-lāt'er, s. விரிவிப்போன், விரிவிப்பது, பருப்பிப்போன், பருப்பிப்பது.
Di-lā'tion, s. தாமதம்.
Di-lāt'or, s. விரிவிப்பது, பருப்பிப்பது, ஊதச்செய்வது.
Dil'a-to-ri-ly, adv. தாமசமாய், சோம்பாய்.
Dil'a-to-ri-ness, s. இழுக்கம், தாமதம், சோம்பு.
Dil'a-to-ry, a. தாமதமான, சோம்பான, இழுகிய, ஆலசியமான.
to be dilatory, இழுகுதல், தாமதித்தல், சோம்புதல்.
Di-lec'tion, s. நேசம், நட்பு, அன்பு.
Di-lem'ma, s. முட்டுப்பாடு, அபாயம், மனக்கவர்ச்சி, இருதலைநியாயமுந்தோத்திருத்தலால் ஒருதலைதுணியப்படாமை.
to be in a dilemma, மனங்கவரப்படுதல், ஒருதலைதுணியப்படாமை, தடுமாறுதல்.
Dil-et-tan'te, s. கல்விப்பிரபலியப்பிரியன், கல்விப்பிரியன், நானுசாத்திரப்பிரியன்.
Dil'i-gence, s. சுறுசுறுப்பு, முயற்சி, ஊக்கம், சாக்கிரதை.
Dil'i-gent, a. முயற்சியுள்ள, சாக்கிரதையுள்ள.
man, உழைப்பாளி, பிரயாசி, முயற்சியுள்ளவன், சாக்கிரதையுள்ளவன்.
Dil'i-gent-ly, adv. அசதியின்றி, முயற்சியாய், ஊக்கமாய், சுறுசுறுப்பாய்.
Dill, s. உலுவா, வெந்தயம்.
Di-lū'ci-dāte, v. a. (see Elucidate.) தெளிவித்தல்.
Di-lu-ci-dā'tion, s. தெளிவிப்பு.
Dil'u-ent, s. நீர்த்தன்மையாக்குவது, சத்துக்குறைப்பது.
Dil'u-ent, a. நீராக்குகிற, கரைக்கிற, பெலன்குறைக்கிற.
Di-lūte', v. a. நீராக்குதல், நீராளமாக்குதல், கரைத்தல், இலேசாக்குதல், மெலித்தல், சத்துக்குறைத்தல்.
Di-lūte', a. கரைந்த, மெலிந்த, நீர்த்த.
Di-lūt'er, s. சத்துக்குறைப்பது, நீராக்குவது,
Di-lū'tion, s. இளக்கம், நீர்ப்பிடிப்பு, கரைவு.
Di-lū'vi-al, Di-lū'vi-an, s. } பிரளயத்துக்கடுத்த, பிரளயத்தாற்சம்பவித்த.
Dim, v. a. மழுக்குதல், மங்கலாக்குதல், மந்தமாக்குதல், அப்பிரகாசம்பண்ணுதல்.
as the eyes, பூத்துப்போதல், பஞ்சாடுதல், பூஞ்சாடுதல்.
to become dim, ஒளிமழுங்குதல், சுடர்மழுங்குதல், ஒளிமங்கல், மங்கலாதல்.
Dim, a. மங்கலான, கம்மலான, பூஞ்சலான, மங்குளமான, அப்பிரகாசமுள்ள.
eyes, பூஞ்சற்கண், கம்மற்கண்.
as the mind, மந்தமான, மூடமான.

Dīme, *s.* ஓர்நாணயம்.
Di-men'sion, *s.* அளவு, மொத்தம்.
Di-mid'i-āte, *v. a.* சமபாதிபண்ணல், இருபங்காக்கல்.
Di-min'ish, *v. a.* குறைத்தல், சுருக்குதல், தணித்தல், அருக்குதல், ஒடுக்குதல், தாழ்த்துதல், சிறுப்பித்தல்.
Di-min'ish, *v. n.* குறைதல், சுருங்குதல், தணிதல், குறுகுதல், அருகுதல், எஞ்சுதல், ஒடுங்குதல், சிறுகுதல், குன்றுதல்.
as objects, சிறுத்துக்காட்டுதல்.
Di-min'ish-a-ble, *a.* குறையக்கூடிய, சிறுக்கக்கூடிய, தணியக்கூடிய, சுருங்கத்தக்க.
Di-min'ish-ing-ly, *adv.* குறைவாய், தணிவாய்.
Dim-i-nū'tion, *s.* குறைக்குகை, தணிக்கை, சுருக்குகை.
as state, இழிவு, ஒடுக்கம், தேய்வு, தாழ்ச்சி, கணிசக்குறை.
of a receding body, சிறுத்துக்காட்டுகை.
by deduction, கழிவு.
Di-min'u-tive, *s.* சிறுமையைக்காட்டும் அடைமொழி.
Di-min'u-tive, *a.* சுருக்கமான, சிறிய, அற்பனை.
to be diminutive, சிறுகுதல், சுருங்குதல், குறைதல், தணிதல்.
Di-min'u-tive-ly, *adv.* சிறுக, குறைய, ற்பமாய், சொற்பமாய்.
Di-min'u-tive-ness, *s.* நுண்மை, அற்பம், சொற்பம், குறை, சின்னம், கிஞ்சம்.
want of dignity, சிறுமை, தாழ்ச்சி, கீழ்மை.
Dim'is-so-ry, *a.* விடுகிற, உத்தரவுகொடுக்கிற, அனுப்புகிற.
letter, உத்தரவுச்சீட்டு.
Dim'i-ty, *s.* இரட்டுப்புடைவை, பின்னற்புடைவை.
Dim'ly, *adv.* மங்கலாய், மங்குளமாய், அபிரகாசமாய்.
Dim'ness, *s.* மங்கல், கம்மல், செங்கல், புகைச்சல், மந்தம்.
of a gem, குருடு.
of sight, புகைச்சல், வெள்ளெழுத்து, சத்துவாரி, சாலேசரம், கண்காசம்.
of the evening light, மாலைமயக்கம், மாலையிருள்.
of apprehension, மந்தம், கூர்மையின்மை.
Dim'ple, *s.* குழி, பதிவு, பள்ளம்.
Dim'ple, *v. n.* குழிதல், பதிதல், பணிதல், பள்ளம்விழுதல்.
Dim'pled, *a.* பதிவான, குழிந்த.
Din, *s.* இரைச்சல், முழக்கம், சத்தம், அமலை, ஆரவாரம்.
Din, *v. a.* இரைதல், காதடைக்கச்செய்தல், கம்பலைபண்ணுதல்.
Dīne, *v. n.* பகற்போசனஞ்செய்தல், பகலசனஞ்செய்தல்.
Ding, *v. a.* கணுரென்றடித்தல்.
Ding'-dong, *s.* மணிச்சத்தம், கிண்கிணிச்சத்தம், கிணீரெனல்.
Din'gi-ness, *s.* மங்கல், அழுக்கு, கபிலம், புகர்.
Din'gle, *s.* பள்ளத்தாக்கு, இருமலையூடுவெளி, கணவாய்.
Din'gy, *a.* அழுக்கான, செங்கல்மங்கலான, கபிலமான, ஊத்தையான, புற்கெனுநிறமான.
Dīn'ing-room, *s.* போசனசாலை.
Din'ner, *s.* பகலசனம், மத்தியானச்சாப்பாடு.
an entertainment, விருந்து.
Dint, *s.* அடி, தாக்கு.
as force, பலம், சத்துவம்.
as mark, தழும்பு, வடு, கீறு, பதிவு.
Dint, *v. a.* (*see* Indent.) குழித்தல்.
Dī'o-cē-san, *s.* குருப்பிரதானி, கண்காணி.
Dī'o-cē-san, *a.* குருவிஞட்சிக்கடுத்த, குருத்துவத்துக்கடங்கிய, சமாபந்திக்கேற்ற.
Dī'o-cēse, Dī'o-cess, *s.* குருவிஞட்சி, சமாபந்தி.
Dī-op'tic, Dī-op'tric, Dī-op'tric-al, *a.* பார்வைக்குரிய, தூரதிட்டிக்குரிய, நயனசாத்திரத்துக்கடுத்த, நயனவிதிக்கடுத்த.
Dī-op'trics, *s.* கதிர்பத்திபாயும்விதி, ஒளிஉருவிவக்கிரிக்குமநூல்.

Dī-o-rā'ma, *s.* ஓர்வகைஒளிச்சாத்திரயந்திரம்.
Dip, *s.* சாய்ப்பு, இறக்கம்.
Dip, *v. a.* தோய்த்தல், அமிழ்த்தல், தாழ்த்துதல், முழுகுதல், துவைத்தல்.
to look cursorily, பரும்படியாய்ப்பார்த்தல், சரவையாய்ப்பார்த்தல்.
Dip, *v. n.* தோய்தல், தாழ்தல், அமிழ்ந்துதல்.
Diph'thong, *s.* உயிர்மயக்கம், ஈருயிர்ப்புணர்வு, சந்தியக்கரம்.
a proper dipthong, நிறையொலியுயிரிணை, முற்றியற்சந்தியக்கரம்.
an improper dipthong, குறையொலியுயிரிணை, குற்றியற்சந்தியக்கரம்.
Diph-thong'al, *a.* ஈருயிர்ப்புணர்ச்சிக்கடுத்த, உயிர்மயக்கான.
Di-plō'ma, *s.* நிட்கருடபத்திரம், தத்துவக்கடுதாசி, ஒழுக்கசாதனம்.
Di-plō'ma-cy, *s.* அனுப்பப்பட்டபிரதிகாரியகத்தர் இராச்சியபரிபாலனத்துக்குச்செய்யும்ஒழுங்குகள், அனுப்பப்பட்டகாரியகத்தாக்கள்.
Dip-lo-mā'ted, *a.* நிட்கருடபத்திரமுள்ள, ஒழுக்கசாதனத்துக்குரிய.
Dip-lō-mat'ic, *a.* தத்துவமுள்ள, அதிகாரபத்திரத்துக்கடுத்த, காரியகத்தருக்குரிய.
Dip-lo-mat'ics, *s.* தேசப்பிரமாணம், சாதனம்முதலியவைகளைக் குறித்துப்பிரமாணிக்கத்தக்கநூல்.
Di-plō'ma-tist, *s.* இராச்சியபரிபாலனஒழுங்கில்வல்லவன்.
Dip'per, *s.* துவைக்கிறவன்.
a ladle, இறைகூடை, அகப்பை, பத்தல்.
Dip'ping, *s.* தோய்வு, அமிழ்ச்சி, ஸ்நானம், சாய்வு.
needle, காந்தவூசி.
Dīre, *a.* பயங்கரமான, திகிலான, மாபயங்கரமான.
calamity, கொடியவுபத்திரவம், கொடுந்திகில்.
dreadful, பயங்கரமான.
Di-rect', *v.a.* குறித்தல், கட்டளையிடுதல், கற்பித்தல், காண்பித்தல், இயற்றுதல்.
to guide, செம்மைப்படுத்தல், வழிகாட்டல்.
to manage, நடத்துதல், நடப்பித்தல், செலுத்துதல், ஆளுதல்.
how to act, வழிவகைகாட்டல், சொல்லிக்கொடுத்தல்.
a course, &c., பிடித்தல், காட்டுதல், ஆறுகாட்டல்.
a letter, மேல்விலாசம்போடுதல்.
Di-rect', *a.* நேரிய, சரியான, திட்டமான, தீர்க்கமுள்ள, தெளிவான.
tax, பொருள்வரி.
opposition, முற்றுனஎதிரிடை, தீர்ந்தபகை, முற்றும்ஒவ்வாமை, விரோதம்.
Di-rect'er, *s.* (*see* Director.) நடப்பிப்போன்.
Di-rec'tion, *s.* இலக்கு, குறிப்பு, நிதானம், மேல்விலாசம்.
as board, மேல்விசாரணைச்சங்கத்தார்.
as command, கட்டளை, ஏவல், கற்பனை, பணி, ஆளுகை.
as point of compass, திக்கு, திசை.
as tendency, சாய்வு, நோக்கம், ஏது.
Di-rect'ive, *a.* நடப்பிக்கிற, கற்பிக்கிற, உபதேசிக்கிற.
Di-rect'ly, *adv.* கையோடே, கையுடனே, கைக்குள், உடனே.
as straightly, நேரே, நெடுக.
as openly, தெளிவாய், வெளியாய், சட்டமாய்.
Di-rect'ness, *s.* நேர்மை.
Di-rect'or, *s.* கற்பிப்போன், ஏவுவான், காரியதுரந்தரன், பணிக்கன், பாகன், பிரமாணம், கட்டளை.
Di-rec-tō'ri-al, *a.* கட்டளைக்கடுத்த, வழிகாட்டுகிற.
Di-rect'o-ry, *s.* வழிகாட்டி, சூத்திரம், சூழ்ச்சம், பிரமாணம்.
a list of inhabitants, &c., குடிவிலாசம், குடிவிலாசஅகராதி.
a board of managers, முகாமைக்காரியஸ்தர், தலைமைச்சங்கம்.
Di-rect'ress, *s.* கற்பிப்பவள், ஏவுவாள், காரியதுரந்தரி, தலைவி.
Dīre'ful, *a.* பயங்கரமான, திகிலுள்ள, சலிப்பான, கிலேசமுள்ள.
Dīre'ful-ness, *s.* பயங்கரம், கிலேசம்.
Dīre'ness, *s.* பயங்கரம், கடுமை, கொடுமை.

Di-rep'tion, s. கொள்ளையாடுகை, சூறையாடுகை.
Dĭrge, s. துக்கப்பாட்டு, புலம்பற்பாட்டு, ஒப்பாரி.
Dĭrk, s. வேல், குற்றுவாள், கட்டாரி.
Dĭrt, s. மண், துகள்.
as filth, அழுக்கு, மலம், ஊத்தை, அசுத்தம்.
Dĭrt, v. a. அழுக்காக்குதல்.
Dĭrt'i-ly, adv. அழுக்காய், அசுத்தமாய், தீழ்ப்பாய், ஈனமாய்.
Dĭrt'i-ness, s. அழுக்குத்தன்மை.
as meanness, எளிமை.
Dĭrt'y, v. a. அழுக்காக்குதல், ஊத்தையாக்கல்.
Dĭrt'y, a. கசுமால, அழுக்குள்ள, அழுக்குப்பிடித்த.
base, mean, நீசமான, இழிவான.
cloudy, dark, மந்தாரமான, மப்பான.
man, துப்புக்கெட்டவன், ஈனன்.
woman, கசுமாலி, துப்புக்கெட்டவள்.
to be dirty, அழுக்காகுதல்.
Di-rup'tion, s. (see Disruption.) பிளப்பு, விடவு.
Dis-a-bil'i-ty, s. பலவீனம், பலவறுதி, பலட்சயம், தளர்ச்சி.
incapacity, உரிமைத்தத்துவமின்மை, சுதந்திரவின்மை.
Dis-ā'ble, v. a. பெலன்கெடுத்தல், சத்துக்குறைத்தல், தளர்த்தல்.
to be disabled, தளர்ந்துபோகுதல், மெலிதல், தத்துவங்கெடுதல், சத்துவங்குறைதல்.
Dis-ā'ble-ment, s. தத்துவக்கேடு, பலவீனம், அசத்துவம்.
Dis-a-būse', v. a. பிழைநீக்குதல், மனக்களங்கந்தீர்த்தல், சீர்ப்படுத்தல்.
Dis-ac-com'o-dāte, v. a. தொந்தரவுபண்ணுதல், நெருக்கிடைப்படுத்துதல், இடைஞ்சறபடுத்துதல்.
Dis-ac-com-o-dā'tion, s. தொந்தரவு, இடுக்கண், இடர்.
Dis-ac-cus'tom, v. a. வழக்கழித்தல், பழக்கத்தைக்கெடுத்தல்.
Dis-ac-knowl'edge, v. a. மறுத்தல், இல்லையெனல்.
Dis-ad-van'tage, s. சேதம், பாடு, நட்டம், தாழ்ச்சி.
Dis-ad-van'tage, v. a. அபிரயோசனப்படுத்தல், நட்டப்படுத்தல்.
Dis-ad-van-tā'geous, a. நட்டமான, சுகவீனமான, நெருக்கிடையான, வசதியற்ற, பலனற்ற.
Dis-ad-van-tā'geous-ly, adv. நட்டமாய், சேதமாய், பாடாய்.
Dis-ad-van-tā'geous-ness, s. அபிரயோசனம், வசதியின்மை.
Dis-af-fect', v. a. பேதித்தல், பிரியவீனப்படுத்தல், வெறுக்கச்செய்தல், விதனப்படுத்தல், விரோதப்படுத்தல்.
Dis-af-fect'ed, a. விதனப்பட்ட, பிரியவீனமான, வெறுப்புள்ள.
person, விரோதி, பற்றில்லான்.
Dis-af-fec'tion, s. பேதம், பேதிப்பு, பிணக்கு, பின்னிதம், மித்திரபேதம்.
Dis-af-firm', v. a. மறுத்தல், எதிர்ப்பேசுதல், தடுத்துரைத்தல்.
Dis-af-firm'ance, s. மறுப்பு, எதிர்மறை, எதிர்வாக்கியம், தீர்வையழித்தல்.
Dis-ag'gre-gāte, v. a. பிரித்தல், பகுத்தல், வெவ்வேறுக்கல்.
Dis-ag-gre-gā'tion, s. பிரிவு, பகுப்பு.
Dis-a-gree', v. n. இரண்டுபடுதல், பிசகுதல், பிரிதல், வேறுபடுதல், பின்னப்படுதல், விரோதித்தல்.
as food, இரட்டித்துக்கொள்ளுதல், அசீரணப்படுதல், இணங்காதிருத்தல்.
Dis-a-gree'a-ble, a. வெறுப்புள்ள, உபேட்சையான, ஒவ்வாத, இதமற்ற, அரோசிகமான, அகிதமான.
person, தக்கடிகாரன், ஒவ்வாதவன், நேசிக்கக்கூடாதவன், வெறுக்கப்படத்தக்கவன்.
Dis-a-gree'a-ble-ness, s. வெறுக்கப்படுந்தன்மை, பிரியவீனம், அரோசிகம்.
Dis-a-gree'a-bly, adv. வெறுப்பாய், வேறுபாடாய்.
Dis-a-gree'ment, s. பேதகம், ஒவ்வாமை, பொருந்தாமை, பிரிவு, பகை, பிணக்கு, மனக்குறை, இசைவுகேடு, இரட்டிப்பு, பிசகு, ஏகதேசம், பின்னம்.
Dis-al-low', v. a. தள்ளுதல், மறுத்தல், தடுத்தல்.
Dis-al-low'a-ble, a. சம்மதிக்கக்கூடாத, விடக்கூடாத, ஒத்துக்கொள்ளக்கூடாத.

Dis-al-low′ance, *s.* மறுப்பு, எதிர்மொழி, தடை, தடுப்பு, தள்ளுகை.

Dis-an′i-māte, *v. a.* சுவரணைகெடுத்தல், தயிரியவீனப்படுத்தல்.

Dis-an-i-mā′tion, *s.* சுவரணைக்கேடு, அதைரியம்.

Dis-an-nul′, *v. a.* (*see* Annul.) மாற்றுதல், அழித்தல், சிதைத்தல், தள்ளுதல், நிஸ்கரித்தல், திக்கரித்தல்.

Dis-ap-par′el, *v. a.* புடைவைகளைதல்.

Dis-ap-pēar′, *v. n.* அதரிசனமாதல், மறைதல்.

as the sun, &c., படுதல், அத்தமித்தல், மறைதல்.

Dis-ap-pēar′ance, *s.* அதரிசனம், மறைவு.

Dis-ap-point′, *v. a.* நம்பிக்கைகெடுத்தல், நம்பிக்கைகொலைத்தல்.

to be disappointed, எண்ணங்கொலைதல், நம்பிமோசம்போகுதல், நம்பிக்கைகெடுதல், பிசகுதல்.

Dis-ap-point′ment, *s.* காரியத்தவறு, இடையூறு, இடறு, காரியப்பிழை, பிசகு, குழப்பம், பின்னம், விக்கினம், தடை.

Dis-ap-pro-bā′tion, *s.* மனக்குறை, பின்னிதம், பிரியவீனம்.

Dis-ap′pro-ba-to-ry, *a.* மனக்குறைபடத்தக்க, பிரியவீனமான, வெறுப்பான.

Dis-ap-prō′pri-ate, *v. a.* சுயாதீனமழித்தல், உரித்தகற்றுதல்.

Dis-ap-pröv′al, *s.* மறுப்பு, நிஸ்கரிப்பு.

Dis-ap-pröve′, *v. a.* மறுத்தல், நிராகரித்தல்.

Dis-ärm′, *v. a.* நிராயுதஞ்க்கல், பலவீனப்படுத்துதல்.

Dis-ar-rānge′, *v. a.* நிலைகுலைத்தல், குழப்புதல், தாறுமாறுக்கல், நேர்மைகுலைத்தல்.

Dis-ar-rānge′ment, *s.* குழப்பம், தாறுமாறு, அலங்கோலம், நிலைகுலைப்பு.

Dis-ar-rāy′, *s.* குழப்பம், தாறுமாறு, எக்கச்சக்கம், அலங்கோலம்.

undress, புடைவைகளைவு.

Dis-ar-rāy′, *v. a.* புடைவைகளைதல்.

to rout, குழப்புதல், துரத்துதல், இரித்தல்.

Dis-as′ter, *s.* இடையூறு, அபாயம், பீடை, இடைஞ்சல், ஆபத்து.

Dis-as′ter, *v. a.* கெடுத்தல், வருத்தப்படுத்தல்.

of a planet, கிரகம்பிடித்தல்.

Dis-as′trous, *a.* அவலமுள்ள, கெடுதலான, இடையூருன, துயரமான, துக்கமுள்ள, மோசமான.

Dis-as′trous-ly, *adv.* அவலமாய் கெடுதலாய், இடையூருய்.

Dis-as′trous-ness, *s.* இடையூறு, துன்பம்.

Dis-a-vow′, *v. a.* அல்லத்தட்டுதல், மறுத்தல், எதிர்ப்பேசுதல்.

Dis-a-vow′al, Dis-a-vow′ment, *s.* எதிர்ப்பேச்சு, மறுப்பு, அல்லத்தட்டு, எதிர்வாக்கு.

Dis-band′, *v. a.* அணிகுலைத்தல், கூட்டங்குலைத்தல்.

Dis-band′, *v. n.* குலைதல், பிரிதல், விலகுதல்.

Dis-bärk′, *v. a.* கப்பல்விட்டுஇறங்குதல்.

Dis-be-liēf′, *s.* நம்பிக்கையீனம், அவிசுவாசம், அவநம்பிக்கை.

Dis-be-liēve′, *v. a.* நம்பாதிருத்தல், சந்தேகித்தல், ஐயுறுதல்.

Dis-be-liēv′er, *s.* அவிசுவாசி, நம்பிக்கையில்லான்.

Dis-bow′el, *v. a.* குடலெடுத்தல், குடல்பிடுங்குதல்.

Dis-bur′den, *v. a.* இறக்குதல், சுமையிறக்குதல், பாரநீக்குதல், இலகுவாக்குதல்.

Dis-burse′, *v. a.* பணங்கொடுத்தல், செலவழித்தல்.

Dis-burse′ment, *s.* செலவு, செலவீடு.

Dis-burs′er, *s.* பணங்கொடுப்போன், செலவிடுவோன்.

Disc, *s.* பரிதிவட்டம், பரிதி, கிரகமுகம்.

Dis-cärd′, *v. a.* கழித்தல், தள்ளுதல், துரத்துதல், நீக்குதல், எடுத்துப்போடுதல், விலக்குதல்.

to be discarded, எடுபடுதல், நீக்கப்படுதல், கழிபடுதல்.

Dis-cär′nate, *a.* தசைகழிக்கப்பட்ட.

Dis-cāse′, *v. a.* உறைகழித்தல்.

Dis-cern′, *v. a.* காணுதல், தெரிதல், உணருதல், யூகித்தல், தேர்தல்.

Dis-cern'er, *s.* காண்போன், தரிசிப்போன், தேர்வோன், நிதானிப்போன், அளவிடுவோன், பகுத்தறிவோன்.
Dis-cern'i-ble, *a.* காணத்தக்க, அறியத்தக்க.
Dis-cern'i-ble-ness, *s.* காணத்தக்கதன்மை, பிரத்தியட்சத்துவம்.
Dis-cern'i-bly, *adv.* அறியக்கூடியதாய், காணத்தக்கதாய், பிரத்தியட்சமாய்.
Dis-cern'ing, *s.* அறிகை, தெரிகை, பிரத்தியட்சப்படுகை.
Dis-cern'ing, *a.* அறிகிற, யூகிக்கிற, பிரத்தியட்சப்படுகிற.
Dis-cern'ment, *s.* காணல், உணர்வு, அறிவு, தெளிவு, ஊக்கம், கருத்து, கூர்ந்தபுத்தி, தேர்ச்சி, பகுத்தறிவு.
by the eye, காண்டல்.
Dis-cerp', *v. a.* கிழித்தல்.
Dis-cerp-i-bil'i-ty, *s.* கிழிக்கத்தக்கதன்மை.
Dis-cerp'i-ble, *a.* கிழிக்கக்கூடிய, பிரிக்கக்கூடிய.
Dis-cerp'tion, *s.* பிய்த்தல், சின்னபின்னமாக்குகை, பிட்குகை.
Dis-chärge', *s.* பாரமிறக்குகை.
acquittance, நீங்கல், விடுதலை, நிபாதம்.
explosion, வெடி, அதிர்வெடி.
ransom, விடுதலை, மீட்சி, போக்கு.
unloading of a ship, இறக்குகை.
from a sore, நீர்பாய்தல், வடிதல், சீவடிதல்.
from office, நீக்குதல், தள்ளுதல், விலக்குதல்.
of a debt, இறுப்பு.
Dis-chärge', *v. a.* பறியவிடுதல்.
a debt, இறுத்தல், தீர்த்தல்.
arrows, செலுத்துதல், பிரயோகித்தல்.
to acquit, குற்றமில்லையென்றுதீர்த்தல்.
to let go, விடுதல், தள்ளுதல்.
to let off a gun, வெடிதீர்தல், வெடிசுடுதல்.
fire works, வாணங்கொளுத்துதல், வாணம்விடுதல்.
to unload a ship, பறித்தல், இழித்தல், இறக்குதல்.
an obligation, இறுத்தல், செலுத்துதல்.
one from office, தள்ளுதல், நீக்குதல்.
duties, பராமரித்தல், உரிமைசெய்தல், கடமைசெய்தல்.
to be discharged, கழிக்கப்படுதல், நீக்கப்படுதல்.
Dis-chärg'er, *s.* வெடிகாரன், பாரமிறக்குவோன்.
Dis-cinct', *a.* பந்தமற்ற, அவிழ்க்கப்பட்ட.
Dis-cī'ple, *s.* சிஷன், மாணுக்கன்.
Dis-cī'ple, *v. a.* படிப்பித்தல், பயிற்றல், சிஷராக்கல், தீட்சித்தல்.
Dis-cī'ple-ship, *s.* மாணுக்கத்துவம், சிஷதன்மை.
Dis'ci-plin-a-ble, *a.* தேறக்கூடிய, படிப்பிக்கப்படத்தக்க, திருந்தக்கூடிய, ஆக்கினைக்கேதுவான.
Dis'ci-plin-a-ble-ness, *s.* படிப்பிக்கப்படக்கூடியதன்மை, ஆக்கினைக்கேதுவானதன்மை.
Dis-ci-plin-ā'ri-an, *s.* போதகன், சிட்சிகன்.
Dis-ci-plin-ā'ri-an, *a.* சிட்சிக்கத்தக்க.
Dis'ci-plin-a-ry, *a.* எச்சரிக்கையுள்ள, கண்டிப்புள்ள, ஆளுகையுள்ள.
Dis'ci-pline, *s.* எச்சரிக்கை, கண்டிதம், தண்டனை, சிட்சிப்பு, சிட்சகம், படிவு, பழக்கம், பயிற்சி, ஒழுங்கு.
subjection to laws, கீழ்ப்படிவு, அடிப்படுகை, நல்லொழுங்கு.
Dis'ci-pline, *v. a.* பயமுறுத்தல், எச்சரித்தல், தண்டித்தல், சிட்சித்தல், பயிற்றுதல், பழக்குதல், புத்திபடிப்பித்தல், ஒழுங்குபடிப்பித்தல்.
the mind, திருத்துதல், தேற்றுதல், தெளிவித்தல்.
to be disciplined, சீர்ப்படுத்தப்படுதல், ஆக்கினைப்படுத்தப்படுதல்.
Dis-clāim', *v. a.* தள்ளுதல், மறுத்தல்.
Dis-clāim'er, *s.* தள்ளுவோன், மறுப்போன், உரித்தில்லையென்றுசொல்லுவோன்.
Dis-clōse', *v. a.* காட்டுதல், பிரசங்கித்தல், புலப்படுத்துதல், வெளிப்படுத்தல்.

a plan, கருக்கிடைகாட்டுதல், கருக்காட்டுதல், யோசனையைவெளிப்படுத்துதல், யோசனையைவெளிப்படுத்தல்.
secrets, விட்டுக்கொடுத்தல், திறந்துவிடுதல், திறந்துசொல்லுதல்.

Dis-clōs′er, *s.* திறந்துகாட்டுவோன், வெளிப்படுத்துவோன்; பிரசங்கி, வியாக்கியானி.

Dis-clōs′ure, *s.* பகிரங்கம், பிரசித்தம், பிரசங்கம், பராசியம்.

Dis-cŏl′or, *v. a.* நிறவேற்றுமைப்படுத்தல், நிறமாற்றுதல், கறைப்படுத்தல்.
to be discolored, மறுநிறப்படுதல், நிறமுமாறுதல்.

Dis-cŏl-or-ā′tion, *s.* நிறம்மாற்றுகை, வன்னமிடுகை.

Dis-cŏl′or-ing, *a.* நிறம்மாறுகிற, கறைப்படுகிற.

Dis-cŏm′fit, *s.* அபசயம், குலைவு, தோல்வி.

Dis-cŏm′fit, *v. a.* சிதறடித்தல், உலைத்தல், கலைத்தல், கொலைத்தல், சாய்த்தல், தட்டழித்தல், இரித்தல், ஒட்டுதல், முறியடித்தல்.
to be discomfited, சாய்தல், தட்டழிதல், தோற்றல், அபசயப்படுதல்.

Dis-cŏm′fit-ure, *s.* உலைவு, உலைச்சல், கலைப்பு, குலைவு, சாய்ப்பு, தட்டழிவு, தோல்வி.

Dis-cŏm′fort, *s.* மனக்கலக்கம், துக்கம், சஞ்சலம்.

Dis-cŏm′fort, *v. a.* மனங்கலக்குதல், மனம்நோப்படுத்தல், சஞ்சலப்படுத்தல், துயரப்படுத்தல்.

Dis-com-mend′, *v. a.* இகழ்தல்

Dis-com-mend′a-ble, *a.* இகழப்படத்தக்க.

Dis-com-mend-ā′tion, *s.* இகழ்வு, அவசங்கை.

Dis-com-mōde′, *v. a.* தொந்தரைபண்ணுதல், அபசரித்தல்.

Dis-com-mō′di-ous, *a.* தொந்தரைசெய்யத்தக்க, தொல்லைப்படத்தக்க.

Dis-com-pōse′, *v. a.* கலக்குதல், கொலைத்தல், குழப்புதல்.

Dis-com-pōs′ure, *s.* கொலைவு, கலைவு, மனக்கலக்கம், மனப்பதறுகை.

Dis-con-cert′, *v. a.* அலைக்கழித்தல், அலைத்தல், குழப்புதல், கலக்குதல், கலைத்தல், பதறச்செய்தல்.
to be disconcerted, எண்ணங்கலைதல், கலங்குதல், நிலைகுலைதல், கலைதல், கேருதல், தடுமாறுதல்.

Dis-con-cer′tion, *s.* கலக்குகை, மனமடிவாக்குகை, மனதைக்கலக்குகை.

Dis-con-form′i-ty, } *s.* ஒவ்வாமை, இசைவின்மை.
Dis-con-grū′i-ty, }

Dis-con-nect′, *v. a.* பிரித்தல், கொலைத்தல்.

Dis-con-nec′tion, *s.* பிரிவு, பிரிவினை, வேறுபாடு, சேர்த்திக்கையின்மை, அசங்கதம்.

Dis-con′so-late, *a.* ஆருக்கவலையுள்ள, ஆறுதலற்ற, தட்டழிந்த, துக்கமுள்ள, சஞ்சலமுள்ள, மனச்சடைவான, புலம்பலுள்ள.

Dis-con′so-late-ly, *adv.* துக்கமாய், சஞ்சலமாய், புலம்பலாய்.

Dis-con′so-late-ness, *s.* துக்கம், சஞ்சலம், புலம்பு, ஆறுதலின்மை.

Dis-con-tent′, *s.* மனக்குறை, திருத்தியில்லாமை.

Dis-con-tent′, *v. a.* மனங்கலக்குதல், மனக்குறைப்படுத்தல், பேதனஞ்செய்தல்.

Dis-con-tent′, *a.* திருத்தியில்லாத, அவாவுள்ள, அமையாத, மனமடிவுள்ள.

Dis-con-tent′ed, *a.* மனக்குழப்பமான, மனரம்மியமில்லாத, ஆறுதலற்ற.

Dis-con-tent′ed-ly, *adv.* மனக்குழப்பமாய், மனரம்மியமின்மையாய், அமைதியற்ற.

Dis-con-tent′ed-ness, *s.* மனக்குழப்பம், அமைவின்மை.

Dis-con-tent′ment, *s.* மனஆறுதலின்மை, மனக்கலக்கம், கிலேசம், சஞ்சலம், நிரம்மியம்.

Dis-con-tin′u-ance, } *s.* தவிர்வு, ஒழிவு, ஒய்வு, தீர்வு, தரிப்பு.
Dis-con-tin-u-ā′tion, }

Dis-con-tin′ue, *v.* விடுதல், ஒழிதல், ஒய்தல், தவிர்தல், தவிர்த்தல், நிறுத்தல், நின்றுவிடுதல்.
intercourse, தலைப்பிரிதல், உறவுவிடுதல்.

Dis-con-tin'u-er, *s.* விட்டுவிடுகிறவன், நிறுத்துகிறவன்.
Dis-con-ti-nū'i-ty, *s.* பற்றின்மை, ஒழிவு, துறவு.
Dis-con-tin'u-ous, *a.* பற்றின்மையான, விட்ட, துறந்த, ஒழிந்த.
Dis'cord, *s.* பிரிவு, பேதம், பேதகம், ஒவ்வாமை, நிபந்தம்.
between persons, பிரிவினை, பிணக்கு, கலகம்.
in music, இன்னிசையின்மை, இசைபேதம், கீதக்குழப்பம், சுதிப்பிரிவு.
Dis-cord'ance, Dis-cord'an-cy, *s.* பின்னிதம், பேதம், ஒவ்வாமை, பங்கம், பின்னம், விகடம்,வேற்றுமை.
Dis-cord'ant, *a.* பேதமான, பின்னிதமான, ஒவ்வாத, இசைவில்லாத.
Dis-cord'ant-ly, *adv.* பேதமாய்,பின்னிதமாய், ஒவ்வாமையாய்.
Dis'count, *s.* கழிவு, தள்ளுபடி.
Dis'count, *v. a.* கழித்தல், தள்ளுதல், குறைத்தல்.
to be discounted, கழிதல்.
Dis-coun'te-nance, *s.* புறக்கணிப்பு, பின்னிதம், தடை, பிரியவீனம்.
Dis-coun'te-nance, *v. a.* முகமுறித்தல், வெட்கப்படுத்தல், எதிர்த்தல், தடுத்தல்.
Dis-coun'te-nan-cer, *s.* முகமுறிக்கிறவன், தடைசெய்வோன்.
Dis-cŏur'age, *v. a.* தயிரியவீனப்படுத்துதல், கலக்குதல்,கலக்கடிபண்ணுதல், நிலைகுலைத்தல், முயற்சியழித்தல், மறித்தல்.
to be discouraged, மனங்கலங்குதல், நிலைகுலைதல், மனமுறிதல்.
Dis-cŏur'age-ment, *s.* தயிரியவீனம்,அலுப்பு, மனக்கலக்கம், பிரியவீனம், தடை.
Dis-cŏur'ag-er, *s.* தயிரியவீனப்படுத்துவோன், தடைசெய்வோன்.
Dis-cōurse', *s.* பேச்சு, சம்பாஷணை, பரிபாஷணம்.
a composition, உரைவாசகம், விபரம், பிரசங்கம்.
a harangue, பிரசங்கம்.
pleasant, குளிர்ந்தபேச்சு, மாதுரியம், அமுதவசனம்.

Dis-cōurse', *v. a.* பேசுதல், போதித்தல், சம்பாஷித்தல்.
to harangue, பிரசங்கித்தல், விற்பன்னித்தல்.
Dis-cōurs'ive, *a.* பிரசங்கத்துக்குரிய, ஞாயமுத்தரிக்கிற, சம்பாஷிக்கிற.
Dis-cōurt'e-ous, *a.* (*see* Courteous.) அவமரியாதையான, அனுசாரமான, நாகரீகமற்ற.
Dis-cōurt'e-ous-ly, *adv.* மரியாதையீனமாய், அவமதியாய்.
Dis-cōurt'e-sy, *s.* அவமதி, அவமரியாதை, அவசாரம்.
Disc'ous, *a.* அகலமான, தகடான, ஐமைவடிவான.
Dis-cŏv'er, *v. a.* காண்குதல், கண்டுபிடித்தல், பிடித்தல், வெளியாக்கல்.
to one, காட்டிக்கொடுத்தல்.
to oppose to view, திறத்தல், காட்டுதல், வெளிப்படுத்தல்.
Dis-cŏv'er-a-ble, *a.* கண்டுபிடிக்கக்கூடிய.
Dis-cŏv'er-er, *s.* கண்டுபிடிக்கிறவன்.
Dis-cŏv'er-y, *s.* காணுகை, காண்டல், வெளிப்பாடு, புலப்படுகை.
the thing discovered, காட்சிப்பொருள்.
Dis-cred'it, *s.* நம்பிக்கையின்மை, மதிப்பின்மை, நாணயமின்மை.
Dis-cred'it, *v. a.* சந்தேகித்தல், அசாத்தியப்படல், அவநம்பிக்கைகொள்ளுதல், கனவீனப்படுத்தல்.
Dis-cred'it-a-ble, *a.* நாணயக்குறைவான, நம்பக்கூடாதவிதமான, சங்கையீனமான, இகழ்ச்சியான.
Dis-creet', *a.* கவனமுள்ள, யோசனையுள்ள, ஆராய்வுள்ள, புத்தியுள்ள, விவேகமுள்ள.
Dis-creet'ly, *adv.* கவனமாய், யோசனையாய், நிதானமாய், புத்தியாய், எச்சரிக்கையாய்.
Dis-creet'ness, *s.* நிதானம், புத்தி, நாணயம், யூகம், சாக்கிரதை.
Dis-crep'ance, Dis-crep'an-cy, *s.* ஒவ்வாமை, வேற்றுமை, பிரிவினை, பேதம்.
Dis-crep'ant, Dis-crēte', *a.* எதிரான, வேற்றுமையுள்ள,ஒவ்வாத.

Dis-cre'tion, *s.* அறிவு, புத்தி, சூழ்ச்சி, நற்கருத்து, யூகம், யோசனை, விவேகம்.
Dis-cre'tion-al, *a.* புத்திக்கடுத்த, யோசனையுள்ள.
Dis-cre'tion-al-ly, Dis-cre'tion-a-ri-ly, *adv.* } தன்னிஷ்டப்படி, யோசனைப்படி.
Dis-cre'tion-a-ry, *a.* புத்தியான, ஆராய்வுள்ள, தன்னிட்டமுள்ள.
power, தன்னிஷ்டவதிகாரம்.
Dis-crē'tive, *a.* பிரிக்கிற, வேற்றுமைகாட்டுகிற, பேதிக்கிற.
Dis-crē'tive-ly, *adv.* பேதைமையாய்,பிரிவாய், ஒவ்வாமையாய்.
Dis-crim'in-a-ble, *a.* பகுத்தறியத்தக்க, மட்டுக்கட்டக்கூடிய.
Dis-crim'in-āte, *v. a.* குறித்தல், தேர்தல், பகுத்தறிதல், தெரிந்தெடுத்தல்.
Dis-crim'in-ate, *a.* பகுக்கப்பட்ட, வேறுபட்ட, வேற்றுமையான.
Dis-crim'in-ate-ly, *adv.* குறிப்பாய், பகுப்பாய், அறிவோடே, நுட்பமாய்.
Dis-crim'in-ate-ness, *s.* பகுத்தறிவு, விகாரம், பேதம்.
Dis-crim-in-ā'tion, *s.* விவேகம், நுண்ணறிவு, கருத்து, தேர்ச்சி, பகுத்தறிவு, மனக்கூர்மை.
a man of, கருத்தாளி, விவேகி, புத்திசாலி.
Dis-crim'in-a-tive, *a.* நுண்மையான, பகுத்தறிவுள்ள, கூரிய.
mind, நுண்மையானமனம், நுணுகினமனம், கூரியபுத்தி, விவேகம்.
Dis-crim'in-a-tive-ly, *adv.* குறிப்பாய், பகுப்பாய், அறிவோடே, தீவிரபுத்தியாய்.
Dis-cul'pāte, *v. a.* குற்றமில்லையென்று தீர்த்தல்.
Dis-cum'ben-cy, *s.* சாய்ந்திருக்கை.
Dis-cum'ber, *v. a.* பாரநீக்குதல்.
Dis-cur'sive, *a.* அசைவுள்ள, வெவ்வேறான, அலைவுள்ள, நியாயங்களையெடுத்துக்காட்டக்கூடிய.
Dis-cur'sive-ly, *adv.* நியாயங்காட்டக்கூடியவிதமாய்.
Dis-cur'sive-ness, *s.* ஆராய்ந்துநியாயம் எடுத்துக்காட்டுந்தன்மை.

Dis-cur'so-ry, *a.* நியாயமெடுத்துக்காட்டுகிற.
Disc'us, *s.* குதிரைச்சில்.
as disk, சந்திரசூரியவட்டம், பரிதிவட்டம்.
in botany, விரிந்தபூ, பரிவட்டமானபூ.
Dis-cuss', *v. a.* நியாயம்பேசுதல், யோசித்தல்,தருக்கித்தல், சீர்தூக்குதல்,ஆய்தல், ஆராய்ந்துசொல்லல்.
in medicine, கரைத்தல், வற்றப்பண்ணுதல்.
Dis-cuss'er, *s.* நியாயதுரந்தரன், நியாயவிசாரணைக்காரன், சம்பாஷிகன்.
Dis-cus'sion, *s.* தருக்கம், வழக்கு, விவாதம், விவகாரம், விசாரணை, சம்பாஷணை.
Dis-cuss'ive, *a.* நியாயம்விசாரிக்கிற, ஆராய்ச்சியுள்ள, கரைக்கிற.
Dis-cū'tient, *a.* வடிவிக்கிற, வற்றுவிக்கிற, தெளிவிக்கிற.
Dis-cū'tient, *s.* வற்றப்பண்ணுகிறமருந்து, வடிவிக்கிறமருந்து.
Dis-dāin', *s.* அசட்டை, அபிமானம்,அவமதிப்பு,இகழ்ச்சி,நிந்தனை,பழிப்பு.
Dis-dāin', *v. a.* பழித்தல், இகழ்தல், நிந்தித்தல்.
Dis-dāin'ful, *a.* நிந்தனையுள்ள,அகந்தையான, மேட்டிமையான.
gestures, சேட்டை, நையாண்டி.
remarks, பழிமொழி, நகைப்புச்சொல்.
Dis-dāin'ful-ly, *adv.* அகந்தையாய், இகழ்ச்சியாய்.
Dis-dāin'ful-ness, *s.* இகழ்ச்சி, நிந்தை, இடும்பு, அகந்தை.
Dis-ēase', *s.* வியாதி, நோய், உரோகம், பிணி, நையல்.
epidemic, மாரகம்.
acme, or crisis of, இரண்டுக்குற்றவியாதி, அசாத்தியரோகம்.
deceptive, கள்ளவியாதி.
Dis-ēase, *v. a.* நோய்ப்படுத்தல்,
Dis-ēas'ed, *a.* வியாதிப்பட்ட, பிணியுள்ள.
Dis-ēas'ed-ness, *s.* நோதலை, பிணிப்படுகை.

Dis-em-bärk′, *v. a.* இறக்குதல், பறித்தல், கரைப்படுத்தல்.
Dis-em-bärk′, *v. n.* இறங்குதல், கரையேறுதல்.
Dis-em-bärk-ā′tion, *s.* இறக்கம்.
Dis-em-bar′rass, *v. a.* கழற்றுதல், சிக்கறுத்தல், தெளிவித்தல், கலக்கநீக்குதல்.
Dis-em-bar′rass-ment, *s.* கழற்றுகை, சிக்கறுப்பு, கலக்கம்நீக்குகை, பிணைநீக்குகை.
Dis-em-bit′ter, *v. a.* கசப்புநீக்குதல், தித்திப்பாக்குதல்.
Dis-em-bod′i-ed, *a.* உடலினின்றுபிரிந்த, உடல்விட்டுநீங்கிய, சித்துருபமான.
Dis-em-bod′y, *v. a.* தேகத்தைநீக்குதல், உடலினின்றுபிரித்தல், போர்க்கோலங்களைதல், அணிகுலைத்தல்.
Dis-em-bōgue′, *v. a.* கழிமுகப்பாய்ச்சல், நீர்கக்குதல்.
Dis-em-bōgue′, *v. n.* கழிமுகத்திற்பாய்தல், கழிமுகத்திற்கழிதல்.
Dis-em-bōgue′ment, *s.* ஆற்றுநீர்கடற்புகுதல், கழிமுகம்பாய்ச்சல்.
Dis-em-bow′el, *v. a.* குடல்பிடுங்கல், குடலெடுத்தல்.
Dis-em-broil′, *v. a.* சிக்கறுத்தல், கலகநீக்கல், சண்டைதணித்தல்.
Dis-en-ā′ble, *v. a.* தத்துவங்கெடுத்தல், தகுதியழித்தல், அபலப்படுத்தல், பலட்சயமாக்கல்.
Dis-en-chänt′, *v. a.* கட்டவிழ்த்தல், மயக்கந்தீர்த்தல்.
Dis-en-chänt′er, *s.* சூனியநிவாரணன், தடைநீக்குவோன், கட்டவிழ்ப்போன், மயக்கந்தீர்ப்போன்.
Dis-en-cum′ber, *v. a.* கழற்றுதல், நீக்குதல், இடைஞ்சல்நீக்குதல், தடைவிலக்கல், பாரநீக்குதல்.
Dis-en-cum′brance, *s.* நீக்குகை, விலக்குகை, விடுவிக்கை.
Dis-en-gāge′, *v. a.* விடுதலையாக்கல், நீக்கிவிடுதல், கழற்றுதல், கிளப்புதல், சிக்கறுத்தல், எடுத்துப்போடுதல், பிரித்தல், பெயர்த்தல், விலக்குதல்.
Dis-en-gāg′ed, *a.* சுயாதீனமான, விடுதலையான, பிரிவான.
Dis-en-gāg′ed-ness, *s.* விடுதலை, சுயாதீனம்.
Dis-en-gāge′ment, *s.* விடுதலையாக்குகை, விமோசனமாக்குகை, நீங்குகை, பிரிவு, ஒழிவு.
Dis-en-rōll′, *v. a.* பெயரைஅழித்தல்.
Dis-en-tan′gle, *v. a.* கழற்றுதல், அவிழ்த்தல், நீக்குதல்.
hair, thread, &c., சிக்கெடுத்தல், சிக்குக்குலைத்தல்.
with a comb, சிக்குவாங்குதல்.
Dis-en-tan′gle-ment, *s.* நீக்கம், விடுதலை, விமோசனம்.
Dis-en-thrōne′, *v. a.* பத்திராசனத்தைவிட்டுநீக்குதல்.
Dis-en-tī′tle, *v. a.* பட்டத்திலிருந்துவிலக்குதல்.
Dis-en-tränce′, *v. a.* அவசந்தீர்த்தல், அருட்டுதல், தெளிவித்தல்.
Dis-es-pouse′, *v. a.* மணவாழ்க்கைவிலக்கல், வாக்குத்தத்தத்தைவிடுதல்.
Dis-es-teem′, *s.* அவமதிப்பு, அவமானம், அசட்டை, தாழ்ச்சி, புறக்கணிப்பு.
Dis-es-teem′, *v. a.* புறக்கணித்தல், அவமதித்தல்.
Dis-fā′vor, *s.* வெறுப்பு, பிரியவீனம், அபகாரம்.
Dis-fā′vor, *v. a.* வெறுத்தல், நட்டப்படுத்துதல், தள்ளுதல்.
Dis-fā′vor-er, *s.* வெறுக்கிறவன், தள்ளுகிறவன்.
Dis-fig-u-rā′tion, *s.* உறுப்பழிப்பு, உருபழிவு, அந்தக்கேடு.
Dis-fig′ure, *v. a.* கோலங்கெடுத்தல், உருவழித்தல், பின்னப்படுத்துதல், அங்கபங்கப்படுத்துதல்.
to become disfigured, உருவழிதல், உருவிழத்தல், பின்னப்படுதல், அழகுகெடுதல், உறுப்புநலனழிதல்.
Dis-fig′ure-ment, *s.* அலங்கோலம், உறுப்புக்கேடு, அங்கபங்கம்.
Dis-fran′chise, *v. a.* பலனழித்தல், தாழ்ச்சிபண்ணல், நிலையழித்தல், உரித்தகற்றல்.
Dis-fran′chise-ment, *s.* நிலையழிப்பு, தாழ்த்துகை, உரித்தகற்றுகை.
Dis-fur′nish, *v. a.* முஸ்தீதைநிராகரித்தல், முஸ்தீதைநீக்குதல்.

Dis-gar'ri-son, *v. a.* பவுஞ்சைவிலக்குதல்.
Dis-gorge', *v. a.* வாந்தித்தல், கக்குதல், உமிழ்தல், கொப்புளித்தல்.
Dis-gorge'ment, *s.* வாந்திப்பு, கக்கு, உவட்டு, கொப்புளிப்பு.
Dis-grāce', *s.* அவகீர்த்தி, அவமானம், அவமதி, வடு, இமிசை, இழிவு, மானவீனம், அனுசிதம், சிறுமை.
Dis-grāce', *v. a.* அவமதித்தல், இழிவுபடுத்துதல், பங்கப்படுத்துதல், பழித்தல், வெட்கப்படுத்தல்.
Dis-grāce'ful, *a.* அவமானமுள்ள, வெட்கமுள்ள, அவசங்கையுள்ள.
language, பழிச்சொல், நிந்தைச்சொல், தூஷணை.
Dis-grāce'ful-ly, *adv.* அவமானமாய், இலச்சையாய்.
Dis-grāce'ful-ness, *s.* அவமானம், சங்கையீனம், வெட்கம்.
Dis-grā'cer, *s.* அவமானப்படுத்துவோன், தூஷகன், நிந்திப்போன்.
Dis'gre-gāte, *v. a.* பிரித்தல், சிதறப்பண்ணுதல், கலைத்தல், சிதர்த்தல்.
Dis-guīse', *s.* வேஷம், பொய்க்கோலம், போலி, மாரீசம்.
Dis-guīse', *v. a.* மறைத்தல், ஒளித்தல், கரத்தல், மாயம்பண்ணுதல்.
one's self, வேஷங்காட்டுதல், பொய்க்கோலமெடுத்தல்.
for performing a play, கோலங்கட்டுதல், வேஷம்போடுதல்.
Dis-guīse'ment, *s.* பொய்க்கோலம், மாயவேடம், கரவுடை, போலி.
Dis-guīs'er, *s.* வேஷக்காரன், மாரீசகாரன்.
Dis-gust', *s.* வெறுப்பு, அரோசகம், அரோசிப்பு, உபேட்சை, பிரியவீனம், அசங்கியம், பயிர்ப்பு.
Dis-gust', *v. a.* வெறுத்தல், அரோசித்தல்
to be disgusted, அரோசகமடைதல், வெறுக்கப்படுதல்.
Dis-gust'ful, *a.* உவட்டான, வெறுப்பான, அரோசிப்பான.
Dis-gust'ful-ly, *adv.* அருவருப்பாய், அரோசிப்பாய், பயிர்ப்பாய்.
Dis-gust'ing, *a.* அரோசிக்கப்பண்ணுகிற, வெறுக்கப்பண்ணுகிற.
Dis-gust'ing-ly, *adv.* வெறுப்பாய், அரோசிகமாய்.
Dish, *s.* வட்டில், தட்டம், பாத்திரம், தளிகை, கங்காளம்.
as food, உணவு, ஆகாரம்.
Dish, *v. a.* பாத்திரத்திற்படைத்தல்.
Dis-ha-bille', } *s.* மீக்கோள், உடுத்தாடை, குப்பாயம், சொக்காய், அங்கரவுக்கை.
Dīs-ha-bil', }
Dis-här'mo-ny, *s.* இசைவின்மை, பிரிந்திசை, விட்டிசை.
Dis-heärt'en, *v. a.* தைரியவீனப்படுத்துதல், கலக்குதல், நம்பிக்கைகுலைத்தல், நிலைகுலைத்தல், பயமுறுத்தல்.
to be disheartened, மனங்கலங்குதல், மனநிலைகுலைதல்.
Di-shev'el, *v. a.* குலைத்தல், சிலிர்ப்புதல்.
Di-shev'el-ed, *a.* குலைந்த, சிலிர்த்த.
to be disheveled, சிலிர்க்குதல்.
Dish'ing, *a.* குடைவுள்ள.
Dis-hon'est, *a.* நாணயங்கெட்ட, வஞ்சனையுள்ள, புரளியுள்ள, நேர்மையற்ற, சதியுள்ள, யோக்கியமற்ற, நிதானமற்ற.
unchaste, தூர்த்தமுள்ள, இகழ்ச்சியுள்ள, தீழ்ப்படைந்த.
Dis-hon'est-ly, *adv.* நாணயவீனமாய், புரளியாய், அயோக்கியமாய், நாணயத்தப்பாய், நேர்கேடாய்.
Dis-hon'es-ty, *s.* கபடம், புரளி, நம்பிக்கைக்கேடு, சோரத்தனம், நாணயப்பிளை, நாணயக்கேடு, நாணயச்சில்லம்.
unchastity, கற்பின்மை, தூர்த்ததனம்.
Dis-hon'or, *s.* அவமானம், அவகீர்த்தி, இழிவு, சிறுமை, தாழ்வு, தாழ்ச்சி, துரபிமானம், இமிசை, அவதூறு.
Dis-hon'or, *v. a.* அவமானப்படுத்துதல், தாழ்த்துதல், கற்பழித்தல், மானங்கெடுத்தல்.
a bill, அவமதித்தல், செல்லாமற்பண்ணுதல்.
Dis-hon'or-a-ble, *a.* நாணயங்கெட்ட, அவமானமுள்ள, இகழ்ச்சியான, கீழ்மையான, அவசங்கையுள்ள.
Dis-hon'or-a-bly, *adv.* நாணயக்கேடாய், அவமானமாய், சங்கையீனமாய்.
Dis-hon'or-er, *s.* அவசங்கைபண்ணுவோன், அவமானம்பண்ணுகிறவன்.

Dis-in-căr'cer-āte, *v. a.* சிறைநீக்குதல், தாசபாலனஞ்செய்தல், சிறைமீட்குதல்.

Dis-in-clin-ā'tion, *s.* வெறுப்பு, பிரியவீனம், விருப்பின்மை, பற்றின்மை.

Dis-in-clīne', *v. a.* பிரியவீனப்படுத்துதல், விதனப்படுத்தல்.

Dis-in-fect', *v. a.* தொற்றுவியாதிமாற்றுதல், தொற்றுநோய்தீர்த்தல்.

Dis-in-ge-nū'i-ty, *s.* தந்திரம், புரளி, உபாயம்.

Dis-in-gen'u-ous, *a.* உலோபமுள்ள, தந்திரமுள்ள, உபாயமுள்ள, கீழ்மையான, புரளியுள்ள.

Dis-in-gen'u-ous-ly, *adv.* உலோபமாய், தந்திரமாய், சூதாய்.

Dis-in-gen'u-ous-ness, *s.* உலோபம், தந்திரம், சூது, உபாயம்.

Dis-in-her'it, *v. a.* உரிமைக்குப்புறம்பாக்குதல், சுதந்திரமறுத்தல், பராதீனப்படுத்தல்.

Dis-in'te-gra-ble, *a.* பகுதியாய்ப்பிரிக்கக்கூடிய, பகுக்கக்கூடிய.

Dis-in'te-grāte, *v. a.* பகுதியாய்ப்பிரித்தல், பகுத்தல்.

Dis-in-te-grā'tion, *s.* பிரிப்பு, பகுப்பு.

Dis-in-ter', *v. a.* சவங்கிளப்புதல்.

Dis-in'ter-est, *s.* தற்பிரியமின்மை.

Dis-in'ter-est-ed, *a.* பரோபகாரமுள்ள, தற்பிரியமற்ற, தற்பொழிவில்லாத.

Dis-in'ter-est-ed-ly, *adv.* பரோபகாரமாய், தற்பிரியமின்மையாய்.

Dis-in'ter-est-ed-ness, *s.* தன்னயங்கருதாமை, பரோபகாரம்.

Dis-in-ter'ment, *s.* கிளறுகை, கனனம், தோண்டியெடுத்தல்.

Dis-in-thrall', *v. a.* சிறைமீட்குதல், பந்தமறுத்தல்.

Dis-in-thrall'ment, *s.* சிறைமீட்சி, பந்தம்நீக்குகை.

Dis-in-ure', *v. a.* அனப்பியாசப்படுத்தல்.

Dis-in-volve', *v. a.* கட்டவிழ்த்தல், சிக்கறுத்தல்.

Dis-join', *v. a.* அறுத்தல், பிரித்தல், கண்டித்தல், நீக்குதல், பெயர்த்தல்.
parties, &c., கலைத்தல், சிதர்த்தல்.

Dis joint', *v. a.* இசைவுகெடுத்தல், சந்துசந்தாய்த்துண்டித்தல், பெயர்த்தல், பொருத்துவிலக்குதல்.
to become disjointed, கொலுக்கொலுவாகுதல், பொருத்துவிடுதல், குழைச்சுவிடுதல்.

Dis-joint'ly, *adv.* இசைவுகேடாய், பிரிவிணையாய், பிரிவாய்.

Dis-junc'tion, *s.* பிரிவு, இசைவுகேடு, பெயர்வு.

Dis-junct'ive, *s.* பிரிநிலையிடைச்சொல், பிரிபொருட்புணர்மொழி.

Dis-junct'ive, *a.* பிரிக்கிற, பொருள்பிரிக்கிற.
conjunction, பிரிநிலையிடைச்சொல், பிரிபொருட்புணர்மொழி.

Dis-junct'ive-ly, *adv.* பிரிவாய், எதிராய்.

Disk, *s.* கிரகத்தோற்றம், தேகம், மண்டலம், விம்பம், பரிதி, கிரகமுகம்.
light faced, அக்கிரகரம், சுக்கிலபக்கம்.
sun's disk, இரவிதேகம், சூரியவட்டம், சூரியவிம்பம்.
moon's disk, சசிதேகம், சந்திரவிம்பம்.
as quoit, குதிரைச்சில்லு.

Dis-līke', *s.* பிரியவீனம், வெறுப்பு, அருக்களிப்பு, உபேட்சை, பின்னிதம், விபட்சம்.
feigned, புலவி, புலத்தல்.

Dis-līke', *v. a.* பிரியவீனப்படுதல், வெறுத்தல், அருக்களித்தல், உபேட்சித்தல்.

Dis-limb', *v. a.* அங்கபங்கம்பண்ணுதல்.

Dis'lo-cāte *v. a.* கழற்றுதல், பெயர்த்தல், மக்களித்தல்.

Dis'lo-cā-ted, *a.* உருளிபெயர்ந்த, கழன்ற, குழைச்சுவிட்டுப்போன, பிசகின, மக்களித்த.

Dis-lo-cā'tion, *s.* உருளிபெயர்வு, கழற்சி, சுளுக்கு, மக்களிப்பு.

Dis-lodge', *v. a.* இருப்புவிட்டெழுப்புதல், பெயர்த்தல், தள்ளுதல், நீக்குதல், கிளப்புதல், பிரித்தல்.
a family, குடியெழுப்புதல்.
to be dislodged, கழிதல், தடுமாறுதல், தட்டழிதல், பிரிதல், பெயர்தல்.

Dis-loy'al, *a.* இராசதுரோகமான, நம்பிக்கைத்துரோகமுள்ள.

in marriage, விபசார, உடன்படிக்கைத்துரோகமான,சம்பந்ததுரோகம்.
Dis-loy'al-ly, *adv.* நம்பிக்கைத்துரோகமாய்.
Dis-loy'al-ty, *s.* இராசதுரோகம், நம்பிக்கைத்துரோகம்.
in marriage, மணவிரதத்தவறு.
Dis'mal, *a.* இருண்ட, பயங்கரமான.
as sorrowful, துக்கமான, சஞ்சலமான, பயங்கரமான.
Dis'mal-ly, *adv.* குருவுதலாய், சஞ்சலமாய், பயங்கரமாய்.
Dis'mal-ness, *s.* சஞ்சலம், மனோசலனம், கிலேசம், பயங்கரம்.
Dis-man'tle, *v. a.* கழற்றுதல், உடுப்புரிதல்.
to strip, துணைக்காரணங்களைக்கொள்ளையிடுதல், முஸ்தீதுகளைக்கொள்ளையிடுதல்.
Dis-mäsk', *v. a.* வேஷங்கழற்றல், மறைவுநீக்குதல்.
Dis-mäst', *v. a.* பாய்மரமுறித்தல், பாய்மரங்கழற்றல்.
Dis-māy', *s.* மனக்கலக்கம், தைரியவீனம், திகைப்பு, பயம்.
Dis-māy', *v. a.* கலக்குதல், பயமுறுத்துதல்.
to be dismayed, மனங்கலங்குதல், பயப்படுதல், தைரியவீனப்படுதல்,திகைத்தல்.
Dis-māy'ed-ness, *s.* தைரியவீனம், திகைப்பு, பயம்.
Dis-mem'ber, *v. a.* கூறுபடுத்துதல், பின்னப்படுத்துதல், அங்கபங்கஞ்செய்தல், சித்திரவதைசெய்தல்.
Dis-mem'ber-ment, *s.* சித்திரவதை, அங்கபங்கம் ,அவயவசேதனம்.
Dis-miss', *v. a.* தள்ளுதல், அனுப்பிவிடுதல், முடித்தல்.
from office, உத்தியோகத்திலிருந்து விலக்குதல், தொழிலைவிட்டெடுத்தல்.
one without employment, விடுதல், தள்ளுதல்.
Dis-miss'al, Dis-mis'sion, *s.* } அனுப்புகை, விடுகை, தள்ளுகை.
Dis-miss'ive, *a.* அனுப்புகிற, தள்ளுகிற, விடுகிற.

Dis-mount', *v. a.* இறக்குதல், தள்ளுதல்.
Dis-mount', *v. n.* வாகனத்தினின்றிறங்குதல், இழிதல்.
Dis-o-bē'di-ence, *s.* கீழ்ப்படியாமை, அமையாமை, கேளாமை, நிஸ்காாம்.
Dis-o-bē'di-ent, *a.* கீழ்ப்படியாத, இணங்காத, அமையாத, கேளாத.
Dis-o-bēy', *v. a.* எதிருரைத்தல், கட்டளைகடத்தல், மீறுதல், கேளாதிருத்தல்.
Dis-ob-li-gā'tion, *s.* அபகாரம், நிந்தனை.
Dis-ob'li-ga-to-ry, *a.* கடமையில்லாத.
Dis-o-blīge', *v. a.* அபகரித்தல், விசனப்படுத்தல், கடமைநீக்கல்.
Dis-o-blīg'er, *s.* அபகரிப்போன், விசனப்படுத்துவோன், கோபமூட்டுவோன்.
Dis-o-blīg'ing, *a.* அபகாரமுள்ள, அகித, தயையில்லாத.
Dis-o-blīg'ing-ly, *adv.* அகிதமாய், அபகாரமாய், தயையீனமாய்.
Dis-orb'ed, *a.* பாதையைவிட்டுத்தள்ளுண்ட, அயனம்விலகின.
Dis-or'der, *s.* கலக்கம், குழப்பம், கலைவு, குலைச்சல், தாறுமாறு, எக்கச்செக்கம், காதரம்.
sickness, வியாதி, நோய், பிணி, உரோகம்.
Dis-or'der, *v. a.* கலக்குதல், குழப்புதல், உலைத்தல், கலைத்தல், கிளறுதல், குலைத்தல், தாறுமாறுக்கல்.
to be disordered, உலைதல், குலைதல், கலைதல், சீர்கெடுதல், தடுமாறுதல்.
to be disordered as the stomach, bowels, &c., தொந்தித்தல், அசீரணப்படுதல்.
Dis-or'der-ed, *a.* குழம்பின, தாறுமாறுன, எக்கச்செக்கமான.
in botany, தாதுசங்கமிக்கை, கருக்கொள்ளுகை, சினைப்பிக்கிறதன்மை.
Fruc'ti-fy, *v.* கனிகொடுக்கச்செய்தல், செழிப்பாக்கல்.
Fruc'tu-ous, *a.* கனியுள்ள, செழிப்பான.
Frū'gal, *a.* மட்டாய்ச்செலவிடுகிற, செலவொடுக்கமான, இறுக்கமான, கையொறுப்பான.
Fru-gal'i-ty, *s.* கட்டுப்பாடு, இல்லொழுக்கம், மட்டாய்ச்செலவிடுகை.
Frū'gal-ly, *adv.* இறுக்கமாய், மட்டாய்.
to live, மட்டதிட்டமாய்ச்செலவழித்தல், இல்லொழுக்கமாய்ச்செலவிடுதல்.
to use, கட்டுப்பாடுபண்ணுதல்.
Frūit, *s.* கனி, பலம்.
premature, வெம்பற்காய்.
ripe, கனிந்தபழம், முதிர்ந்தபழம்.
season, கனிகாலம்.
tree, காய்க்கிறமரம், பலினி.
unripe, செங்காய்.
very young, பிஞ்சு, வடு.
young, இளங்காய், கருங்காய்.
as production, பிரயோசனம், விளைவு, பலன்.

as result, பலம், காரியபலன், நயம், பயன், சித்தி.
as offspring, சந்ததி, சந்தானம்.
as profit, பயன், பலன், நயம், இலாபம்.
Frūit'age, s. பழவகை, கனிவருக்கம்.
Frūit'-beār-ing, a. கனிகொடுக்கிற, காய்க்கிற.
Frūit-er-er, s. கனிவியாபாரி.
Frūit'er-y, s. பழவர்க்கக்கடை, காய்கனிவைக்குமிடம்.
Frūit'ful, a. செழிப்பான, கனிகொடுக்கிற.
rain, செழித்தமழை.
country, செழித்தநாடு, செழித்ததேயம்.
as prolific, சந்தானவிருத்தியுள்ள.
Frūit'ful-ly, adv. செழிப்பாய், விருத்தியாய்.
Frūit'ful-ness, s. செழிப்பு, விருத்தி, வளம், மிகுகனிகொடுக்குந்தன்மை, வர்த்தனை, சந்தானவிருத்தி.
Frū-i'tion, s. நற்பலம், போகம், அனுபவம்.
Frūit'less, a. கனியில்லாத, பலனற்ற, வீணான, அபிரயோசனமான, அபலமான, மலடான.
Frūit'less-ly, adv. அபிரயோசனமாய், வீணாய், பலனின்றி.
Fruit'less-ness, s. பலனற்றதன்மை, அபிரயோசனம், அபலம்.
Fru-men-tā'ceous, a. கோதுமைபோன்ற.
Fru-men-tā'tion, s. கலகநீக்குந்தானியக்கொடை.
Frush, s. பிள்ளைக்குளம்பு, உட்குளம்பு.
Frus'tra-ble, a. தடைபடக்கூடிய, அபத்தமாக்கக்கூடிய.
Frus'trāte, v. a. தடுத்தல், கத்தரித்தல், முறியடித்தல், கலைத்தல், குழப்புதல், அபத்தமாக்குதல், விக்கினம்பண்ணுதல், பின்னப்படுத்தல்.
to be frustrated, அபத்தமாதல், பின்னப்படுதல், கலைதல், எண்ணங்குலைதல், குழம்புதல்.
Frus-trā'tion, s. இடையூறு, இடறு, குழப்பம், தடக்கு, தடுப்பு, அபத்தம், பின்னம், விலக்கு.

Frus'tra-tive, a. அபத்தமாக்குகிற, தடைபண்ணுகிற, தடைப்படுத்தஏதுவான.
Frus'tra-to-ry, a. தடுக்கிற, பாழாக்குகிற, கெடுக்கிற.
Frus'tum, s. நிராக்கிரகணையம்.
Fry, s. பொரித்தஉணவு, பொரியல், கருணை.
of fishes, சிறுமீன்கிளை.
Fry, v. a. கருக்குதல், பொரித்தல்.
to be fried, பொரிதல்.
Fry'ing-pan, s. தோசைக்கல், அகல், தோசைச்சட்டி, பொரிக்குஞ்சட்டி.
Fud'dle, v. வெறிகொள்ளுதல், வெறிக்கச்செய்தல்.
Fudge, s. பதர்ப்பேச்சு, கட்டுக்கதை.
Fudge, int. சீச்சீ, ஏயே, இகழ்ச்சிக்குறிப்பு.
Fū'el, s. விறகு, கறல், சுல்லி, சமிதை, சுப்பி.
dry sticks, leaves, or chaff, துரால், செத்தை.
dried manure, வறட்டி, வறளி.
Fū'el, v. a. விறகிடுதல்.
Fu-gā'cious, a. கலைந்துபோகிற, பறந்துபோகிற, அற்றுப்போகிற, இற்றுப்போகிற.
Fu-gā'cious-ness, s. பறக்கிறதன்மை.
Fu-gac'i-ty, s. நழுவுகை, நிலையின்மை, பறக்குந்தன்மை.
Fūgh, Fōgh, int. போ, அரோசகக்குறிப்புமொழி.
Fū'gi-tive, s. நழுவி, புறங்காட்டி, நாடோடி, நிலையிலி.
Fū'gi-tive, a. அழிவுள்ள, நிலையற்ற, தங்காத, பறக்கிற.
Fū'gi-tive-ness, s. பறப்பு, பறக்குந்தன்மை, நிலையின்மை.
Fūgue, s. மாலையணியிசை.
Fū'guist, s. மாலையணியிசைபாடுவோன்.
Ful'cre, Ful'crum, s. பொறுப்பு, மிண்டு, தாபரம், மிண்டி.
Ful-fill', v. a. நிறைவேற்றுதல், தீர்த்தல், கைக்கொள்ளுதல், சபலித்தல்.
to be fulfilled, நிறைவேறுதல், சித்தியாதல், சபலமாதல்.

Ful-fill'ing, } s. நிறைவேற்றம், சபலம்.
Ful-fill'ment, }
Ful'gen-cy, s. சோதி, பிரகாசம், சோபை, பிரபை, மின்.
Ful'gent, a. சோதியுள்ள, பிரகாசமான, மின்னுகிற.
Ful'gent-ly, adv. சோதியாய், வெளிச்சமாய், பிரபையாய், பிரகாசமாய்.
Ful-gid'i-ty, s. சோதி, வெளிச்சம், பிரபை.
Ful'gor, s. பிரகாசம்.
Full, s. நிறைவு, பூரணம், திருத்தி, நிரப்பம், பூர்த்தி.
as the whole, முழுத்தொகை.
Full, v. a. இழைசுருக்குதல்.
Full, a. நிறைவான, நிறைந்த, நிரம்பின, பூரணமான, விரிவான.
blown, முற்றும்மலர்ந்த.
grown, பருவங்கண்ட, பருவம்முதிர்ந்த.
pregnancy, நிறைகருப்பம், பூரணகருப்பம்.
manned, நிறைமுஸ்தீதுள்ள.
moon, பௌரணை, பூரணை, பூரணசந்திரன், முழுமதி.
Full, adv. நிறைய, திருத்தியாய், குறைவின்றி, சரியாய், பூர்த்தியாய்.
to pour full, நிறையவார்த்தல்.
to eat to the full, நிறையச்சாப்பிடுதெல், நிரம்பச்சாப்பிடுதெல்.
Full'er, s. வண்ணான்.
fuller's earth, உவர்மண், சாரமண்.
Full'er-y, s. சீலையையிழைநெருங்கச்செய்யுஞ்சாலை, கோடிதுவைக்குஞ்சாலை.
Full'ing, s. இழைநெருக்குகை, புடைவைதுவைத்தல்.
Full'ing-mill, s. இழைநெருக்குமியந்திரம்.
Full'ness, s. நிறைவு, பூரணம், ஏராளம், சம்பூரணம், குறைவின்மை, சமாப்தி.
as wealth, திரவியம், செல்வம்.
Ful'ly, adv. சரிவர, நிறைய, நிரம்ப, முழுதும், முற்றும்.
Ful'mi-nant, a. முழக்கமுள்ள, முழங்குகிற.
Ful'mi-nāte, v. n. உறுமுதல், இடித்தல், குமுறுதல், முழங்குதல்.
ecclesiastically, சாபமிடுதெல்.

Ful-mi-nā'tion, s. முழக்கம், வெடிச்சத்தம், பேரொலி, சாபஞ்சொல்லுகை, அச்சுறுத்துகை.
Ful'mi-na-to-ry, a. முழங்குகிற, குமுறுகிற, இடிமுழக்கமான, பயப்படுத்துகிற.
Ful'sŏme, a. துற்கந்தமான, உவட்டிப்பான.
language, முகத்துதிப்பேச்சு, புகழ்ச்சி.
Ful'sŏme-ly, adv. முகத்துதியாய், உவட்டிப்பாய், துற்கந்தமாய்.
Ful'sŏme-ness, s. இச்சகம், முகத்துதி, உவட்டிப்பு, துற்கந்தம்.
Ful'vous, a. மஞ்சல்வன்னமான, பிங்கலமான, பீதமான.
Fum'ble, v. a. தடவிப்பார்த்தல், தடவுதல்.
to handle much, கசக்குகிறது.
Fum'bler, s. சரவைவேலைக்காரன், தடவிப்பார்ப்போன்.
Fum'bling-ly, adv. சரவைவேலையாய்.
Fūme, s. புகை, தூமம்.
as rage, எரிவு, கொதி, புகைச்சல்.
Fūme, v. a. புகைக்காட்டுதல், புகையூட்டுதல், புகைப்போடுதல்.
Fūme, v. n. புகைதல், கொதித்தல், பொங்குதல், எரிதல், சினத்தல்.
Fū'mid, a. புகையில்வாடின.
Fū'mi-gāte, v. a. புகைக்காட்டுதல், புகைப்போடுதல், புகையூட்டுதல்.
Fū-mi-gā'tion, s. புகைத்தல், நறும்புகையூட்டுதல், தூபவர்க்கங்காட்டுதல்.
Fūm'ing-ly, adv. எரிவாய், கோபமாய், புகைந்து, எரிச்சலாய்.
Fūm'ous, } a. புகையுள்ள, புகைக்கிற.
Fūm'y, }
Fun, s. பகிடி, நளினம், இலலிதம், கேலி, பரிகாசம்.
to make fun, கேலிபண்ணுதல், பகிடிபண்ணுதல்.
Fu-nam'bu-la-to-ry, a. கம்பங்கூத்தாடிபோறசெய்கிற, கழாயர்போன்ற.
Fu-nam'bu-list, s. கம்பங்கூத்தாடி, கயிற்றுக்கூத்தன், வேளம்பன்.
Func'tion, s. உத்தியோகம், தொழில்.
of the body, புலன், பொறி, கருவி, கரணம், தத்துவம்.

Func'tion-al, *a.* உத்தியோகத்துக்கடுத்த, புலனுக்குரிய.
Func'tion-al-ly, *adv.* கருவிவழியாய், புலன்வழியாய்.
Func'tion-a-ry, *s.* உத்தியோககாரன்.
Fund, *s.* பணம், பணத்தொகை, நிறைசெல்வம்.
Fund, *v. a.* முதற்கட்டுதல், பணஞ்சேகரித்துவைத்தல்.
Fun'da-ment, *s.* குதம், சகனம்.
Fun-da-ment'al, *s.* மூலாதாரம், அஸ்திபாரம், அடி.
Fun-da-ment'al, *a.* மூலாதாரமான, அஸ்திபாரமான, அடிவாருன.
Fun-da-ment'al-ly, *adv.* மூலாதாரமாய், அஸ்திபாரமாய், அடிவாருய்.
Fu-nē'bri-al, *a.* சாச்சடங்குக்கடுத்த.
Fū'ner-al, *s.* இழவு, சவச்சேமம்.
Fū'ner-al, *a.* சாவீட்டுக்கடுத்த, சவச்சேமத்துக்கடுத்த.
ceremonies, சாச்சடங்கு, அபரக்கிரியை, அந்தியக்கிருத்தியம், மிருத்துக்கிரியை.
elegy, ஒப்பாரி, ஒப்பு.
expenses, சாச்செலவு.
house, இழவுவீடு, சாவீடு, துக்கவீடு.
letter, இழவோலை, சாச்சீட்டு.
pyre, ஈமவிறகு.
Fun'gic, *a,* காளானுக்கடுத்த, காளான்போன்ற, ஆம்பிபோன்ற.
Fun'gi-form, *a.* குவிவான, குவிந்தவடிவான, காளான்போன்ற, ஆம்பியாகாரமான.
Fun'gous, *a.* புற்றுப்பூப்போன்ற, நொய்மையான, உண்டானஅன்றேஅழிகிற.
Fun'gus, *s.* காளான், புற்றுப்பூ, ஆம்பி.
as toad stool, பேய்க்காளான்.
as puff ball, எருமைக்காளான், புகைக்காளான்.
as proud flesh, துன்மாமிசம்.
on trees, மரக்காளான்.
Fu-nic'u-lar, *a.* நரம்புள்ள.
Funk, *s.* நாற்றம்.
Fun'nel, *s.* புகைசெல்லும்வழி, தூமத்துவாரம்.
as tunnel, வாயகன்றகுழல்.

Fun'ny, *a.* பகிடியுள்ள, சொட்டையான, நளினமான.
jesting, சொட்டைக்கதை.
tricks, சேட்டை, கோமாளம், கோட்டாலை.
to be funny, சேட்டைபண்ணுதல், பகிடிபேசுதல்.
to make funny remarks, சொட்டைபேசுதல், நளினம்பண்ணுதல்.
Fur, *s.* மெல்லியரோமம், மிருதுரோமமுள்ளவிலங்கின்தோல், மிருதுரோமச்சருமம்.
Fur, *v.* மிருதுரோமத்தால்மூடுதல்.
in architecture, பலகையடுத்தல்.
as the tongue, நாவில்ரோகக்குறியறிதல்.
Fur'be-lōw, *s.* கொய்சகம், நீவி, முன்தானை.
Fur'be-lōw, *v. a.* கொய்சகம்விடுதல், நெரிபிடித்தல்.
Fur'bish, *v. a.* துலக்குதல், விளக்குதல், அழுத்துதல், மினுக்குதல்.
Fur'bish-a-ble, *a.* துலக்கப்படத்தக்க, துலங்கத்தக்க, மினுங்கத்தக்க.
Fur'bish-ed, *a.* துலங்கின, பிரகாசிக்கிற.
to be furbished, துலக்கப்படுதல்.
Fur'bish-er, *s.* துலக்குவோன், அழுத்துவோன், மினுக்குவோன்.
Fur-cā'tion, *s.* கவை, கவர்.
Fur'fur, *s.* பொடுகு, அசறு, பொடு.
Fur-fu-rā'ceous, *a.* பொடுவுள்ள, அசறுள்ள.
Fū'ri-ous, *a.* மூர்க்கமுள்ள, அகோரமான, உக்கிரகோபமான, மதமுள்ள.
Fū'ri-ous-ly, *adv.* மூர்க்கமாய், உக்கிரமாய், அகோரமாய், ரௌத்திரமாய்.
Fū'ri-ous-ness, *s.* மூர்க்கம், குரூரம், உருத்திரம், மதம்.
Furl, *v. a.* ஒடுக்குதல், சுருக்குதல்.
to be furled, சுருங்குதல், ஒடுங்குணல்.
Fur'long, *s.* நானூற்றுநாற்பதுமுழத்தூரம்.
Fur'lōugh, Fur'lōw, *s.* } உத்தரவு, விடை.
Fur'nace, *s.* சூகை, சுள்ளை, சூளை.
in scripture, உபத்திரவப்படுமிடம், உபாதி, நரகம், சிறைக்களம்.

a smith's, உலை, உலைக்களம்.
Fur'nish, *v. a.* கொடுத்தல், சேகரித்துக்கொடுத்தல், திட்டம்பண்ணுதல், மு ஸ்திப்பாக்கல், சோடித்தல்.
one's self with, முஸ்திப்பாக்குதல், சேகரித்தல், எத்தனம்பண்ணுதல்.
Fur'nish-ed, *a.* ஆயத்தம்பண்ணப்பட்ட, அளவுபெற்ற, நிறைந்த, வேண்டியதுகிடைத்த, வேண்டியதுபெற்ற.
Fur'nish-er, *s.* சேகரிப்போன், சேகரித்துக்கொடுப்போன்.
Fur'ni-ture, *s.* வீட்டுத்தட்டுமுட்டு, சாமான், தளவாடம், முஸ்தீது, பணிமுட்டு, மணை, சோடிப்பு.
Fur'rōw, *s.* உழவுசால், படைச்சால்.
as groove, தவாளிப்பு.
as wrinkles, திரை.
Fur'rōw, *v. a.* சால்விடுதல், சால்வளைத்தல், உழுதல்.
as hollow by wrinkles, திரைத்தல்.
as groove, தவாளித்தல்.
Fur'ry, *a.* மிருதுரோமமுள்ள, மென்மயிர்நிறைந்த.
Fur'ther, *v. a.* உதவுதல், அதிகப்படுத்தல், நடப்பித்தல்.
Fur'ther, *a.* அப்பாற்பட்ட, மேல்நின்ற, மேல்.
Fur'ther, *adv.* மேலும், அப்புறம், தள்ளி, நெடுக, பறிய, சேணுய்.
Fur'ther-ance, *s.* உதவி, ஏவுகை, தூண்டுகை.
Fur'ther-er, *s.* ஏவுவோன், உதவுவோன், தூண்டுவோன்.
Fur'ther-mōre, *adv.* அல்லாமலும், அன்றியும், அதுவுமன்றி, இன்னமும், திரும்பவும், மேலும்.
Fur'thest, *a.* கடையாந்தரமான, ஈறுன், அதிதூரமான.
Fur'thest, *adv.* வெகுதூரத்திலே, அதிதூரமாய்.
Fur'tive, *a.* திருடின், களவாடின், சோரமாய்க்கொண்ட, சோர்த்த.
Fū'ry, *s.* அகோரம், கடுமை, மூர்க்கம், உக்கிரம், வேகம், உருத்திரம்.
as a person, மூர்க்கன், தறுகுறும்பன், கடுங்கோபி, இரத்தப்பிரியன்.
Fū'ry-līke, *a.* மூர்க்கமுள்ள, கடுங்கோபமுள்ள.

Furze, *s.* மஞ்சட்பூவுள்ளவாடாமுட்செடி.
Furz'y, *a.* வாடாச்செடியுள்ள.
Fus'cous, *a.* மங்கல்நிறமுள்ள.
Fūse, *v. a.* உருக்குதல், கரைத்தல்.
Fu-see', *s.* கைத்துப்பாக்கி.
of a bomb, பற்றுவாயில்த்திரி.
of a watch, &c., சங்கிலிசுற்றியிருக்குங்கட்டை.
Fu-si-bil'i-ty, *s.* உருகுந்தன்மை.
Fū'si-ble, *a.* உருகக்கூடிய, உருகத்தக்க.
Fū'si-fōrm, *a.* கூராணிவடிவமுள்ள, ஊசிபோன்ற.
Fū'sil, *s.* சிறுதுப்பாக்கி, கைத்துப்பாக்கி.
as heraldry, ஊசிவடிவு, பரவணிக்குறி.
Fū'sil, *a.* உருக்கத்தக்க, வடிகிற.
Fu-sil-eer', *s.* கைத்துப்பாக்கிச்சேவகன்.
Fū'sion, *s.* உருக்குகை, உருக்குதல்.
Fuss, *s.* குழப்பம், அமலை, சந்தடி.
Fust, *s.* புளிப்புநாற்றம், சிக்குநாற்றம், வெடில், உறண்டைநாற்றம்.
Fust'ed, *a.* பூஞ்சுபிடித்த, நாற்றமுள்ள, துர்க்கந்தமுள்ள.
Fus'tian, *s.* தடித்தபுடைவை, இரட்டுப்புடைவை.
in style, சொற்சொரிவானபாங்கு, பயனில்வார்த்தை, சொற்பொழிவு.
Fus'tian, *a.* இரட்டுப்புடைவையாற்செய்த, சொற்சொரிவான.
Fus'tic, *s.* சாயமூட்டுதற்கேற்றமரம்.
Fust'i-ness, *s.* நாறல், ஊசல், ஊழல்.
Fust'y, *a.* பூஞ்சுபிடித்த, உறண்டைநாற்றமான.
Fū'tile, *a.* அற்பமான, அபிரயோசனமான, பலனற்ற, உதவாத, தகாத.
Fu-til'i-ty, *s.* அபிரயோசனம், அற்பம்.
Fū'ture, *s.* வருங்காலம், எதிர்காலம்.
Fū'ture, *a.* வருங்காலத்தைக்காட்டிய, எதிர்காலத்தைக்காட்டிய.
time, இனி, இனிமேல், வருங்காலம்.
tense, வருங்காலம், எதிர்காலம்.
perfect, or second future, எதிர்காலந்தழீஇயஇறந்தகாலம், எதிர்காலம்பற்றியசெல்காலம்.

Fu-tū'ri-ty, *s.* வருங்காலம், வருங்கால வருத்தமானம்.
Fuzz, *s.* சிம்பு, தூசி, பூசு.
Fuzz'ball, *s.* நிலப்பொட்டு, புகைக் காளான், நிலப்பூடு.
Fuz'zle, *v. a.* வெறிக்கப்பண்ணுதல்.
Fuz'zy, *a.* கடற்காளான்போன்ற, தூசி யுள்ள, சிம்புள்ள.
Fy. (*exclamation.*) சீ, சீச்சீ, ஏஎ.

G.

Gab, *s.* வாய்.
gift of the gab, வாசாலம், கதாப்பிர சங்கம்.
Gab, *v.* பசப்புதல், அலப்புதல், பொய் த்தல், தூற்றிப்பேசுதல்.
Gab'ble, *s.* பசபசப்பு, வாயலப்பு.
Gab'ble, *v. n.* கத்துதல், பசபசத்தல், வா யாடுதல், அலப்புதல்.
Gab'bler, *s.* பசப்பி, அலப்பி, வாயாடி.
Gā'bel, *s.* இறை, வரி.
Gā'ble, *s.* மஞ்சடைப்பு, கேவல்.
Gad, *s.* முட்கோல்முனை, தாற்றுக்கோ ல்நுதி, ஈட்டிமுனை, கூர்.
Gad, *v. n.* அலைந்துதிரிதல், வீணாய்த்திரி தல்.
Gad'der, *s.* அலைந்துதிரிகிறவன், நா டோடி.
Gad'ding-ly, *adv.* அலைந்து, திரிந்து, நா டோடியாய், உலைந்துதிரிந்து.
Gad'fly, *s.* குருட்டீ, குருட்டிலையான்.
Gaff, *s.* மண்டா, மரக்கலப்பாய்மிண்டி.
Gaf'fle, *s.* சேவற்கத்தி, சேவற்போர்க்க த்தி.
Gag, *s.* திணியல், வாயடைப்பு.
Gag, *v.* வாயடைத்தல், திணித்தல், வா ய்கட்டுதல், உவட்டித்தல்.
Gāge, *s.* (*see* Gauge.) ஈடு, அடகு, ஓர் அளவு.
a challenge, போர்க்கறைகூவல்.
as regularity, முறைமை, ஒழுங்கு.
of a carpenter, வரைகம்பு.
of a ship, கப்பனீரிற்றாழ்ந்தஅளவு, குச்சுத்தாழ்வு.
Gāge, *v. a.* அளவிடுதல், அளவெடுத்த ல், அடகுவைத்தல்.
Gāg'er, *s.* அளவிடுவோன்.
Gag'ger, *s.* திணிப்போன், வாயடைக் கிறவன்.
Gag'gle, *v.* வாத்துக்கத்துதல்.
Gag'gling, *s.* வாத்துகத்துமொலி.
Gāi'e-ty, *s.* (*see* Gayety.) உல்லாசம், சி மாளம், மகிழ்ச்சி.
Gāi'ly, *adv.* (*see* Gayly.) உல்லாசமாய், வேடிக்கையாய், களிப்பாய்.
Gāin, *s.* ஆதாயம், இலாபம், ஊதியம், பலன், பேறு.
by labor, உழைப்பு, சம்பத்து, சம்பா த்தியம், ஊதியம்.
Gāin, *v.* ஆதாயம்பண்ணுதல், ஆதாயங் கொள்ளுதல், பெறுதல், சம்பாதித்த ல், சேகரித்தல், ஊதியமாதல்.
access to, சேர்தல், அடைதல், சார் தல்.
a victory, வெற்றிகாணுதல், சயங் கொள்ளுதல், கெலித்தல்.
footing, ஊன்றுதல், நிலைகொள்ளு தல்.
in trade, இலாபங்காணுதல்.
over, சேர்த்துப்பிடித்தல், திருப்புத ல், வசப்படுத்தல்.
one's confidence, கைவசம்பண்ணி க்கொள்ளுதல்.
profit, பலனெடுத்தல், பிரயோசனம டைதல், நயமடைதல், ஊதியம்பெ றுதல்.
by labor, உழைத்தல்.
as reach, arrive at, அடைதல், எட் டுதல், பிடித்தல், கிட்டுதல்.
Gāin'a-ble, *a.* அடையக்கூடிய, வசப் படுத்தக்கூடிய.
Gāin'er, *s.* இலாபமடைந்தவன், ஆதா யம்பெற்றவன்.
Gāin'ful, *a.* பலனான, இலாபமுள்ள.
Gāin'ful-ly, *adv.* ஆதாயமாய், பலனாய், இலாபமாய்.
Gāin'ful-ness, *s.* இலாபம், பலன், ஆதா யம்.
Gāin'less, *a.* ஆதாயமற்ற, பலனற்ற.
Gāin-sāy', *v. a.* எதிர்ப்பேசுதல், மறுத்து ரைத்தல், நிராகரித்தல், அழித்துப்பே சுதல், விரோதமாய்ப்பேசுதல், தருக் கம்பண்ணுதல்.
Gāin-sāy'er, *s.* மறுத்துரைப்போன், அ ழித்துப்பேசுவோன்.

Gāin-sāy'ing, *s.* எதிர்ப்பேச்சு, மறுத்துரை.

Gāir'ish, *a.* அலங்காரமான, வேடிக்கையான, நேற்றியான, சிறப்பான, கோப்பான.

Gāir'ish-ly, *adv.* வேடிக்கையாய், கோப்பாய், அலங்காரமாய், கொலுகொலுப்பாய்.

Gāir'ish-ness, *s.* வேடிக்கை, கோப்பு.

Gāit, *s.* நடை, போக்கு, போங்கு.
  affected, ஒயில், ஒய்யாரநடை, கோப்பு, இறுமாப்பானநடை.

Gāi'ter, *s.* பாதகோசம், கால்மேலுறை.

Ga'la, *s.* திருவிழா, உற்சவநாள்.

Gal'ax-y, *s.* பால்வீதிமண்டலம்.

Gal'ban, / Gal'ba-num, *s.* ஓர்வகைப்பிசின்.

Gāle, *s.* கடுங்காற்று, புயல், சண்டமாருதம், பிரசண்டவாயு.

Gā'le-a, *s.* கடல்முட்பன்றி.

Gall, *s.* பித்து, பித்தம், கசப்பு, கடுங்கோபம், வன்மம்.
  wound, காயம்.
  nut, கடுக்காய், மாசக்காய்.

Gall, *v. a.* அரித்தல், உரிஞ்சுதல், உரஞ்சுதல், தேய்த்தல்.
  as tease, vex, அலைக்கழித்தல், நோப்படுத்துதல், தொந்தரைபண்ணுதல்.

Gal-lant', *s.* உபசாரக்காரன், நாகரீகன், வீரன், குசாலன்.
  as lover, நண்பன், காதலன்.
  as rake, தூர்த்தன், காமுகன், இஸ்திரீலோலன்.

Gal-lant', *v. a.* மரியாதையாய்நடத்துதல், உபசரணையாய்நடத்துதல்.

Gal'lant, *a.* வீரமுள்ள, திடாரிக்கமுள்ள, பராக்கிரமமுள்ள, நாகரீகமான.

Gal'lant-ly, *adv.* வீரமாய், மேன்மையாய், உச்சாகமாய், அலங்காரமாய், இடம்பமாய்.
  as politely, ஒழுக்கமாய், மரியாதையாய்.

Gal'lant-ness, *s.* சிறப்பு, நாகரீகம்.

Gal'lant-ry, *s.* வீரம், ஆண்மை, பராக்கிரமம், நாகரீகம், இடம்பம்.
  as politeness, உபசரணை.
  as rakishness, தூர்த்தத்தனம்.

Gall'blad-der, *s.* பித்துப்பை, பித்தாசயம்.

Gal'ler-y, *s.* மேல்த்தட்டு, மேல்த்தளம்.

Gal'ley, *s.* பாய்தூக்கித்தண்டுவலித்தோடுந்தோணி.

Gal'ley-slāve, *s.* தண்டுவலிக்குந்தண்டத்துக்குட்பட்டசிறை.

Gal-li-nā'ceous, *a.* நாட்டுப்பட்சிக்கடுத்த, வீட்டுப்பட்சிக்கடுத்த.

Gall'ing, *a.* தேய்க்கிற, அரிக்கிற, கோபிக்குந்தன்மையான.

Gall'nut, *s.* கடுக்காய், கடு, மாசக்காய்.

Gal'lon, *s.* நாறுழிகொண்டது.

Gal-loon', *s.* சரிகை, கெண்டை, பொன்வெள்ளிநாடா.

Gal'lop, *s.* (or pace,) வல்கிதம்.

Gal'lop, *v. a.* வல்கிதகதியாய்ச்செலுத்துதல், வானரகதியாய்ச்செலுத்துதல்.

Gal'lop, *v. n.* குதிரைவல்கிதகதியாய்ச்செல்லல், வானரகதியாய்ச்செல்லல்.

Gal'lop-er, *s.* வல்கிதகதிக்குதிரை.
  a person, வல்கிதகதியாய்ச்செலுத்துவோன்.

Gal'lōws, *s.* தூக்குமரம்.
  in artillery, சிறுபீரங்கிப்பண்டி.

Gal'ly, *a.* பித்துள்ள, கசப்பான.

Ga-lōche', *s.* தொடுதோற்கீழ்ப்பாதுகை, தொடுதோலுறை.

Gal-van'ic, *a.* மின்தாதுவாதத்திற்குரிய, மின்தாதுவாதமுள்ள.

Gal'van-ism, *s.* மின்தாதுவாதம்.

Gal'van-īze, *v.* மின்தாதுசாரமூட்டுதல்.

Gal-van-om'e-tor, *s.* மின்தாதளவிடுங்கருவி.

Gam'ble, *v.* சூதாடுதல், சூதுவிளையாடுதல்.
  with money, &c., காசுகட்டுதல்.

Gam'bler, *s.* சூதுகாரன், சூதாடி, வட்டாடி.

Gam'bling, *s.* சூது, வட்டாட்டம்.

Gam-bōge', *s.* ஓர்செம்பிசின்.

Gam'bol, *s.* விளையாட்டு, குதிப்பு, துள்ளு.

Gam'bol, *v. n.* குதிகொள்ளுதல், பாய்தல், துள்ளுதல், விளையாடுதல்.

Gam'brel, பின்னங்கால்.
  as a stick, ஆடுமாடுரிக்கப்பின்காலிற்கொளுவித்தூக்குந்தடி.

Gāme, s. விளையாட்டு, ஆட்டம்.
as animals hunted, வேட்டமிருகம்,
as hunting, வேட்டை, பாபத்தி, வேட்டம்.
as sport, பகிடிவிளையாட்டு, பரிகாசம்.
at dice, &c., சூது, சூதாட்டம்.
at a race, or wrestling, பாட்டம், முறை, ஆட்டம்.
of chance, அதிட்டம்பார்த்தல், சீட்டுப்போடுதல், தாயம்பார்த்தல்.
Gāme, v. n. சூதாடுதல், வட்டாடுதல்.
Gāme'-cock, s. போர்ச்சேவல்.
Gāme'sŏme, a. விளையாட்டுள்ள, ஆடம்பரமான,விளையாட்டுப்பராக்குள்ள.
Gāme'sŏme-ly, adv. விளையாட்டாய், துள்ளாட்டமாய்.
Gāme'sŏme-ness, s. துள்ளாட்டம், விளையாட்டு.
Gāme'ster, s. சூதுகாரன், சூதாடுவோன்.
Gām'ing, s. சூது, சூதாட்டம்.
Gam'mon, s. பன்றித்தொடையிறைச்சி வற்றல், புகையிட்டபன்றியிறைச்சி.
as play, சூது, வட்டாட்டம், சொக்கட்டான்.
Gam'ut, s. சரளி, ஏழ்சுரம், சத்தசுரம்.
to sing the gamut, சரளிபாடுதல்.
Gan'der, s. வாத்துச்சேவல், ஆண்வாத்து.
Gang, s. கூட்டம், சங்கம், கப்பலாட்கள்.
of thieves, கள்ளர்கூட்டம்.
in mining, சுரங்கப்பா, சுரங்கத்திலிருக்கும்வேர், சுரங்கலோகக்கம்பி.
Gan'gre-nāte, v. a. துன்மாமிசமாக்குதல், துன்மாமிசம்வளரப்பண்ணல்.
Gan'grene, s. ஊழ்த்ததசை, துன்மாமிசம்.
Gan'grene, v. n. துன்மாமிசமாதல்.
Gan-gre-nes'cent, a. துன்மாமிசம்வைக்கிற, ஊழ்த்ததசைவளருகிற.
Gan'gre-nous, a. துன்மாமிசமுள்ள.
Gang'wāy, s. வாசல், வழி, நடை.
Gant'let, Gant'lope, s. இருப்புக்கோதை, இருப்புக்கைப்புட்டில்.
as punishment, ஓராக்கினை.
to run the gantlet, குற்றவாளியையோடவிட்டடித்தல்.

Gāol, s. காவற்கூடம், சிறைச்சாலை.
Gāol'er, s. சிறைச்சாலைக்காரன், காவற்கூடக்காரன்.
Gap, s. பிளப்பு, பிளவு, கமர், வெடிப்பு, விடர், விடவு, நீக்கம்.
in speaking, திக்குவாய்.
in a vessel, &c., ஓட்டை, துவாரம், சில்லி.
Gäpe, s. கொட்டாவி, ஆவலிப்பு.
as crevices, நீக்கம், விடவு.
Gäpe, v. n. கொட்டாவிவிடுதல், ஆவலித்தல், அங்காத்தல், வாய்திறத்தல்.
to gape after or for, அபேட்சித்தல், காதலித்தல்.
Gäp'er, s. கொட்டாவிவிடுகிறவன், ஆவலிக்கிறவன்.
Gäp'ing, a. கொட்டாவிவிடுகிற, ஆவலிக்கிற, பிளவுபடுகிற.
Gärb, s. புடைவை, வேஷம், கோலம், உடுப்பு.
Gär'bage, s. குடல், கழிவு.
Gär'ble, v. a. கொழித்தல், தாற்றுதல், அரித்தல், புடைத்தல், தெரித்தல்.
a writing, மாறுபாடாக்கல், புரட்டல்.
Gär'den, s. தோட்டம், கொல்லை, வளவு.
of herbs, கீரைக்கொல்லை, கீரைத்தோட்டம்.
of flowers, ஆராமம், பூந்தோட்டம், நந்தனம், நந்தனவனம்.
Gär'den, v. n. தோட்டவேலைசெய்தல், பயிரிடுதல்.
Gär'den-er, s. தோட்டக்காரன்.
Gär'den-ing, s. தோட்டவேலை.
Gär'den-rāke, s. குப்பைவாரி.
Gāre, s. ஆட்டுக்காலுரோமம்.
Gär'ga-rism, Gär'gle, s. வாயலம்புமருத்துநீர், அடைசுமருந்து, உமியுமருந்து.
Gär'gle, v. a. மருத்துநீர்கொண்டுவாயலம்புதல்.
Gär'land, s. மாலை, பூமாலை, தொங்கல், பூக்கோவை, சரம், தோரணமாலை.
makers, மாலைக்காரர், மாலைகட்டுவோர், பூமாலைகாரர்.
for the head, சூட்டுமாலை.
of gems, இரத்தினமாலை.
Gär'land. v. a. மாலைகட்டுதல், மாலைசூட்டுதல்.

Gär'lic, *s.* உள்ளி, வெள்ளுள்ளி, வெள்ளைவெண்காயம், சோசனம்.
Gär'ment, *s.* வஸ்திரம், ஆடை, உடுப்பு, உடை, புடைவை.
as cloak or shawl, உத்தரீயம், ஏகாசம், அத்தவாளம், மேலங்கி, அங்கவஸ்திரம்.
outer, மேற்போர்வை, குப்பாயம், மேலங்கி, புறவுடை, மீக்கோள்.
wedding garment, கூறை, மணப்புடைவை.
Gär'ner, *s.* உக்கிராணம், களஞ்சியம், தானியபத்தாயம், தானியக்கிரகம்.
Gär'net, *s.* ஒருவிதப்பளிங்குக்கல்.
Gär'nish, Gär'nish-ment, *s.* அலங்காரம், சிறப்பு.
Gär'nish, *v. a.* அலங்கரித்தல், அணிதல், வன்னித்தல், சிறப்பித்தல், சோடித்தல், கோலம்பண்ணுதல்.
Gär'nish-er, *s.* அலங்கரிப்போன், சோடிப்போன், சிறப்பிப்போன்.
Gär'ni-ture, *s.* அலங்காரம், கோலம், அணி, உடை.
Gar'ret, *s.* முகட்டறை.
Gar'ri-son, *s.* கோட்டைக்குட்பதாதி, கோட்டைத்தாணையம், மூலபலம்.
as fort, அரண், காவல்.
soldiers in, தாணையக்காரர், அரணுட்கள், மூலபலங்கள்.
Gar'ri-son, *v. a.* வென்றெடுத்ததேசத்தைக்காத்தல், அரணுக்கல்.
Gar-rū'li-ty, *s.* அலப்பு, அதனப்பிரசங்கம், கதாப்பிரசங்கம், பிதற்று, பசபசப்பு.
Gar'ru-lous, *a.* அலப்புகிற, விடாமற்பேசுங்குணமுள்ள, பசபசப்புள்ள, கதாப்பிரசங்கமுள்ள.
Gär'ter, *s.* சரணகோசந்தொடுகயிறு, முழந்தாட்கச்சு.
as badge, ஓர்பட்டக்குறி, முத்திரை.
Gär'ter, *v. a.* சரணகோசம்பூட்டுதல்.
Gas, *s.* வாயு, காற்று, ஆவி.
in chemistry, செயற்கைவாயு.
oxygen, அக்கினிவாயு.
hydrogen, சலவாயு.
Gas-con-āde', *s.* புளுகு, வீம்பு, தற்புகழ்ச்சி, பகடம்.
Gas'e-ous, *a.* மெல்லியகாற்றுப்போன்ற.

Gash, *s.* வெட்டு, கீறு, பிளப்பு, கொத்து, கொத்துவாய், பிளந்தவாய்.
Gash, *v. a.* கீறுதல், கொத்துதல்.
Gash'ful, *a.* பிளவுள்ள, வெடித்த, பயங்கரமான.
Gas'i-fy, *v.* வாயுநுட்பமாக்குதல்.
Gas'ket, *s.* மரக்கலப்பாய்சுருட்டிக்கட்டுங்கயிறு.
Gas'-līght, *s.* வாயுதீபம், செயற்கைவாயுதீபம்.
Gas-om'e-ter, *s.* செயற்கைவாயுவளக்குங்கருவி.
Gäsp, *s.* இளைப்பு, வாயங்காத்துச்சுவாசம்வாங்குதல், தொய்வு.
Gäsp, *v. n.* இளைதல், தொய்தல், இயங்குதல், வருத்தமாய்மூச்செறிதல்.
Gas'tric, *a.* உதரத்துக்கடுத்த, இரைக்குடருக்கடுத்த.
juices, தீபனநீர், சீரணநீர், உதராக்கினி, மூலாக்கினி.
Gas-tril'o-quist, *s.* வயிற்றூற்பேசுகிறவன், உதராசயபாஷிகன்.
Gas-tril'o-quy, *s.* உதராசயபாஷிதம்.
Gāte, *s.* படலை, வாயில், கபாடம்.
of a sluice, பொறை, துறுகல், மடையடைக்குங்கதவு.
Gāte'wāy, *s.* துவாரம், வாயில், அத்தானம், கோட்டி, கோபுரவாயில், மரிசி.
Gath'er, *s.* சுருக்கு, திரைவு, கொய்சகம், மடிப்பு.
Gath'er, *v. a.* சேர்த்தல், கூட்டுதல், சேகரம்பண்ணுதல், ஈட்டுதல், திரட்டுதல், குவித்தல்.
debts, contributions, &c., அறவிடுதல், தண்டுதல்.
as plait, கொய்தல், நெரிபிடித்தல்.
as pucker, சுருக்குதல், திரைத்தல்.
as infer from premises, அருத்தாபத்திகொள்ளுதல், அனுமானித்தல், துணிதல், நிதானித்தல்.
as pluck, கொய்தல், ஆய்தல், பறித்தல்.
as select from, தெரிந்தெடுத்தல், ஆய்ந்தெடுத்தல்.
as pick up or glean, பொறுக்குதல்.
up the clothes, புடைவையொதுக்குதல், திரைத்தல்.
Gath'er, *v. n.* திரளுதல், குவிதல், வாருதல், சங்கமித்தல், ஒருங்குகூட்டுதல்.

as collect matter, சீக்கட்டுதல், சீழ்க்கூட்டுதல், திரளுதல், கட்டுதல்.
Gath'er-a-ble, *a.* சேர்க்கக்கூடிய, வாரிக்கொள்ளக்கூடிய.
Gath'er-er, *s.* சேர்ப்போன், வாரிக்கொள்வோன்.
Gath'er-ing, *s.* சங்கிரகம், சேகரிப்பு, கூட்டம், சங்கம், கும்பு.
in cloth, திரைவு, கொய்சகம்.
as tumor, குமிட்டிப்பு, கட்டு, சீக்கொள்ளுகை, சீக்கூட்டுகை.
Gath'ers, *s.* (*pl.*) கொய்சகங்கள்.
Gaud'er-y, *s.* வேடிக்கை, கோப்பு, குசால், அலங்காரம்.
Gaud'i-ly, *adv.* வேடிக்கையாய், வெளிப்பூச்சாய், பிலுக்காய், கோப்புத்தனமாய்.
Gaud'i-ness, *s.* மேற்பூச்சு, போலி, வேடிக்கை, கிருது, ஒய்யாரம், கோப்பு, பிலுக்கு, ஒயில்.
Gaud'y, *a.* பிலுக்கான, வேடிக்கையான, சிறப்பான.
Gāuge, *s.* அளவு, அளவுகோல், மாத்திரைக்கோல்.
Gāuge, *v. a.* அளவெடுத்தல், அளத்தல்.
Gāug'er, *s.* அளவிடுவோன், பேழைமுதலியவளப்போன்.
Gāug'ing, *s.* அளவுசாத்திரம்.
Gäunt, Gant, *s.* } மெல்லிய, ஒஞ்சட்டையான, மெலிந்த, வெறுமையான.
Gäunt'let, *s.* (*see* Gantlet.) இருப்புக்கைக்கோதை, கைப்புட்டில்.
Gäunt'ly, *adv.* மெலிவாய், ஒஞ்சட்டையாய்.
Gauze, *s.* சல்லா, கவணி, மெல்லியபுடைவை.
Gauz'y, *a.* மெல்லிய, சல்லாப்போன்ற.
Gav'el, *s.* உப்பட்டி, அரிகதிர்.
in law, கப்பம், இறை, ஆயம்.
Gawk, Gawk'y, *s.* } மூடன், மந்தன், பாங்கறியாதவன், மண்ணன்.
Gawk'y, *a.* பாங்கறியாத, மூடத்துவமான.
Gāy, *a.* ஆடம்பரமான, வீம்புள்ள, மகிழ்ச்சியுள்ள, நேற்றியான, உல்லாசமான, வேடிக்கையான, துள்ளாட்டமான.
Gāy'e-ty, *s.* உல்லாசம், கிருதுவுடை, குசால், ஒய்யாரம், பூரிப்பு, ஒயில், கோப்பு.
as merriment, அக்களிப்பு.
Gāy'ly, *adv.* உல்லாசமாய், ஆடம்பரமாய், கோப்பாய், அக்களிப்பாய், துள்ளாட்டமாய், வீம்பாய், சிமாளமாய்.
Gāy'ness, *s.* குசால், கோப்பு.
Gāy'sŏme, *a.* குசாலாய், களிப்பாய்.
Gāze, *s.* கண்ணோக்கம், உற்றுப்பார்க்கை, உற்றுப்பார்க்கப்படும்பொருள், காட்சித்தெரிபொருள், நோக்கப்படுபொருள்.
Gāze, *v.* உற்றுப்பார்த்தல், கண்வைத்தல், நோக்குதல்.
at one, ஏறவிறங்கப்பார்த்தல், ஏறிட்டுப்பார்த்தல், உற்றுப்பார்த்தல்.
Ga-zel', Ga-zelle', *s.* } ஓர்விதமான்.
Gāze'hound, *s.* கண்டோடும்வேட்டைநாய்.
Gāz'er, *s.* உற்றுப்பார்க்கிறவன்.
Ga-zette', *s.* புதினக்கடுதாசி, சமாசாரபத்திரிகை, நூதனபத்திரிகை.
Ga-zette, *v. a.* நூதனபத்திரவழியாய்ப்பிரசித்தம்பண்ணுதல்.
Gaz-et-teer', *s.* புதினக்கடுதாசிவிசாரிப்போன், சமாசாரபத்திரிகையெழுதுவோன், தேசவிருத்தாந்தநூல்.
Gāz'ing-stock, *s.* நிந்திக்கப்படுவோன், உற்றுப்பார்க்கப்படுவோன், நிந்திக்கப்படும்பொருள்.
Gēar, *s.* முஸ்தீது, பண், தளபாடம், உடுப்பு, சீர், சஞ்சுபம், அணிகலம், சாமான், குதிரைச்சேணம்.
Gēat, *s.* கருவாய், குகைமூக்கு.
Gee, *s.* (*see* Jee.) ஏரைவலந்திருப்பும்ஒலி.
Ge-hen'na, *s.* நரகம், பாதலம், நிரையம்.
Gel'a-tin, *s.* ஆணம், தசைக்குழம்பு.
Geld, *v. a.* விரையடித்தல், விரைவாங்குதல், நலமெடுத்தல்.
Geld'er, *s.* நலமெடுக்கிறவன், விதைவாங்கி.
Geld'ing, *s.* விதைவாங்கப்பட்டமிருகம்.
Geld'ing, *a.* நலமெடுபட்ட.
Gel'id, *a.* குளிரான, கூதிரான, சீதளமான.

Gel'ly, *s.* தீங்குழம்பு, உறைந்தபாணி, பாகு.
of the palmira, நுங்கு.
Gem, *s.* மணி, இரத்தினம், இரத்தினக்கல்.
as bud, துளிர், தளிர், இலிர்.
red, செம்மணி.
Gem, *v. a.* குயிற்றல், மணிபதித்தல், அலங்கரித்தல்.
Gem'el, *s.* ஏர், சோடு, இணை.
Gem'i-nāte, *v. a.* இரட்டித்தல்.
Gem'i-ni, *s.* இரட்டைப்பிள்ளை.
one of the signs of the zodiac, மிதுனராசி.
Gem'i-nous, *a.* இரட்டிப்பான, சோடுசோடான.
Gem-ma'tion, *s.* துளிர்க்கை, தளிர்க்கை.
Gem'me-ous, *a.* இரத்தினமுள்ள, இரத்தினத்திற்குரிய, இரத்தினம்போன்ற.
Gem'my, *a.* சோதியுள்ள, பளீரிடுகிற, இரத்தினநிறைந்த, மின்னுகிற, சிறப்புள்ள.
Gen'der, *s.* சாதி, பால், இலிங்கம்.
in grammar, பால்.
masculine, ஆண்பால், புல்லிங்கம்.
feminine, பெண்பால், ஸ்திரிலிங்கம்.
common, பொதுப்பால்.
neuter, நபுஞ்சகலிங்கம், இயங்காத்திணைப்பால், நிலத்திணைப்பால்.
ungrammatical, பால்வழு.
Gen'der, *v. a.* (*see* Engender.) பிறப்பித்தல், சனிப்பித்தல்.
Gen'der, *v. n.* கலத்தல், கூடுதல், சையோகம்பண்ணுதல்.
Gen-e-a-log'ic-al, *a.* வமிசவட்டவணைக்கடுத்த, பரவணிக்கடுத்த.
Gen-e-al'o-gist, *s.* வமிசவட்டவணைக்காரன், சந்தானபாரம்பரியமெழுதுவோன், பரவணியெழுதுவோன்.
Gen-e-al'o-gy, *s.* பரவணிக்கிரமம், சந்தானவழி, சந்தானபாரம்பரியப்பெயர்வழி, வமிசவரிசை.
Gen'e-ra, *s.* (*see* Genus.) இனங்கள், பொதுவினம், சாதி.
Gen'er-al, *s.* முழுத்தொகை, படைத்தலைவன், சேனாபதி, தானாபதி, சேனைத்தலைவன், தளகத்தன்.
in general, பொதுவாய், பொதுப்பட, சாதாரணமாய்.
Gen'er-al, *a.* பொதுவான, சாதாரணமான, சமுதீதமான, வழக்கமான, சாமானியமான.
calamities, தேசஉபத்திரவம், பொதுக்கிலேசம்.
feeling, or sentiment, பொதுவுணர்ச்சி, சாதாரணஎண்ணம், சாதாரணஉத்திட்டம்.
rumor, ஊர்க்கதை.
Gen-er-al-is'si-mo, *s.* தளகத்தன், சேனாபதி.
Gen-er-al'i-ty, } *s.* பொதுமை, பொதுத்தன்மை, பெரும்பான்மை, சாதாரணம்.
Gen'er-al-ness, }
Gen-er-al-i-zā'tion, *s.* பொதுவாக்குகை, சாமானியமாக்குகை.
Gen'er-al-īze, *v.* பொதுவாக்குதல், இனநிலையாக்கல், ஒழுங்குப்படுத்தல், வரிசைப்படுத்தல், இனப்படுத்தல்.
Gen'er-al-ly, *adv.* பொதுவாய், வாடிக்கையாய், வழக்கமாய், பெரும்பான்மையாய், சாதாரணமாய்.
Gen'er-al-ness, *s.* விசாலம், பொதுமை, சாமானியம், பெரும்பான்மை.
Gen'er-al-ship, *s.* சேனாபத்தியம், சேனாபதித்துவம்.
Gen'er-al-ty, *s.* சமஸ்தம், பெரும்பான்மை.
Gen'er-ant, *s.* பிறப்பிக்குந்தன்மை, சனிப்பிக்குந்தன்மை, சினைப்பிக்கை.
Gen'er-āte, *v. a.* சனிப்பித்தல், பிறப்பித்தல், உண்டாக்கல், உருவாக்கல்.
Gen-er-ā'tion, *s.* பிறப்பிப்பு, சனிப்பிப்பு, தலைமுறை.
a family or tribe, சந்ததி, கோத்திரம்.
as people of any time, காலத்தார், தலைமுறையார்.
the present generation, இக்காலத்தார், இச்சந்ததி, தற்காலத்தார்.
Gen'er-a-tive, *a.* பிறப்பிக்கிற, வர்த்திக்கிற, விருத்தியாக்குகிற.
Gen'er-ā-tor, *s.* பிறப்பிப்போன், ஆக்குவோன், சனிப்பிப்போன்.
Gen-er'ic, } *a.* பொதுவான, சாதாரணமான, அடுத்த, உரிய, சாமானிய.
Gen-er'ic-al, }

term, பொதுப்பெயர், மரபுப்பெயர்.
Ge-ner'ic-al-ly, *adv.* பொதுவாய், மரபாய்.
Gen-er-os'i-ty, *s.* உதாரகுணம், தயாளம், தருமசீலம், தருமகுணம்.
Gen'er-ous, *a.* உதாரமான, தருமக்குணமுள்ள.
person, தயாளமுள்ளவன், தருமக்குணமுள்ளவன், உதாரி, தாதா.
Gen'er-ous-ly, *adv.* தயாளமாய், உதாரமாய்.
Gen'er-ous-ness, *s.* தயாளம், உதாரம்.
Gen'e-sis, *s.* ஆதியாகமம், உற்பத்தியாகமம்.
Ge-neth'li-ac, Ge-neth-lī'ac-al, *a.* } சாதகத்துக்குரிய.
Ge-neth'li-acs, *s.* சாதககணிதம், சாதகசோஷிகம்.
Ge neth-li-at'ic, *s.* சோஷிகன், சாதகமெழுதுவோன்.
Ge'ni-al, *a.* வளர்க்கிற, சீவனுக்காதாரமான, வளர்ச்சிக்கடுத்த.
as merry, களிப்பான, மகிழ்ச்சியான, துள்ளாட்டமான.
Gē'ni-al-ly, *adv.* இயல்பாய், சுபாவமாய், மகிழ்ச்சியாய்.
Ge-nic'u-late, *v. a.* கணுவைத்தல், முளிவைத்தல்.
Gē'ni-ī, *s.* *(pl.)* ஆகாயவாசிகள், வானோர்கணம்.
Gen'i-tal, *a.* சனனத்துக்கடுத்த, உற்பத்திக்கடுத்த.
Gen'i-tals, *s.* *(pl.)* இலிங்கம், உபத்தம், குய்யம்.
Gen'i-tive, *s.* (case in grammar.) அது, ஆது, முதலியஆறும்வேற்றுமைஉருபுகள்.
Gen'i-tor, *s.* உண்டாக்குவோன், அப்பன், பிதா, தந்தை.
Gen'i-ture, *s.* செனிப்பிப்பு, செனனம்.
Gēn'ius, *s.* ஆகாயவாசி.
as nature, தன்மை, இயல்பு, நடை, போக்கு.
a genius, கருவாளி, கருத்தாளி, விவேகி, சூழ்ச்சவிவேகி, யூகி.
strength of mind, விவேகம், யூகம், தீவிரபுத்தி.

Gen-teel', *a.* நாகரீகமுள்ள, சிறப்புள்ள, சீர்திருந்தின, நற்பாங்கான, ஆசாரோபசாரமுள்ள, மரியாதையுள்ள.
address, நாகரீகமானபேச்சு, உபசாரவார்த்தை.
behavior, நாகரீகம், பரிசு, பாங்கு.
Gen-teel'ly, *adv.* சிறப்பாய், நாகரீகமாய், ஆசாரோபசாரமாய்.
Gen-teel'ness, *s.* உபசாரம், நடை, பாங்கு, நாகரீகம், சிறந்தநடை.
Gen'tian, *s.* ஒருவேர்.
Gen'tīle, *s.* அக்கியானி, அஞ்ஞானி, அசத்தியமதானுசாரி, புறச்சாதி, அன்னியதேவாராதனைக்காரன்.
Gen'tīle, *a.* அன்னியதேவாராதனைக்குரிய.
Gen'til-ism, *s.* அக்கியானம், அவபத்தி.
Gen-ti-li'tious, *a.* சாதிப்போங்கான, பரம்பரியமான, தலைமுறைதலைமுறையான, ஒருதேசப்பாங்கான, பரவணியான.
Gen-til'i-ty, *s.* நாகரீகம், மேன்மக்கள்நடை, பாங்கு.
Gen'tle, *a.* சாதுவான, சாந்தமான, பதமையான, மெத்தனவுள்ள.
discourse, சாதுவானபேச்சு, சமாதானசம்பாஷனை.
folks, தலைமக்கள், மேன்மக்கள், சாதுக்கள்.
pace, தளர்நடை, தளர்ந்தநடை.
Gen'tle-man, *s.* துரைமகன், குலமகன், தலைமகன், பெருமகன், இறைமகன்.
military, தளகத்தன், படைவீரன்.
of title, பட்டப்பிரபு.
at large, செல்வன், செல்வத்துரை, பிரபு.
Gen'tle-man-li-ness, *s.* நாகரீகம், பரிசு, மேன்மக்கள்நடை.
Gen'tle-man-līke, Gen'tle-man-ly, *a.* } சங்கையான, மேன்மகன்றன்மையான, நாகரீகமான.
Gen'tle-man-ship, *s.* மேன்மகன்றன்மை.
Gen'tle-ness, *s.* பதமை, சாந்தகுணம், மெத்தெனவு, சாந்தம், சாது, தயாளம்.
Gen'tle-wom-an, *s.* தலைமகள், பெருமாட்டி, நாய்ச்சியார், தலைவி, கோமாட்டி, துரைச்சானி.

Gen'tly, *adv.* பதமையாய், மெல்லமெல்ல, படிப்படியாய், பட்சமாய், மெத்தனவாய், உருக்கமாய்.

Gen-too', *s.* இந்துமதஅனுசாரி, இந்துதேசத்தான்.

Gen'try, *s.* மரபு, உயர்குலம், தலைமக்கள், மேன்மக்கள், குலமக்கள்.

Ge-nu-flec'tion, *s.* முழந்தாள்வணக்குகை, முழந்தாட்படியிடுகை.

Gen'u-ine, *a.* உத்தமமான, உண்மையான, கலப்பின்மையான, சுத்தமான, சுவாபமான, சுயம்புவான.
gem, குலமணி, சாதிமணி, சுத்தஇரத்தினம், ஆணிமுத்து.

Gen'u-ine-ly, *adv.* கலப்பில்லாமல், சுபாபமாய், உத்தமமாய்.

Gen'u-ine-ness, *s.* கலப்பின்மை, சுத்தம், உண்மை, பழுதின்மை.

Gē'nus, *s.* வகை, இனம், குலம், சாதி.

Ge-o-cen'tric, *a.* பூமிமத்தியான, பூமியைமத்தியாயுள்ள.

Ge-od'e-sy, *s.* மேற்பரப்பளவைச்சாத்திரம், நீட்டலளவைச்சாத்திரம், பூமிமாணம்.

Ge-og-nost'ic, *a.* பூமியின்கூறுபாட்டுக்கடுத்த, பூதசாங்கரியத்துக்கடுத்த.

Ge-og'no-sy, Ge-og'o-ny, *s.* பூதசாங்கரியம், பூதசம்பவக்கியானம், புவனகோசம், அண்டகோசம், வஸ்துவிற்பத்தி, பூமிசாதப்பிரஞ்ஞை.

Ge-og'ra-pher, *s.* புவனசாத்திரி.

Ge-o-graph'ic, Ge-o-graph'ic-al, *a.* புவனசாத்திரத்துக்கடுத்த.

Ge-o-graph'ic-al-ly, *adv.* புவனசாத்திரப்போங்காய், புவனசாத்திரப்படி.

Ge-og'ra-phy, *s.* பூகோளசாத்திரம், புவனசாத்திரம், புவனகோசம்.

Ge-o-log'ic-al, *a.* பூகோளசாத்திரத்துக்கடுத்த.

Ge-ol'o-gist, *s.* புவனகோளசாத்திரி, பூபந்தவித்தியாபாரகன்.

Ge-ol'o-gy, *s.* பூமிபந்தவித்தை, புவனகோளசாத்திரம்.

Gē'o-man-cer, *s.* சக்கரக்குறிகாரன், கோடுகீறிக்குறிசொல்வோன்.

Gē'o-man-cy, *s.* சக்கரக்குறி, கோடுகீறிக்குறிசொல்லுகை.

Ge-o-man'tic, *a.* கோடுகீறிக்குறிசொல்வதற்கடுத்த.

Ge-om'e-ter, Ge-om-e-tri'cian, *s.* நீட்டலளவைச்சாத்திரி, இரேகாகணிதன்.

Ge-om'e-tral, Ge-o-met'ric, Ge-o-met'ric-al, *a.* நீட்டலளவைச்சாத்திரத்துக்குரிய, நீட்டலளவைப்படியான.

Ge-o-met'ric-al-ly, *adv.* இரேகாகணித முறையாய், நீட்டலளவைப்படி.

Ge-om'e-trīze, *v. a.* நீட்டலளவைவிதிப்படிசெய்தல்.

Ge-om'e-try, *s.* இரேகாகணிதம், நீட்டலளவைச்சாத்திரம்.

Ge-o-pon'ics, *s.* வேளாண்மைநூல், உழவுசாத்திரம், கிருஷிநூல்.

Geor'gic, *a.* வேளாண்மைநூலுக்குரிய.

Ge-os'co-py, *s.* நிலப்பரிட்சை, நிலவித்தகம்.

Ge-ot'ic, *a.* பூமிக்கடுத்த, பூமிக்குரிய.

Germ, *s.* முளை, கரு, அங்குரம், துளிர், மூலம்.
of palms, &c., in the top, வட்டு.
of plantains, &c., in the bottom, வட்டு, கிழங்கு.

Ger'man, *a.* உடன்பிறந்தார்பிள்ளைகளுக்குரிய.

Germ'in-ant, *a.* முளைக்கிற, அரும்புகிற.

Germ'in-āte, *v. n.* முளைத்தல், இலிர்த்தல், தழைத்தல், தளிர்த்தல், அங்குரித்தல், துளிர்த்தல்.

Germ-in-ā'tion, *s.* தளிர்ப்பு, தழைப்பு, முளைக்கை.
as time, முளைக்குங்காலம்.

Ger'und, *s.* வினையெச்சம்.

Ges-tā'tion, *s.* சூல்கொண்டிருக்கை, வயாவுடைமை, கருப்பதாரணம்.
as wearing, அணிகை.

Ges-tic'u-lāte, *v. n.* பாவனைகாட்டுதல், அபிநயித்தல், கைமெய்காட்டுதல், பயில்காட்டுதல்.

Ges-tic-u-lā'tion, *s.* பாவனை, அபிநயம், கைமெய்காட்டுகை, பயில்.

Ges-tic'u-lā-tor, *s.* அபிநயி, கைமெய்காட்டுவோன், பயில்காட்டுவோன்.

Ges'ture, *s.* சைக்கினை, சாடை, சைகை, அபிநயம், கைமெய்காட்டு.

graceful, ஒயில், ஒய்யாரம்.
ungraceful or improper, சேட்டை.
theatrical, அபிநயம், கைமெய்காட்டு.
with the eye, சைகை, கண்குறிப்புக் காட்டுகை, கண்மறிக்காட்டுகை.
with the hand, கைகாட்டு, கைப்பயில்.
with the head, தலையசைப்பு, சிரகம்பம், சிரகம்பிதம், துலுக்கு.

Ges'ture, *v. a.* சேட்டைபண்ணுதல், அபிநயித்தல், கைமெய்காட்டல்.

Get, *v. a.* சம்பாதித்தல், அடைதல், பெறுதல், எடுத்தல், பிடித்தல், வாங்குதல்.
above, மேற்கொள்ளுதல்.
a name, பெயரெடுத்தல், பெயரடைதல், கீர்த்தியடைதல்.
a girl married, கரையேற்றுதல், விவாகம்பண்ணிக்கொடுத்தல்.
by industry, தேடுதல், உழைத்தல், சேகரித்தல்.
gain, இலாபங்காணுதல், ஆதாயம் பெறுதல்.
footing, நிலைகொள்ளுதல், வேரூன்றிக்கொள்ளுதல்.
into possession, கைவசம்பண்ணிக்கொள்ளுதல், ஆட்சிபெறுதல்.
in or into, உட்படுத்துதல், வசப்படுத்தல்.
leave, உத்தரவுபெறுதல், விடைபெறுதல்.
over to one's interest, சேர்த்தல், வசியப்படுத்தல், தன்னயத்துக்குச்சேர்த்தல்.
rid of by putting off, கடத்துதல், நீக்குதல், விலக்குதல், தள்ளுதல்.
to recover debts, &c., தண்டுதல், அறவாக்கல், அறவிடுதல்.

Get, *v. n.* உட்படுதல், சேருதல்.
ahead or forward, தலைப்படுதல், முந்துதல்.
ashore, கரையேறுதல், கரைப்படுதல்.
at, எட்டுதல், அகப்படுதல், கிட்டுதல்.
back, திரும்பிப்போதல்.
before, முந்துதல்.
behind, பின்னிடுதல், பின்வாங்குதல், இடைதல்.
clear, தப்பிக்கொள்ளுதல், விலகிக்கொள்ளுதல்.
down, இறங்குதல்.
drunk, வெறியெடுத்தல், வெறிகொள்ளுதல்.
loose, பிரிதல், அவிழ்தல், விள்ளல்.
near, கிட்டுதல், சமீபித்தல்.
out, போகுதல், வெளிவருதல், பிரஸ்தாபப்படுதல்.
out of the way, ஒதுங்குதல், விலகுதல், தப்புதல், கைகடத்தல், ஒற்றிப்போதல்.
through or away by stealth, ஒளித்துத்தப்புதல், நழுவுதல்.
up, எழுதல், எழும்புதல், எறுதல், கிளம்புதல்.
well, சுகப்படுதல்.

Get'ter, *s.* வாங்குவோன், பெறுவோன், சம்பாதிப்போன்.

Get'ting, *s.* பெற்றுக்கொள்கை, சம்பாதிப்பு, இலாபம்.

Gew'gaw, *s.* போலி, வெளிப்பூச்சு, விளையாட்டுப்பொருள்.

Gew'gaw, *a.* வெளிப்பூச்சான, வீண்போலியான.

Ghäst'ful-ly, *adv.* மரித்ததுபோல, பயங்கரமாய், பிரமிப்பாய், சங்காவேசமாய்.

Ghäst'ful-ness, *s.* செத்தசாயல், பயங்கரமானகாட்சி, எக்கமுகம், வெளிறினதன்மை.

Ghäst'ly, *adv.* செத்தரூபுபோன்ற, வெளிறின, பயங்கரமான.

Ghee, *s.* நெய், கிருதம், ஆச்சியம்.

Ghōst, *s.* ஆவி, ஆத்துமா, உயிர், பிதிர்.
give up the, சாதல், உயிர்விடுதல், தேகவியோகமாதல்.
Holy Ghost, பரிசுத்தஆவியானவர்.

Ghōst'li-ness, *s.* ஆவியின்தன்மை, ஆவியின்சிந்தை.

Ghōst'ly, *a.* ஆவிக்கடுத்த, ஆத்துமாவுக்கடுத்த.

Gī'ant, *s.* பெருந்தேகி, திண்ணியன், பீனதேகன், மிண்டன்.

Gī'ant-ess, *s.* இயக்கி, பீனதேகி.

Gī'ant-līke, Gī'ant-ly, *a.* } பெரிய, அதிதேகமுள்ள, பீனதேகமுள்ள.

Gī'ant-ship, *s.* பெருந்தேகத்துவம்.

Gib'ber, *v. n.* பரபரப்பாய்ப்பேசுதல்.

Gib'ber-ish, *s.* துரிதமொழி, பசபசப்பு, பிதற்று.

Gib'ber-ish, *a.* பயனற்ற, பொருளில்லாத.

Gib'bet, *s.* தூக்குமரம், குறுக்குத்திரம்.

Gib'bet, *v. a.* தூக்குமரத்திற்றூக்குதல், குறுக்குமரத்திற்றூக்குதல்.

Gib-bos'i-ty, *s.* அதைப்பு, வீக்கம், புடைப்பு, புறவளைவு.

Gib'bous, *a.* வீக்கமான, அதைப்பான, புறவளைவான, கூன்முதுகுள்ள.

Gib'bous-ly, *adv.* வீக்கமாய், அதைப்பாய், கூனலாய்.

Gib'bous-ness, *s.* அதைப்பு, வீக்கம், புடைப்பு, புறவளைவு.

Gībe, *s.* நகைப்பு, சுடுசொல், தீமொழி, பழிப்புரை, குத்திரம்.

Gībe, *v. a.* நகைத்தல், சுடப்பேசுதல், இகழ்தல், நிந்தித்தல், அசட்டைபண்ணுதல்.

Gīb'er, *s.* பழிப்போன், நிந்திப்போன், இகழ்வோன், சுடச்சொல்வோன், தீச்சொற்காரன், குத்திரன்.

Gīb'ing-ly, *adv.* பழிப்பாய், நிந்தையாய்.

Gib'lets, *s.* வாத்துமுதலியவற்றின் ஈரல்முதலியவை.

Gid'di-ly, *adv.* கிறுகிறுப்பாய், தலைச்சுழற்சியாய், உறுதியின்மையாய், சிந்தனையின்றி, உலாஞ்சி.

Gid'di-ness, *s.* கிறுகிறுப்பு, தலைச்சுழற்சி, உலாஞ்சுகை, உறுதியின்மை, அசைவு, சலனம், சிந்தனையின்மை.
in youth, துடினம், துடியாட்டம்.

Gid'dy, *a.* கிறுகிறுப்பான, உலாஞ்சுதலுள்ள, நிலையற்ற, துடியாட்டமுள்ள, வெறியுள்ள.
brained, சிந்தனையற்ற, கவலையற்ற.
head, முட்டாள்.
headed, சிந்தனையற்ற, அவதானமற்ற, கிறுகிறுப்புள்ள, நிலையற்ற.
to be giddy, கிறுகிறுத்தல், சுழற்றுதல், செருக்குதல், தள்ளம்பாறுதல், உலாஞ்சுதல்.

Gift, *s.* கொடை, ஈகை, ஈவு, உபகாரம், தியாகம், பேறு, வரம், விசர்ச்சனம், பரிசு.
to a priest &c., தக்கணை.
to a temple, நேர்க்கடன், மானியம், நேர்த்தி, கோவில்மானியம்.
as a bribe, கைக்கூலி, பரிதானம்.
an offering, காணிக்கை, பலி.
as reward, வெகுமதி, வெகுமானம், பரிசில்.
as talent or faculty, அருள், வரம், சாமர்த்தியம், திராணி, புத்தி, விவேகம்.

Gift, *v. a.* வரங்கொடுத்தல்.

Gift'ed-ness, *s.* திராணி, வரமுள்ளதன்மை, தத்துவம்.

Gig, *s.* இருசக்கரக்குதிரைப்பண்டி.
a fiddle, வீணை.
a harpoon, மண்டா.
a ship's boat, கப்பலின்வள்ளம்.
a wanton girl, ஆடுமாலை, பம்பரத்தி, பம்பிடுசிங்கி.

Gī-gan'tic, *a.* பென்னம்பெரிய, மகாபெரிய.

Gig'gle, *s.* கெக்கலி, கெக்களம்.

Gig'gle, *v. n.* கெக்கலிகொட்டல், கெக்கலித்தல், கிளுகிளுத்தல்.

Gig'gler, *s.* கெக்கலிப்போன், கெக்கட்டமிடுவோன், கிளுகிளுப்போன்.

Gild, *v. a.* பொற்பூச்சுப்பூசுதல், பொன்னிறங்கட்டுதல், தங்கம்பூசுதல், தங்கப்புகையூட்டுதல், மஞ்சனிறம்பூசுதல், பிரபையாக்குதல், முலாமிடுதல், பொற்றகடுறுத்தல்.

Gild'er, *s.* பூசுகிறவன், அழுத்துகிறவன்.
as coin, ஓர்நாணயம்.

Gild'ing, *s.* பொற்பூச்சு, தங்கப்புகை, தங்கப்பூச்சு, பொற்புகை, கசிதம், முலாம், மேற்பூச்சு.

Gill, *s.* மச்சங்களின்மூச்சுக்கருவி, பூ,
of a cock, தாடி.

Gill, (*pr.* jill.) அரைக்கால்நாழி, ஓர்முகத்தலளவு.

Gilt, *s.* பொற்பூச்சு, இரணியகசிதம்.

Gim'bal, *s.* காந்தப்பெட்டிதாங்கும்வளையம்.

Gimb'let, Gim'let, *s.* துறப்பணம், தமருசி.

Gim'crack, *s.* விளையாட்டுப்பண்முட்டு.

Gimp, *s.* பட்டுக்கரை, பட்டுநாடா.

Gin, *s.* கண்ணி, சுருக்கு, தடம், பருத்திக்கொட்டைநீக்குமியந்திரம், பொறி.

strong drink, ஓர்வகைமஸ்து, ஓர்வகைச்சாராயம்.
Gin, *v. a.* இயந்திரத்தினாற்கொட்டைநீக்குதல், பொறியேற்றிப்பிடித்தல்.
Gin'ger, *s.* இஞ்சிக்கிழங்கு.
dried, வேர்க்கொம்பு, சுக்கு, நாகரம்.
preserved, இஞ்சிவற்றல், இஞ்சியூறுகாய், இஞ்சியடைகாய்.
Gin'ger-bread, *s* இஞ்சிப்பணிகாரம், இஞ்சிப்பூரிகை, இஞ்சித்தோசை.
Gin'ger-ly, *adv.* சிறப்பாய், சாவதானமாய்.
Ging'ham, *s.* வரிப்புடைவை, கிண்டன்.
Gin'gle, *s.* (*see* Jingle.) கிண்ணென்றசத்தம், கிணீரென்னுமொலி.
Gin'gle, *v.* கிண்கிண்ணெனல், கிண்ணிடுதல், கிணீர்கிணீரெனல்.
Gin'gly-mus, *s* பிணையற்பொருத்து.
Gip'sy, *s.* கள்ளமறவன்.
Gi-raffe', *s.* (*see* Cameleopard.) ஒட்டைச்சிவிங்கி.
Gir'an-dole, *s.* கிளைவிளக்கு.
Gĭrd, *v. a.* அரைக்கட்டுதல், இடைக்கச்சுக்கட்டுதல்.
to bind fast, இறுக்கிக்கட்டுதல்.
on clothes, உடுத்தல்.
as surround, சுற்றிக்கட்டுதல்.
Gĭrd'er, *s.* பிரதானஉத்திரம், பேருத்திரம்.
a satirist, இகழ்ந்தெழுதுவோன், வசைப்பாட்டுக்காரன்.
Gĭrd'le, *s.* அரைக்கட்டு, அரைக்கச்சு, அரைஞாண், இடைக்கட்டு, அரைப்பட்டிகை.
the zodiac, இராசிமண்டலம்.
as inclosure, அடைப்பு.
Gĭrd'le, *v. a.* அரைக்கச்சுக்கட்டுதல், சுற்றிக்கட்டுதல்.
a tree, சுற்றிவரைதல்.
Gīre, *s.* (*see* Gyre.) வட்டம், மண்டலிக்கை.
Gĭrl, *s.* பெண்பிள்ளை, இளம்பெண், சிறுமி, சிறுபெண், கன்னி, சிறுக்கி, வாலை.
Gĭrl'hood, *s.* கன்னிமை.
Gĭrl'ish, *a.* சிறுமிக்குத்தகுமான, வாலைப்பருவப்பெண்ணுக்குரிய, பெண்தன்மையான.
Gĭrl'ish-ly, *adv.* வாலைப்பருவமாய், பெண்தன்மையாய்.
Gĭrt, Gĭrth, *s.* கலணைவார், சேணக்கச்சு, இறுக்குவார்.
a compass measured, சுற்று, சுற்றளவு.
of cloth webbing, &c., கச்சு, இடைக்கச்சு, மேகலை.
Gĭrt, *v. a.* சுற்றிக்கட்டுதல், இடைக்கட்டுதல், இறுக்கிக்கட்டுதல்.
Gist, *s.* நோக்கம், சாரம்.
Give, *v. a.* கொடுத்தல், தருதல், ஈதல், இடுதல், அளித்தல்.
account, கணக்கொப்புவித்தல், கணக்குக்கொடுத்தல்.
advice, புத்திசொல்லுதல்.
birth, ஈனுதல், பெறுதல், வயாவுயிர்த்தல், பிரசவித்தல்.
ear, காதுகொடுத்தல், கேட்டல், செவிகொடுத்தல்.
forth, பிரசித்தம்பண்ணுதல்.
judgment, நீதிதீர்த்தல்.
leave, இடங்கொடுத்தல், விடைகொடுத்தல், உத்தரவுகொடுத்தல்.
one's word, வாக்குச்சொல்லுதல், உத்தரவாதஞ்சொல்லுதல்.
one food, அன்னமிடுதல், அசனங்கொடுத்தல்.
out, பிரசித்தப்படுத்துதல், இளைத்துப்போதல்.
out stores for use, செலவுகொடுத்தல், செலவிடுதல், செலவுபண்ணுதல்.
over, ஒப்புக்கொடுத்தல், ஒப்படைத்தல், ஒப்புவித்தல், விட்டுவிடுதல், தொய்ந்துபோதல்.
pawn or lease, ஒற்றிகொடுத்தல், ஒற்றிவைத்தல், வாடைக்குக்கொடுத்தல்.
place, இடங்கொடுத்தல், விலகுதல், இணங்குதல், ஒற்றுதல்.
profusely, சம்பூரணமாய்க்கொடுத்தல்.
a polish to metals, மின்னப்பிடித்தல், அழுத்தம்பண்ணுதல்.
a title, or authority, பட்டங்கட்டுதல், பட்டஞ்சூட்டுதல்.
a name, பெயர்கொடுத்தல், பெயரிடுதல், நாமஞ்சூட்டுதல்.
testimony, சாட்சியிடுதல், சாட்சிசொல்லுதல்.

suck, பால்கொடுத்தல், ஊட்டவிடுதல்.
up, விட்டுவிடுதல், ஒப்புக்கொடுத்தல்.
way, பின்னிடுதல், விலகுதல், இற்றுப்போதல், விட்டுப்போதல், பின்வாங்குதல்.
in lieu of, ஈடாய்க்கொடுத்தல், பதில்கொடுத்தல், பிரதிகொடுத்தல்.
give and take, பரிமாறுதல், கொடுத்துவாங்குதல், கொடுத்துமாறுதல்.
in marriage, கலியாணஞ்செய்துகொடுத்தல், விவாகம்பண்ணிக்கொடுத்தல்
indulgence, இளக்காரங்கொடுத்தல்.
full measure, நிறையவளத்தல், நிரப்பியளத்தல்.
Giv'er, *s.* கொடையாளன், தியாகி, ஈவோன், ஈகையாளன், உபகாரி.
Gīves, *s.* (*pl.*) (*see* Gyves.) கால்விலங்கு.
Giz'zard, *s.* பட்சியினதுமாங்காயீரல், கல்லீரல்.
to fret the gizzard, அலைக்கழித்தல், தொந்தரைபண்ணுதல்.
Glā'ciāte, *v. n.* பனியாகமாறுதல்.
Glā-ci-ā'tion, *s.* உறைதல், சீதளத்தினால்வைரித்தல், திரளுதல்.
Glā'cier, *s.* ஆலாங்கட்டிக்குவியல், கனோபலத்திரள்.
Glā'cis, *s.* சாய்மானம், சரிவு, சாய்ப்பு.
Glad, *a.* உவப்பான, சந்தோஷமான, மகிழ்ச்சியுள்ள, முகமலர்ந்த.
tidings, நற்செய்தி, நல்விசேஷம்.
Glad'den, *v. a.* சந்தோஷப்படுத்துதல், பிரியப்படுத்துதல், பிரீதியாக்கல், உவப்பித்தல்.
Glāde, *s.* காட்டுவழி, சோலையூடுசெல்லும்வழி, வனத்திடைப்பாதை.
Glā'den, Glā'der, *s.* வாளிலைப்புல்லினம், கோரை.
Glad'i-ā-tor, *s.* சிலம்பக்காரன், பட்டயாப்பியாசி, வாளாச்சிரமி.
Glad-i-a-tō'ri-al, *a.* சிலம்பக்காரனுக்குரிய.
Glad'i-a-ture, *s.* சிலம்பம், சிலம்பத்தொழில்.
Glad'ly, *adv.* சந்தோஷமாய், உவகையாய், பிரியமாய்.
Glad'ness, *s.* சந்தோஷம், மகிழ்ச்சி, ஓகை, உவகை, உவப்பு, களி, களிப்பு.
Glad'sōme, *a.* சந்தோஷமான, பிரியமான, உவப்பான, களிப்பான.
Glad'sōme-ly, *adv.* சந்தோஷமாய், களிப்பாய், பிரியமாய்.
Glad'sōme-ness, *s.* சந்தோஷம், களிப்பு, செந்தளிப்பு, வேடிக்கை.
Glāir, *s.* முட்டையின்வெள்ளைக்கரு, வெள்ளைக்கருப்போன்றபொருள்.
Glānce, *s.* கண்ணோட்டம், பார்வை, கண்ணோக்கம்.
propitious, கிருபாகடாட்சம், கிருபாநேத்திரம்.
Glānce, *v. n.* இமைத்தல், கண்ணோடுதல், கண்ணோக்குதல்.
propitiously, கடைக்கண்செல்லுதல், கடாட்சித்தல்.
to fly off, பட்டுவிலகுதல், முட்டிச்சறுக்குதல், தத்திப்பாய்தல், அனுக்கிப்பாய்தல்.
Glānc'ing-ly, *adv.* கடைக்கண்ணோக்கமாய்.
Gland, *s.* விசைநரம்பு.
Gland'u-lar, *a.* விசைநரம்புக்கடுத்த, விசைநாருள்ள.
Glans, *s.* ஓதம், அண்டவாதம்.
Glāre, *s.* காந்தி, மினுமினுப்பு, சோதி.
piercing look, வெறித்தபார்வை.
Glāre, *v. n.* மின்னுதல், பளீரிடுதல், ஒளிர்தல், கண்ணூன்றிப்பார்த்தல்.
Glār'ing, *a.* மின்னுகிற, துலாம்பரமான, சோதியுள்ள.
evil, கொடியபொல்லாங்கு, துரோகம்.
robbery, கொடியகளவு, சூறை, கொள்ளை.
as heinous, தீங்கான, பொல்லாத, குரூரமான.
Glāss, *s.* பளிங்கு, ஆடி, கண்ணாடி, தருப்பணம்.
blower, பளிங்குப்பாத்திரமூதியுண்டாக்குவோன்.
Glāss, *v. a.* (*see* Glaze.) கண்ணாடிபதிக்குதல்.
Glāss, *a.* பளிங்காலான, பளிங்கினாற்செய்த, பழிங்குபோன்ற.
Glāss'-house, Glāss'-wōrks, *s.* பளிங்குண்டாக்கும்வீடு, பளிங்குப்பாத்திரமுண்டாக்கும்வீடு.

Gläss'i-ness, s. பளிங்குத்தன்மை, பளிங்குபோன்றதன்மை, அழுத்தம்.
Gläss'-like, a. பளிங்குபோன்ற.
Gläss'-met-al, s. உருக்கினபளிங்கு, உருகும்பளிங்கு.
Gläss'-work, s. பளிங்குவேலை.
Gläss'y, a. பளிங்கினாற்செய்த, பளிங்குபோன்ற, அழுத்தமான.
Glāze, v. a. பளிங்குச்சாளரமமைத்தல், பளிங்கிற்குச்சட்டம்பூட்டுதல், அழுத்தமாக்குதல், ஒப்பமாக்குதல்
Glā'zier, s. பளிங்குபதிக்கிறவன், கண்ணாடிபதிக்கிறவன்.
Glāz'ing, s. மண்பாண்டங்களையழுத்திமினுக்கும்பசை.
Glēam, s. மினுக்கும்பூச்சு, பளபளப்பு, துலக்கம், பிரபை, சோதி, பளீரிடுகை, இலங்குகை.
Glēam, v. n. பளபளத்தல், பளீரிடுதல், துலங்குதல், சோதிவீசுதல், பிரபைகாலுதல், மின்னுதல்.
as a decaying or dying light, இலங்குதல், பளீரிடுதல்.
Glēam'ing, s. வெளிச்சங்காலுகை, சோதிவீசுகை, இலங்குகை.
Glēam'y, a. தாரைவீசுகிற, சோதிகாலுகிற, துலக்கமான, பளீரிடுகிற.
Glēan, v. a. விடுபெழம்ஆய்தல், விடுகதிர்பொறுக்குதல்.
paddy in the field, நெல்லுப்பொறுக்குதல்.
Glēan'er, s. விடுகதிர்பொறுக்குவோன், விடுபெழமாய்வோன்.
Glēan'ing, s. விடுகதிர்பொறுக்குகை, பொறுக்கிச்சேர்த்தது, விடுபெழம்.
Glēan'ings, s. (pl.) விடுபெழங்கள், சொரிகதிர், விடுகதிர்.
Glēbe, s. புற்கற்றை, வயல், கோவில்நிலம்.
Glēb'ous, a. புற்கற்றையுள்ள.
Glee, s. களி, சமாளிப்பு, களிப்பு, கொண்டாட்டம்.
Glee'ful, a. களிப்புள்ள, கொண்டாட்டமுள்ள.
Gleen, v. a. சுத்தமாக்குதல், துலக்குதல்.
Gleet, s. புறமேகம், வெட்டை, வெள்ளை, மேகநீர்.
from a sore, மேகக்கிரப்பனீர்.

Gleet, v. n. வெள்ளைபடுதல், மேகநீரூறுதல்.
Glen, s. துருக்கம, சங்கடம், மலைகளுக்கூடானவெளி.
a valley, பள்ளத்தாக்கு.
Glib, a. நழுவலான, வழுக்கலான.
Glib'ly, adv. வழுவலாய், வழுக்கி.
Glib'ness, s. அழுத்தம், நழுவல்.
in speaking, தடக்கின்மை.
Glīde, s. தடையின்றிச்செல்லுகை.
Glīde, v. n. கழிதல், செல்லுதல்.
along, நழுவுதல், நழுவுதல்.
down, இழிதல், சொரிதல், சோர்தல், வழிதல், வழுவுதல், இறங்குதல்.
into, நுழைதல்.
as an arrow, பாய்தல்.
as a thrown stone, சறுக்குதல், தத்துதல்.
Gliff, s. கண்ணெறிகை.
Glīke, s. பரிகாசம், நிந்தை, தீமொழி.
Glim'mer, s. இலங்குகை, மங்கலொளி, துலக்கம், மினுக்கம்.
Glim'mer, v. n. இலங்குதல், துலங்குதல், மினுங்குதல்.
Glim'mer-ing, s. மினுக்கம், மங்கல்ஒளி.
Glimpse, s. கீழ்க்கண், ஆசாட்டம், கண்ணெறி.
of enjoyment, அற்பவின்பம்.
of light, மின்.
Glis'ten, Glis'ter, v. n. மினுங்குதல், பிரகாசித்தல், பளீரிடுதல்.
Glis'ter-ing-ly, adv. துலக்கமாய், பிரகாசமாய், பளபளப்பாய்.
Glit'ter, s. இலங்குகை, துலக்கம், பளபளப்பு, மினுமினுப்பு, சோதி, பிரபை.
Glit'ter, v. n. பளீரிடுதல், பளபளத்தல், துலங்குதல், பளிச்சுப்பளிச்செனல்.
to be showy, வேடிக்கையாயிருத்தல், கண்ணுக்குஇதமாதல்.
Glōat, v. n. கண்பதிதல், கண்வைத்தல்.
Glō'bā-ted, a. உண்டையான, கோளவடிவமான.
Glōbe, s. உண்டை, கோளம், திரளை.
of soldiers, சக்கரயூபம்.
terraqueous, தரை.
Glo-bōse', a. உண்டையான, கோளமான.

Glo-bos'i-ty, *s.* கோளவடிவு, உண்டை வடிவு.

Glob'u-lar, *a.* உண்டைபோன்ற, கோளவடிவான.
shape, திரண்டவடிவு, உண்டைவடிவு, கோளவடிவு.
to become globular, திரளுதல், உண்டையாதல்.

Glob'ule, *s.* சிறுஉருண்டை, தரளவடிவு.
of mercury, இரசமணி.
of water, நீர்த்தூவல், நீர்த்துளி.

Glob'u-lous, } *a.* திரட்சியுள்ள, உண்டையான, திரட்சியான.
Glō'by,

Glom'er-āte, *v. a.* திரட்டுதல், உருட்டல்.

Glom-er-ā'tion, *s.* திரட்டுகை.

Gloom, *s.* இருட்டு, இருள், மந்தாரம், திமிரம், பூங்காரம்.
of mind, மனவிதணம், மனச்சடைவு.

Gloom, *v. n.* இருளுதல், மங்கலாதல், மனங்குருவுதல்.

Gloom'i-ly, *adv.* இருட்டாய், மந்தாரமாய், துக்கப்பாடாய், மனக்கோட்டரவாய்.

Gloom'i-ness, *s.* மந்தாரம், இருள், மனக்கோட்டரவு.
of countenance, முகக்கோட்டரவு, முகவாட்டம்.

Gloom'y, *a.* மந்தாரமான, துக்கப்பாடுள்ள.
countenance, துக்கமுகம், வாட்டரவானமுகம்.
weather, மந்தாரகாலம்.
to be gloomy, as weather, மந்தாரம் போடுதல்.
to be gloomy in countenance, முகங்குருவுதல், கோட்டரவாயிருத்தல்.

Glo-ri-fi-cā'tion, *s.* புகழுகை, துத்தியம்பண்ணுகை, மகிமைப்படுத்துகை, மேன்மைப்படுத்துகை.

Glō'ri-fy, *v. a.* வாழ்த்துதல், இறைஞ்சுதல், வந்தித்தல், மகிமைபண்ணுதல், புகழுதல், துதித்தல், கீர்த்தித்தல்.

Glō'ri-ous, *a.* மகிமையுள்ள, மேன்மையுள்ள, சோதியுள்ள, கீர்த்தியுள்ள.

Glō'ri-ous-ly, *adv.* மகிமையாய், மேன்மையாய்.

Glō'ry, *s.* மகிமை, மாட்சிமை, மாண்பு, கீர்த்தி, பிரதானம், பிரதாபம், கெடி, அலங்காரம், மகிமைப்பிரகாசம்.
as light, பிரபை, பிரகாசம், சோதி, தேசு.

Glō'ry, *v. a.* களித்துப்பாராட்டுதல், பாராட்டுதல், மகிமைபாராட்டுதல், வீம்புபேசுதல், மேன்மைபாராட்டுதல்.

Glō'ry-ing, *s.* மேன்மைபாராட்டு, வீம்பு.

Gloss, *s.* துலக்கம், பளபளப்பு, அழுத்தம், மினுக்கம்.
specious appearance, போலி, வெளிவேஷம்.
as commentary, விருத்தியுரை, வியாக்கியானம்.

Gloss, *v. a.* அலங்கரித்தல், மினுக்குதல், துலக்குதல், மேற்பூச்சுப்பூசுதல்.
as explain, விளக்குதல், உதாரணத்தாற்காட்டல், விரித்துரைத்தல்.
as magnify in description, பருப்பித்துச்சொல்லுதல்.
as palliate, தணித்தல், குறைத்தல், மூடுதல், மறைத்தல்.

Gloss'a-rist, *s.* வியாக்கியானி.

Gloss'a-ry, *s.* திரிசொல்லகராதி, அருஞ்சொல்லகராதி.

Gloss'ed, *a.* மினுக்கின, அழுத்தம்பண்ணப்பட்ட, விளக்கின.

Gloss'er, *s.* வியாக்கியானி, அழுத்தஞ்செய்வோன்.

Gloss'i-ness, *s.* துலக்கம், மினுக்கம், பளபளப்பு, அழுத்தம்.

Gloss-og'ra-pher, *s.* உரைகாரன், உரையாசிரியன்.

Gloss-og'ra-phy, *s.* உரைகட்டுகை, வியாக்கியானம்பண்ணுகை.

Gloss'y, *a.* துலக்கமுள்ள, அழுத்தமுள்ள, பளபளப்பான.

Glot'tis, *s.* தொண்டைக்குழி, குரல்வளை.

Glŏve, *s.* கைப்புட்டில், அத்தகோசம், கையுறை.

Glŏve, *v. a.* கைப்புட்டிலிடுதல், கையுறையிடுதல்.

Glōw, *s.* கடுவேக்காடு, கடுஞ்சூடு.
as brightness, மினுமினுப்பு, பளபளப்பு.
of passion, மனஉக்கிரம், மனக்கொதி.

of countenance, முகக்களை, முகச்சோபிதம், முகச்சோபை, முகச்செந்தளிப்பு.
Glōw, *v. n.* அழலுதல், அனலுதல், எரிதல், கனலல், பிரகாசித்தல், மின்னுதல்.
with delight, அக்களித்தல்.
with love, உருகுதல்.
with zeal, வேகங்கொள்ளுதல்.
Glōw'ing, *a.* பிரகாசமுள்ள, பிரபையுள்ள, சூடுள்ள.
language, அலங்காரவார்த்தை, துலக்கமானபேச்சு.
Glōw'ing-ly, *adv.* பிரபையாய், மாசோதியாய், பிரகாசமாய்.
Glōw'-wŏrm, *s.* மின்மினி, கச்சோதம், கத்தியோதம்.
Glōze, *s.* முகத்துதி, இச்சகம், முகமன்.
Glōze, *v. a.* புகழ்தல், முகமன்கூறுதல், மருட்டுதல்.
Glōz'er, *s.* முகத்துதிபேசுவோன்.
Glūe, *s.* வச்சிரப்பசை, பிசின், ஒட்டு, பற்று, பசை.
Glūe, *v. a.* பசையொட்டுதல், பொருத்துதல், ஒட்டுதல்.
Glū'er, *s.* பசையொட்டுவோன்.
Glū'ey, *a.* பிசுபிசுப்புள்ள, பசையான, ஒட்டுந்தன்மையுள்ள.
Glū'ey-ness, *s.* பிசுபிசுப்பு, பசைத்தன்மை, ஒட்டுந்தன்மை.
Glū-ish, *a.* பசைத்தன்மையுள்ள, ஒட்டுகிற, பசைபோன்ற.
Glum, *a.* முகக்கோட்டரவான, குருவின.
Glūme, *s.* உமி, பதர், கோது, மடல்.
Glum'my, *a.* இருண்ட, மந்தாரமான, மனக்கோட்டரவான.
Glut, *s.* பூரணம், நிறைவு, தெவிட்டு, மேல்மிச்சம்.
as wedge, மரஆப்பு.
Glut, *v.* தெவிட்டச்செய்தல், பெருகப்புசித்தல், மீதூணருந்தல்.
to be glutted, தெவிட்டுதல், தேக்குதல்.
Glū'ten, *s.* கோதுமைமுதலியவற்றின்பசை, இரத்தப்பசை.
Glū'tin-āte, *v. a.* பசையிடுதல், வச்சிரப்பசையாலொட்டுதல்.
Glū-tin-ā'tion, *s.* பசையிடுகை.
Glū'tin-a-tive, *a.* பசைக்கிற, ஒட்டுந்தன்மையுள்ள.
Glū'tin-ous, *a.* பிசுபிசுப்பான, ஒட்டுந்தன்மையுள்ள.
to be glutinous, பிசுபிசுத்தல், பசையாதல்.
Glū'tin-ous-ness, *s.* பசையுள்ளதன்மை, பசைத்தன்மை.
Glut'ton, *s.* பேருணன், களிஊணன், அசனப்பிரியன், பெருந்தீனன்.
a beast, ஓர்மிருகம்.
Glut'ton-īze, *v. n.* தெவிட்டத்தின்னுதல், மேல்மிச்சமாய்த்தின்னுதல்.
Glut'ton-ous, *a.* பேருண்டியுள்ள.
Glut'ton-ous-ly, *adv.* பேருண்டியாய்.
Glut'ton-y, *s.* பேருண்டி, போசனப்பிரியம்.
Glyph'ic, *s.* (*see* Hieroglyphic.) யூகபாஷை.
Glyp'tics, *s.* இரத்தினத்திற்சித்திரிக்கும்வித்தை.
Glyp-to-graph'ic, *a.* இரத்தினத்திற்சித்திரிக்கும்வித்தைக்குரிய.
Glyp-tog'ra-phy, *s.* இரத்தினத்தில்ஒவியசாத்திரம்.
Gnär, Gnärl, *v. n.* உறுமுதல், முறுமுறுத்தல்.
Gnärl'ed, *a.* கணுவுள்ள, முளிநிறைந்த.
Gnash, *v. n.* பல்லைநருமுதல், பற்கறித்தல்.
Gnat, *s.* கொசுகு, கொதுகு, சிற்றீ.
a small thing, அற்பம்.
worm, கொசுகுச்சினை.
Gnaw, *v. a.* கடித்தல், நறுக்குதல், அரித்தல்.
as beetles, ஊதுதல்.
as dogs, கடித்தல், நரும்புதல்.
as hunger, புகைதல். எரிதல்.
as insects on dry grain, உளுக்குதல், வண்டூதுதல்.
as rats, அறுத்தல், அரிதல், கொந்துதல்.
as vermin, அரித்தல், கத்தரித்தல், நன்னுதல்.
as worms in the body, புழுவரித்தல்.
Gnaw'er, *s.* அறுப்பது, அரிவது.
Gnaw'ing, *s.* அரிப்பு, நறுக்குகை.

of hunger, வயிற்றெரிவு, பசித்தாபம்.
Gnō'mon, s. கடிகாரவூசி, கடிகாரசூத்திரவூசி.
in astronomy, சங்கு.
in geometry, வியாச்சதுஷ்டயம்.
Gno-mon'ic, Gno-mon'ic-al, a. } சங்குபோன்ற.
Gno-mon'ics, s. சங்குஸ்தாபனவித்தியை, சாயாவித்தியை.
Im-prō′pri-ā-tor, s. கோவில்மானியத்தைத்தனதாக்கிக்கொள்ளுகிறவன்.
Im-pro-prī′e-ty, s. தகாமை, கூடாமை, அபசாரம், அனுசாரம், முறைகேடு, நியாயக்கேடு, நீதிப்பிழை, ஒவ்வாமை, நீதிக்கேடு.
in grammar, வழு, பிழை.
Im-pros-per′i-ty, s. தரித்திரம், மிடி, இன்மை.
Im-pros′per-ous, a. (see Unprosperous.) தரித்திரமுள்ள, மிடியுள்ள.
Im-pröv-a-bil′i-ty, s. தேற்றமுள்ளதன்மை, தேறுந்தன்மை.
Im-pröv′a-ble, a. தேறக்கூடிய, சீர்ப்படக்கூடிய.
Im-pröve′, v. a. அதிகப்படுத்தல், சீர்ப்படுத்தல், செம்மையாக்கல், மேற்படுத்தல், சிறப்பித்தல், நயப்பித்தல், உயர்த்துதல், அதிகரிப்பித்தல்.
one's circumstances, தலைப்படுத்தல், தழைப்பித்தல், செழிப்பித்தல்.
a house, புதுப்பித்தல், சிறப்பித்தல், அலங்கரிப்பித்தல்.
land, திருத்தல், பண்படுத்துதல், செழிப்பாக்குதல்.
the mind, திருத்துதல், தேற்றுதல், பயிற்றுதல்.
Im-pröve′, v. n. அதிகப்படுதல், அதிகரித்தல், உயர்தல், சீர்ப்படுதல், திருந்துதல், தேறுதல், வசப்படுதல், வளர்தல், முன்னேறுதல்.
in circumstances, ஆட்படுதல், திறங்கொள்ளுதல், தலைப்படுதல், தேறுதல், செழித்தல்.

in health, சகாயமாகுதல், ஆரோக்கியமாகுதல்,சௌக்கியமாதல்.

Im-pröve'ment, *s.* அதிகரிப்பு, நன்மையில்வளர்ச்சி, நயப்பு, திருத்தம், தேற்றம், விருத்தி, கதிப்பு, அனுகூலம், தேர்ச்சி.

in circumstances, திறப்பாடு, தேற்றம்.

in health, &c., சகாயம், சுகவளர்ச்சி, சுகவிருத்தி.

as practical application, படிப்பினை, தெளிவு.

Im-pröv'er, *s.* தேறுகிறவன், தேற்றுகிறவன், நயப்படுத்துவோன்.

Im-prov'i-dence, *s.* சாவதானமின்மை, முன்னெண்ணமை, எச்சரிக்கையின்மை.

Im-prov'i-dent, *a.* சோர்வுள்ள, எச்சரிக்கையில்லாத, பின்னெண்ணிப்பாராத.

Im-prov'i-dent-ly, *adv.* எச்சரிக்கையில்லாமல், எண்ணமின்றி.

Im-prū'dence, *s.* புத்தித்தாழ்ச்சி, ஆராய்வின்மை, அவிவேகம், எழுந்தமானம்.

Im-prū'dent, *a.* புத்தியற்ற, புத்தித்தாழ்ச்சியான, சாவதானமில்லாதிருக்கிற.

Im-prū'dent-ly, *adv.* புத்தியீனமாய், கவலையீனமாய்.

Im'pu-dence, *s.* நாணக்கேடு, வெட்கமின்மை, நிமிர்ச்சி, துணிவு.

Im'pu-dent, *a.* வெட்கங்கெட்ட, துடுக்கான, குறும்பான, எண்ணிக்கையற்ற.

fellow, வெட்கங்கெட்டவன், அசப்பியபாஷிகன்.

Im'pu-dent-ly, *adv.* குறுமுட்டாய், துணிவாய், வெட்கமின்மையாய்.

to speak impudently, அவமரியாதையாய்ப்பேசுதல்.

Im-pu-dic'i-ty, *s.* வெட்கக்கேடு, நாணமின்மை.

Im-pūgn', *v. a.* குறைசொல்லுதல், குற்றஞ்சொல்லுதல், எதிர்த்துப்பேசுதல், மறுத்துச்சொல்லுதல்.

Im-pug-nā'tion, *s.* மறுப்பு, விரோதம், எதிரிடை.

Im-pūgn'er, *s.* மறுக்கிறவன், விரோதி, எதிரி.

Im-pū'is-sance, *s.* பலவீனம், பலட்சயம்.

Im'pulse, *s.* உற்சாகம், முயற்சி, ஊக்கம், ஏவுதல், எழுப்புதல், தூண்டுகை.

of the voice, ஒலிமுயற்சி, உழப்பு.

to a machine, இயந்திரஇயக்கம், இயந்திரத்தின்அருட்சி.

Im-pul'sion, *s.* தாக்கம், இயக்கம், அருட்சி, விசை, உற்சாகம்.

Im-puls'ive, *a.* இயக்குகிற, தாக்குகிற, விசைகொடுக்கிற, எழுப்பிவிடுகிற, அருட்டுகிற.

Im-puls'ive-ly, *adv.* அருட்சியாய், தாக்கமாய், விசையாய், இயக்கமாய்.

Im-pū'ni-ty, *s.* தண்டனைக்குநீங்குகை.

Im-pūre', *a.* சுத்தமில்லாத, சுத்தமற்ற, அசுத்த, அசுசியான, புனிதமற்ற, அசுத்தமான, கறைபிடித்த.

man, களங்கன், அசுத்தன்.

woman, களங்கினி, பொதுஸ்திரி, கற்பில்லாதவள்.

Im-pūre'ly, *adv.* அசுத்தமாய்.

Im-pūre'ness, } *s.* அழுக்கு, அசுத்தம்,
Im-pū'ri-ty, } சுத்தவீனம், அசுசி, மாசு, கறை, களங்கம், தூர்த்தம்.

ceremonial, சூதகம், தீட்டு, ஆசுசம்.

of language, அசப்பியம், தூஷணம், வாக்குத்தோஷம்.

Im-pur'ple, *v. a.* செவப்பாக்குதல், செம்மையூட்டுதல்.

Im-pūt'a-ble, *a.* சார்த்தத்தக்க, சுமத்தத்தக்க, பொறுப்பிக்கத்தக்க.

Im-pūt'a-ble-ness, *s.* சார்த்துகை, சுமத்துகை.

Im-pu-tā'tion, *s.* சாட்டு, சுமத்துகை, சார்த்து.

stigma, இழுக்கு, பழி.

of fault, குற்றச்சாட்டு.

Im-pū'ta-tive, *a.* சாட்டத்தக்க, சார்த்தத்தக்க.

Im-pū'ta-tive-ly, *adv.* சார்த்தி, சாட்டப்படத்தக்கவிதமாய்.

Im-pūte', *v.* சாட்டுதல், சுமத்துதல், சூட்டுதல், பொறுப்பித்தல்.

Im-pūt'er, *s.* சார்த்துவோன், சாட்டுவோன்.

Im-pu-tres'ci-ble, *a.* சிதையாமையுள்ள, அழிக்கப்படாத, பதனழியாத.

In, *prep.* இல், கண், உள், வயின், உழை, அகம்.
time, நாளிலே, நாள்வரையிலே, வேளையில், வேளைக்கு.
the name, பெயரால், பெயரைக்கொண்டு.
in as much, படியால்.
to keep in with, பட்சம்.
the mean time, அப்படியிருக்க, அதுசமயத்தில்.

In-a-bil'i-ty, *s.* திராணியின்மை, இயலாமை, சாமர்த்தியமில்லாமை, ஒண்ணாமை, தகாமை, தளர்ச்சி, பலவறுதி.

In-ac-cess-i-bil'i-ty, *s.* எட்டக்கூடாததன்மை, அணுகக்கூடாததன்மை, சேரக்கூடாததன்மை.

In-ac-cess'i-ble, *a.* விடாத, வாயாத, கிட்டிச்சேரக்கூடாத, அணுகக்கூடாத, எட்டாத.

In-ac-cess'i-bly, *adv.* எட்டாமையாய், கூடாமையாய்.

In-ac'cu-ra-cy, *s.* தவறு, பிழை, தப்பு, இழுக்கு.
in language, வாக்குவழு, சொல்வழு.

In-ac'cu-rate, *a.* தவறான, பிழையான, இழுக்கான.

In-ac'cu-rate-ly, *adv.* பிழையாய், தப்பாய்.

In-ac'tion, *s.* சோம்பு, மந்தம், அசையாநிலை, செயலின்மை.

In-act'ive, *s.* சோம்புள்ள, சோம்பான, மந்தமான, சோர்வான, பதமையான.
man, சோம்பன், சோம்புக்காரன், திமிரன், மந்தன்.
woman, சோம்பி, சோம்புக்காரி.

In-act'ive-ly, *adv.* சோம்பாய், மந்தமாய், சுவரணைக்கேடாய்.

In-act-iv'i-ty, *s.* பதமை, சோம்பு, திமிர், மந்தம்.

In-ad'e-qua-cy, *s.* குறை, தகாமை, தாழ்ச்சி, போதாமை, குறைவு.

In-ad'e-quate, *a.* குறைவான, தாழ்ச்சியான, தகாத, போதாத.

In-ad'e-quate-ly, *adv.* போதாமையாய், குறைவாய், தாழ்ச்சியாய்.

In-ad'e-quate-ness, *s.* குறைவு, தாழ்ச்சி, போதாமை.

In-ad-e-quā'tion, *s.* ஒவ்வாமை, இணங்காமை, தகாமை, போதாமை.

In-ad-mis-si-bil'i-ty, *s.* ஏற்றுக்கொள்ளப்படாமை, அபாத்திரம், ஒவ்வாமை.

In-ad-mis'si-ble, *a.* ஒண்ணாத, இடங்கொடுக்கக்கூடாத, அபாத்திரமான.

In-ad-vert'ence, In-ad-vert'en-cy, *s.* மோசம், தவறு, பிசகு, எண்ணிக்கையின்மை, தப்பு.
of hand, கைமோசம், கைப்பிசகு.
of tongue, வாய்மோசம், நாவழு.

In-ad-vert'ent, *a.* பேணமில்லாத, மோசமான, தவறான, சிந்தனையில்லாத.

In-ad-vert'ent-ly, *adv.* மோசமாய், தவறாய், எண்ணிக்கையின்றி, சாவதானமின்றி, யோசனையின்றி.

In-af-fa-bil'i-ty, *s.* மடமை, பெண்தன்மை, கோழை, மௌனம்.

In-af'fa-ble, *a.* மடமையான, கூச்சமான, மௌனமான.

In-āl'ien-a-ble, *a.* பராதீனப்படாத.

In-āl'ien-a-ble-ness, *s.* பராதீனப்படாமை.

In-āl'ien-a-bly, *adv.* பராதீனமின்றி.

In-al-i-ment'al, *a.* சத்தில்லாத, சாரமற்ற, புஷ்டிகொடாத.

In-am-o-rā'to, *s.* நண்பன், காதலன்.

In-āne', *a.* வெறுமையான, வெளியான.

In-an'i-mate, *a.* அசரமான, உயிரில்லாத, சீவனற்ற.
animate and inanimate, சராசரமான.

In-a-ni'tion, *s.* வெளி, இன்மை, வெறுமை.

In-an'i-ty, *s.* வெறுமை, சூனியம், வெளி, இன்மை.

In-ap-pli-ca-bil'i-ty, *s.* தகுதியின்மை, பொருந்தாமை, ஒவ்வாமை, சேராமை.

In-ap'pli-ca-ble, *a.* தகுதியற்ற, பொருந்தாத, ஒவ்வாத.

In-ap-pli-cā'tion, *s.* கவலையின்மை, அசட்டை.

In-ap'po-site, *a.* இசையாத, பொருந்தாத, அடாத.

In-ap-prē'cia-ble, *a.* விலையளவிடக்கூடாத, விலைமதிக்கக்கூடாத.

In-ap-pre-hen'si-ble, *a.* மட்டிடக்கூடாத, அறியக்கூடாத.

In-ap-pre-hens'ive, *a.* மட்டிட்டறியக்கூடாத.

In-ap-prō'pri-ate, *a.* பொருந்தாத, தகாத.

In-apt'i-tude, *s.* பொருந்தாமை, தகாமை, ஒவ்வாமை.

In-ärch', *v. a.* கிளைகளைஒட்டவைத்தல், கிளைகளைச்சந்துசெய்தல்.

In-ärch'ing, *s.* கிளைகளைஒட்டவைக்கை.

In-är-tic'u-late, *a.* தீர்க்கமற்ற, ஓசையில்லாத, தீர்க்கசுரமற்ற.

sound, எழுத்தில்லாவோசை.

In-är-tic'u-late-ly, *adv.* தீர்க்கமில்லாமல், தீர்க்கமின்றி, தெளிவின்றி, கொன்னையாய்.

In-ar-tic'u-late-ness, *s.* குதலை, தீர்க்கமற்றவுச்சரிப்பு, சொற்றிருத்தமின்மை, கொன்னை, நிரம்பாமென்சொல், மழலைச்சொல்.

In-är-tic-u-lā'tion, *s.* சொற்றீர்க்கமின்மை, தீர்க்கஉச்சாரணமின்மை.

In-är-ti-fi'cial, *a.* கைவேலையல்லாத, செயற்கையற்ற.

In-är-ti-fi'cial-ly, *adv.* கைவேலையில்லாமல்.

In-as-much', *adv.* படியால், ஆகையால், இப்படியிருக்க, ஆனதுகொண்டு, ஆனதன்மையால்.

In-at-ten'-tion, *s.* பராமுகம், அசட்டை, பராக்கு, கவலையின்மை.

as neglect, சோர்வு, அசட்டை, அசதி, பராக்கு, நிர்விசாரம்.

In-at-tent'ive, *a.* தியானமில்லாத, கவலையற்ற, பராக்குள்ள, விளையாட்டுக்குணமுள்ள, அசட்டையான, பராமுகமுள்ள.

In-at-tent'ive-ly, *adv.* அசதியாய், கவலையீனமாய், பராக்காய்.

In-aud'i-ble, *a.* செவிப்புலப் படாத, கேட்கக்கூடாத.

In-aud'i-bly, *adv.* கேளாமையாய், கேட்கக்கூடாமையாய், செவிப்புலப்படாமல்.

In-au'gu-ral, *a.* பட்டஞ்சூட்டுதற்குரிய.

In-au'gu-rāte, *v. a.* பட்டங்கட்டுதல், பட்டங்கொடுத்தல், ஏற்படுத்தல், பட்டாபிஷேகம்பண்ணுதல்.

In-au-gu-rā'tion, *s.* பட்டச்சூட்டு, அபிஷேகம்பண்ணுகை.

In-au'gu-ra-to-ry, *a.* பட்டாபிஷேகத்துக்கடுத்த.

In-au-rā'tion, *s.* பொற்பூச்சுப்பூசுகை, முலாமிடுகை.

In-au-spi'cious, *a.* அமங்கலமான, அசுபமான, சுபவீனமான, சுகப்பிழையான.

signs, துற்குறி, துற்சகுனம், துன்னிமித்தம், உற்பாதம்.

words, அமங்கலமொழி, அசுபவாக்கு, அமங்கலச்சொல்.

In-au-spi'cious-ly, *adv.* துற்சகுனமாய், துற்குறியாய், அமங்கலமாய்.

In-au-spi'cious-ness, *s.* அதிட்டவீனம், துற்சகுனம், சகுனப்பிழை, துற்குறி.

In'born, } *a.* சுய, இயல்பான, சகசமான, உடனிகழும்.
In'bred, }

In-brēath'ed, *a.* சீவசுவாசங்கொடுத்த.

In-cāge', *v. a.* கூட்டிலடைத்தல்.

In-cāge'ment, *s.* கூட்டிலடைக்கை.

In-cal'cu-la-ble, *a.* அளவில்லாத, எண்ணிறந்த.

In-cal'cu-la-bly, *adv.* எல்லையில்லாமல், அளவிறந்தவிதமாய், மட்டில்லாமல்.

In-ca-les'cence, } *s.* வெப்பமேறுகை, வேடைகொள்ளுகை, சூடேறுகை.
In-ca-les'cen-cy, }

In-ca-les'cent, *a.* சூடேறுகிற, வெப்பங்கொள்ளுகிற.

In-can-des'cence, *s.* கடுவேக்காடு, கனிந்தவேக்காடு.

In-can-des'cent, *a.* கொல்லுலையிற்கனியவெந்த, கடுவேக்காடான.

In-cant-ā'tion, *s.* மந்திரோச்சாரணம், செபம்.

In-cant'a-to-ry, *a.* மந்திரிக்கிற, செபிக்கிற.

In-can'ton, *v. a.* மாகாணத்தோடுசேர்த்தல்.

In-cā-pa-bil'i-ty, *s.* இயலாமை, ஏலாமை, கூடாமை, ஒண்ணுமை.

In-cā'pa-ble, *a.* கூடாத, தகுதியற்ற, தகாத, பலம்குறைந்த.

In-ca-pā'cious, *a.* உள்ளடக்கக்கூடாத, சிறிதான, கொள்ளக்கூடாத.

In-ca-pā'cious-ness, *s.* ஒடுக்கம், சிறுமை.

In-ca-pac'i-tāte, *v. a.* ஒடுக்கமாக்குதல், சத்துக்குறைத்தல், தத்துவமழித்தல், தகுதிகெடுத்தல்.

In-ca-pac-i-tā'tion, *s.* சத்துக்கெடுக்கை, சத்துவாங்குகை.

In-ca-pac'i-ty, *s.* தகுதியின்மை, தேற்றமின்மை, சாமர்த்தியமின்மை, சமர்த்துக்குன்றுகை.

In-cär'cer-āte, *v. a.* சிறைச்சாலையிலடைத்தல், காவலில்வைத்தல், மறியலில்வைத்தல்.

In-cär'cer-ate, *a.* சிறைப்பட்ட, மறியற்படுத்தப்பட்ட.

In-cär-cer-ā'tion, *s.* சிறை, சிறையிருப்பு, காவல்.

In-cärn', *v. a.* தசையால்மூடுதல்.

In-cärn'āte, *v.* மாமிசந்தரித்தல், அவதரித்தல், உடம்பெடுத்தல்.

In-cärn'ate, *a.* தேகமுள்ள, அவதரித்த.
to become incarnate, அவதரித்தல், தேகமெடுத்தல்.

In-cärn-ā'tion, *s.* அவதாரம், தேகோற்பத்தி, தேகோற்பவம்.
the ten of Vishnu, தசாவதாரம்.
1. fish, மச்சாவதாரம்.
2. tortoise, கூர்மாவதாரம்.
3. boar, வராகாவதாரம்.
4. man-lion, நரசிங்காவதாரம்.
5. dwarf, வாமனாவதாரம்.
6. Brahmin, பரசிராமாவதாரம்.
7. Rama king, இராமாவதாரம்.
8. Palapatra king, பலபத்திராவதாரம்.
9. Krishna king, கிருஷ்ணாவதாரம்.
10. horse, கற்கியவதாரம்.
in surgery, தசைவளருகை.

In-cärn'a-tive, *s.* தசைவளர்க்கிறதைலம்.

In-cāse', *v. a.* உறையிலிடுதல், மூடுதல்.

In-cau'tious, *a.* சாவதானமற்ற, சோர்வான, கவலையில்லாத, எச்சரிக்கையில்லாத, எண்ணிக்கையில்லாத.

In-cau'tious-ly, *adv.* நேர்ந்தபடி, எழுந்தபடி, கவலையின்றி

In-cau'tious-ness, *s.* விழிப்பின்மை, சாவதானக்குறைவு, பராக்குக்குணம், கவலையின்மை.

In-cend', *v. a.* நெருப்புமூட்டுதல்.

In-cend'i-a-ry, *s.* வீடுசுடுகிறவன்.
as strife maker, சண்டைமூட்டி, கலகமூட்டி, தூண்டிவிடுவோன்.

In-cend'i-a-ry, *a.* வீடுசுடுகிற, தீக்குணமுள்ள, கலகமுள்ள, சண்டைமூட்டுகிற.

In'cense, *s.* சாம்பிராணி, சுகந்ததூபம், பூம்புகை, நறும்புகை.
as prayer or praise, உகந்தவிண்ணப்பம், பிரீதியானதுதி.

In-cense', *v. a.* கோபமெழுப்புதல், சினமூட்டுதல், வன்மம்மூட்டுதல்.
to perfume, தூபங்காட்டல்.

In-cense'ment, *s.* எரிச்சல், பெருங்கோபம், சினம்.

In-cen'sion, *s.* மூட்டுகை, கொளுத்துகை, சுவாலிக்கை.

In-cens'ive, *a.* மூட்டுகிற, சுவாலிக்கிற, கொளுத்துகிற.

In-cens'or, *s.* கோபம்மூட்டுவோன், கோபமெழுப்புவோன்.

In-cens'o-ry, *s.* (*see* Censer.) தூபமுட்டி, தூபக்கலசம்.

In-cen'tive, *s.* தூண்டுகிறது, மூட்டுகிறது, எழுப்புகிறது, நோக்கம், ஏவுவது.

In-cen'tive, *a.* தூண்டுகிற, ஏவுகிற, தைரியப்படுத்துகிற.

In-cep'tion, *s.* துவக்கம், ஆரம்பம், முகனை.

In-cep'tive, *a.* துவக்கமான, முகனையான, ஆரம்பமான.

In-cep'tor, *s.* துவக்குவோன், ஆரம்பிப்போன்.

In-cer-ā'tion, *s.* மெழுகடைத்தல், மெழுகுபூசுதல்.

In-cer'ti-tude, *s.* சந்தேகம், ஐயம், சமுச்சயம்.

In-ces'sant, *a.* இடைவிடாத, ஓயாத, ஒழியாத, தடைப்படாத, நிதமுமுள்ள.
rain, சோனை, சோனைமாரி, விடாமழை.

In-ces′sant-ly, *adv.* ஓயாமையாய், ஓயாமல், இடைவிடாமல்.
In′cest, s. முறைகெட்டபுணர்ச்சி, முறைகெட்டகலப்பு.
In-cest′u-ous, *a.* முறைகெட்டபுணர்ச்சியுள்ள.
marriage, முறையில்லாக்கலியாணம், முறையில்லாவிவாகம்.
In-cest′u-ous-ly, *adv.* முறையற்றபுணர்ச்சியாய்.
In-cest′u-ous-ness, s. முறையில்லாச்சடங்குசெய்கை.
Inch, s. அங்குலம், விரலிடை.
In′cho-ate, *a.* துவங்கின, கையிட்டுக்கொண்ட.
In′cho-ate-ly, *adv.* துவக்கமாய், ஆரம்பமாய், தொடங்கி.
In-cho-ā′tion, s. துவக்கம், ஆரம்பம், கையீடு, தலைவைக்கை.
In-chō′a-tive, *a.* துவக்கமுள்ள, ஆரம்பமுள்ள.
In′ci-dence, s. தற்செயல், இடைச்சம்பவம், இடைச்சங்கதம்.
angle of, கோடி, அட்சகன்னகோடி.
In′ci-dent, s. காரியம், உபகாரியம், தற்செயல், சம்பவம்.
In′ci-dent, *a.* தற்செயலான.
In-ci-dent′al, *a.* தற்செயலான, தற்செயலாய்ச்சம்பவித்த, இடையிலேசம்பவித்த.
In-ci-dent′al-ly, *adv.* தற்செயலாய், இடையிலே.
In-cin′er-āte, *v. a.* சாம்பராக்குதல், நீற்றுதல், பஸ்மமாக்குதல், தகித்தல்.
In-cin-er-ā′tion, s. நீற்றுகை, பஸ்மமாக்குகை.
In-cip′i-en-cy, s. தொடக்கம், ஆரம்பம்.
In-cip′i-ent, *a.* தொடக்கமான, அடியிடுகிற, அடிகோலுகிற, தொடங்குகிற.
In-cīse′, *v. a.* வெட்டுதல், குடைதல்.
In-cis′ion, s. கீறு, குத்து, வெட்டு.
In-cī′sive, *a.* வெட்டுகிற, நறுக்குகிற.
teeth, முன்வாய்ப்பல்.
In-cī′sor, s. முன்வாய்ப்பல்.
In-cī′sor-y, *a.* முன்வாய்ப்பல்லால்நறுக்குகிற.
In-cis′ure, s. வெட்டு.

In-cī′tant, s. தூண்டி, தூண்டுகோல், ஏவுவது.
In-ci-tā′tion, } s. ஏவுகை, எழுப்புவது, எண்ணத்தையியக்குவது, ஏவுங்காரணம், முகாந்திரம், நோக்கம், அருட்சி.
In-cīte′ment, }
In-cīte′, *v. a.* ஏவுதல், எழுப்புதல், மூட்டுதல், தூண்டுதல், இயக்குதல், தைரியப்படுத்தல், முயற்றுதல்.
In-cīt′er, s. தூண்டுகோல், தூண்டுவோன்.
In-civ′il, *a.* (*see* Uncivil.) அவமரியாதையுள்ள, அஞ்சாரமுள்ள.
In-civ′il-i-ty, s. அவமரியாதை, அபகாரம், அஞ்சாரம், துராசாரம்.
In-cläsp′, *v. a.* பதித்தல், இறுக்கிப்பிடித்தல்.
In′cla-vā-ted, *a.* உரமாய்ப்பிடித்த, இறுகப்பிடித்த.
In-clem′en-cy, s. கொடுமை, கடுமை, கடினம், பதமையின்மை, இரக்கமின்மை.
storminess, கொந்தளிப்பு, மழைக்குணம், மந்தாரம், மூய்சாப்பு, சீதளம்.
In-clem′ent, *a.* கொடுமையான, கொந்தளிப்பான, சீதளமான.
In-clīn′a-ble, *a.* சாயக்கூடிய, பிரியப்படக்கூடிய.
In-clin-ā′tion, s. சாய்மானம், சார்பு, சரிவு.
as leaning, ஒருச்சாய்ப்பு, சாய்தல், சாய்வு, சரிவு, சார்பு, சாய்மானம்.
mental, விருப்பம், ஆசை, கருத்து, மனச்சார்பு, இச்சை, மனவாஞ்சை.
of a magnetic needle, வீழ்ச்சி, சாய்வு.
of a planet, சாய்கை.
of a planet's orbit, பரமாபமம்.
In-clīn′a-to-ry, *a.* சாய்வான, சார்பான, ஒருத்தலையான, சாயுந்தன்மையுள்ள.
In-clīne′, *v. a.* சாய்த்தல், சரித்தல், ஒருச்சாய்த்தல், வளைத்தல்.
the ear, செவிசாய்த்தல், செவிகொடுத்தல்.
the head, தலைகுனித்தல், தலைசாய்த்தல், தலைதாழ்த்தல், தலைபணித்தல்.
In-clīne′, *v. n.* சாய்தல், சாடுதல், சரிதல், தாழ்தல்.
to, கருத்துக்கொளல், இணங்குதல்.

In-clīn'ed, *a.* சரிந்த, சாய்ந்த.
plane, சாய்வு, இறக்கம்.

In-clīn'er, *s.* சாய்ந்தசூரியகடிகாரம்.

In-clois'ter, *v.a.* (*see* Cloister.) சன்னியாசிமடத்தில்விடுதல்.

In-clōse', *v. a.* அடைத்தல், சுற்றியடைத்தல், வளைத்தடைத்தல், சூழ்தல்.
in an envelop, உறையிலிடுதல், உள்ளுறவைத்தல்.

In-clōs'ed, *a.* அடைத்த, சூழப்பட்ட, உள்ளடக்கப்பட்ட.

In-clōs'er, *s.* உள்ளடக்குபவன், அடைப்பவன்.

In-clōs'ure, *s.* அடைப்பு, கொல்லை, கூடு, உள்ளடக்கப்பட்டது, உறை.

In-clūde', *v. a.* அடைத்தல், அகப்படுத்தல், உட்படுத்தல், அடக்குதல்.
to be included, அடங்குதல், உட்படுதல்.

In-clū'sion, *s.* உள்ளடக்குகை, உள்ளடங்குகை, அடைப்பு.

In-clū'sive, *a.* அடங்கிய, உள்ளான, மொத்தமான.

In-clū'sive-ly, *adv.* உள்ளடக்கமாய், மொத்தமாய்.

In-co-ag'u-la-ble, *a.* உறையாத, திரளக்கூடாத.

In-cog', *adv.* மறைவாய், கரவாய், மாரீசமாய், ஒளிப்பாய்.

In-cog'i-tan-cy, *s.* புத்திக்குறைவு, எண்ணமில்லாமை, சிந்தனையில்லாமை.

In-cog'i-tant, In-cog'i-ta-tive, *a.* நினையாதிருக்கிற, சிந்தியாத, எண்ணமற்ற.

In-cog'ni-to, *adv.* மறைவாய், இரகசியமாய், ஒளிப்பாய், மாரீசமாய்.

In-cog'ni-za-ble, *a.* அறியக்கூடாத.

In-co-hēr'ence, In-co-hēr'en-cy, *s.* சேராமை, ஒவ்வாமை, பொருந்தாமை, இசையாமை.
as incongruity, பேதம், ஒவ்வாமை, பின்னம்.

In-co-hēr'ent, *a.* பிரிந்த, விட்ட, ஒவ்வாத, இசையாத.

In-co-hēr'ent-ly, *adv.* ஒவ்வாமையாய், இசைவின்மையாய், பேதமாய்.

In-com-bust-i-bil'i-ty, *s.* எரியாமை, தீப்பிடியாமை, தீப்பற்றுமை.

In-com-bust'i-ble, *a.* நெருப்புப்பற்றாத, எரியாத, தகிக்கக்கூடாத.

In-com-bust'i-ble-ness, *s.* எரியாமை, நெருப்புப்பற்றுமை.

In'cōme, *s.* ஆதாயம், ஊதியம், வரத்து, வரவு, வருமானம், உழைப்பு, பேறு.
and expense, வரவுசெலவு.

In'cŏm-ing, *s.* வரவு, இலாபம், ஆதாயம்.

In-com-men-su-ra-bil'i-ty, In-com-men'su-ra-ble-ness, *s.* அளவிலொவ்வாமை.

In-com-men'su-ra-ble, *a.* அளவிலொவ்வாதிருக்கிற.

In-com-mōde', *v. a.* அலைக்கழித்தல், குழப்புதல், அபசாரம்பண்ணுதல், உலைத்தல், தலையடிபண்ணுதல்.

In-com-mō'di-ous, *a.* வசதியற்ற, கலக்கமான, அலைக்கழிவான.

In-com-mō'di-ous-ly, *adv.* வசதியீனமாய், ஒவ்வாமையாய், அலைக்கழிவாய்.

In-com-mō'di-ous-ness, In-com-mod'i-ty, *s.* வசதியின்மை, ஒவ்வாமை, தகாமை.

In-com-mu-ni-ca-bil'i-ty, In-com-mū'ni-ca-ble-ness, *s.* அறிவிக்கக்கூடாததன்மை, சொல்லிக்கொடுக்கக்கூடாததன்மை.

In-com-mū'ni-ca-ble, *a.* சொல்லக்கூடாத, அறிவிக்கக்கூடாத.

In-com-mū'ni-ca-bly, *adv.* சொல்லக்கூடாமையாய்.

In-com-mū'ni-ca-tive, *a.* சொல்லவொண்ணாத.

In-com-mūt-a-bil'i-ty, In-com-mūt'a-ble-ness, *s.* மாற்றக்கூடாததன்மை, வேறாக்கக்கூடாதது.

In-com-mūt'a-ble, *a.* மாற்றக்கூடாத.

In-com-pact', *a.* இறுக்கமில்லாத, நொய்தான, நுகைவான.

In-com'pa-ra-ble, *a.* ஒப்பில்லாத, உவமையற்ற, நிகரற்ற.

In-com'pa-ra-bly, *adv.* ஒப்பின்றி, நிகரில்லாமல்.

In-com-pas'sion-ate, *a.* உருக்கமில்லாத, தயையில்லாத.

In-com-pas'sion-ate-ly, *adv.* உருக்கமின்றி, தயையின்றி.

In-com-pas'sion-ate-ness, *s.* உருக்கமின்மை, இரக்கமின்மை.

In-com-pat-i-bil'i-ty, *s.* ஒவ்வாமை, பிரிவினை, பொருத்தமின்மை, இசைவின்மை.

In-com-pat'i-ble, *a.* ஒவ்வாமையான, பொருந்தாமையான, தகாமையான, தகாத, இசைவில்லாத.

In-com'pe-ten-cy, *s.* குறைவு, இயலாமை, ஏலாமை, கூடாமை, ஒண்ணாமை, தகாமை.

In-com'pe-tent, *a.* குறைவான, தகாத, தாழ்ச்சியுள்ள, இயலாத.
person, இயலாதவன், ஒண்ணாதவன், தகாதவன், ஏலாதவன்.

In-com'pe-tent-ly, *adv.* தாழ்ச்சியாய், தகாமையாய், குறைவாய், இயலாமையாய், ஏலாமையாய்.

In-com-plēte', *a.* குறைவான, எச்சமான, பூரணமற்ற, குறைச்சலான.
to be incomplete, குறைதல், எஞ்சுதல்.

In-com-plēte'ness, *s.* குறைவு, பூரணமின்மை.

In-com-plex', *a.* கலவாத, சங்கரப்படாத, கலப்பில்லாத.

In-com-plī'ance, *s.* இணங்காமை, சம்மதியாமை, இசையாமை.

In-com-plī'ant, *a.* இணங்காத, சம்மதியாத, இடங்கொடாத.

In-com-pos'ite, *a.* தனித்த, கலப்பில்லாத.

Im-com-pos'si-ble, *a.* கூடாத.

In-com-pre-hens-i-bil'i-ty, *s.* அறியக்கூடாமை, மட்டிடக்கூடாமை, புலாதீதம், அறிவுக்கெட்டாமை.

In-com-pre-hens'i-ble, *a.* மட்டிடக்கூடாத, மனோதீதமான.

In-com-pre-hens'i-ble-ness, *s.* புலாதீதம், அப்பிரமேயம்.

In-com-pre-hens'i-bly, *adv.* புலாதீதமாய், மட்டிடக்கூடாமையாய்.

In-com-pre-hens'ive, *a.* மட்டிடக்கூடாத, சுருக்கமான.

In-com-press-i-bil'i-ty, *s.* அமராததன்மை, அமர்த்தப்படாமை.

In-com-press'i-ble, *a.* அமர்த்தக்கூடாத, அமராத, சுருங்காத.

In-con-cēal'a-ble, *a.* மறைக்கப்படக்கூடாத, ஒளிக்கப்படக்கூடாத.

In-con-cēiv'a-ble, *a.* எண்ணத்துக்கெட்டாத, மனதுக்கெட்டாத.
to be inconceivable, எண்ணிறத்தல், மனதுக்கெட்டாதிருத்தல்.

In-con-cēiv'a-ble-ness, *s.* அறியக்கூடாமை, மனதுக்கெட்டாமை.

In-con-cēiv'a-bly, *adv.* புத்திக்கெட்டாமையாய், மனோதீதமாய்.

In-con-cep'ti-ble, *a.* மனதுக்கெட்டாத, மனோதீதமான.

In-con-clū'sive, *a.* முடிவற்ற, தீர்ப்பற்ற, சந்தேகமுள்ள, அசாத்தியமுள்ள.

In-con-clū'sive-ly, *adv.* தீர்ப்பில்லாமையாய், முடிவில்லாமையாய்.

In-con-clū'sive-ness, *s.* போதாநியாயம், தீர்ப்பில்லாமை, அசாத்தியம்.

In-con-coct'ed, *a.* சீரணியாத, கனியாத.

In-con-dens'a-ble, *a.* உட்செலுத்தக்கூடாத, அமுக்கக்கூடாத.

In-con'dite, *a.* முரண்டான, ஒழுங்கற்ற.

In-con-form'i-ty, *s.* ஒவ்வாமை, ஒத்திராமை, இணங்காமை.

In-con-gēal'a-ble, *a.* உறையக்கூடாத.

In-con-ge-ni-al'i-ty, *s.* பொருந்தாமை, பகைமை, ஒவ்வாமை, விபட்சம்.

In-con'gru-ence, In-con-grū'i-ty, *s.* பொருந்தாமை, பேதம், பகைமை, இணக்கமின்மை, ஒவ்வாமை.

In-con'gru-ous, *a.* தகாத, ஒவ்வாத, பொருந்தாத, இசையாத.

In-con'gru-ous-ly, *adv.* தகாமல், இசையாமல், பொருந்தாமல், ஒவ்வாமல்.

In-con-nec'tion, *s.* சம்பந்தமின்மை.

In-con'scion-a-ble, *a.* இதாகிதமற்ற, நன்மைதீமையறியாத.

In-con'se-quence, *s.* முகாந்திரமின்மை, தீர்ப்பின்மை.

In-con-se-quen'tial, *a.* ஒவ்வாத, அற்ப.

In-con-sid'er-a-ble, *a.* அற்பமான, சிறுமையான, சொற்பமான.

In-con-sid'er-a-ble-ness, *s.* அற்பம், சொற்பம்.

In-con-sid'er-a-cy, *s.* சிந்தனையின்மை.

In-con-sid'er-ate, *a.* எண்ணமையான, எண்ணங்கெட்ட, சிந்தனையில்லாத.

In-con-sid'er-ate-ly, *adv.* எழுந்தபடி, நேர்ந்தபடி, எண்ணமல், கவலையின்றி.

In-con-sid'er-āte-ness, *s.* எழுந்தமான ம், எண்ணிக்கையின்மை.

In-con-sid-er-ā'tion, *s.* தியானமின்மை, புத்தியீனம், யோசனையின்மை, உணர்ச்சியின்மை, ஆய்ந்தறியாமை.

In-con-sist'ence, In-con-sist'en-cy, *s.* ஒத்திராமை, ஒவ்வாமை, பொருந்தாமை, ஏகதேசம், பேதம், இசையாமை, இணங்காமை.

In-con-sist'ent, *a.* ஒவ்வாத, இசையாத, இணங்காத, விபட்சமான, பொருந்தாத, ஒண்ணாத.

In-con-sist'ent-ly, *adv.* ஒவ்வாமையாய், இசையாமல், பொருந்தாமல்.

In-con-sōl'a-ble, *a.* ஆறுதலுக்கமான, அதிவிசாரமான, தணியாதவியாகுலமுள்ள, ஆற்றொண்ணாத.

In-con-sōl'a-bly, *adv.* அதிவிசாரமாய், ஆற்றொணாமையாய்.

In-con'so-nan-cy, *s.* இசையிலொவ்வாமை.

In-con-spic'u-ous, *a.* தெளிவில்லாத, துலக்கமில்லாத.

In-con'stan-cy, *s.* நிலைநில்லாமை, உறுதியின்மை, நிலையாமை.

In-con'stant, *a.* நிலையாமையான, நிலையற்ற, உறுதியற்ற, அசைவுள்ள.

In-con'stant-ly, *adv.* நிலையின்றி, அசைவுள்ளதாய்.

In-con-sūm'a-ble, *a.* அழியாத, நிருநாசமான, தகிக்கப்படக்கூடாத.

In-con-test'a-ble, *a.* பிசகுசொல்லக்கூடாத, எதிர்ப்பேசக்கூடாத, தெளிவான, சந்தேகமில்லாத.

In-con-test'a-bly, *adv.* எதிர்ப்பேசக்கூடாதவிதமாய், தெளிவாய்.

In-con-tig'u-ous, *a.* புறநீங்கலான, விபட்சமான, தொலைத்த, தூரமான.

In-con'ti-nence, In-con'ti-nen-cy, *s.* இச்சைஅடக்கமின்மை, விரத்தமின்மை, விரகதாபம்.

In-con'ti-nent, *a.* அடக்கமற்ற, கட்டுப்பாடில்லாத, தூர்த்தத்தனமான.

Incon'ti-nent-ly, *adv.* அடங்காமை யாய், விரத்தமின்றி.

In-con-trōl'la-ble, *a.* ஆளப்படக்கூடாத, அடக்கக்கூடாத.

In-con-trōl'la-bly, *adv.* ஆளப்படக்கூடாமல், அடங்காமையாய்.

In-con-tro-vert'i-ble, *a.* புரட்டக்கூடாத, போக்கடிக்கக்கூடாத, எதிருரைக்கக்கூடாத, ஆட்சேபிக்கக்கூடாத.

In-con-tro-vert'i-bly, *adv.* மாற்றக்கூடாதவிதமாய், பிரதிவாதமில்லாமல்.

In-con-vēn'ience, In-con-vēn'ien-cy, *s.* தகாமை, வசதியின்மை, ஒவ்வாமை, சாவகாசமின்மை.

In-con-vēn'ient, *a.* தகாத, வசதியற்ற, சமயமில்லாத, சாவகாசமில்லாத.

In-con-vēn'ient-ly, *adv.* வசதியீனமாய், தொந்தரவாய், சாவகாசமில்லாமல்.

In-con-vers'a-ble, *a.* கூச்சமுள்ள, கோழையுள்ள.

In-con-vert'i-ble, *a.* மாற்றக்கூடாத.

In-con-vin'ci-ble, *a.* உணர்த்தக்கூடாத, உணரமாட்டாத, ஒப்பனையெடுத்துக்கொள்ளாத, சம்மதியாத.

In-con-vin'ci-bly, *adv.* உணர்த்தக்கூடாதவிதமாய், சம்மதிக்கக்கூடாதவிதமாய், ஒம்படக்கூடாதவிதமாய்.

In-cor'po-ral, *a.* (*see* Incorporeal.) தேகமில்லாத, அரூபமான, சித்தான.

In-cor-po-ral'i-ty, *s*, சடமின்மை, சித்து.

In-cor'po-ral-ly, *adv.* சடமின்றி, ஆவியாய், சித்தாய், அரூபமாய்.

In-cor'po-rāte, *v. a.* பொருத்துதல், திரட்டுதல், கலத்தல், கூட்டுதல், சேர்த்தல்.
to be incorporated, சேர்தல், திரளுதல், கூடுதல், கலத்தல்.

In-cor'po-rate, *a.* கூட்டப்பட்ட, இணைந்த, பந்துக்கட்டான.
body, ஒப்பந்தகாரர்.

In-cor-po-rā'tion, *s.* கூட்டம், சங்கம், ஒப்பந்தம், இசைவு, சம்பந்தம்.
act or charter of incorporation, தத்துவப்பட்டயம், தத்துவசாதனம்.

In-cor-pō're-al, *a.* அசரீர, அரூப, சித்தான, சடமற்ற.
being, அசரீரி, சித்து, சித்துப்பொருள்.

In-cor-pō're-al-ly, *adv.* சடமின்றி, ஆவியாய், அரூபியாய்.

In-cor-po-rē'i-ty, *s.* அரூபம், சித்து.

In-cor-rect', *a.* பிழையான, தப்பான, திருத்தமில்லாத, உண்மையற்ற, நியாயமற்ற.

In-cor-rect'ly, *adv.* பிழையாய் தப்பாய், பொய்யாய், நியாயவீனமாய்.
In-cor-rect'ness, *s.* பிழை, தப்பு, நியாயவீனம், தவறு.
In-cor'ri-gi-ble-ness, In-cor-ri-gi-bil'i-ty, *s.* சீர்ப்படாமை; திருந்தாமை, கெட்டதன்மை.
In-cor'ri-gi-ble, *a.* அதிகேடான, திருத்தப்படக்கூடாத.
In-cor'ri-gi-bly, *adv.* திருத்தப்படக்கூடாமையாய், கேடாய்.
In-cor-rupt', In-cor-rupt'ed, *a.* அழியாமையான, அழிவில்லாத, சுத்தமான, பழுதில்லாத, நிருமலமான.
In-cor-rupt'i-ble, *a.* சிதைவுறாத, பழுதாகாத, அழிவில்லாத.
upright, நீதிநேர்மையுள்ள, நிதானமான.
In-cor-rupt'i-ble-ness, In-cor-rup'tion, *s.* அழிவின்மை, மாசுபடாமை, கெடாததன்மை, பாழ்படாமை.
In-cor-rupt'ive, *a.* அழியாத, கெடாத, பாழ்படாத.
In-cor-rupt'ness, *s.* அழிவின்மை, மனச்சுத்தம், நாணயம், உண்மை.
In-cras'sāte, *v. a.* தடிக்கப்பண்ணுதல், பலப்பித்தல், கடுத்தமாக்குதல், கனமாக்குதல்.
In-cras'sate, *a.* தடித்த, கனமான.
In-cras-sā'tion, *s.* கடுத்தமாக்குகை, பலப்பிப்பு, தடிக்கப்பண்ணுகை.
In-cras'sa-tive, *a.* தடிப்பாக்குகிற.
In-crēase', *s.* வளர்ச்சி, மிகுதி, பெருக்கம், அதிகரிப்பு, கதிப்பு, உயர்வு, வர்த்திப்பு, தேற்றம்.
In-crēase', *v. a.* அதிகப்படுத்துதல், பெருக்குதல், உயர்த்தல், கூட்டுதல், ஏற்றுதல், விருத்தியாக்கல்.
In-crēase', *v. n.* அதிகப்படுதல், அதிகரித்தல், பெருகுதல், உயர்தல், மிஞ்சுதல், வர்த்தித்தல், ஓங்குதல், கதித்தல், கூடுதல், தழைத்தல்.
by propagation, பல்குதல், மல்குதல், வர்த்தித்தல், பெருகுதல், மிகுத்தல்.
In-crēas'er, *s.* அதிகப்படுத்துவோன், விருத்தியாக்குவோன், விருத்தியாகுவோன்.

In-crēas'ing, *s.* விருத்தியாகிற, வளருகிற, அதிகப்படுகிற.
In'cre-āte, In'cre-ā-ted, *a.* (*see* Uncreated.) சிருட்டிக்கப்படாத, சுயம்பாயிருக்கிற.
In-cred-i-bil'i-ty, *s.* நம்பப்படக்கூடாததன்மை, விசுவாசிக்கப்படக்கூடாததன்மை.
In-cred'i-ble, *a.* நம்பப்படக்கூடாத.
temerity, எண்ணுத்துணிகரம், எடுத்தடிமடக்கு.
In-cred'i-bly, *adv.* நம்பப்படக்கூடாமையாய்.
In-cre-dū'li-ty, In-cred'u-lous-ness, *s.* ஐயம், நம்பிக்கையீனம், சமுச்சயம், சந்தேகம்.
In-cred'u-lous, *a.* நம்பிக்கையற்ற, சந்தேகமான, சமுச்சயமான.
In'cre-ment, *s.* பெருக்கம், வளர்ச்சி, மலிவு, பலுகல், பொலிவு, அநுபந்தம்.
In-cres'cent, *a.* வளருகிற, அதிகப்படுகிற, தழைத்த.
In-crust', *v.* கிட்டத்தால்மூடுதல், கிட்டம்பிடித்தல், களங்கம்பிடித்தல், ஆடைபற்றுதல்.
as a sore, அயறுபிடித்தல்.
In-crust'āte, *v. a.* ஆடைபிடித்தல், கிட்டம்பிடித்தல்.
In-crust-ā'tion, *s.* கிட்டம், ஆடை, அயறு.
In'cu-bāte, *v.n.* அடைகாத்தல், அடைகிடத்தல், அபயங்காத்தல்.
In-cu-bā'tion, *s.* அடைகாப்பு, அடைகிடக்கை, அபயம்.
In'cu-bus, *s.* அமுக்கிப்பேய், அமுக்கன்.
In-cul'cāte, *v. a.* படிப்பித்தல், கற்பித்தல், உணர்த்தல்.
In-cul-cā'tion, *s.* படிப்பிப்பு, போதனை, கற்பிப்பு.
In-cul'pa-ble, *a.* குற்றமில்லாத, குற்றச்சாட்டில்லாத.
In-cul'pa-ble-ness, *s.* குற்றமின்மை, குற்றச்சாட்டின்மை.
In-cul'pa-bly, *adv.* குற்றமின்றி, குற்றச்சாட்டின்றி.
In-cul'pāte, *v. a.* குற்றஞ்சாட்டுதல், குற்றஞ்சார்த்துதல்.
In-cul'pā-to-ry, *s.* குற்றஞ்சார்த்துகிற.

In-cum'ben-cy, *s.* படுக்கை, சாய்வு, ஆட்சியிலிருக்கை.
as resting, பொறுப்பு, தாக்கம், சுமை, பாரம், கடமை.
as possession, ஆட்சி.
In-cum'bent, *s.* கடனாளி, உரித்தாளி, பொறுப்பாளி, உத்தரவாதி, ஆட்சிக்காரன்.
In-cum'bent, *a.* கடமையான, பொறுப்பான, உரிமையான, மேல்விழுந்த.
In-cum'ber, *v. a.* சுமத்துதல், பொறுப்பித்தல், சிக்குப்பண்ணுதல், தொந்தரைப்படுத்தல்.
to be incumbered, சுமத்தல், சுமருதல், தொந்தரைப்படுதல்.
In-cum'brance, *s.* சுமை, பொறுப்பு, தடை, பிசகு, தொந்தரை, சிக்கு.
In-cum'brous, *a.* தொந்தரையான, பாரமான.
In-cur', *v. a.* வருவித்தல், உண்டாக்குதல், எதுவாக்குதல், உரித்தாக்கிக்கொள்ளுதல், உள்ளாக்குதல்.
displeasure, வெறுப்படைதல், பழிப்படுதல்.
expense, செலவுபிடித்தல், செலவுபொறுத்தல்.
responsibility, உத்தரவாதியாக்கல், பொறுப்புக்கொள்ளல்.
to be incurred, சுமத்தல், பொறுத்தல்.
In-cūr-a-bil'i-ty, *s.* மாற்றக்கூடாமை, சுகப்படாமை, சீர்ப்படக்கூடாமை.
In-cūr'a-ble, *a.* சுகப்படக்கூடாத, சொஸ்தமாக்கக்கூடாத, பரிகரிக்கக்கூடாத, சீர்ப்படாத.
disease, தீராவியாதி, தீராப்பிணி, மாறுநோய்.
In-cūr'a-ble-ness, *s.* சுகப்படாமை, சொஸ்தப்படாமை.
In-cūr'a-bly, *adv.* சுகப்படாமையாய், சுகப்படுத்தக்கூடாமல்.
In-cu-ri-os'i-ty, *s.* நூதனவீனம், பராக்கு.
In-cū'ri-ous, *a.* நூதனமற்ற, பராக்குள்ள, கவலையற்ற.
In-cū'ri-ous-ly, *adv.* பராக்காய், கவலையின்றி.
In-cū'ri-ous-ness, *s.* பராக்கு.

In-cur'sion, *s.* பகைவர்நாட்டுக்குட்செல்லுகை, நாட்டுக்குட்பகைவர்செல்லுகை, கொள்ளையாடப்புகுதல், சூறையாடநகர்பிரவேசித்தல்.
In-curv'āte, *v. a.* வளைத்தல், வில்வளைவாக்கல், தனுவடிவாக்கல்.
In-curv-ā'tion, / In-curv'a-ture, *s.* வில்வளைவு, உள்வளைவு, கவிப்பு, குனிப்பு, வளைப்பு.
In-curve', *v. a.* வளைத்தல், வில்வளைவாக்கல்.
In-curv'i-ty, *s.* வில்வளைவு, வளைவு.
In-därt', *v. a.* உருவப்பாய்ச்சுதல், உள்ளிடுதல்.
In-debt', *v. a.* கடன்படுதல்.
In-debt'ed, *part.* கடன்பட்ட.
In-debt'ed-ness, *s.* கடமை, இருணத்துவம்.
In-dē'cen-cy, *s.* சேட்டை, தகாதநடை, அவமரியாதை, தகாமை, துராசாரம், வெட்கக்கேடு, அபசாரம்.
In-dē'cent, *a.* துராசாரமுள்ள, தப்பறையான, சேட்டையுள்ள.
exposure, கொச்சைத்தனம், கெட்டபரிமாற்றம், துராசாரம்.
act, கொச்சைத்தொழில், கெட்டசெய்கை.
language, இடக்கர், அசப்பியம், தூஷணவார்த்தை.
In-dē'cent-ly, *adv.* அவமரியாதையாய், அவலட்சணமாய், வெட்கக்கேடாய்.
In-de-cid'u-ous, *a.* வாடாத, வாடிவிழாத.
In-dec'i-ma-ble, *a.* பத்திலொன்றுகடமைகொடாத.
In-de-cis'ion, *s.* தீர்ப்பின்மை, இருமனம், சந்தேகம்.
In-de-cī'sive, *a.* தீர்ப்பற்ற, தீர்மானமற்ற, இருமனமுள்ள, சந்தேகமான.
In-de-cī'sive-ly, *adv.* தீர்ப்பின்றி, சந்தேகமாய், இருமனமாய்.
In-de-cī'sive-ness, *s.* தீர்ப்பின்மை, தீர்மானமின்மை.
In-de-clīn'a-ble, *a.* வேற்றுமையுருபேற்றப்படாத.
In-de-clīn'a-bly, *adv.* வேற்றுமையுருபின்றி.

In-de-cō'rous, *a.* அஞுசாரமுள்ள, அவமரியாதையுள்ள, நாகரீகமில்லாத.
In-de-cō'rous-ly, *adv.* அஞுசாரமாய், ஒழுங்கீனமாய், அவமரியாதையாய்.
In-de-cō'rous-ness, } *s.* அஞுசாரம், தகாமை, முறையின்மை, ஒழுங்கின்மை.
In-de-cō'rum,
In-deed', *adv.* மெய்யாக, உண்மையாக, நிச்சயமாக.
as an exclamation, ஓகோ, மெய்தாஞு.
In-de-fat'i-ga-ble, *a.* இளைப்பில்லாத, தொய்வில்லாத, சலியாமையான, சோர்வில்லாத, சாக்கிரதையான.
effort, விடாமுயற்சி.
energy, சோர்வில்லாமுயற்சி, சலியாமுயற்சி, தாளாண்மை.
perseverance, விடாப்பிடி, தொடர்ந்தேற்றி.
In-de-fat'i-ga-ble-ness, *s.* சோர்வில்லாமை, சலியாமை.
In-de-fat'i-ga-bly, *adv.* சோர்வின்றி, தொய்வின்றி, சலியாமல்.
In-de-fēas-i-bil'i-ty, *s.* தோற்கக்கூடாத தன்மை, சித்தியுள்ளதன்மை.
In-de-fēas'i-ble, *a.* சூனியமாக்கக்கூடாத, சபலத்துவமான, அவமாக்கக்கூடாத.
In-de-fēas'i-bly, *adv.* அவமாக்கக்கூடாதவிதமாய்.
In-de-fect-i-bil'i-ty, *s.* குறைவின்மை, நிறைவு, பூர்த்தி.
In-de-fect'i-ble, *a.* குறையாத, தவருத, குன்ருத.
In-de-fect'ive, *a.* பூரணமான, குறைவில்லாத, நிறைவுள்ள.
In-de-fens-i-bil'i-ty, *s.* காக்கக்கூடாததன்மை, நிலைப்படக்கூடாததன்மை.
In-de-fens'i-ble, *a.* பாலிக்கக்கூடாத, நிலைப்படக்கூடாத, காக்கக்கூடாத.
In-de-fens'ive, *a.* காவலில்லாத.
In-de-fi'cient, *a.* நிறைவுள்ள, குறைவற்ற, பூர்த்தியான.
In-de-fīn'ā-ble, *a.* பயன்சொல்லக்கூடாத, அருத்தஞ்சொல்லக்கூடாத, அரும்பொருளான.
In-def'in-ite, *a.* நிசமற்ற, எல்லையற்ற, திட்டமற்ற, நோக்கமில்லாத.
article, சாமானியவிடைச்சொல், சுட்டிலியடை.
pronouns, சுட்டாப்பிரதிப்பெயர்.
In-def'in-ite-ly, *adv.* ஒன்றையுஞ்சுட்டாமல், நோக்கமின்றி, நிச்சயமின்றி.
In-def'in-ite-ness, *s.* வரையறையின்மை, நிலைபரமின்மை, நோக்கமின்மை, குறிப்பின்மை.
In-de-lib'er-ate, *a.* சிந்தியாத, எழுந்தமானமுள்ள.
In-del-i-bil'i-ty, *s.* அழிக்கக்கூடாமை, துடைக்கக்கூடாமை.
In-del'i-ble, *a.* அழிக்கப்படக்கூடாத, மங்காத, துடைக்கக்கூடாத.
In-del'i-bly, *adv.* துடைக்கப்படக்கூடாமையாய், மங்காமல்.
In-del'i-ca-cy, *s.* நாணக்கேடு, அஞுசாரம், சுகிர்தமின்மை, கொச்சைத்தனம்.
In-del'i-cate, *a.* கொச்சையான, அவமரியாதையான, கூச்சமற்ற, நாகரீகமில்லாத.
In-del'i-cate-ly, *adv.* அவமரியாதையாய், நாகரீகமின்றி.
In-dem-ni-fi-cā'tion, *s.* உத்தரவாதம்பண்ணுகை, பிணைப்படுகை, பாத்தியமாகை.
letter of, பாத்தியசாதனம், பிணையுறுதி
In-dem'ni-fy, *v. a.* உத்தரவாதம்பண்ணுதல், ஈடுகட்டுதல், ஈடுபண்ணுதல்.
for damage, சேதமிறுத்தல், நட்டமிறுத்தல்.
In-dem'ni-ty, *s.* உத்தரவாதம், பிணை, ஈடு, பாத்தியம்.
In-de-mon'stra-ble, *a.* உரூபிக்கக்கூடாத, மெய்ப்பிக்கக்கூடாத, சாதிக்கக்கூடாத, சாத்தியமற்ற.
In-den-i-zā'tion, *s.* தேசசுதந்தரபாத்தியஞக்குகை, தேசசுதந்திரசாதனம்.
In-den'i-zen, *v. a.* தேசசுதந்தரபாத்தியஞக்குதல்.
In-dent', *s.* வெட்டு, முத்திரைச்சுவடு.
In-dent', *v. a.* கருக்குக்கொத்துதல், அரங்கொத்துதல்.
to bind out, ஒப்பந்தமுறிகொடுத்தல், உடன்பிடிக்கைச்சீட்டுக்கொடுத்தல்.
In-dent-ā'tion, *s.* பதிப்பு, பதிவு, பல், கருக்கு.
In-dent'ure, *s.* ஒப்பந்தச்சீட்டு.

In-de-pend'ence, } s. சுயாதீனம், தன்
In-de-pend'en-cy, } னிட்டம், சுயம்பு.
In-de-pend'ent, *a.* சுயாதீனமான, தன்னிட்டமான, சுயம்பான.
man, சுயாதீனன், நடுவுநிலையுள்ளவன்
sovereign, ஏகசக்கிராதிபதி, சுயாதிபதி, ஏகாதிபதி.
sovereignty, சுயாதிபத்தியம்.
In-de-pend'ent-ly, *adv.* தனியே, சுயாதீனமாய், இட்டமாய், தானாய்.
In-de-prīv'a-ble, *a.* அற்றுப்போகப்பண்ணக்கூடாத.
In-de-scrīb'a-ble, *a.* சொல்லமுடியாத, சொல்லியடங்காத, விபரிக்கக்கூடாத, சொல்வதற்கரிய.
In-de-sert', *s.* அபாத்திரம், தகுதியீனம், தகவின்மை.
In-de-struct-i-bil'i-ty, *s.* அழிவின்மை, நாசமின்மை.
In-de-struct'i-ble, *a.* அழியாமையான, கேடின்மையான, நிருநாசமான.
In-de-term'in-a-ble, *a.* நிதானிக்கக்கூடாத, குறிக்கக்கூடாத, நிச்சயப்படுத்தக்கூடாத.
In-de-term'in-ate, *a.* இன்னதென்றுகுறியாத, இவ்வளவென்றுகாட்டாத, மதிக்கப்படாத, நிச்சயமற்ற.
In-de-term'in-ate-ly, *adv.* நிதானமில்லாமல், சமுசயமாய், அசாத்தியமாய்.
In-de-term'in-ate-ness, } s. வரையறையின்மை, தீர்ப்பின்மை, நிதானமின்மை.
In-de-term-in-ā'tion, }
In-de-term'in-ed, *a.* நிதானியாத, நிச்சயப்படுத்தாத.
In-de-vō'tion, *s.* அவபத்தி.
In-de-vout', *a.* அவபத்தியுள்ள.
In-de-vout'ly, *adv.* அவபத்தியாய்.
In'dex, *s.* அடையாளம், குறி, அட்டவணை, பெயர்வழி, இடாப்பு.
alphabetical, அகராதியட்டவணை.
as exponent, வர்க்கங்கனம்முதலியவற்றினறிகுறியெண்.
of a balance, தராசுநா.
as gnomon, கடிகாரவூசி, மாத்திரைக்கம்பி.
for trying gold, உரையாணி, மாற்றறியாணி.

In'dian, *s.* இந்தியன், இந்துதேயத்தான்.
In'dian-corn, *s.* (*see* Maize.) சோளம், சோளன்.
In'dian-ink, *s.* மைக்கட்டி.
In'dia-rub'ber, *s.* துடைக்கும்பிசின், அட்சரமார்ச்சனி, வங்கமார்ச்சனி.
In'di-cant, *a.* காண்பிக்கிற, வெளிப்படுத்துகிற, குறிக்கிற.
In'di-cāte, *v. a.* குறித்தல், காட்டுதல், குறிப்புக்காட்டுதல், சுட்டுதல், வெளிப்படுத்தல்.
In-di-cā'tion, *s.* குறிப்பு, அடையாளம், வெளிப்படுத்துகை, சுட்டு.
as omen, நிமித்தம், சகுனம்.
In-dic'a-tive, *a.* காட்டுகிற, குறிக்கிற, சுட்டுகிற.
mood, எதிர்மறையாயும்உடம்பாடாயும்வருந்தெரிநிலைவினைமுற்று.
In-dic'a-tive-ly, *adv.* கருதி, குறித்து, சுட்டி.
In'di-cā-tor, *s.* காட்டுவது, காட்டுவோன், சுட்டுவது.
In'di-ca-to-ry, *a.* காட்டத்தக்க, அறிவிக்கத்தக்க, சுட்டுகிற.
In-dīct', *v. a.* குற்றம்பாரித்தல், நேரஞ்சுமத்துதல்.
In-dīct'a-ble, *a.* குற்றம்பாரிக்கத்தக்க.
In-dīct-ee', *s.* எதிரி, பிரதிவாதி.
In-dīct'er, *s.* முறைப்படுகிறவன், வழக்குத்தொடருகிறவன், வாதி.
In-dic'tion, *s.* கூறுகை, பிரசித்தம்.
in chronology, பதினைந்துவருடக்காலவட்டம், பஞ்சாதசவற்சரம்.
In-dic'tive, *a.* கூறப்பட்ட, பிரசித்தம்பண்ணப்பட்ட.
In-dīct'ment, *s.* முறைப்பாட்டுக்கடுதாசி, குற்றச்சாட்டுக்கடுதாசி.
In-dif'fer-ence, *s.* ஏகபோகம், விருப்புவெறுப்பின்மை.
In-dif'fer-ent, *a.* ஏகபோகமான, சமநிலையான.
In-dif'fer-ent-ly, *adv.* ஏகபோகமாய்.
In'di-gence, *s.* வறுமை, தரித்திரம், குறைச்சல்.
In'di-gene, *s.* சுதேசி, சுயதேசத்தான்.
In-dig'en-ous, *a.* சுயதேசஉற்பத்தியான.

In'di-gent, *a.* எளிய, தரித்திரமான, வறுமைப்பட்ட, ஆதரவில்லாத.
person, ஏழை, தரித்திரன், மிடியன்.
In-di-gest'ed, *a.* சமியாத, சீரணியாத.
not methodised, ஒழுங்கில்லாத, ஒழுங்குப்படுத்தாத.
In-di-gest'i-ble, *a.* சீரணிக்கக்கூடாத, அசீரணமான, சீரணப்படமாட்டாத.
In-di-ges'tion, *s.* சமியாமை, அசீரணம், செரியாமை.
from heat in the system, கொதிமந்தம்.
In-dig'it-āte, *v. a.* சுட்டிக்காட்டுதல்.
In-dig'nant, *a.* எரிவுள்ள, எரிச்சலுள்ள, கோபமுள்ள, வெறுப்புள்ள.
to be indignant, எரிதல், காந்துதல், கோபித்தல்.
In-dig'nant-ly, *adv.* எரிச்சலாய், கோபமாய், கடுமையாய்.
In-dig-nā'tion, *s.* எரிச்சல், கோபம், மனஸ்தாபம்.
In-dig'ni-ty, *s.* இகழ்ச்சி, நிந்தனை, அபசாரம், அவமதிப்பு, அனுசாரம்.
In'di-go, *s.* நீலம், பூநீலம்.
plant, அவுரி, அவிரி, நீலி.
In'di-rect, *a.* குறுக்கடியான, நேரின்மையான, தப்பிதமான.
answer, குறுக்குமறுமொழி, குறுக்குவிடை.
proceeding, குறுக்குவழியாய்நடந்த சரிதம்.
tax, பண்டபதார்த்தஇறை.
In-di-rec'tion, *s.* குறுக்குவழி.
In-di-rect'ly, *adv.* குறுக்கடியாய், ஒழுங்கின்மையாய்.
In-di-rect'ness, *s.* நேரின்மை, நிதார்த்தக்கேடு, நீதிகீனம்.
In-dis-cern'i-ble, *a.* வகையறுக்கக்கூடாத, பகுத்துணர்தற்கரிய, அறியக்கூடாத.
In-dis-cern'i-ble-ness, *s.* வகையறுக்கக்கூடாமை, அளவிடக்கூடாமை, அறியொணுமை.
In-dis-cern'i-bly, *adv.* வகையறுக்கக்கூடாமல், அறியக்கூடாதவிதமாய்.
In-dis-cerp-ti-bil'i-ty, *s.* அழியாமை, பிரியாமை, விடாமை.
In-dis-cerp'ti-ble, *a.* கரைந்தழியாத.
In-dis'ci-plin-a-ble, *a.* சிட்சிக்கப்படக்கூடாத, தண்டனையாற்சீர்ப்படுத்தக்கூடாத.
In-dis-cŏv'er-a-ble, *a.* கண்டுபிடிக்கக்கூடாத.
In-dis-cŏv'er-y, *s.* கண்டுபிடிக்கக்கூடாமை
In-dis-creet', *a.* தகாமையான, புத்திகெட்ட, ஆலோசனையில்லாத, அறிவற்ற, கவலையற்ற.
In-dis-creet'ly, *adv.* புத்திகேடாய், எண்ணுமல், மதியீனமாய்.
In-dis-cre'tion, *s.* புத்திக்குறைவு, புத்தியீனம்.
In-dis-crim'in-ate, *a.* பகுத்தறிவில்லாத, அறிவில்லாத, குழப்பமான.
In-dis-crim'in-ate-ly, *adv.* பகுத்தறியாமல், விகற்பமின்றி.
In-dis-crim'in-ā-ting, *s.* பகுத்தறிவில்லாமை, விகற்பமின்மை.
In-dis-crim-in-ā'tion, *s.* பகுத்தறிவின்மை, அறிவின்மை.
In-dis-pens-a-bil'i-ty, *s.* தேவை, அவசியம், வேண்டியதன்மை.
In-dis-pens'a-ble, *a.* தேவையான, அவசியமான, வேண்டிய.
In-dis-pens'a-ble-ness, *s.* தேவை, அவசியம், தவிர்க்கக்கூடாமை.
In-dis-pens'a-bly, *adv.* அவசரமாய், தேவையாய், அவசியமாய்.
In-dis-pōse', *v. a.* வெறுக்கப்பண்ணுதல், குழப்புதல், பழுதுபண்ணுதல்.
In-dis-pōs'ed, *a.* வெறுப்புள்ள, பிரியவீனமான, குழப்பமுள்ள, ஒழுங்கற்ற.
In-dis-pōs'ed-ness, In-dis-po-si'tion, *s.* சுகவீனம், மனவீனம், வெறுப்பு, உபேட்சை.
In-dis'pu-ta-ble, *a.* அசாத்தியமற்ற, உறுதியான, பிசகில்லாத, எதிர்ப்பேச்சில்லாத, பிரதிநியாயமற்ற.
In-dis'pu-ta-ble-ness, *s.* அசாத்தியமின்மை, நிச்சயம்.
In-dis'pu-ta-bly, *adv.* தடையின்றி, பிசகின்றி, நிச்சயமாய்.
In-dis-so-lu-bil'i-ty, *s.* கரைக்கக்கூடிய தன்மை.

In-dis'so-lu-ble, *a.* கரைக்கக்கூடாத, அழிக்கக்கூடாத, கரையாத, உருவழியாத, உரமான, வைரமான.
In-dis'so-lu-ble-ness, *s.* கரையாததன்மை, உரங்கொண்டது.
In-dis'so-lu-bly, *adv.* உரமாய், வைரமாய், அழியக்கூடாததன்மையாய்.
In-dis-solv'a-ble, *a.* கரைக்கக்கூடாத, உருக்கக்கூடாத, மீறக்கூடாத.
In-dis-tinct', *a.* கருகலான, மங்கலான, தீர்க்கமற்ற, தெளிவற்ற.
In-dis-tinc'tion, *s.* வேற்றுமையின்மை.
In-dis-tinct'ly, *adv.* தெளிவின்றி, தீர்க்கமில்லாமல், கருகலாய், கலப்பாய்.
In-dis-tinct'ness, *s.* தீர்க்கமின்மை, குழப்பம்; தெளிவின்மை, அநிச்சயம், கருகல், மங்கல்.
in a writing, மயக்கம், கருகல்.
In-dis-tin'guish-a-ble, *a.* பகுத்தறியக்கூடாத, மட்டிடக்கூடாத.
In-dīte', *v. a.* வாசகமிணைத்தல்; வாசகஞ்சொல்லுதல், வசனித்தல்.
In-dīt'er, *s.* வாசகமிணைப்போன், வாசகஞ்சொல்லுவோன்.
In-dīte'ment, *s.* வாசகவிணைப்பு.
In-di-vīd'a-ble, *a.* பகுக்கக்கூடாத, பிரிக்கக்கூடாத, பங்கிடக்கூடாத.
In-di-vid'u-al, *s.* ஒருவன், ஒருத்தி, ஒன்று.
In-di-vid'u-al, *a.* ஒருமையான, ஏகமான, தனித்த.
In-di-vid-u-al'i-ty, *s.* தனிமை, ஒருமை, ஏகத்துவம்.
In-di-vid'u-al-īze, *v. a.* தனித்தனியாக்கல், ஒருமையாக்கல்.
In-di-vid'u-al-ly, *adv.* ஒவ்வொன்ருக, ஒவ்வொருத்தனுக, தனித்தனியே, வெவ்வேருக.
In-di-vid'u-āte, *v. a.* தனிமைப்படுத்தல், தனித்தனியாக்கல்.
In-di-vid'u-ate, *a.* தனித்த, பிரியாத.
In-di-vid-u-ā'tion, *s.* பகுப்பு, பிரிப்பு, வெவ்வேருனநிலை, தனிமை.
In-di-vis-i-bil'i-ty, In-di-vis'i-ble-ness, *s.* } பிரிக்கப்படாமை, பகுக்கப்படாமை, ஒற்றுமை.
In-di-vis'i-ble, *a.* பிரிக்கக்கூடாத, பகுக்கக்கூடாத, பிளக்கக்கூடாத, துண்டிக்கக்கூடாத.
In-di-vis'i-bly, *adv.* பிரியாமல், ஒருமிக்க, ஒற்றுமையாய்.
In-dō'cile, *a.* அடங்காத, பயிற்றக்கூடாத, படியாத, படிவிக்கக்கூடாத.
In-do-cil'i-ty, *s.* பிடிவாதம், கீழ்ப்படியாத்தன்மை, அமையாமை.
In-doc'tri-nāte, *v.* மூலபாடம்பயிற்றல், உபதேசித்தல், போதித்தல்.
In-doc-trin-ā'tion, *s.* நூல், கல்வி, உபதேசம்.
In'do-lence, *s.* சோம்பு, சோர்வு, அசட்டை, அசதி.
In'do-lent, *a.* சோம்பான, அசதியான, அசாக்கிரதையான.
person, சோம்பன், சோம்பற்காரன்.
tumor, ஊமைக்கட்டு.
In'do-lent-ly, *adv.* அசட்டையாய், சோம்பாய்.
In-dom'i-ta-ble, *a.* அடங்காமையான, இணங்காமையான, முரண்டான்.
In-dors'a-ble, *a.* மாட்டறைந்துசெலுத்தத்தக்க.
In-dorse', *v. a.* மேல்வாசகம்போடுதல், மேலெழுதல், மாட்டறைதல்.
In-dor-see', *s.* உண்டியல்மாட்டறைந்துபெற்றேன், மாட்டறைந்தஉண்டியல்பெற்றேன்.
In-dorse'ment, *s.* மேலெழுத்து, மேல்வாசகம்.
in the inside, மாட்டறைவு.
In-dors'er, *s.* உத்தரவாதி, பிணையாளி, மாட்டறைவோன்.
In-drench', *v. a.* நீரில்த்தாழ்த்தல், அமிழ்த்தல்.
In-dū'bi-ta-ble, *a.* சந்தேகமில்லாத, ஐயமில்லாத, நிச்சயமான, தீர்ப்பான.
In-dū'bi-ta-ble-ness, *s.* சந்தேகமின்மை, நிச்சயம்.
In-dū'bi-ta-bly, *adv.* சந்தேகமின்றி, நிச்சயமாய், நிசமாய்.
In-dūce', *v. a.* செய்வித்தல், உட்படுத்துதல், ஏவுதல்.
consent, திருப்புதல், பிரியப்படுத்துதல், வசப்படுத்தல்.
In-dūce'ment, *s.* ஏவுகை, தூண்டுகை, நிமித்தம், நோக்கம்.
In-dūc'er, *s.* ஏவுவோன், தூண்டுவோன், காரணன்.

In-duct′, *v. a.* ஏற்படுத்தல், உட்படுத்தல்.

In-duc′tile, *a.* (*see* Ductile.) ஈயாத, இசியாத, நெகிழாத.

In-duc′tion, *s.* ஸ்தாபிப்பு, அனுமானம், ஏற்படுத்துகை, அவிஞ்பாவம், ஒரினப்பொருளைஅவ்வினத்திலொன்றுகொண்டுநிதானித்தல், அனுயாத்திரம்.

In-duct′ive, *a.* அனுமானிக்கிற, ஏற்படுத்தத்தக்க.

In-duct′ive-ly, *adv.* அருத்தாபத்தியாய்.

In-duct′or, *s.* ஏற்படுத்துகிறவன்.

In-dūe′, *v. a.* கொடுத்தல், அருளல், ஈதல், அலங்கரித்தல்.

In-dūe′ment, *s.* தேவவரம், வரப்பிரசாதம்.

In-dulge′, *v.* இடங்கொடுத்தல், பொறுத்தல், உத்தரவுகொடுத்தல், இளக்காரங்கொடுத்தல்.
  to humor, சீராட்டுதல்.
  in a reverie, மனோகற்பிதம்பண்ணுதல், மனோரதியம்பண்ணுதல்.
  in, இடங்கொடுத்தல், அனுபவித்தல், உட்படுதல்.
  indulged child, செல்வப்பிள்ளை.

In-dul′gence, *s.* இளக்கம், இளக்காரம், சீராட்டு, பொறுதி, அனுபவம், பிரியம்.
  in the Romish church, பாப்புச்சபையின்பாவமன்னிப்புத்தொழில்.
  to sell indulgences, பாவவிமோசனக்கிரயம்பண்ணுதல், பாவமன்னிப்புச்சீட்டுக்கொடுத்தல்.

In-dul′gent, *a.* இளக்காரமான, பட்சமான, தயவான, இடங்கொடுக்கிற.

In-dul′gent-ly, *adv.* இளக்காரமாய், தயையாய், மெத்தனவாய்.

In-dulg′er, *s.* இளக்காரங்கொடுப்போன்.

In′du-rāte, *v. a.* கடினப்படுத்துதல், உரப்பித்தல், வைரமாக்குதல்.

In′du-rāte, *v. n.* உரத்தல், வைரித்தல், தடித்தல்.

In′du-rā-ted, *a.* உரமான, வைரமான.

In-du-rā′tion, *s.* கடினமாக்குகை, உரமாக்குகை, வைரமாக்குகை.
  of heart, மனக்கடினம், மனவைரம், மனஉரம்.

In-dus′tri-ous, *a.* தாளாண்மையுள்ள, சுறுசுறுப்புள்ள, பிரயாசமான, சாக்கிரதையுள்ள.
  person, உழைப்புக்காரன், வேகி, பிரயாசி.

In-dus′tri-ous-ly, *adv.* பிரயாசமாய், சுறுசுறுப்பாய்.

In′dus-try, *s.* முயற்சி, சாக்கிரதை, உழைப்பு, ஊக்கம், தாளாண்மை, சுறுசுறுப்பு.

In′dwell-er, *s.* குடியானவன், அகவாசி, பிரசை, உள்ளூரவன்.

In′dwell-ing, *s.* அகத்துறைவு, மனோவாசம்.

In′dwell-ing, *a.* உள்வாசமான, அகத்திலுள்ள, அகப்பொருளான.
  sin, மனப்பாவம்.

In-ē′bri-ate, *s.* வெறியன், குடிகாரன்.

In-ē′bri-āte, *v. a.* வெறியாக்குதல், வெறிகொள்ளச்செய்தல்.

In-e-bri-ā′tion, In-e-brī′e-ty, *s.* வெறி, மதுமயக்கம்.

In-ef-fa-bil′i-ty, In-ef′fa-ble-ness, *s.* சொல்லடங்காமை, வாக்கிறந்தமை, வசனாதீதம்.

In-ef′fa-ble, *a.* சொல்லிமுடியாத, நாவுக்கடங்காத, வாக்குக்கெட்டாத.

In-ef′fa-bly, *adv.* சொல்லிமுடியாதவிதமாய், உரைக்கடங்காதவிதமாய்.

In-ef-fect′ive, In-ef-fect′u-al, *a.* சித்தியாகாத, பெலனற்ற, பலியாத, தத்துவமற்ற.

In-ef-fect′u-al-ly, *adv.* வீணாய், பலியாமல், பலனில்லாமல்.

In-ef-fect′u-al-ness, *s.* பெலனின்மை, சத்தின்மை, அபலம், சித்தியாகாமை, வாய்ப்புக்கொள்ளாமை.

In-ef-fi-cā′cious, *a.* தகாமையான, பெலனற்ற, சாரமற்ற, காரியத்துக்குதவாத.

In-ef-fi-cā′cious-ly, *adv.* தகாமையாய், காரியக்கேடாய்.

In-ef-fi-cā′cious-ness, *s.* தகாமை, சத்தின்மை.

In-ef′fi-ca-cy, In-ef-fi′cien-cy, *s.* பெலனின்மை, தத்துவமின்மை, நடப்பிக்கக்கூடாததன்மை, சத்தின்மை.

In-ef-fi′cient, *a.* பெலனில்லாத, பலமில்லாத, தத்துவமற்ற.
In-ef-fi′cient-ly, *adv.* வீணாய், தத்துவக்குறைவாய், பலமில்லாமல்.
In-el′e-gance, In-el′e-gan-cy, *s.* சிறப்பின்மை, அழகீனம், அவலட்சணம்.
In-el′e-gant, *a.* சிறப்பில்லாத, அவலட்சணமான.
In-el′e-gant-ly, *adv.* சிறப்பில்லாமல், அவலட்சணமாய்.
In-el-i-gi-bil′i-ty, *s.* தகாமை, தகுதியின்மை.
In-el′i-gi-ble, *a.* தெரிந்துகொள்ளத்தகாத, தெரிந்துகொள்ளக்கூடாத.
persons, தகாதவர்கள், தகவிலர்.
In-el′o-quent, *a.* சாதுரியமற்ற, வாசாலமற்ற, வாக்குவல்லபமற்ற.
In-el′o-quent-ly, *adv.* அசாதுரியமாய், வாசாலமில்லாமல்.
In-ept′, *a.* தகுதியற்ற, தகாத, அடாத, புத்தியீனமான.
In-ept′i-tude, *s.* தகாமை, தகுதியின்மை, கூடாமை.
In-ept′ly, *adv.* அடாமல், தகுதியீனமாய், மதிகேடாய்.
In-ē′qual, *a.* (*see* Unequal.) சமமில்லாத, ஒப்பில்லாத.
In-e-qual′i-ty, *s.* ஒத்திராமை, ஒவ்வாமை, பேதம், வேற்றுமை.
of mind, மனத்தளப்பம், மனநிலையில்லாமை, விகாரமனம்.
In-e-qui-lib′ri-o, *s.* சமநிலையின்மை.
In-eq′ui-ta-ble, *a.* நியாயவீனமான, நீதிகேடான.
In-er-ra-bil′i-ty, *s.* பிசகாமை, தவறாமை, பிழைபடக்கூடாமை.
In-er′ra-ble, *a.* பிசகக்கூடாத, தவறக்கூடாத, பிழைபடக்கூடாத.
In-er′ra-ble-ness, *s.* தவறின்மை, பிழையின்மை, பிசகின்மை.
In-ert′, *a.* இயங்காத, தன்னியக்கமற்ற, சுயசலனமில்லாத.
In-er′tia, *s.* தன்னியக்கமின்மை, சுயசலனமின்மை, இயங்காமை.
In-er′tion, *s.* அசைவின்மை, இயங்காமை.
In-ert′ly, *adv.* இயங்காமல், அசையாமல், மந்தமாய்.
In-ert′ness, *s.* இயங்காமை, சுயசேட்டையின்மை.
In-es-sen′tial, *a.* விசேடமற்ற, அவசியமற்ற, வேண்டாத.
In-es′ti-ma-ble, *a.* மதிக்கப்படக்கூடாத, எண்ணத்தொலையாத, விலைகடந்த, கணிசத்துக்குமிஞ்சின.
In-es′ti-ma-bly, *adv.* கணிசத்துக்குமிஞ்சி, விலைமதிக்கக்கூடாமல்.
In-ev′i-dent, *a.* அத்தாட்சியில்லாத, கருகலான.
In-ev-i-ta-bil′i-ty, *s.* தவிர்க்கக்கூடாமை, நிச்சயம்.
In-ev′i-ta-ble, *a.* விலக்கவொண்ணாத, தப்பாத, தவறாத.
In-ev′i-ta-ble-ness, *s.* தவிர்க்கக்கூடாமை, விலக்கக்கூடாமை, தவறின்மை.
In-ev′i-ta-bly, *adv.* தவிர்க்கப்படக்கூடாமையாய், விலக்கக்கூடாமையாய்.
In-ex-act′, *a.* சரியில்லாத, திருத்தமற்ற, ஏற்றத்தாழ்ச்சியான.
In-ex-act′ness, *s.* திட்டமின்மை, சரியின்மை, ஒப்பின்மை, திருத்தமின்மை.
In-ex-cīt′a-ble, *a.* மந்தமான, தூண்டப்படக்கூடாத.
In-ex-cūs′a-ble, *a.* போக்குச்சொல்லப்படாத, அநியாயமற்ற, சாட்டற்ற, போக்கற்ற.
In-ex-cūs′a-ble-ness, *s.* போக்கின்மை, சாட்டின்மை.
In-ex-cūs′a-bly, *adv.* போக்குச்சொல்லப்படக்கூடாமல்.
In-ex-e-cū′tion, *s.* நிறைவேற்றாமை, சபலமாக்காமை, சித்தியாகாமை.
In-ex-er′tion, *s.* செயலின்மை, முயற்சியின்மை.
In-ex-hāl′a-ble, *a.* இரேசகம்பண்ணக்கூடாத, ஆவியாய்ப்போகக்கூடாத.
In-ex-haust′ed, *a.* வற்றாத, தொலையாத, குறையாத, இளைத்துப்போகாத.
In-ex-haust′i-ble, *a.* தொலையாத, செலவழியாத, வற்றாத, அற்றுப்போகாத.
In-ex-haust′i-ble-ness, *s.* தொலையாமை, வற்றாததன்மை, இளைத்துப்போகாமை.

In-ex-ist'ence, *s.* இன்மை, சூனியம், அபாவம்.

In-ex-ist'ent, *a.* இல்லாத, சூனியமான, அபாவமான.

In-ex-or-a-bil'i-ty, *s.* இணங்காமை, இரங்காமை, ஈயாமை.

In-ex'o-ra-ble, *a.* இரங்காமையான, கடினமான, சம்மதியாத.
mind, திரும்பாதமனம், இரங்காமனம், இளகாமனம்.

In-ex'o-ra-bly, *adv.* இரக்கமில்லாமல், இரங்காமல், கடினமாய்.

In-ex-pect-ā'tion, *s.* வரவுகாத்திராமை.

In-ex-pē'di-ence, / In-ex-pē'di-en-cy, *s.* தகாமை, ஒவ்வாமை, தேவையின்மை.

In-ex-pē'di-ent, *a.* தகாத, அடாத, ஒவ்வாத.

In-ex-pē'ri-ence, *s.* சாதகமின்மை, பழக்கமின்மை, அப்பியாசமின்மை.

In-ex-pē'ri-enc-ed, *a.* பழக்கமில்லாத, சாதியாத, கைபடியாத.

In-ex-pert', *a.* பழக்கமற்ற, கைவராத, சாமர்த்தியமில்லாத, சமர்த்தில்லாத.

In-ex-pert'ness, *s.* அனப்பியாசம்.

In-ex'pi-a-ble, *a.* தணிக்கக்கூடாத, நிவிர்த்தியில்லாத, நீக்கக்கூடாத, விமோசனமாகாத.

In-ex'pi-a-bly, *adv.* தணிக்கக்கூடாமல், நிவிர்த்தியாக்காமல், நிவிர்த்தியின்றி, பிரயோகமின்றி, அபிரயோகமாய்.

In-ex-plāin'a-ble, *a.* விரித்துரைக்கக்கூடாத, தாற்பரித்துரைக்கக்கூடாத.

In-ex'pli-ca-ble, *a.* வெளிப்படுத்தக்கூடாத, தெளிவிக்கப்படக்கூடாத.

In-ex'pli-ca-ble-ness, *s.* அறியக்கூடாமை, அறிவுக்கெட்டாமை, விளங்கக்கூடாமை.

In-ex'pli-ca-bly, *adv.* அறியக்கூடாதவிதமாய், விளங்கக்கூடாதவிதமாய், தெருளக்கூடாதவிதமாய்.

In-ex-plōr'a-ble, *a.* கரைகாணாத, காணக்கூடாத, ஆராயக்கூடாத, பிரவேசிக்கக்கூடாத.

In-ex-press'i-ble, *a.* சொல்லிமுடியாத, சொல்லுக்கெட்டாத, சொல்லுக்கடங்காத, வாக்கிறந்த.
joy, சந்தோஷம், மகிழ்ச்சி.

In-ex-press'i-bly, *adv.* சொல்லிமுடியாதவிதமாய்.

In-ex-press'ive, *a.* பயன்விளையாத, பயன்படாத, சொல்வதற்கரிய, பொருட்குறிப்பில்லாத.

In-ex-pug'na-ble, *a.* சயிக்கக்கூடாத, வெல்லற்கரிய.

In-ex-ten'sion, *s.* விரிவின்மை, பரப்பின்மை.

In-ex-tinct', *a.* அவியாத, தீராத, தணியாத, அழியாத.

In-ex-tin'guish-a-ble, *a.* தணிபடக்கூடாத, தீர்க்கப்படக்கூடாத.

In-ex-tïrp'a-ble, *a.* நிருமூலமாக்கக்கூடாத, அழிக்கப்படக்கூடாத.

In-ex'tri ca-ble, *a.* குலைக்கக்கூடாத, தெளிவாக்கக்கூடாத, அவிழ்க்கக்கூடாத, சிக்கறுக்கக்கூடாத.

In-ex'tri-ca-ble-ness, *s.* அவிழ்க்கக்கூடாமை, கருகல், சிக்கு.

In-ex'tri-ca-bly, *adv.* சிக்காய், கருகலாய்.

In-eye', *v. a.* கிளையொட்டவைத்தல்.

In-fal-li-bil'i-ty, *s.* பிழைபடாமை, தப்பில்லாமை, தவறின்மை, கறைபடாமை.

In-fal'li-ble, *a.* தவறாத, பிழைபடாத, திடபரமான, திட்டமான, நிண்ணயமான, சாசுவத, பொய்யாமையான, நிசமான, மாறாத, நிலைபரமான.
declaration, தவறாதபேச்சு, நிசச்சொல்.

In-fal'li-bly, *adv.* தவறாமல், நிச்சயமாய், தப்பாமல், தவறின்றி.

In'fa-mous, *a.* துற்கீர்த்தியான, வெட்கங்கெட்ட, வெறுக்கத்தக்க, கீர்த்தியற்ற.

In'fa-mous-ly, *adv.* அவகீர்த்தியாய், வெட்கக்கேடாய், அவதூறாய்.

In'fa-mous-ness, / In'fa-my, *s.* அவகீர்த்தி, அவதூறு, துற்கீர்த்தி, அவக்கியாதி.

In'fan-cy, *s.* இளமை, பாலத்துவம், பாலியம், இளம்பிராயம்.

In'fant, *s.* குழந்தை, குழவி, பாலன், பாலகன், பாலகி, சவலைக்குழந்தை, சிசு.

In'fant, *a.* குழந்தைப்பருவமுள்ள.

In-fant'i-cīde, *s.* சிசுவதைசெய்வோன்.

the act, குழந்தைவதை, சிசுவதை, சிசுகத்தி.
In'fant-īle, *a.* குழந்தைக்கடுத்த, பாலிய. poetry, பிள்ளைக்கவி.
In'fant-īne, *a.* குழந்தைக்கடுத்த, பாலிய.
In'fant-ry, *s.* காலாட்சேனைவகுப்பு, துப்பாக்கிச்சேவுகர்.
In-fat'u-āte, *v. a.* மயக்குதல், மிரட்டுதல், மனதைக்கலக்குதல், மனம்வெறிக்கச்செய்தல்.
to be infatuated, செருக்குறுதல், மயங்குதல்.
In-fat-u-ā'tion, *s.* உன்மத்தம், குருட்டாட்டம், சித்தப்பிரமை, செருக்கு, மதம், மயக்கு.
In-fēas'i-ble, *a.* செய்யப்படக்கூடாத.
In-fēas-i-bil'i-ty, / In-fēas'i-ble-ness, *s.* } செய்யக்கூடாததன்மை.
In-fect', *v. a.* தொற்றவைத்தல், தொற்றப்பண்ணுதல், கறைப்படுத்துதல், பழுதாக்கல், கெடுத்தல்.
In-fect'er, *s.* தொற்றவைப்போன், கறைப்படுத்துவோன், வருத்துவது.
In-fec'tion, *s.* தொற்று, கறை, பழுது, நச்சுக்காற்று, விஷநீர்.
In-fec'tious, *a.* ஒட்டத்தக்க, தொற்றுகிற.
disease, ஒட்டுவியாதி, தொற்றுவியாதி
In-fec'tious-ly, *adv.* தொற்றத்தக்கதன்மையாய், தொற்றி.
In-fec'tious-ness, *s.* தொற்று, தொற்றுமியல்பு.
In-fect'ive, *a.* தொற்றுள்ள, தொற்றத்தக்க.
In-fē'cund, *a.* மலடான, கனிகொடாத.
In-fe-cund'i-ty, *s.* மலட்டுத்தன்மை, பலனின்மை, கனிகொடாமை.
In-fe-lic'i-ty, *s.* சுகமின்மை, அசந்தோஷம், சிலாக்கியமின்மை.
In-fer', *v. a.* அனுமானித்தல், பிரமாணித்தல், கிரகித்தல், அனுமதித்தல், அனுமித்தல்.
In-fer'a-ble, *a.* அனுமானிக்கத்தக்க, அருத்தாபத்திகொள்ளத்தக்க.
In'fer-ence, *s.* தீர்மானம், அருத்தாபத்தி.
in logic, அனுமானம், அருத்தாபத்தி.
from circumstances, துணிவு, நிதானிப்பு, சித்தி.
In-fē'ri-or, *s.* கீழ்மகன், எழிஞன், இழிஞன், நீசன்.
In-fē'ri-or, *a.* கீழான, குறைந்த, இளப்பமான, தாழ்ச்சியான.
kind or quantity, கீழ்த்தரம், இளந்ததரவழி.
reward, குறைபலன், அற்பபலன்.
In-fe-ri-or'i-ty, *s.* இளப்பம், தாழ்வு, கீழ்த்தரம், இகழ்ச்சி, கீழ்மை, நீசம், சிறுமை, தாழ்ச்சி, அதமம்.
In-fer'nal, *s.* நரகவாசி, பாதலத்தான்.
In-fer'nal, *a.* கீழுலகத்துக்கடுத்த, நரகத்துக்கடுத்த, பேய்த்தனமுள்ள, கொடிய.
regions, பாதலம், அதோகதி, பவர்க்கம், யாதனைஸ்தலம், யாதனுபூமி.
In-fer'nal-ly, *adv.* நரகவழியாய், நரகத்துக்கேற்றதாய்.
In-fer'tile, *a.* பலனற்ற, கனிகொடாத, செழிப்பற்ற, மலடான
In-fer-til'i-ty, *s.* செழிப்பின்மை, பாழ், கனியின்மை, மலடு.
In-fest', *v. a.* பழுதாக்குதல், குழப்புதல், உபாதித்தல், தொந்தரைபண்ணுதல்.
In-fest'ing, *a.* குழப்புகிற, பழுதாக்குகிற, கெடுக்கிற.
In-fes'tive, *a.* உபாதியுள்ள, களிப்பில்லாத.
In-fes-tiv'i-ty, *s.* உபாதி, களிப்பின்மை.
In-feūd-ā'tion, *s.* ஆட்சியிலேற்படுத்துதல், வாடகைக்குக்கொடுத்தல்.
In'fi-del, *s.* கிறிஸ்துமதஅவிசுவாசி, வேதவிரோதி.
In'fi-del, *a.* அவிசுவாசமான, விசுவாசமற்ற.
In-fi-del'i-ty, *s.* அவிசுவாசம், விசுவாசஈனம்.
of a wife or husband, சோரம், சோரமார்க்கம், வேசிமார்க்கம், விபசாரமார்க்கம்.
In-fil'trāte, *v. n.* சுவறுதல், ஊறுதல்.
In-fil-trā'tion, *s.* சுவறுகை, ஊறுகை.
In'fi-nite, *a.* முடிவற்ற, நித்திய, அனந்த, நித்தியமுள்ள.
as unlimited, எல்லையற்ற, அதீத.

endless, முடியாத.

In'fi-nite-ly, *adv.* எல்லையில்லாமல், மட்டின்றி, முடிவின்றி, நித்தியமாய்.

In'fi-nite-ness, *s.* நித்தியம், அனந்தம்.

In-fin-i-tes'i-mal, *s.* நுட்பானுநுட்பம், அணு.

In-fin-i-tes'i-mal, *a.* அணுநுட்பமான.

In-fin'i-tive-mood, *s.* செய்யவென்னும் வாய்பாட்டுவினையெச்சம், எண்ணிடமெஞ்சுவினை.

In-fin'i-tude, In-fin'i-ty, *s.* எல்லையின்மை, முடிவின்மை, மிகுதி, அளவின்மை, மட்டின்மை, எல்லைகடந்தது, அனந்தம்.

In-fĭrm, *a.* சீர்குலைந்த, சுகவீனமான.
  as sick, நோயுள்ள, பிணியுள்ள.
  as weak, பலவீனமான, தளர்ந்த, தளர்ச்சியான.
  to grow or be infirm, தளர்தல், சவுங்குதல், மெலிதல்.

In-fĭrm'a-ry, *s.* தருமவைத்தியசாலை.

In-fĭrm'a-tive, *a.* அழிக்கிற, பலவீனப்படுத்துகிற.

In-fĭrm'i-ty, In-fĭrm'ness, *s.* பலவறுதி, தளர்வு, பலவீனம், தளர்ச்சி, மெலிவு, சுகவீனம்.
  as weakness of mind, புத்திக்குறைவு.

In-fix', *v. a.* அழுத்துதல், பதித்தல், இறுக்குதல், உட்பாய்ச்சுதல், கடாவுதல், நிலைப்படுத்தல்.
  between two things, கடாவுதல், மாட்டுதல், உட்செலுத்தல், செருகுதல்.
In-to-nā'tion, *s.* தொனி, தொனிப்பு, ஒலி, முழக்கம், நாதம், சுதிகூட்டுகை.
deep, கம்பீரசத்தம், மந்தநாதம்.

In-tōne', v. a. தொனிக்கச்செய்தல், மந்தோசையாகத்தொனித்தல்.
In-tor'sion, s. முறுக்குகை, திரிப்பு, பின்னுகை.
In-tort', v. a. திரித்தல், முறுக்குதல், பின்னுதல்.
In-tō'to, adv. முற்றும், முற்றாய்.
In-tox'i-cāte, v. a. வெறிக்கச்செய்தல், வெறியாக்குதல்.
to get intoxicated, வெறியெடுத்தல், வெறிகொள்ளுதல், களித்தல்.
In-tox'i-cā-ting, a. இலாகிரியுள்ள,வெறியுள்ள, மஸ்துள்ள, வெறிக்கிற.
liquors, மதுபானம், மஸ்து.
In-tox-i-cā'tion, s. வெறி, வெறிமயக்கம், களிப்பு, இலாகிரி, மஸ்து.
In-tract'a-ble-ness, In-tract-a-bil'i-ty, s. அடங்காமை, கீழ்ப்படியாமை, முரட்டுத்தனம், படியாமை, அமையாமை.
In-tract'a-ble, a. அடங்காத, அமையாத, முரண்டான.
person, முரடன், குறும்பன்.
In-tran-quil'i-ty, s. அமைவின்மை, சமாதானமின்மை.
In-trans'i-tive, s. தன்வினை, செயப்படுபொருளிலிவினை.
In-trans'i-tive-ly, adv. தன்வினையாய்.
In-trans-mū'ta-ble, a. மாற்றக்கூடாத.
In-trench',v. a. அகழுதல்,காளவாய்தோண்டுதல்.
to intrench on, எல்லையொற்றுதல், எல்லைதள்ளுதல், எல்லைகடத்தல்.
In-trench'ment, s. அகழ், கொத்தளம், தெத்து.
In-trep'id, a. பயமில்லாத, ஓர்மமுள்ள, ஆண்மையுள்ள, வீரமுள்ள, துணிவுள்ள, திடமுள்ள.
man, திடபுருடன், திடாரி, வீரன்.
In-tre-pid'i-ty, s. அஞ்சாமை,ஆண்மை, திடம், திடாரிக்கம், வீரம்.
In-trep'id-ly, adv. துணிகரமாய்,திடமாய், வீரமாய்.
In'tri-ca-cy, s. சிக்கு, கருகல், தலைதடுமாற்றம்.
In'tri-cate, a. சிக்கான, வருத்தமான, கருகலான.
In'tri-cate-ly, adv. சிக்காய், கருகலாய், தலைமயக்காய்.
In'tri-cate-ness, s. குழப்பம், கலக்கம், சிக்கு, கருகல்.
of an affair, அடிதலைதடுமாற்றம்.
In-tri-cā'tion, s. சிக்கு.
In-trïgue', s. அபாயம், தந்திரம், நெருடு, சற்பனை.
In-trïgue', v. a. வஞ்சனைபண்ணுதல், சதியோசித்தல், அபாயம்பண்ணுதல், சற்பனைசெய்தல்.
In-trïgu'er, s. நெருடன், தந்தரி, வஞ்சகன், சதிகாரன்.
In-trïgu'ing-ly, adv. தந்திரமாய், வஞ்சகமாய், அபாயமாய்.
In-trin'sic, In-trin'sic-al, a. உள்ளான, சுயமான, சுயம்பான, இயல்பான, உள்ள.
meaning, உட்கருத்து, உட்பொருள், கருத்துரை.
In-trin'sic-al-ly, adv. உள்ளபடி, சுயம்பாய், இயல்பாய்.
In-tro-dūce', v. a. உட்படுத்துதல்,ஏற்படுத்துதல், செலுத்துதல், பிரஸ்தாபம் பண்ணுதல், அறிமுகமாக்குதல்.
a seton, திரிவைத்தல்.
a subject, கதையெடுத்தல், பேச்சுத்தொடங்குதல்.
one to an assembly, சபையேற்றுதல், அரங்கேற்றுதல், சங்கப்படுத்தல்.
to insert, உட்செலுத்துதல், உட்சேர்த்தல், புகுத்தல்.
In-tro-dūc'er, s. அறிமுகமாக்குவோன், ஏற்படுத்துவோன், அறிவிப்போன்.
In-tro-duc'tion, s. ஆரம்பம்,முகவுரை, துவக்கம், முதல், புகுகை.
In-tro-duc'tor, s. துவக்குவோன், முகவுரைகாரன்.
In-tro-duc'to-ry, In-tro-duc'tive, a. முகவுரையான, ஆரம்பமான.
In-tro-gres'sion, s. உட்பிரவேசம்.
In-tro-mis'sion, s. உட்புகுத்துகை.
In-tro-mit', v. உள்ளேவிடுதல், உள்ளே சேர்த்துக்கொள்ளுதல், புகுத்தல்.
In-tro-spect', v. a. உள்ளேஆராய்தல்.
In-tro-spec'tion, s. உள்ளாராய்வு, உட்பார்வை.

In-tro-vēn′ient, *a.* இடையில்வருகிற, உட்பிரவேசிக்கிற.

In-tro-vert′, *v. a.* உள்ளேமாற்றிவைத்தல், உள்ளேவாங்குதல்.

In-trūde′, *v. a.* உரிமையின்றித்தலைவைத்தல், இடையேபுகுத்தல்.

In-trūde′, *v. n.* பலபந்தமாய்நுழைதல்.
 abruptly, சடுதியாய்ப்புகுதல்.

In-trūd′er, *s.* சடுதியாயுரிமையின்றிநுழைவோன்.

In-trū′sion, *s.* பலபந்தம், உரிமையற்றுநுழைகை.

In-trū′sive, *a.* பலபந்தமான, கேட்டுக்கேள்வியற்ற.

In-trust′, *v. a.* ஒப்புவித்தல், ஒப்படைத்தல், கையடைசெய்தல், சுமத்துதல், வசமாகவைத்தல்.

In-tu-i′tion, *s.* சுயஅறிவு, சுபாவஅறிவு, இயற்கையுணர்வு.

In-tū′i-tive, *a.* மனதினுற்கண்ட, சுயஅறிவாயுள்ள, இயற்கையறிவாயுள்ள.
 knowledge, நிருவிகற்பக்காட்சி.

In-tū′i-tive-ly, *adv.* சுயஅறிவின்படி.

In-tu-mesce′, *v. a.* தடித்தல், வீங்குதல், ஊதுதல், பொருமுதல்.

In-tu-mes′cence, In-tur-ges′cence, *s.* தடிப்பு, சுரப்பு, வீக்கம்.

In-twīne′, In-twist′, *v. a.* திரித்தல், முறுக்குதல்.

In-um′brāte, *v. a.* நிழலிடுதல், நிழற்றல்.

In-un′dant, *a.* பெருகுகிற.

In-un′dāte, *v. a.* வெள்ளம்போடுதல், வெள்ளமெடுத்தல், பிரளயமெடுத்தல்.

In-un-dā′tion, *s.* சலப்பிரளயம், வெள்ளம், நீத்தம்.

In-ur-ban′i-ty, *s.* மரியாதையீனம், உபசரணைக்கேடு, அநாகரீகம்.

In-ure′, *v. a.* பயிற்றுதல், பழக்குதல்.
 one's self to, சாதித்தல், அப்பியாசித்தல்.
 to be inured, படிதல், பயிலுதல், பழகுதல்.

In-ure′ment, *s.* சாதனை, சாதிப்பு, பயிற்சி, பழக்கம்.

In-urn′, *v. a.* புதைத்தல், சேமித்தல், அடக்கம்பண்ணுதல்.

In-u′tile, *a.* அபிரயோசனமுள்ள.

In-u-til′i-ty, *s.* பயனின்மை, பலனின்மை.

In-ut′ter-a-ble, *a.* சொல்லுக்கடங்காத, நாவுக்கடங்காத, வசனாதீதமான.

In-vāde′, *v. a.* மேல்விழுதல், சருவுதல், தடுக்குதல், சாடுதல், முற்றிக்கைபோடுதல்.
 as an army, படையேற்றல்.

In-vād′er, *s.* முற்றிக்கைகாரன், உரிமையின்றிச்செல்பவன், எல்லைகடப்போன், பகைஞன், சத்துரு.

In-vād′ing, *a.* மேல்விழுகிற, சருவுகிற, படையேற்றமான.

In-va-les′cence, *s.* சுகம், சொஸ்தம், ஆரோக்கியம்.

In-val-e-tū′din-a-ry, *a.* சொஸ்தமில்லாத, துன்புற்ற, பலவீனமான.

In′va-lid, *s.* பிணியாளி, உரோகி, ஊனன்.

In′va-lid, *a.* உறுதியற்ற, சாரமற்ற, பலவறுதியான.

In-val′id-āte, *v. a.* பலவீனப்படுத்தல், வெறுமையாக்கல், பெலன்குறைத்தல், உரங்கெடுத்தல்.

In-val-id-ā′tion, In-va-lid′i-ty, In-val′id-ness, *s.* பலவீனம், பெலனின்மை, தத்துவக்கேடு, பலட்சயம்.

In-val′u-a-ble, *a.* விலைமதிக்கக்கூடாத.

In-val′u-a-bly, *adv.* விலைமதிப்பின்றி.

In-vā′ri-a ble, *a.* மாருத, மாற்றக்கூடாத.

In-vā′ri-a-ble-ness, *s.* மாருமை, மாற்றக்கூடாமை.

In-vā′ri-a-bly, *adv.* வேற்றுமையின்றி, விகாரமின்றி.

In-vā′ri-ed, *a.* வேற்றுமையற்ற, விகாரமற்ற.

In-vā′sion, *s.* நாட்டுக்குட்பகைவர்செலவு, படையேற்றம்.

In-vec′tive, *s.* தூஷணம், நிந்தை, வன்சொல், சுடுசொல், தோஷவாக்கு.

In-vec′tive, *a.* தூஷணமான, நிந்தையான, சுடுகிற.

In-vec′tive-ly, *adv.* நிந்தையாய், தீமொழியாய், சுடுசொல்லாய்.

In-veigh′, *v. a.* தூஷணித்தல், விரோதமாய்ப்பேசுதல், கோபமாய்ச்சொல்லுதல், இகழுதல்.

In-veigh'er, s. இகழ்வோன், தூஷிப்போன், சுடுசொற்காரன்.

In-veī'gle, v. a. இழுத்தல், ஆசைகாட்டுதல், ஏவிவிடுதல்.
property, கையாடுதல், அபகரித்தல்.
one, நிலைகுலைத்தல், அகப்படுத்துதல், மாட்டுதல், எத்துதல், வஞ்சித்தல்.

In-veī'gler, s. எத்தன், வஞ்சகன், இச்சகன்.

In-veīl'ed, a. முக்காடிட்ட.

In-vent', v. a. நினைத்துண்டுபண்ணுதல், கற்பித்தல், எடுத்துக்கட்டுதல், எடுத்துத்தொடுத்தல், நிருமித்தல், சூழ்ச்சிசெய்தல்.
a fiction, கதைகட்டுதல்.
a plan, &c., கருத்தெடுத்தல், துருவம்பண்ணுதல், சூழ்ச்சிபார்த்தல்.

In-vent'ful, a. நினைத்துண்டாக்குகிற, யூகிக்கிற, சூழ்ச்சிசெய்கிற.

In-vent'i-ble, a. நினைத்துண்டாக்கத்தக்க, கற்பிக்கத்தக்க.

In-ven'tion, s. சூழ்ச்சி, வைப்புக்கட்டு, நூதனகற்பிதம்.
as fancy, வன்னிப்பு, அலங்கரிப்பு, சித்திரம்.
in language, அலங்காரம்.

In-vent'ive, a. நினைத்துண்டுபண்ணத்தக்க, புத்திநுட்பமுள்ள.
person, சூழ்ச்சிக்காரன், விவேகி.

In-vent'ive-ness, s. சூழ்ச்சம், விவேகம்.

In-vent'or, s. நினைத்துண்டுபண்ணுபவன், கதைகட்டி, சூழ்ச்சக்காரன்.

In-ven-tō'ri-al, a. சாமான்பெயர்வழியிடாப்புக்கடுத்த.

In-ven-tō'ri-al-ly, adv. சாமான்பெயர்வழியிடாப்புக்கடுத்தவிதமாய்.

In'ven-to-ry, s. சாமான்பட்டோலை, சாமான்பெயர்வழியிடாப்பு.

In'ven-to-ry, v. a. இடாப்பெழுதுதல், சாமான்பெயர்விலாசமெழுதுதல்.

In-vent'ress, s. நினைத்துண்டாக்குபவள், கற்பிதகாரி, வைப்புக்கட்டுக்காரி.

In-verse', a. மாறுன, குறுக்கான.
proportion, குறுக்குவினாவீதம், விலோமவீதம்.

In-verse'ly, adv. குறுக்காய், அடிதலைமாறி, மாறுய்.

In-ver'sion, s. பேதம், வித்தியாசம், விலோமம்.
rule of three, குறுக்குமுத்தொகைவினா, விலோமத்திறைராசிகம்.

In-vert', v. a. கவிழ்த்தல், திருப்புதல், புரட்டுதல், அடிதலைமாற்றுதல்.

In-vert'ed-ly, adv. மாறுபாடாய், புரட்டாய், விலோமமாய்.

In-vert'ing, s. கவிழ்ச்சி, கவிழ்வு, புரட்டு.

In-vest', v. a. தரித்தல், சூட்டுதல், உடுத்துதல், ஏற்படுத்துதல், தரிப்பித்தல், கொடுத்தல், ஈதல்.
property, அசைவற்றஆதனந்தேடுதல்.
with titles, பட்டஞ்சூட்டுதல், பட்டங்கட்டுதல், நாமஞ்சூட்டுதல்.
with authority, அதிகாரங்கொடுத்தல், தத்துவங்கொடுத்தல்.
with honors, கணிசப்படுத்துதல்.
to be invested with a title, &c., தரித்தல், அணிதல், பூணுதல், சூடுதல்.

In-ves'ti-ga-ble, a. ஆராயத்தக்க, விசாரித்தறியக்கூடிய.

In-ves'ti-gāte, v. a. ஆராய்தல், சோதித்தல், அளவிடுதல், ஊடாடிப்பார்த்தல், விசாரித்தல்.

In-ves-ti-gā'tion, s. ஆராய்வு, சோதனை, நுட்பவிசாரணை.

In-ves'ti-gā-tive, a. ஆராயக்கூடிய, ஆராய்வுள்ள.

In-ves'ti-gā-tor, s. ஆராய்ச்சிசெய்வோன், சோதனைகாரன்.

In-vest'i-ture, s. ஆட்சியொப்புக்கொடுக்கை, காணியாட்சிப்படுத்துகை.

In-vest'ive, a. தரிக்கிற, அணிகிற, முற்றிக்கைபோடுகிற, நிலைப்படுத்துகிற.

In-vest'ment, s. புடைவை, உடுப்பு, அணி.
of forces, முற்றிக்கை.
of money, முதற்பணங்கட்டுகை, ரொக்கசாமீன்வைக்கை.

In-vet'er-a-cy, s. கடுமை, தீராமை, விடாப்பற்று, விடாதசாதனை.

In-vet'er-ate, a. கடுமையுள்ள, தீராத, பழய, நாட்பட்ட, வேர்கொண்ட.
enemy, நெடுநாட்சத்துரு, தொல்லைப்பகை, பழம்பகை.

In-vet'er-ate-ly, adv. முரண்டாய், மூர்க்கமாய், விடாமல்.

In-vet'er-ate-ness, *s.* விடாப்பற்று, அடங்காமை.

In-vet-er-ā'tion, *s.* கடுமைகொள்ளுகை, முரணுகை.

In-vid'i-ous, *a.* எரிச்சலுள்ள, வன்மையுள்ள, வஞ்சகமான.
to be invidious, அழுக்கறுத்தல், பொறாமைகொள்ளல்.

In-vid'i-ous-ly, *adv.* எரிச்சலாய், வன்மமாய், நோனுமையாய்.

In-vid'i-ous-ness, *s.* வன்மம், பகை, வன்மை, வன்கண்மை.

In-vig'or-āte, *v. a.* திடப்படுத்துதல், உறுதிப்படுத்துதல், தேற்றுதல், பெலப்படுத்துதல், உயிர்ப்பித்தல், உற்சாகப்படுத்தல்.

In-vig-or-ā'tion, *s.* தேற்றுகை, பலப்படுத்துகை, உயிர்ப்பிக்கை, திரப்படுத்துகை.

In-vin-ci-bil'i-ty, *s.* வெல்லக்கூடாமை.

In-vin'ci-ble, *a.* வெல்லக்கூடாத, தோலாத, மேற்கொள்ளக்கூடாத.

In-vin'ci-ble-ness, *s.* மேற்கொள்ளக்கூடாமை, வெல்லக்கூடாமை, தோலாமை.

In-vin'ci-bly, *adv.* வெல்லக்கூடாமையாய், தோலாமல்.

In-vī-o-la-bil'i-ty, In-vī'o-la-ble-ness, *s.* மீறக்கூடாமை, கடக்கக்கூடாமை.

In-vī'o-la-ble, *a.* மீறக்கூடாத, அவமதிக்கப்படாத, ஊறுபடக்கூடாத.

In-vī'o-la-bly, *adv.* மீறுமல், அவமதியின்றி.

In-vī'o-late, *a.* சேதமடையாத, ஊறுபடாத, தீழ்ப்படையாத, கற்புநீங்காத, மீறப்படாத, சுத்தமுள்ள.

In-vī'o-lā-ted, *a.* மீறுத, கடவாத, சுத்தமுள்ள.

In-vis'cāte, *v. a.* பசைபூசுதல், ஒட்டிடுதல்.

In-vis'cer-āte, *v. a.* வளர்க்குதல்.

In-vis-i-bil'i-ty, *s.* அதரிசனம், தோற்றுமை, தோன்றுமை, கட்புலப்படாமை.

In-vis'i-ble, *a.* தோற்றுத, அதரிசனமான.
eclipse, காணுக்கிரகணம், பாதாளகிரகணம்.

In-vis'i-bly, *adv.* தோன்றுதபடி, தோன்றுமையாய், உருப்படாமையாய்.

In-vi-tā'tion, *s.* அழைப்பு.

In-vī'ta-to-ry, *a.* வரவழைக்கிற, எதிர்கொண்டழைக்கிற.

In-vīte', *v. a.* அழைத்தல், கூப்பிடுதல். வரவழைத்தல், கவர்தல், இழுத்தல்.
to a wedding, விவாகத்துக்கழைத்தல்.
to a feast, விருந்துக்கழைத்தல்.

In-vīt'er, *s.* விருந்துக்கழைப்போன், அழைப்போன்.

In-vīt'ing, *a.* அழைக்கிற, ஆசைகொடுக்கிற, பிரியப்படுத்துகிற.

In-vīt'ing-ly, *adv.* பிரியப்படுத்துகிறவிதமாய்.

In-vīt'ing-ness, *s.* வரவழைப்பு, வரப்பிரியப்படுத்துகை.

In'vo-cāte, *v. a.* மன்றுடுதல், வேண்டுதல், போற்றல், எத்துதல்.

In-vo·cā'tion, *s.* அழைப்பு, வேண்டுமை, போற்றுகை, விண்ணப்பம்.
to a deity, தெய்வதுதி, கடவுள்வாழ்த்து, கடவுள்வணக்கம்.

In'voice, *s.* இடாப்பு, வார்நாமச்சீட்டு, கைச்சார்த்து, சாமான்விலாசம்.

In'voice, *v. a.* சாமான்பெயர்வழியெழுதுதல்.

In-vōke', *v. a.* செபித்தல், ஆகருஷித்தல், வேண்டிக்கொள்ளுதல், அழைத்தல்.
aid, துணையழைத்தல், உதவிகேட்டல், அபயமிடுதல், முறையிடுதல்.
audibly, ஓலமிடுதல்.

In-vol'un-ta-ri-ly, *adv.* வில்லங்கத்துக்கு, மனப்பிரியமில்லாமல்.

In-vol'un-ta-ri-ness, *s.* விருப்பின்மை, மனச்சாய்வின்மை, கட்டாயம்.

In-vol'un-ta-ry, *a.* மனப்பிரியமில்லாத, மனவிருப்பற்ற, கட்டாயமான.

In'vo-lute, *s.* சுருள், புரி, சுரி.

In-vo-lū'tion, *s.* சுருட்டு, சுருள், சிக்கு.
in arithmetic, சமீந்தானம்.

In-volve', *v. a.* சுருட்டுதல், அகப்படுத்துதல், குழப்புதல், கலக்குதல், உட்படுத்தல், சிக்குப்பண்ணுதல், மூடுதல், அருத்தங்கொள்ளுதல்.
to overwhelm, அமிழ்த்துதல்.

to become involved, உட்படுதல், தாழ்தல், கலங்குதல், குழம்புதல், அமிழ்ந்துதல், சிக்குதல்.
involved language or style, மயங்கவைப்பு.
In-volv'ed-ness, *s.* சிக்கு.
In-volv'ing, *a.* சுற்றுகிற, திருகலான, முறுகலான, உள்ளடக்குகிற.
In-vul'ner-a-ble, *a.* காயப்படக்கூடாத, இரணப்படக்கூடாத.
In-vul'ner-a-ble-ness, *s.* காயப்படக்கூடாமை.
In-wall', *v. a.* மதிலடைத்தல், சுவரணைத்தல்.
In'ward, *a.* உள்ளான, உட்புறமான.
In'ward, In'ward-ly, *adv.* உள்ளுக்கு, உள்ளாய், உள்ளே.
In'wards, *s. (pl.)* குடல்முதலியவை, உதரகோசங்கள்.
In-wēave', *v. a.* நெய்தல், பின்னுதல்.
In-wrap', *v. a.* அகப்படுத்தல், உட்படுத்தல், சுருட்டுதல், சுற்றிக்கட்டுதல், சிக்குப்படுத்தல்.
In-wrēathe', *v. a.* மாலைகட்டுதல், மாலைதொடுத்தல்.
In-wrought', *a.* சித்திரமிழைத்த, சித்திரவேலைபொருந்திய.
I'o-dine, *s.* சாதாழைமுதலியவைகளிலிருந்தெடுக்கும்மருந்து.
I-on'ic, *a.* ஒருவகைச்சிற்பவேலைக்குரிய.
in verse, நாற்சீரடி.
I-ō'ta, *s.* அணு, அற்பம், சொற்பம்.
Ip-e-cac-u-an'ha, *s.* வாந்திவேர்மருந்து.
Ip'se-dix'it, *s.* சுயகற்பிதம்.
Ip'so-fac'to, *adv.* தற்சாட்சியுள்ளதாய்.
I-ras-ci-bil'i-ty, *s.* முட்டுக்கோபம், பிரதமகோபம், முற்கோபம்.
I-ras'ci-ble, *a.* கோபமூளத்தக்க, அபிகாயங்கொள்ளத்தக்க.
person, முட்டுக்கோபக்காரன், சீக்கிரகோபி, மூர்க்கன்.
I-ras'ci-ble-ness, *s.* முட்டுக்கோபக்குணம்.
Ire, *s.* சினம், கோபம், கருவம், உக்கிரம்.
Ire'ful, *a.* கோபமுள்ள, கோபமூளுகிற, அபிகாயங்கொள்ளத்தக்க.
Ire'ful-ly, *adv.* அபிகாயமாய், கோபமாய்.
I'ris, *s.* வானவில், மழைவில்.
of the eye, விழியைச்சூழ்ந்திருக்கும்சவ்வு.
Irk'sŏme, *a.* அலைக்கழிவான, தொந்தரவான.
Irk'sŏme-ly, *adv.* தொந்தரவாய், கற்கசமாய்.
Irk'sŏme-ness, *s.* அலைக்கழிவு, கற்கசம், சோர்வு.
I'ron, *s.* இரும்பு, கரும்பொன், கருந்தாது, அயம்.
cast, வார்ப்பிரும்பு, இரும்புப்பாளம், கரிகலந்தஇரும்பு, சீனச்சட்டி.
irons, விலங்கு, துலங்கு, சங்கிலி, தளை.
rust, இரும்புக்கறள், அயமலம்.
sulphate of iron or green vitriol, அன்னபேதி.
I'ron, *v. a.* அயப்பெட்டியாற்புடைவையழுத்துதல்.
I'ron, *a.* இரும்புள்ள, இரும்பாலாய.
bandage, பற்றிரும்பு, இரும்புவளையம், அள்ளு.
bar, கடப்பாரை, கட்டப்பாரை.
filing, அரபொடி.
grate worn on the neck for penance, அரிகண்டம்.
mould, இரும்புக்கறள், இரும்பூறல்.
pin, நாராசம்.
work, இரும்புவேலை.
bar of, இருப்புச்சலாகை.
I'ron-ed, *a.* இரும்பினாற்பெலப்படுத்தின, அயப்பெட்டியாலழுத்தப்பட்ட.
I'ron-mŏn'ger, *s.* இரும்புவியாபாரி.
I'ron-wood, *s.* பாலை, பாலைமரம்.
I-ron'ic-al, *a.* குத்திரமான, கருக்குச்சுருட்டான, பிறிதுபொருள்விளைகிற.
I-ron'ic-al-ly, *adv.* குத்திரமாய், கருக்குச்சுருட்டாய், வஞ்சகமாய்.
I'ron-y, *s.* கருக்குச்சுருட்டு, புனைசுருட்டு, குத்திரம்.
I'ron-y, *a.* இரும்பினாற்செய்த, இரும்புள்ள.
Ir-rā'di-ance, Ir-rā'di-an-cy, *s.* கிரணம், கதிர், ஒளி, பிரபை, சோதி, பிரகாசம்.

Ir-rā'di-āte, *v. a.* துலக்குதல், பிரகாசிப்பித்தல்.
Ir-rā'di-āte, *v. n.* இலங்குதல், துலங்குதல், பிரகாசித்தல், கதிர்விடுதல், ஒளிர்தல்.
Ir-rā'di-ate, *a.* இலங்குகிற, பிரகாசிக்கிற, பளீரிடுகிற.
Ir-ra-di-ā'tion, *s.* பிரபை, கிரணம், துலக்கம், பிரகாசம், சோதி.
mental, மனவெளிச்சம்.
Ir-rā'tion-al, *a.* மதியீனமான, புத்தியற்ற, புத்திக்குவிரோதமான, பகுத்தறிவற்ற.
class in grammar, அஃறிணை, இழிதிணை.
Ir-rā-tion-al'i-ty, *s.* மதியீனம், புத்தியீனம்.
Ir-rā'tion-al-ly, *adv.* புத்திகேடாய், மதிகேடாய், புத்தியீனமாய்.
Ir-re-clāim'a-ble, *a.* திருத்தக்கூடாத, சீர்ப்படக்கூடாத.
savages, திருத்தக்கூடாததுட்டர், திருந்தக்கூடாதகண்டகர், அசடர்.
Ir-re-clāim'a-bly, *adv.* திருத்தப்படக்கூடாமையாய், சீர்ப்படக்கூடாமையாய், முற்சீருக்குவரமாட்டாமையாய்.
Ir-rec-on-cīl'a-ble, *a.* ஒப்புரவாக்கக்கூடாத, ஒவ்வாமையான, சம்பந்தமற்ற.
Ir-rec-on-cīl'a-ble-ness, *s.* ஒப்புரவாகாமை, இணங்காமை.
Ir-rec-on-cīl'a-bly, *adv.* ஒப்புரவாகாமல், ஒவ்வாமையாய்.
Ir-rec-on-cīle'ment, *s.* பேதகம், வேற்றுமை, பேதம், ஒவ்வாமை.
Ir-rec-on-cil-i-ā'tion, *s.* ஒப்புரவின்மை, ஒவ்வாமை.
Ir-re-cord'a-ble, *a.* எழுதப்படக்கூடாத.
Ir-re-cŏv'er-a-ble, *a.* மீளாத, மீட்கக்கூடாத, சுகமாக்கக்கூடாத, கட்டசாத்தியமான.
to be irrecoverable, கைகடத்தல், அகப்படாதிருத்தல்.
Ir-re-cŏv'er-a-ble-ness, *s.* மீளாமை, சொஸ்தமாகாமை, கைகடப்பு.
Ir-re-cŏv'er-a-bly, *adv.* மீட்கக்கூடாமல், மீளக்கூடாமையாய், கைக்கெட்டாமல்.

Ir-re-deem'a-ble, *a.* மீட்சியில்லாத, மீட்கப்படக்கூடாத, இரட்சிக்கப்படக்கூடாத.
Ir-re-dū'ci-ble, *a.* இனம்மாற்றக்கூடாத, இனம்மாறக்கூடாத.
Ir-re-frā'ga-ble, *a.* எதிர்மறுக்கக்கூடாத, பிரதிவாதமற்ற.
Ir-re-frā'ga-bly, *adv.* உறுதியாய், புரளாமல்.
Ir-ref-ra-ga-bil'i-ty, Ir-re-frā'ga-ble-ness, *s.* எதிர்மறுக்கக்கூடாமை, பிரதிவாதமின்மை.
Ir-ref'u-ta-ble, *a.* பொய்யென்றுரூபிக்கக்கூடாத, மறுக்கக்கூடாத, அழிக்கக்கூடாத, நிராகரிக்கக்கூடாத.
Ir-ref'u-ta-bly, *adv.* மறுக்கக்கூடாமல், நிராகரிப்பின்றி.
Ir-reg'u-lar, *a.* ஒழுங்கற்ற, முறையில்லாத, குழப்பமான, தப்பறையான.
verb, விதிவிலக்குறுவினை.
person, ஒழுங்கீனன், முறைகெட்டவன்.
Ir-reg-u-lar'i-ty, *s.* ஒழுங்கீனம், முறைகேடு, நெறிகேடு.
in grammar, விதிவழு, விதிமயக்கு.
Ir-reg'u-lar-ly, *adv.* ஒழுங்கீனமாய், குழப்பமாய்.
in grammar, விதிவிலக்காய்.
Ir-rel'a-tive, *a.* பொருந்தாமையான, இசைவற்ற.
Ir-rel'a-tive-ly, *adv.* இசைவில்லாமல், சம்பந்தமில்லாமல், உரித்தின்றி.
Ir-rel'e-van-cy, *s.* ஒவ்வாமை, ஒத்திராமை, பொருந்தாமை.
Ir-rel'e-vant, *a.* பொருந்தாத, ஒவ்வாத, வித்தியாசமான.
remark, ஒவ்வாதசொல், அடாதசொல்.
Ir-rel'e-vant-ly, *adv.* காரியத்துக்குதவாமல், பொருந்தாமல்.
Ir-re-lig'ion, *s.* அவபத்தி, அமார்க்கம், பத்தியின்மை.
Ir-re-lig'ious, *a.* அவபத்தியான, பத்தியற்ற, அமார்க்கமுள்ள.
Ir-re-lig'ious-ly, *adv.* அவபத்தியாய், அமார்க்கமாய்.
Ir-rē'me-a-ble, *a.* பிரதிபலனில்லாத.

Ir-re-mē'di-a-ble, *a.* மாற்றக்கூடாத, மீட்கக்கூடாத, சீர்ப்படுத்தக்கூடாத.
Ir-re-mē'di-a-ble-ness, *s.* சீர்ப்படுத்தக்கூடாமை, மீட்சியின்மை.
Ir-re-mē'di-a-bly, *adv.* மாற்றக்கூடாதவிதமாய், சொஸ்தமில்லாமல்.
Ir-re-mis'si-ble, *a.* மன்னிப்படையக்கூடாத, பொறுக்கப்படக்கூடாத.
Ir-re-mis'si-ble-ness, *s.* மன்னிக்கப்படாமை, பொறுக்கப்படாமை.
Ir-re-mis'si-bly, *adv.* மன்னிக்கக்கூடாமல்.
Ir-re-möv'a-ble, *a.* இயங்கக்கூடாத, அசையக்கூடாத, பெயரக்கூடாத, நீக்கக்கூடாத.
Ir-re-möv'a-bly, *adv.* இயங்கக்கூடாமல், அசையாமையாய்.
Ir-re-mū'ner-a-ble, *a.* பிரதிபலனளித்தற்கரிய.
Ir-rep-a-ra-bil'i-ty, *s.* மீளக்கூடாமை, சீர்ப்படக்கூடாமை.
Ir-rep'a-ra-ble, *a.* சீர்ப்படுத்தக்கூடாத.
Ir-rep'a-ra-bly, *adv.* சீர்ப்படுத்தக்கூடாதவிதமாய்.
Ir-re-plev'i-a-ble, *a.* மீளக்கூடாத.
Ir-rep-re-hens'i-ble, *a.* குற்றச்சாட்டற்ற, குற்றமில்லாத.
Ir-rep-re-hens'i-bly, *adv.* குற்றச்சாட்டின்றி.
Ir-re-press'i-ble, *a.* கீழ்ப்படுத்தக்கூடாத, அடங்கக்கூடாத.
Ir-re-prōach'a-ble, *a.* நிந்தைக்கிடமில்லாத, சுத்தமான, குற்றமில்லாத, நேர்மையுள்ள.
Ir-re-prōach'a-bly, *adv.* நிந்தையில்லாமல், சுத்தமாய், கறையின்றி.
Ir-re-pröv'a-ble, *a.* சரியான, நிதார்த்தமான, குற்றமற்ற, குற்றச்சாட்டில்லாத.
Ir-re-pröv'a-bly, *adv.* சுத்தமாய், சரியாய், நிதார்த்தமாய், குற்றமின்றி.
Ir-rep-ti'tious, *a.* நுழைகிற.
Ir-re-sist'ance, *s.* பதமை, எதிராமை, எதிரின்மை.
Ir-re-sist-i-bil'i-ty, } *s.* எதிர்ப்பின்மை, விரோதமின்மை.
Ir-re-sist'i-ble-ness, }
Ir-re-sist'i-ble, *a.* தடைபடாத, இடையூறுகடக்கத்தக்க.
evidence, எதிர்மறுப்பற்றஒப்பனை.
impulse, எதிர்த்தாக்கில்நில்லாதவேகம், தடைப்படாகதி.
Ir-re-sist'i-bly, *adv.* தடுக்கப்படாமையாய், தடைப்படாமையாய்.
Ir-res'o-lu-ble, *a.* கரைக்கக்கூடாத.
Ir-res'o-lute, *a.* இருமனமான, மனச்சலனமான, நிண்ணயமற்ற.
Ir-res'o-lute-ly, *adv.* மனத்திடமில்லாமல், இருமனமாய், நிண்ணயமில்லாமல், தைரியமின்றி.
Ir-res'o-lute-ness, *s.* மனோசலனம், உறுதியின்மை, திடமின்மை.
Ir-res-o-lū'tion, *s.* இருமனம்,சந்தேகம்.
Ir-re-solv'ed-ly, *adv.* நிண்ணயமில்லாமல், தைரியமின்றி.
Ir-re-spect'ive, *a.* உடந்தையில்லாத, பிறநீங்கலாயிருக்கிற.
Ir-re-spect'ive-ly, *adv.* பிறநீங்கலாய்.
Ir-re-spons-i-bil'i-ty, *s.* உத்தரவாதமின்மை, பொறுப்பின்மை.
Ir-re-spons'i-ble, *a.* பொறுப்பற்ற, உத்தரவாதமில்லாத.
Ir-re-tent'ive, *a.* ஞாபகமில்லாத, நினைப்பற்ற.
Ir-re-triēv'a-ble, *a.* திருந்தக்கூடாத, சீர்ப்படுத்தக்கூடாத, மீளக்கூடாத.
Ir-re-triēv'a-ble-ness, *s.* மீளாமை, சீர்ப்படாமை, கைகூடாமை.
Ir-re-triēv'a-bly, *adv.* பாடாய், மீளாமல்.
Ir-rev'er-ence, *s.* அவமதி, துராசாரம், நிராசாரம், கணிசக்கேடு.
Ir-rev'er-ent, *a.* சங்கையீனம்வருவிக்கிற, சங்கைகெடுக்கிற, துராசாரமுள்ள.
Ir-rev'er-ent-ly, *adv.* அஞசாரமாய், சங்கையீனமாய்,
Ir-re-vers'i-ble, *a.* மாற்றக்கூடாத, திருப்பக்கூடாத, அழிக்கக்கூடாத.
Ir-re-vers'i-ble-ness, *s.* மாற்றக்கூடாமை, திருப்பக்கூடாமை.
Ir-re-vers'i-bly, *adv.* மாற்றக்கூடாமல்.
Ir-rev-o-ca-bil'i-ty, } *s.* திரும்பவருவிக்கக்கூடாததன்மை, விலகக்கூடாமை.
Ir-rev'o-ca-ble-ness, }

Ir-rev'o-ca-ble, *a.* கைகடந்த, திருப்பக் கூடாத, விலக்கக்கூடாத.
to be irrevocable, கைகடத்தல்.
Ir-rev'o-ca-bly, *adv.* கைகடந்து.
Ir'ri-gāte, *v. a.* நீர்பாய்ச்சுதல், ஈரமாக்குதல்.
Ir-ri-gā'tion, *s.* நீர்பாய்ச்சுகை, ஈரமாக்குகை.
Ir-rig'u-ous, *a.* ஈரமான, நனைந்த.
Ir-ri-ta-bil'i-ty, *s.* எரிப்பு, எரிவு, கோபத்தனம், வெடுவெடுப்பு.
Ir'ri-ta-ble, *a.* முற்கோபமுள்ள.
person, கோபி, கோபக்காரன்.
Ir'ri-tāte, *v. a.* கோபமூட்டுதல், எரிச்சலாக்குதல்.
the system, அழற்றுதல், காந்தச்செய்தல்.
Ir-ri-tā'tion, *s.* எரிவு, கோபம், சினப்பு.
of the system, அழற்சி, எரிவு.
in the throat, கரகரப்பு, கன்றல்.
Ir'ri-ta-tive, Ir'ri-ta-to-ry, *a.* கோபமூட்டத்தக்க, அழுந்துகிற, அழற்றுகிற, எரிவான, அனல்ான.
Ir-rup'tion, *s.* உடைவு, உடைப்பு, வெடிப்பு.
as invasion, பகைவருருட்செலவு, பகைவருருள்விழுகை.
Ir-rup'tive, *a.* உடைகிற, உட்பிரவேசிக்கிற.
Is, *v.* (*see* Be.) இருக்குதல்.
Is'chu-ry, *s.* நீரடைப்பு.
I'si-cle, *s.* (*see* Icicle.) உறைந்தநீர்க்கம்பி.
I'sin-gläss, *s.* அப்பிரகம், பூவிந்துநாதம்.
Isl'and, Isle, Il'and, Ile, *s.* தீவு, திட்டு.
in a river, or of alluvial soil, புளினம், மணல்மேடு.
Isl'and-er, *s.* தீவான்.
Is'let, *s.* சிறுதீவு.
I-soch'ron-al, *a.* சமகாலமுள்ள.
Is'o-lāte, *v. a.* தனியேவைத்தல், புறநீங்கலாக்குதல்.
Is'o-lā-ted, *a.* தனித்த, தனிமையான, புறநீங்கலான.
Is-o-lā'tion, *s.* தனித்திருக்கை.
I-sos'ce-les, *a.* துவிசமபுச.
triangle, துவிசமபுசத்திறிகோணம்.
Is'su-a-ble, *a.* செல்லத்தக்க, அனுப்பத்தக்க, செலுத்தத்தக்க.
Is'sue, *s.* செலவு, புறப்பாடு.
as end, தீர்ப்பு, தீர்மானம், தீர்வை, முடிவு.
as discharge, பாய்ச்சல், போக்கு, செலவு, பறிவு, கழிவு.
as fontanel, காரத்திரி.
as produce of land, பூமியின்பலன்.
as progeny, சந்ததி, சந்தானம், பின்சந்ததி, பிள்ளை.
venerial, மேகநீர், பிரமியம், மேகவெட்டை, மேகவூறல், மேகரோகம், பிரமேகம்.
of blood, இரத்தவூறல், இரத்தப்பெருக்கு.
of an elephant, யானைமதசலம்.
Is'sue, *v. a.* இடுதல், கொடுத்தல், செலுத்துதல், அருளுதல், கட்டளையிடுதல்.
Is'sue, *v. n.* புறப்படுதல், வெளிவருதல், பாய்தல்.
to end, தீர்தல், முடிதல்.
to flow, பாய்தல், ஊறுதல், புறப்படுதல், பெயர்தல்.
to proceed, உண்டாதல், முளைத்தல், தோன்றல்.
as a bad smell, துற்கந்தம்வீசுதல்.
as milk or water, ஒழுகல், பில்கல்.
as rays, தாரைவீசுதல்.
as progeny, பிறத்தல்.
Is'sue-less, *a.* சந்தானமில்லாத.
Is'su-ing, *s.* பாய்கை, போக்கு, செலவு.
Isth'mus, *s.* ஊரிடைக்கழுத்து.
It, *pro.* இது, அது, அதை, இதை, தன்னை, தான்.
I-tal'i-cīze, *v. a.* சரித்தெழுதுதல்.
I-tal'ics, *s.* (*pl.*) சரிந்தஎழுத்துக்கள்.
Itch, *s.* சிரங்கு, சொறி, தினவு, நமை.
as constant desire, தாகம், காதல்.
Itch, *v. n.* சொறிதல், அரித்தல், சுணைத்தல், தினவெடுத்தல்.
in the throat, கரகரத்தல்.
as desire, ஆவல்கொள்ளுதல், அவாவுதல், தகாக்கொள்ளுதல்.
Itch'ing, *s.* சொறி, சுணைப்பு, சொறிவு.

in the throat causing cough, கரகரப்பு, அரிப்பு.
as having a constant desire, ஆவல்.
Itch'y, *a.* சொறிவுள்ள.
I'tem, *s.* காரியம், குறிப்பு, தொகை.
I'tem, *v. a.* குறிப்பெழுதுதல், குறித்தல்.
It'er-ant, *a.* கூறியதுகூறுகிற.
It'er-āte, *v. a.* கூறியதுகூறல், திரும்பச்சொல்லுதல், அனுவதித்தல்.
It-er-ā'tion, *s.* கூறியதுகூறுகை, அனுவாதம்.
It'er-a-tive, *a.* திரும்புகிற.
I-tin'er-ant, *s.* பயணக்காரன், பலதேசசஞ்சாரி, பரதேசி.
I-tin'er-ant, *a.* பயணம்பண்ணுகிற, திரிகிற, பரதேசவாசமுள்ள.
I-tin'er-a-ry, *s.* பிரயாணவிருத்தாந்தம், பயணவத்தமானம்.
I-tin'er-a-ry, *a.* பிரயாணத்திற்சம்பவித்த, பிரயாணத்துக்கடுத்த.
I-tin'er-āte, *v. n.* பிரயாணம்பண்ணுதல், திரிதல்.
It-self', *pro.* அதுவே, அதையே, தன்னையே, அதுதான், அதைத்தானே.
I'vo-ry, *s.* யானைத்தந்தம், யானைக்கொம்பு, எயிறு.
I'vo-ry, *a.* யானைத்தந்தத்தினாற்செய்த, யானைக்கொம்புள்ள.
I'vy, *s.* ஓர்படர்கொடி.

J.

Jab'ber, *s.* கத்து, பிதற்று, பசபசப்பு, அலப்பு.
Jab'ber, *v. n.* கத்துதல், அலப்புதல், பிதற்றுதல், பசபசத்தல்.
Jab'ber-er, *s.* அலப்பி, பிதற்றுவோன்.
Jā'cent, *a.* நெடுங்கிடையான.
Jā'cinth, *s.* செவ்வந்திக்கல், பதுமராகம், செவப்புக்கல்.
Jack, *s.* இழிவுக்குறிப்பு.
in sea language, கொடி, துவசம்.
as wooden frame, பொறுப்பு, தாங்கி.
jack at all trades, கெட்டிக்காரன், கைவந்தவன், நிபுணன்.
Jack'al, *s.* நரி, ஓரி, சம்புகம்.
Jack'a-nāpes, *s.* பிலுக்கன், செருக்கன்.
Jack'äss, *s.* ஆண்கழுதை.
Jack'-boots, *s.* (*pl.*) தோற்பரம்.
Jack'daw, *s.* ஓர்விதபட்சி.
Jack'et, *s.* சட்டை, கஞ்சுகம், மார்ச்சட்டை, கவசம், சொக்காய், அங்கரக்கா, மேற்சட்டை.
under jacket, இரவுக்கை, மார்க்கச்சு, சோளி, உட்சட்டை.
Jack'fruit, *s.* பலாப்பழம்.
Jack'tree, *s.* பலாமரம், வரிக்கை.
Jack with a lantern, *s.* கொள்ளிவாய்ப்பேய், கொள்ளிவாய்ச்சருப்பம்.
Jac'o-net, *s.* ஓர்விதசல்லா.
Jac-ti-tā'tion, *s.* உழற்சி.
Jac'u-lāte, *v. a.* உந்துதல், பாய்ச்சுதல்.
Jac-u-lā'tion, *s.* எறிகை, செலுத்துகை, ஏவுகை, உந்துகை, தூண்டுகை, எய்கை, வீசுகை.
Jac'u-la-to-ry, *a.* பாய்ச்சுகிற.
Jāde, *s.* செத்தற்குதிரை, இளைத்தகுதிரை.
a mean woman, வசவி, துட்டை.
Jāde, *v. a.* இளைக்கச்செய்தல், தொய்யப்பண்ணுதல்.
Jād'ish, *a.* தீங்கான, பொல்லாத, துட்டமுள்ள, கற்பில்லாத.
Jag, *s.* சிறுசுமை.
Jagg, *s.* அரிவாட்பல், கருக்கு, பூ, வாட்பல்.
Jagg, *v. a.* கருக்குக்கொத்துதல்.
Jag'ger-y, *s.* பனங்கட்டி, கருப்புக்கட்டி, சருக்கரை.
Jag'ged, *a.* கருக்குள்ள, பல்லுள்ள.
Jag'ged-ness, *s.* பல்லுள்ளதன்மை, கருக்குள்ளதன்மை.
Jag'gy, *a.* பல்லுள்ள, கருக்குள்ள.
Jäh, *s.* (*see* Jehovah.) யெகோவா.
Jāil, *s.* காவற்கூடம், சிறைச்சாலை, மறியற்கூடம்.
Jāil'-bĭrd, *s.* சிறைப்பட்டவன்.
Jāil'er, *s.* சிறைச்சாலைக்காரன், காவற்கூடவிசாரிப்புக்காரன்.
Jākes, *s.* புறவீடு, மலக்கிரகம்.
Jal'ap, *s.* விரேசனமருந்து.
Jam, *s.* இனிப்புக்குழம்பு, அதிரசக்குழம்பு.
Jam, *v. a.* நசுக்குதல், அமர்த்துதல், அடர்த்தல், நெரித்தல், அமுக்குதல், திணித்தல், செருகுதல்.
to be jammed in, பொருத்தல், பதிதல், செருகுணல், துவைதல்.

Jāne, s. ஓர்விதப்புடைவை.
Jan'gle, s. பிதற்று, அலப்பு, பசப்பு, அவசத்தம், குதர்க்கம், வாக்குவாதம்.
Jan'gle, v. n. வாக்குவாதம்பண்ணுதல், சண்டைப்படுதல், தருக்கித்தல்.
Jan'gler, s. வாக்குவாதி, வாதாடி.
Jan'gling, s. வாக்குவாதம், வாதாட்டம், வாக்குக்கலகம்.
Jan'i-tor, s. வாயில்காப்போன், துவாரபாலகன், கடைகாவலன்.
Jänt, s. (see Jaunt.) பயணம்.
Jänt, v. n. (see Jaunt.) பயணமாய்ப்போதல்.
Jänt'y, a. குசாலுள்ள, கோப்புள்ள, வீம்புள்ள.
Jan'u-a-ry, s. தைமாதம், புஷியம், மகரமாதம்.
Ja-pan', s. தளுக்கிடுகை, மெருகிடுகை, ஒப்பம்பிடிக்கை.
Ja-pan', v. a. தளுக்கிடுதல், மெருகிடுதல், சீர்மையாக்கல்.
Ja-pan'ner, s. தளுக்கிடுவோன், மெருகிடுவோன், மினுக்குவோன்.
Ja-pan'ning, s. தளுக்கிடுகை, மெருகிடுகை, ஒப்பமிடுகை.
Jär, s. சாடி, தாழி, பதலை, சால், கரீரம், ஒரளவு.
  of stone, கற்சாடி, கற்சால்.
  of earthen, மண்சால்.
  as a shake, சலனம், குலுங்குகை.
  as discord, ஒவ்வாதசத்தம், இசைப்பிரிவு.
  as debate, collision, தருக்கம், விவாதம், தாக்கு.
Jär, v. a. குலுக்குதல், அசைத்தல், சலிக்கச்செய்தல், ஆட்டுதல்.
Jär, v. n. குலுங்குதல், எதிர்தல், வாக்குவாதம்பண்ணுதல்.
  as a musical string, கம்பித்தல்.
Jär'gon, s. கத்து, பிதற்று, அலப்பு, பசபசப்பு.
Jas'mine, s. மல்லிகை, மாலதி.
  china, சீனமல்லிகை.
  large double, குடமல்லிகை.
  water, பன்னீர்.
Jas'per, s. இரவாக்கல்.
Jäun'dice, s. காமாலை, மஞ்சட்காமாலை, பாண்டு, செங்கண்மாரி.

Jäun'dic-ed, a. காமாலைகொண்ட, பாண்டுரோகமுள்ள.
Jäunt, s. உலா, சாரி, நடை, பவனி, பயணம், பிரயாணம்.
Jäunt, v. n. திரிதல், சுற்றித்திரிதல்,
Jave'lin, s. வேல், ஈட்டி, எறிபடை, வல்லையம்.
Jaw, s. அலகு, கொடிறு, தாடை.
  lower, கீழலகு, கீழ்வாய்.
  upper, மேலலகு, மேல்வாய்.
  of a fish, செவிட்டெலும்பு, அலகு, செவியடிமுள்.
  vulgarly, for scolding, அதட்டு.
Jaw, v. a. அதட்டுதல்.
Jāy, s. ஓர்விதபட்சி.
Jeal'ous, a. எரிச்சலுள்ள, அழல்வுள்ள, விதனமுள்ள, பொறாமையாய்ப்பார்க்கிற, தாபமுள்ள.
  man, உக்கிரன், இரவுத்திரன், அதிவேகி, வைரி.
  to be jealous, எரிதல், அழுக்கறுத்தல், மனத்தாங்கலடைதல்.
Jeal'ous-ly, adv. எரிச்சலாய், மனவேக்காடாய்.
Jeal'ous-ness, s. எரிச்சற்றன்மை, எரிவுத்தன்மை, அழல்வுத்தன்மை.
Jeal'ous-y, s. எரிச்சல், எரிவு, அழல்வு, காய்மகாரம், அழற்சி, மனக்கொதி, விதனம், குரோதம், உக்கிரம்.
Jee, s. (see Gee.) வலந்திருப்புமொலி.
Jeer, s. குறளை, கேலி, சரசம், சன்னை, பரிகாசம், பகிடி, நளினம்.
Jeer, v. a. குறளைபேசுதல், கேலிபண்ணுதல், கோட்டிபண்ணுதல், சன்னைபண்ணுதல், சரசம்பண்ணுதல், கோட்டாலைபண்ணுதல்.
Jeer, v. n. சுடச்சொல்லுதல், சரசம்பண்ணுதல், பரிகாசம்பண்ணுதல்.
Jeer'er, s. கேலிக்காரன், பரிகாசக்காரன், விதூஷகன்.
Jeer'ing-ly, adv. கேலியாய், நிந்தனையாய், பரிகாசமாய்.
Je-hō'vah, s. யெகோவா, அந்தாதி, காவற்கடவுள், அநாதி, அநந்தன், சுயம்பு.
Je-jūne', a. வெறிதான, சூனியமான, பிரயோசனமற்ற.

Je-jūne'ness, s. வெறுமை, சூனியம், பாழ், மலடு.
Jel'li-ed, a. குழம்புள்ள, பாணியுள்ள.
Jel'ly, s. குழம்பு, களி, பாகு, பாணி.
Jen'ny, s. இரட்டினம்.
Jeop'ard, Jeop'ard-īze, v. a. மோசமாக்குதல், நட்டத்துக்கேதுவாக்குதல்.
Jeop'ard-y, s. அபாயம், மோசம், மோசநிலை.
Jerk, s. தாக்கு, பறிப்பு, தள்ளுகை, தெறிப்பு, சுண்டுகை.
Jerk, v. a. தாக்குதல், தள்ளுதல், எற்றுதல், தெறித்தல், சுண்டுதல்.
away, பறித்தல், வலித்தல்.
Jerk'er, s. பறிகாரன்.
Jerk'in, s. மார்க்கவசம்.
Jer'sey, s. கம்பளிமயிர், கம்பளிநூல்.
Jes'sa-mine, s. (*see* Jasmine.) மல்லிகை, மாலதி.
Jes'se, s. கிளைவிளக்கு.
Jest, s. பகிடி, பரிகாசம், சரசலீலை, கேலி, குறும்பு, பட்டாங்கு, கோப்பு.
Jest, v. n. சரசம்பண்ணுதல், பகிடிபேசுதல், நளினம்பண்ணுதல், சித்திரம்பேசுதல்.
Jest'er, s. பரிகாசக்காரன், கேலிக்காரன், சரசக்காரன், கோட்டாலைக்காரன், கோப்புக்காரன்.
Jest'ing, s. சரசலீலை, இலலிதம், நளினம், சித்திரப்பேச்சு, குறும்பு.
Jes'u-it, s. உரோமானுசபையின்ஒருசங்கக்குரு.
Jes-u-it'ic-al, Jes-u-it'ic, a. தந்திரமான, உபாயமுள்ள, புரட்டுள்ள.
Jes-u-it'ic-al-ly, adv. தந்திரமாய், புரட்டாய்.
Jes'u-it-ism, s. உபாயம், தந்திரம், புரளி.
Jet, s. நீர்பீரிட்டுப்பாய்கை.
as fossil, கருநிமிளை.
Jet, v. n. தள்ளுணல், பிதுங்குதல், பாய்தல், வெளிப்புறப்படுதல்.
Jet'teau, s. நீர்த்தாரை.
Jet'tee, s. இறக்கம், சாய்ப்பு.
Jet'ty, s. கால்வாயொடுக்கும்அணை.
Jet'ty, a. கருநிமிளையான.
Jew, s. யூதன், யூதசாதியான்.

Jew'el, s. மணி, பணி, இரத்தினம், இழை, அணிகலம், பூணாரம், ஆபரணம், அணி, நகை, பூஷணம்.
for the side of the nose, மூக்குத்தி.
a ring for the nose, நத்து.
a ring for the middle, புலாக்கு.
pendent, நிதி, தொங்கணி.
a string of, ஆரம், மணிவடம்.
Jew'el, v. a. அணிதல், பூஷணம்பூணுதல், ஆபரணந்தரித்தல்.
Jew'el-er, s. பணித்தட்டான், பொற்கொல்லன்.
Jew'el-ry, s. பணிதி, பூணாரம், பூஷணம், ஆபரணம், அணி.
box for, கோடிகம், அணிகலச்செப்பு, பரணி, பீடிகை.
Jew'ess, s. யூதஸ்திரி, யூதி.
Jew'ish, a. யூதருக்குரிய.
Jews'-härp, s. மோர்ச்சங்கு.
Jib, s. முன்னணியப்பாய்.
Jig, s. கூத்திஞோர்விகற்பம்.
Jig, v. n. கூத்தாடுதல், நடித்தல்.
Jig'ger, s. நங்கூரம்வாங்குமோர்சூத்திரம்.
Jill'-flĭrt, s. கோப்புக்காரி.
Jilt, s. நேசங்காட்டிஎய்க்கும்பெண், நேயத்துரோகி.
Jilt, v. a. நேசங்காட்டிஎய்த்தல்.
Jin'gle, s. சலங்கைச்சத்தம், சிலம்பொலி.
Jin'gle, v. n. கிண்ணிடுதல், கிணிர்கிணிரென்றொலித்தல், கிலுங்குதல், சிலம்புதல்.
Job, s. வேலை, குத்தகைவேலை.
lucrative, ஆதாயச்செட்டு.
as stab, ஆயுதக்குற்று.
Job, v. a. குற்றுதல்.
Job, v. n. எதிர்ச்செட்டுப்பண்ணுதல்.
Job'ber, s. சிறுவேலைசெய்வோன், சிறுவத்தகன், தரவன், தரவு.
Jock'ey, s. குதிரைவியாபாரி, எத்துவத்தகன்.
Jock'ey, v. a. தட்டுதல், எய்த்தல்.
Jo-cōse', a. நளினமான, சரசலீலையான, இலலிதமான, கேலியுள்ள, பகிடியுள்ள, கோமாளமான.
to be jocose, கோட்டிகொள்ளுதல்.

Jo-cōse'ly, *adv.* நளினமாய், சரசலீலையாய், கேலியாய், பகிடியாய்.
Jo-cōse'ness, *s.* பாராட்டு, இலலிதம், கேலி, நளினத்தனம், கோமாளம்.
Jo-co-sē'ri-ous, *a.* யூகபரிகாசமுள்ள.
Joc'u-lar, *a.* நளினமான, இலலிதமான, சரசலீலையான, சரசமான, பகிடியான.
Joc-u-lar'i-ty, *s.* நளினம், கேலி, பரிகாசம்.
Joc'u-lar-ly, *adv.* நளினமாய், பரிகாசமாய், கேலியாய்.
Joc'u-la-to-ry, *a.* நளினமுள்ள, சிரிப்புள்ள, பரிகாசமுள்ள.
Joc'und, *a.* துள்ளாட்டமான, களிப்பான, இலீலையான.
Jo-cund'i-ty, Joc'und-ness, *s.* பாராட்டு, களிப்பு, விளையாட்டு, இலலிதம், களியாட்டு.
Joc'und-ly, *adv.* களிப்பாய், விளையாட்டாய், களியாட்டாய்.
Jog, *s.* தள்ளு, அருட்டு, அசைப்பு.
Jog, *v. a.* தள்ளுதல், அருட்டுதல், எழுப்புதல், அசைத்தல்.
Jog, *v. n.* தளர்நடைநடத்தல், தூங்கனடைநடத்தல், சோம்பாய்நடத்தல்.
on after, பின்போதல்.
Jog'ger, *s.* அருட்டுவோன், தூண்டுவோன், சோம்பாய்நடப்போன்.
Jog'gle, *v.* அலைதல், ஆடுதல், அசைதல்.
Join, *v. a.* இசைத்தல், சேர்த்தல், அணைத்தல், கூட்டுதல், இணைத்தல், இணக்குதல், கலத்தல், சார்த்தல், பிணைத்தல், புணர்த்தல், தொடுத்தல்.
a mortise, seam, &c., மூட்டுதல், பொருத்துதல், சந்துசெய்தல்.
in marriage, விவாகசம்பந்தப்படுத்தல், விவாகமுடிப்பித்தல்.
one's party, அனுசரித்தல், அடைதல், சார்தல், சங்காத்தம்பண்ணல்.
Join, *v. n.* அடுத்தல், பொருந்தல், சேருதல், அடைதல், தொடுதல், அணைதல், அண்ணுதல், இசைதல், கூடுதல், இணங்குதல், ஒன்றுதல்.
in combat, போர்கலத்தல், போரிலேற்றல், யுத்தத்தில்முட்டுதல்.
Join'der, *s.* சேர்ப்பு, அனுபந்தம்.
Join'er, *s.* மூட்டுவேலைகாரன், பொருத்துவோன், தச்சன்.
Join'er-y, *s.* பொருத்துவேலை, துன்னம்.
Join'ing, *s.* பொருத்துகை, இணைப்பு, சேர்ப்பு.
Joint, *s.* இசைவு, தொடுப்பு, பொருத்தம், இசைப்பு, இணக்கம், இணை, கில், பொருத்து, மூட்டு, சந்து, கந்து.
of the arms, கைமூட்டு.
of the body, சந்து, கொளுத்து, குளைச்சு, பூட்டு, பொருத்து.
of a cane, கணு, முளி, கண், சரடு.
of the fingers, பிறங்கு, விரலிறை, முளி.
of a stem to its branch, கணு, கெட்டு, தாட்கண்.
of a tree, பொருத்து, கணு.
in carpentry, கழுந்து, பொருத்து, மூட்டு.
to be out of joint, குலைதல், பொருத்துவிடுதல், குளைச்சுவிடுதல்.
Joint, *v. a.* பொருத்தல், இசைத்தல், சேர்த்தல்.
Joint, *a.* இசைந்த, பொருந்தின, கூடின, உடன்.
Joint'ed, *a.* பொருத்துள்ள.
Joint'er, *s.* சந்துசெய்சீவுளி.
Joint'-heir, *s.* உடன்பங்காளி, உடந்தைக்காரன், உடன்சுதந்தரன்.
Joint'ly, *adv.* உடந்தையாய், கூட.
Joint'ress, *s.* உடந்தைக்காரி.
Joint'-stock, *s.* பண்டாரத்திரவியம், கூட்டுவத்தகத்திரவியம்.
Joint-ten'an-cy, *s.* சமசுதந்தரம்.
Joint-ten'ant, *s.* சமசுதந்தரம்பெற்றவன், சரிஉரித்தாளி.
Joint'ure, *s.* மணமகன்மணமகட்குக்கொடுத்தநன்கொடையாதீனம்.
Joist, *s.* குறுக்குவிட்டம்.
Joist, *v. a.* குறுக்குமரம்போடுதல்.
Jōke, *s.* பகிடி, கேலி, நளினம், இலலிதம், பரிகாசம், சரசம், நகை, கோட்டாலை, கோமாளம்.
Jōke, *v. n.* பகிடிபண்ணுதல், கேலிபண்ணுதல், நகைத்தல்.
Jōk'er, *s.* சரசக்காரன், பரிகாசக்காரன், கோமாளன்.

Jōk'ing, *a.* பகிடிபண்ணுகிற, நகைக்கிற, பரிகாசம்பண்ணுகிற.
person, கோமாளி, பகிடிக்காரன், குஞ்ஞம்பி, பரிகாசக்காரன்.
Jōle, *s.* கன்னம், கதுப்பு.
cheek by jole, கொள்கையாய், அன்னியோன்னியமாய், கொண்டாட்டமாய்.
Jol'li-ly, *adv.* கொண்டாட்டமாய், களியாட்டாய்.
Jol'li-ness, Jol'li-ty, *s.* கொண்டாட்டம், இலீலை, களியாட்டு, மகிழ்ச்சி, விளையாட்டு.
Jol'ly, *a.* களிப்பான, சமாளமான, களியாட்டுள்ள.
to be jolly, சந்தோஷப்படுதல், களியாடல்.
Jol-ly'-bōat, *s.* கப்பலோடிசைத்தவள்ளம், சோங்கு.
Jōlt, *s.* குலுக்கம், குலுக்கு, துலுக்கு.
Jōlt, *v. a.* குலுக்குதல், துலுக்குதல்.
Jōlt, *v. n.* குலுங்குதல், அசைந்தாடுதல்.
Jōlt'er, *s.* குலுக்குகிறவன்.
Jos'tle, *v. a.* குலுக்குதல், முட்டுதல், தட்டுப்படுதல், தள்ளுதல்.
Jot, *s.* புள்ளி, குற்று, அட்சரபாகம், அணு, அற்பம், சொற்பம்.
Jounce, *v. a.* அசைத்தல், குலுக்குதல், ஆட்டுதல்.
Jŏur'nal, *s.* நாளாகமம், தினச்சரித்திரம், தினவர்த்தமானம், பஞ்சிகை.
Jŏur'nal-ist, *s.* நாளாகமமெழுதுவோன், தினக்கணக்கன், தினவிருத்தாந்தலேககன், பஞ்சிகாசிரியன்.
Jŏur'nal-īze, *v. a.* நாளாகமமெழுதுதல், தினசரித்திரமெழுதுதல்.
Jŏur'ney, *s.* பிரயாணம், பயணம், நடை, யாத்திரை, தாவடி, பிரஸ்தானம்.
Jŏur'ney, *v.* பிரயாணம்பண்ணுதல், யாத்திரைபண்ணுதல்.
Jŏur'ney-ing, *s.* பயணம், பிரயாணம்.
Jŏur'ney-man, *s.* கம்மியக்கீழ்வேலைகாரன், உபஆசாரி.
Jŏur'ney-wŏrk, *s.* பொருத்தவேலை.
Jōve, *s.* சருவேஸ்பரன்.
a planet, வியாழன், சுரகுரு.

Jō'vi-al, *a.* களிப்பான, மகிழ்ச்சியான, களியாட்டான, சந்தோஷமான.
to be jovial, குதிகொள்ளுதல், துள்ளித்திரிதல், களியாடல்.
Jō'vi-al-ly, *adv.* துள்ளாட்டமாய், சந்தோஷமாய், களிப்பாய், மகிழ்ச்சியாய்.
Jō'vi-al-ness, Jō'vi-al-ty, *s.* ஆடம்பரம், அட்டோலிக்கம், களிப்பு, களி, கொண்டாட்டம், இடம்பம்.
Jowl, *s.* (*see* Jole.) கன்னம்.
Joy, *s.* மகிழ்ச்சி, களிப்பு, மனோச்சாகம், ஆலோலிதம், ஆலிக்கை, சந்தோஷம்.
and sorrow, சுகதுக்கம், சுபாசுபம். இன்பதுன்பம்.
Joy, *v. n.* களித்தல், அக்களித்தல், சந்தோஷப்படுதல், இன்புறுதல், இன்பமடைதல், மகிழ்தல்.
Joy'ful, *a.* சந்தோஷமுள்ள, அக்களிப்பான, இன்பமான, கொண்டாட்டமான, மகிழ்ச்சியான.
countenance, ஆலோலிதமுகம்.
noise, ஆரவாரம்.
tidings, சுபசெய்தி, சோபனகாரியம், மங்கலவிசேஷம்.
very, மிகுகளிப்பான, ஆனந்தமான.
Joy'ful-ly, *adv.* களிப்பாய், சந்தோஷமாய், மகிழ்ச்சியாய்.
Joy'ful-ness, *s.* மகிழ்ச்சி, அக்களிப்பு, கொண்டாட்டம், சந்தோஷம், களிப்பு, உவகை, ஆனந்தக்களிப்பு.
Joy'less, *a.* களிப்பற்ற, சந்தோஷமில்லாத, துக்கமுள்ள.
Joy'less-ly, *adv.* சந்தோஷமின்றி.
Joy'less-ness, *s.* துக்கம், அசந்தோஷம்.
Joy'ous, *a.* சந்தோஷமான, அக்களிப்பான, மகிழ்ச்சியான.
to be joyous, களித்தல், மகிழ்தல்.
Joy'ous-ly, *adv.* களிப்பாய், மகிழ்ச்சியாய், உவகையாய்.
Joy'ous-ness, *s.* களிப்பு, மகிழ்ச்சி, உவகை, மதர்ப்பு.
Jū'bi-lant, *a.* விசயகெம்பீரமான, மாகளிப்பான, ஆர்ப்பரிப்பான.
Ju-bi-lā'tion, *s.* வீரப்பிரதாபம், வீரக்களிப்பு, ஆர்ப்பரிப்பு, மகானந்தக்களிப்புக்கூறுகை.

Jū'bi-lee, *s.* யூதருக்குள்ஜம்பதாம்வருடக்கொண்டாட்டம், மகாகளிப்பு, பாவவிமோசனக்கிரயோற்சவம்.
Ju-cund'i-ty, *s.* களியாட்டு.
Ju-dā'ic-al, *a.* யூதருக்குரிய.
u-dā'ic-al-ly, *adv.* யூதருக்குரியதாய்.
Jū'da-ism, *s.* யூதசமயவொழுங்கு, யூதசமயாசாரம்.
Jū'da-īze, *v. n.* யூதசமயகோட்பாட்டிற்கொண்டுவருதல்.
Jū-da-īz'er, *s.* யூதசமயகோட்பாட்டில்வசப்படுகிறவன்.
Judge, *s.* நீதியதிபதி, தருமக்கருத்தன், நடுவன், நியாயாதிபதி.
 of articles, &c., மதிப்பாளி, விலைமதிக்கிறவன்.
 between parties, &c., நடுவன், மத்தியட்சன்.
 side, or assistant, வியாச்சியகுல்லியன், உதவியதிபதி.
Judge, *v. a.* நிதானித்தல், தீர்மானம்பண்ணுதல், நீதிதீர்த்தல், நியாயந்தீர்த்தல், பிரமாணித்தல், நடுத்தீர்த்தல்.
 a case, வழக்குத்தீர்த்தல்.
 to doom, ஆக்கினைக்குத்தீர்த்தல், விதித்தல், நிருவித்தல்.
 as rule, செங்கோல்செலுத்துதல், இராச்சியம்பண்ணுதல், ஆளுதல்.
Judg'er, *s.* நீதிதீர்க்கிறவன், நடுவன், தீர்ப்புச்சொல்வோன்.
Judge'ship, *s.* நீதித்துவம்.
Judg'ment, *s.* விவேகம், புத்தி, நியாயத்தீர்ப்பு, நீதித்தீர்ப்பு, நடுத்தீர்ப்பு.
 as awful punishment, தெய்வத்தீர்ப்பு, பழி, கொடுந்தண்டனை.
 mental, விவேகம், யுத்தி, மனத்தீர்ப்பு, விவேசனம்.
 as opinion, கருத்து, தீர்ப்பு, தீர்மானம், உத்தேசம்.
 seat, நியாயாசனம், நீதாசனம், பத்திராசனம்.
 day, நடுத்தீர்ப்புநாள், நீதிவிளக்குநாள்.
 to give judgment, தீர்ப்புச்சொல்லுதல், நடுச்சொல்லுதல்.
Jū'di-ca-to-ry, *s.* நீதித்தலம், நியாயாதிபதிகள்.
Jū'di-ca-to-ry, *a.* நீதித்தலத்துக்குரிய, நீதிசெலுத்துகிற.
Jū'di-ca-ture, *s.* நீதிதீர்க்கிறதத்துவம், நீதிச்சங்கம், நியாயசங்கம்.
Ju-di'cial, நியாயஸ்தலத்துக்கடுத்த, பஞ்சாயத்துக்கடுத்த.
 blindness, தெய்வநீதிப்படிவரும்மனக்குருட்டாட்டம்.
 law, தருமசாத்திரம், நியாயசாத்திரம், நீதிப்பிரமாணம்.
 punishment, தேவாக்கினை.
 trial, நியாயவிசாரணை, நீதிவிளக்கம்.
Ju-di'cial-ly, *adv.* நியாயமாய், நீதிப்பிரமாணமாய்.
Ju-di'cia-ry, *s.* நீதிவிசாரணைப்பிரமாணம், மிருதிபாவிகம், நீதிஸ்தாபனம்.
Ju-di'cia-ry, *a.* நீதிவிசாரணைக்கடுத்த.
Ju-di'cious, *a.* விவேகமுள்ள, உபாயமான, கருத்தான, புத்தியான, ஆழ்ந்தகருத்துள்ள, விசாலமானஅறிவுள்ள, யுத்தியான.
Ju-di'cious-ly, *adv.* நிதானமாய், புத்தியாய், யுத்தியாய், சூழ்ச்சியாய்.
Ju-di'cious-ness, *s.* புத்தி, யுத்தி, சூழ்ச்சம், சூழ்ச்சி.
Jug, *s.* கழுத்தொடுங்கியபாத்திரம், குண்டிகை, கரகம், கெண்டி.
Jug, *v. n.* குக்கிலாதிகளின்சக்கென்றசத்தம்.
Jug'gle, *s.* கைச்சிமிட்டு, செப்படிவித்தை, ஏய்ப்பு, காருடவித்தை.
Jug'gle, *v.* தந்திரம்பண்ணுதல், மாயம்பண்ணுதல், ஏய்த்தல்.
Jug'gler, *s.* தந்திரகாரன், காருடன், செப்படிவித்தைக்காரன், குறளிவித்தைக்காரன், மாயாவி.
Jug'gling, *s.* இந்திரசாலம், குறளிவித்தை, மாயாவித்தை, செப்படிவித்தை.
Jug'gling-ly, *adv.* மாயமாய், தந்திரமாய், உபாயமாய்.
Jū-gu-lar, *a.* கண்டத்துக்கடுத்த, கண்டத்தைப்பற்றிய.
Jūice, *s.* சாறு, சாரம், பால்.
 of flesh, meat, ஊனம், நிணம்.
 of leaves, இலைச்சாறு, சாகம்.
 of sugar cane, கருப்பஞ்சாறு.
Jūice'less, *a.* சாரமற்ற, சாகமற்ற.

Jūi'ci-ness, *s.* நீர்ப்பிடி, சாறுடைமை, சாரமுடைமை, நிணமுடைமை, களிப்பற்று.
Jūi'cy, *a.* சாறுள்ள, சாரமுள்ள.
Jū'jube, *s.* இலந்தை.
Jū'lep, *s.* அனுபானம்.
Jūl'ian, *a.* யூலியனுண்டுக்குரிய.
Ju-ly', *s.* ஆடிமாதம், கர்க்கடகமாதம்.
Jum'ble, *s.* குழப்படி, தாறுமாறு, எக்கச்சக்கம்.
a small cake, தேன்குழல்.
Jum'ble, *v. a.* கலக்குதல், மயக்குதல், குழப்புதல், சிக்குப்படுத்துதல், தலைதடுமாறவைத்தல்.
Jum'ble, *v. n.* கலங்குதல், மயங்குதல், தாறுமாறுருதல், தலைதடுமாறுதல், குழம்புதல்.
Jum'bler, *s.* தாறுமாறுருக்குவோன்.
Jump, *s.* குதி, கும்மாளம், கும்மாளி, பாய்ச்சல், துள்ளு.
a lucky chance, இடைவரத்து, அதிட்டம்.
as stays, மகளீர்சட்டை.
Jump, *v. a.* கடத்தல், வாவுதல்.
Jump, *v. n.* குதித்தல், பாய்தல், துள்ளுதல், உகளுதல், தாவுதல்.
about, துள்ளாட்டமாய்த்திரிதல், துள்ளித்திரிதல்.
down, &c., குப்புறுதல், தாழக்குதித்தல்.
over, கடத்தல், தாண்டுதல், வாவுதல், எட்டிப்பாய்தல்.
in play, தத்துதல், துள்ளுதல்.
Jump'er, *s.* துள்ளாட்டக்காரன்.
Junc'tion, *s.* இசைப்பு, இசைவு, கூட்டம், சங்கம், சந்தி, சந்திப்பு, புணர்ச்சி, ஐக்கம், பொருத்து.
of planets, சங்கமம்.
of rivers, சந்திப்பு, சங்கம்.
of roads, சந்தி, சதுக்கம்.
Junc'ture, *s.* சந்தி, சந்து.
of bones, &c., குளைச்சு, பொருத்து, பூட்டு, சந்து, கணு.
of time, சமயவேளை.
Jūne, *s.* ஆனிமாதம், மிதுனமாதம்.
Jun'gle, *s.* காடு, கானம், வனம், தூற்றுக்காடு.
Jun'gly, *a.* காடான, செடியுள்ள.
Jūn'ior, *s.* இளையவன், இளைஞன், சேட்டன்.
junior and senior, சேட்டனும்சேட்டனும்.
Jūn'ior, *a.* இளமையான, இளைய.
class, கீழ்வகுப்பு.
Jūn-ior'i-ty, *s.* இளமை.
Jū'ni-per, *s.* சூரைச்செடி, உரோதமம். *(Heb.)*
Junk, *s.* சோங்கு, குற்றி.
a chinese vessel, சலங்கு.
as oakum, கித்தான்.
Junc'ate, Junk'et, *s.* பலகாரம், பலபண்டம்.
Junk'et, *v. n.* அந்தரங்கவிருந்துணல், விருந்துபண்ணுதல்.
Jun'to, *s.* கலகசங்கம், கலககூட்டம்.
Jū'pi-ter, *s.* வியாழம், பிரகற்பதி, குரு.
Jū'rat, *s.* ஒருசேவகன், நகரத்தலைவன்.
Jū're-di-vī'no, *s.* தெய்வநீதி, தெய்வகற்பிதம், தேவவிதி.
Ju-rid'ic-al, *a.* நியாயப்பிரமாணத்துக்குரிய, நீதியதிபதிக்குரிய.
Ju-rid'ic-al-ly, *adv.* நியாயப்பிரமாணப்படி, பிரமாணதத்துவத்தின்படி.
Ju-ris-con'sult, *s.* நியாயப்பிரமாணவல்லவன், பிரமாணதேசிகன்.
Ju-ris-dic'tion, *s.* துரைத்தனம், நியாயாதிக்கம், ஆணையாசக்கரம், ஆக்கினைச்சக்கரம், ஆளுகை, செங்கோல்.
as province, மாகாணம்.
Ju-ris-dic'tion-al, Ju-ris-dic'tive, *a.* துரைத்தனத்துக்குரிய, துரைத்தனமுள்ள, அரசாட்சியுள்ள.
Ju-ris-prū'dence, *s.* இராசநீதி, இராசதருமம், நீதிசாத்திரம், தருமசாத்திரம், நியாயசாத்திரம்.
Jū'rist, *s.* நியாயசாத்திரி, நீதிவல்லோன்.
Jū'ror, *s.* மத்தியஸ்தன், நடுவன்.
Jū'ry, *s.* மத்தியஸ்தர், நடுவர்.
Jū'ry-man, *s.* மத்தியஸ்தன், நடுவன்.
Jū'ry-mäst, *s.* பதிற்பாய்மரம்.
Just, *s.* குதிரைவீராசிரமம், மாவுத்தாசிரமம்.
Just, *a.* நீதியுள்ள, நியாயமுள்ள, செம்மையான, நேரான, சமமான.

as correct, பிழையற்ற, சரியான, திருத்தமுள்ள, வழுவற்ற, ஏற்ற, தக்க.
dealing, நீதிநடை.
full, நிறைவுள்ள, பூரணமான.
to be just, நீதியாயிருத்தல்.
Just, *adv.* சற்று, உடனே.
merely, மட்டமாய்.
just get up, சற்றேயெழும்பு.
Jus'tice, *s.* நீதம், நீதி, நடுவுநிலை, சமநிலை.
as correctness, யதார்த்தம், தகைமை.
as a person, நீதவான், நீதிமான், நியாயாதிக்கன்.
Jus'tice-ship, *s.* நீதித்துவம்.
Just'i-fī-a-ble, *a.* நீதிமானுக்கப்படக்கூடிய.
Just'i-fī-a-ble-ness, *s.* நீதிமானுக்கப்படக்கூடியதன்மை, சரிக்கட்டப்படக்கூடியதன்மை.
Just'i-fī-a-bly, *adv.* சரிக்கட்டப்படக்கூடியதன்மையாய், நீதிப்படி.
Just-i-fi-cā'tion, *s.* நீதிமானுக்குகை.
in theology, பாவநிவாரணம், பிராயச்சித்தம்.
Just-if'i-ca-tive, *a.* நீதியாக்குகிற, பிராயச்சித்தஞ்செய்கிற.
Just-i-fi-cā'tor, Just'i-fī-er, *s.* நீதிமானுக்குவோன், பரிகரிப்போன்.
Just-if'i-ca-to-ry, *a.* நீதிமானுக்கத்தக்க.
Just'i-fy, *v. a.* நீதியென்றுதீர்த்தல், நீதிமானுக்குதல், குற்றமில்லையென்றுதீர்த்தல்.
Jus'tle, *v. a.* தள்ளுதல், ஒட்டுதல்.
Jus'tle, *v. n.* முட்டுணல், மொத்துணல், குலுங்குதல்.
Just'ly, *adv.* நியாயப்படி, நீதியாய்.
Just'ness, *s.* நிதானம், நிதார்த்தம், நீதி, நியாயம், நேர்மை, சமம்.
Jut, *v. n.* பிதுங்குதல், புறப்படுதல்.
Jut'ty, *s.* தாழ்வாரம், சாய்ப்பு.
Jū've-nile, *a.* யௌவனமான, பாலிய, இளய.
Ju-ve-nil'i-ty, *s.* இளமை, வாலத்துவம், பாலியம், யௌவனம்.
Jux-ta-po-si'tion, *s.* தொடைநிலை, அயனிலை.

K.

Ka-book', *s.* செம்மண்கல், செம்மக்கி.
Ka-leīd'o-scope, *s.* பலவன்னங்காட்டுமோர்கருவி, சித்திரஞ்ஞை.
Kal'en-dar, *s.* (*see* Calendar.) வருடபஞ்சாங்கம்.
Kā'li, *s.* கடலின்ஓர்பூண்டு, சாதாழை.
Kan-ga-roo', *s.* ஓர்மிருகம்.
Kaw, *s.* காக்கைக்கத்து.
Kaw, *v. n.* காக்காவெனல், காகமழுதல், காகங்கரைதல்.
Keck, *v. n.* உவட்டுதல், வயிற்றைப்புரட்டுதல், குமட்டுதல்.
Keck'le, *v. a.* அமாறுக்குஉறையிடுதல், ஆமாறுக்குப்புறக்காப்பிடுதல்.
Kedge, *s.* சிறுநங்கூரம்.
Kedge, *v. a.* நங்கூரம்போட்டுக்கப்பலையிழுத்தல், கப்பலைநெக்குதல், நகதார்வைத்தல்.
Keel, *s.* ஏராக்கட்டை, ஓடக்கட்டை.
as an even keel, நிலமட்டாக, தரைமட்டாக.
Keel, *v.* ஏராக்கட்டைவைத்தல்.
as to navigate, கப்பலோட்டுதல்.
to turn the keel, தளஞ்சாய்ந்தோடல்.
Keen, *a.* கூர்மையுள்ள, அவாவான, உருவச்செல்லுகிற, சுணையுள்ள, உறைப்பான.
Keen'ly, *adv.* கூர்மையாய், கடுமையாய், உறைப்பாய்.
Keen'ness, *s.* கூர்மை, சுணை, உருவிச்செல்லுந்தன்மை, கார்ப்பு.
bitterness, கசப்பு.
Keep, *s.* காவல், சிறை.
Keep, *v. a.* காத்தல், வைத்தல், பிடித்தல், பேணிவைத்தல்.
alive, பிழைப்பித்தல், உயிரைக்காத்தல், உய்யவைத்தல்.
back pay, &c., பிடித்துக்கொள்ளுதல், பின்வைத்தல்.
a country, ஆளுதல், புரத்தல், பாதுகாத்தல், பாலித்தல்.
company with, சகவாசம்பண்ணுதல், அன்னியோன்னியமாதல், கொள்கையாதல்.
in close restraint, கட்டுக்காவல்பண்ணுதல், கட்டாயம்பண்ணுதல்.
a day, அனுசரித்தல், ஆசரித்தல், கொண்டாடுதல்.

down, அமர்த்துதல், தாழ்த்துதல், அடக்குதல்.
house, இல்லோம்பல்.
in, மறித்தல், அடக்குதல், மறைத்தல், ஒளித்தல்.
a law, &c., கைக்கொள்ளுதல், அனுசரித்தல்.
out, தவிர்த்தல், நீக்குதல், விலக்குதல், ஒழித்தல்.
school, கல்விபயிற்றல், படிப்பித்தல்.
in subjection, கீழ்ப்படுத்தல், கட்டுப்படுத்தல், அடக்குதல்.
up, தாங்குதல், நிலைநிறுத்தல், தரித்தல்.
watch, காவல்காத்தல், காப்புவைத்தல், பாதுகாத்தல்.
with care, சேமமாய்வைத்தல், பேணமாய்க்காத்தல், பதனம்பண்ணுதல்.
Keep, *v. n.* நிலைத்தல், பதனழியாதிருத்தல், கெடாமனிற்றல்.
at a distance, விலகிநிற்றல், எட்டநிற்றல், ஒற்றிநிற்றல்.
in bed, படுத்திருத்தல்.
Keep'er, *s.* காவலன், காவற்காரன், காவலாளி, பாலனன்.
Keep'er-ship, *s.* காவற்றொழில்.
Keep'ing, *s.* காவல், காப்பு.
as conformity, ஒப்புமை, சமம்.
as fodder, குளகு, இலையுணும்விலங்குணு.
in painting, ஒப்பவரைகை.
Keep'sāke, *s.* நேசமுத்திரை, நேசக்குறிப்பொருள், ஞாபகப்பொருள்.
Keg, *s.* ஓர்வகைச்சிறுபேழை.
Kelp, *s.* கடற்பூண்டுச்சாம்பல்.
Ken, *s.* கண்ணுக்கெட்டுந்தூரம்.
Ken, *v. a.* காணுதல், பார்த்தல், தூரத்திற்காணுதல்.
Ken'nel, *v. n.* நாய்முதலியவற்றின்வீடு, குழி, வளை, மிருகாகரம்.
as water course, வாய்க்கால், நீர்க்கால், தூம்பு, மதகு.
Ken'nel, *v. n.* நாய்முதலியகிடத்தல்.
Kept, *a.* (*see* Keep.) காத்த, காக்கப்பட்ட, பாதுசெய்யப்பட்ட.
mistress, வைப்பாட்டி, கூத்தி.
Ker'chief, *s.* குட்டை, சதுக்கம்.
Kern, *s.* திரிகைக்கல், எந்திரக்கல்.
Kern, *v. n.* மணிபிடித்தல்.

Kern'el, *s.* கொட்டை, பருப்பு, அரிசி, பூரான், வித்து, மணி.
in the flesh, கழலை, காய்.
Kern'el, *v. n.* முற்றுதல், முதிர்தல், திரளுதல், மணிபிடித்தல், விளைதல்.
Ker'sey, *s.* பருக்கன், கம்பளிப்புடைவை.
Ker'sey-mēre, *s.* இரட்டுக்கம்பளிப்புடைவை.
Ket'tle, *s.* கொப்பரை, கடாரம்.
or pot with a spout or nose, கோணி, கெண்டி, குண்டிகை, கடிப்பம், கரகம்.
Ket'tle-drum, *s.* முழவு, மேளம், போர்ப்பறை, பட்டகம், இரணபேரி.
Kēy, *s.* துறப்பு, துறவுகோல், தாழ்க்கோல்.
with a hole, குழற்றுறப்பு.
note in music, இராகத்தின்முதற்சுரம்.
to a subject, குறிப்பு, பொழிப்பு.
as clue, துருவம், துறவு, மூலம், அசுகை, குழு.
hole, துறப்புவாய்.
stone, பொறுப்புக்கல், வில்மையக்கல்.
as wharf, துறை.
Kēy'age, *s.* துறைக்கூலி.
Kībe, *s.* பித்தவெடிப்பு.
Kīb'ed, *a.* பித்தவெடிப்புள்ள.
Kick, *s.* உதை, காலெறி, காலுதை.
of a gun, &c., எதிர்த்தாக்கு, அதைப்பு, இடிப்பு.
Kick, *v.* உதைத்தல், காலாலெறிதல், காலாலெற்றுதல்.
away, எற்றுதல்.
Kick'er, *s.* உதைக்கிறவன், உதைப்பது.
Kid, *s.* வெள்ளாட்டுக்குட்டி.
as fagot, சுல்லிக்கட்டு, சுப்பி.
Kid, *v.* வெள்ளாடீனுதல், சுல்லிகட்டுதல்.
Kid'dle, *s.* மீன்பிடிக்குங்கண்டி.
Kid'ling, *s.* வெள்ளாட்டுக்குட்டி.
Kid'nap, *v. a.* மனுக்களவெடுத்தல், மனுவைத்திருடுதல், நரசோரம்பண்ணுதல்.
Kid'nap-per, *s.* மனுக்கொள்ளையாடுவோன், நரசோரன்.
Kid'nap-ping, *s.* மனுக்கொள்ளை, நரசோரம்.

Kid'ney, *s.* குண்டிக்காய், மாங்கன், மாங்காயீரல்.

Kill, *v. a.* கொல்லுதல், கொலைசெய்தல், வதைத்தல், மாய்த்தல்.
 beasts, &c., அடித்தல், அறுத்தல், வெட்டுதல்.
 as beasts do, போடுதல், பீறுதல், இடறுதல், கடித்தல், அடித்தல், பாய்தல்.
 as quell, தணித்தல், அவித்தல், ஆற்றுதல், அமர்த்துதல்.

Kill'er, *s.* கொலையாளி, காதகன்.

Kill'ing, *s.* கொல்லுகை, கொலை, வதை, அதம்.

Kiln, *s.* சூளை, காளவாய், சுள்ளை.

Kiln'-dry, *v. a.* சூளையில்வாட்டுதல்.

Kilt, *s.* பாவாடை, முண்டு, சாயை.

Kim'bo, Kim'bōw, *a.* வளைந்த.
 to set arms a-kimbo, இருகைஇடுப்பூன்றிஇறுமாந்துநிற்றல்.

Kin, *s.* *(pl.)* இனம், உறவு, இரத்தக்கலப்பு, உறவர், உற்றார், மித்திரர், சுற்றம்.

Kin, *a.* உறவுள்ள, இரத்தக்கலப்புள்ள, இனமான.

Kīnd, *s.* விதம், மாதிரி, சாதி, தரம், இனம், குலம், தன்மை, பகுதி, பட்சம், பிரகாரம், வகை.
 different kind, பேதம், வேறுவகை.

Kīnd, *a.* தயையுள்ள, பட்சமுள்ள, உருக்கமான, தண்ணளியுள்ள, அன்புள்ள.
 hearted, பட்சமுள்ள, ஈரநெஞ்சுள்ள.
 man, தயாளு, அன்புள்ளவன்.
 woman, தயாளி, தயையுள்ளவள்.
 to be kind, கடாட்சம்வைத்தல், இரங்குதல், தயைவைத்தல்.

Kin'dle, *v. a.* கொளுத்துதல், பற்றவைத்தல், கோபமூட்டுதல், எரித்தல், சுவாலிப்பித்தல், மூட்டுதல்.

Kin'dle, *v. n.* பற்றுதல், எரிதல், சுவாலித்தல், கோபித்தல், மூளுதல்.
 as fire, தீப்பற்றுதல், கொழுந்துவிடுதல்.
 up, மூளுதல், முயற்சிகொள்ளுதல், திரங்கொள்ளுதல்.

Kin'dler, *s.* மூட்டுவோன், கொளுத்துவது.

Kīnd'li-ness, *s.* பட்சம், தயை, நேசம்.

Kīnd'ly, *a.* தயையுள்ள, பட்சமான.

Kīnd'ly, *adv.* பட்சமாய், பதமையாய்.

Kīnd'ness, *s.* தயை, பட்சம், அன்பு, இணக்கம், அருளுடைமை, ஆதரவு.
 parental, filial, &c., கரிசனம், உருக்கம்.

Kin'dred, *s.* சுற்றம், உறவு, இனம், கிளை, குடும்பம், வமிசம்.

Kin'dred, *a.* உறவான, இரத்தக்கலப்பான, உரித்தான, உரிய.

Kīne, *s.* *(pl.)* (*see* Cow.) பசுக்கள், கோக்கள்.

King, *s.* இராசா, இராயன், மன்னன், அரசன், வேந்தன்.

King'crăft, *s.* தந்திரமானஆளுகை.

King'dŏm, *s.* இராச்சியம், அரசு.
 of God, பரமராச்சியம்.

King'fish-er, *s.* மீன்கொத்திப்புள், சிரல், சிச்சிலி.

King'ly, *a.* இராசரீக்கமுள்ள, இராசத்துவமான, இராசீகமான, இராசத்துவத்துக்கடுத்த, மகா.
 state, இராசகோலம், இராசநிலை.

King's-ē'vil, *s.* கண்டமாலை.

King'ship, *s.* இராசத்துவம், இராசீகம்.

Kink, *s.* முறுக்கு.

Kins'fōlk, *s.* இனத்தார், தமர், சுற்றத்தார், ஒக்கல், பெந்துக்கள், உறவர்.

Kins'man, *s.* உறவன், சுற்றத்தான், இனத்தான்.

Kins'wŏm-an, *s.* சுற்றத்தாள், இனத்தவள்.

Kĭrk, *s.* தேவாலயம்.

Kĭr'tle, *s.* மேலங்கி, உத்தரீகம், புடைவை.

Kiss, *s.* முத்தம்.

Kiss, *v. a.* முத்தஞ்செய்தல், முத்தமிடுதல், கொஞ்சுதல்.

Kitch'en, *s.* அடுக்களை, மடைப்பள்ளி, அட்டில், பாகசாலை.

Kitch'en-gär-den, *s.* சமையற்சாமான்தோட்டம்.

Kitch'en-māid, Kitch'en-wench, *s.* சமையற்காரி.

Kitch'en-wŏrk, *s.* சமையல்வேலை.

Kīte, s. கருடன், பருந்து, இராசாளி, வல்லூறு.
paper, படம், பட்டம், காற்றாடி, கொடி.
Kit'ling, s. குட்டி, கன்று.
Kit'ten, s. பூனைக்குட்டி, பூனைப்பறழ்.
Kit'ten, v. a. பூனைகுட்டிபோடுதல், பூனைகுட்டியீனுதல்.
Klick, s. கடகடப்பு, கலகலப்பு.
Klick, v. n. கடகடத்தல்.
Knab, v. a. கடித்தல், அரித்தல்.
Knack, s. சாமர்த்தியம், கைத்திறம், கைவந்ததன்மை, திறம்.
as toy, trifle, சுலபமானபொருள், விளையாட்டுடைமை, சுசுலங்கள்.
Knack'y, a. சாமர்த்தியமுள்ள, உபாயமுள்ள, திறத்த.
Knag, s. மொத்தி, கணு, புடைப்பு, இளமான்கொம்பு.
a peg, முளை.
Knag'gy, a. மொத்தியுள்ள, முரண்டான, கணுவுள்ள.
Knap, v. a. நன்னுதல், கறித்தல்.
Knap'sack, s. அடைப்பம், சடங்கம், போர்ச்சேவகன்பொதி.
Knär, s. மொத்தி, கணு.
Knärl'ed, a. மொத்தியான, முறுக்குச்சிராயுள்ள.
Knāve, s. வஞ்சகன், கள்வன், சுழியன், குத்திரன்.
Knāv'er-y, s. வஞ்சனை, மடிப்பு, கள்ளம், திரியாவரம், தாறுமாறு, புரளி.
Knāv'ish, a. வஞ்சனையுள்ள, தப்பறையான.
Knāv'ish-ly, adv. வஞ்சனையாய், புரளியாய், குறும்பாய்.
Knāv'ish-ness, s. புரளி, அநீதம்.
Knēad, v. a. மாப்பிசைதல்.
Knēad'er, s. மாப்பிசைகிறவன்.
Knee, s. முழங்கால், முழந்தாள், முழந்து.
on a timber, வளைவு.
deep, முழங்கால்மட்டு, முழந்தாளளவு.
Knee'pan, s. முழந்தாட்சில், முழங்காற்சிரட்டை.
Kneel, v. a. முழங்காலினிற்றல், முழந்தாட்படியிடுதல்.
Kneel'er, s. முழந்தாட்படியிடுவோன்.
Knee'-trib'ute, s. முழந்தாள்வணக்கம்.
Knell, s. சாமணி, சவச்சேமமணியோசை.
Knick'-knacks, s. சுசுலங்கள், விளையாட்டுடமைகள்.
Knīfe, s. கத்தி.
a drawing knife, சீவுகிறவாள்.
a surgeon's knife, இரணவைத்தியசத்திரம், சத்திரக்கத்தி.
Knīght, s. ஓர்பட்டப்பெயர்.
Knīght, v. a. பட்டந்தரித்தல்.
Knīght-er'rant, s. (pl.) ஆயுததாரிகள், திக்குவிசயன்.
Knit, v. a. பின்னுதல், முடிதல், புரைதல், துன்னுதல்.
work cloth or garment, நெய்தஉடுப்பு.
the brows, நெரித்தல், புருவநெரித்தல், குறுவித்துப்பார்த்தல்.
to unite, பொருத்துதல், இசைத்தல், சந்துசெய்தல்.
Knit, v. n. இசைதல், பொருந்துதல், ஊறுதல், ஒன்றுதல், கூடுதல்.
Knit'ter, s. பின்னுகிறவன்.
Knit'ting-nee'dle, s. பின்னலூசி, இழையூசி.
Knob, s. குமிழி, முகிழ், மொக்குள்வடிவம், கொம்மை.
to fasten on knobs, குமிழ்தைத்தல், குமிழிபோடுதல்.
Knob'bed, Knob'by, a. குமிழ்பொருந்திய, குமிழுள்ள.
Knock, s. தட்டு, அடி, கொட்டு, அறை.
Knock, v. தட்டுதல், அடித்தல், கொட்டுதல், அறைதல்.
down, அடித்துவிழுத்தல்.
out the teeth, தகர்த்தல், உடைத்தல்.
off, தட்டுதல், பறித்துவிழுத்தல்.
off in auction, ஏலத்திற்கூறுதல், தட்டிக்கூறுதல்.
under, இணங்குதல், தோற்றல்.
Knock'er, s. தட்டுவோன், கொட்டுவோன், தட்டுங்கருவி, அறைகருவி.
matter, துக்கமானகாரியம்.
mistake, வலுபிழை, வலுமோசம், பெருமோசம், படுமோசம்.
to be serious, பாரித்தல், கவலைப்படுதல், கவனித்தல்.
Sē'ri-ous-ly, *adv.* பாரமாய், கவனமாய், பயபத்தியாய், கவலையாய்.
Sē'ri-ous-ness, *s.* பத்தி, கவனம், பயபத்தி, குருவுகை, அடக்கம், பொறுப்பு, பாரசிந்தனை, மனஅமைதி.
Ser'mon, *s.* பிரசங்கம், பிரசித்தம், உபதேசம், போதகம்.
Ser'mon-īze, *v. n.* பிரசங்கித்தல், பிரசங்கம்பண்ணுதல், உபதேசித்தல், போதித்தல், விரித்துரைத்தல்.
Se-ros'i-ty, *s.* (*see* Serum.) உதிரநீர், நிணநீர், மாமிசநீர்.
Sē'rous, *a.* நிணநீர்ப்பிடிப்பான, நிணநீர்சுரந்த, மாமிசநீருள்ள.
Ser'pent, *s.* பாம்பு, சருப்பம், அரவம்.
fiery, கொள்ளிவாய்ச்சருப்பம்.
flying, பறவைநாகம், குக்குடசருப்பம்.
Ser'pen-tīne, / Ser'pen-tīne-stōne, *s.* ஓர்வகைக்கல்.
Ser'pen-tīne, *a.* கோணலான, திருகல்முருகலான, வக்கிரமான, சருப்பாகாரமுள்ள, பாம்போட்டவடிவுள்ள.
Ser'rate, / Ser'rā-ted, *a.* கெத்துள்ள, கருக்கான, பல்லுள்ள.
Ser-rā'tion, *s.* பல்லுப்பல்லாக்குகை, கருக்குக்கொத்துகை.
Ser'ra-ture, *s.* கருக்குக்கொத்துகை, பல்லிடுகை.
Ser'rous, *a.* அரிவாட்பற்போன்ற, கெத்துள்ள, கருக்கான.
Sē'rum, *s.* ஊனம், நிணநீர், கள்ளநீர்.
Serv'ant, *s.* வேலைக்காரன், பணிவிடைகாரன், ஏவலாளி, தொண்டன், தாசன், கிங்கரன், கையாள்.
of a priest, பரிசாரகன்.
in a religious sense, அடியன், தொண்டன், பத்தன், தாசன்.
an eye-servant, பார்வைக்கூழியஞ்செய்வோன்.

Serve, *v. a.* பணிதல், தொண்டுசெய்தல், ஊழியஞ்செய்தல், அடிமைசெய்தல், ஆட்படுத்துதல், உபயோகித்தல்.
a duty, அனுசரித்தல், சேவகஞ்செய்தல், சேவித்தல், ஆட்படுத்தல், அடிமைப்படுத்தல்.
a writ or warrant, கோட்டுக்கழைத்தல், கட்டளைகற்பித்தல்.
for, உதவுதல், கூடுதல்.
to serve out, போசனம்பகிர்ந்துகொடுத்தல், பந்திபரிமாறுதல்.
to serve up, போசனமாயத்தம்பண்ணிக்கொடுத்தல்.
as submit, அடிப்படுத்தல், கீழ்ப்படுத்தல், இணக்குதல்.
Serve, *v. n.* பணிசெய்தல், தொண்டுசெய்தல், உதவுதல்.
Serv'ice, *s.* பணிவிடை, வேலை, ஊழியம், சேவகம், தொழில்.
to the deity, வணக்கம், ஆராதனை, தொண்டு, தாசிகம்.
as official duty, தொழில், சேவகம், உத்தியோகம்.
Serv'ice-a-ble, *a.* ஒத்தாசையுள்ள, பலனுள்ள, உதவியான, பிரயோசனமுள்ள.
to be serviceable for, கூடுதல், உதவுதல், உபயோகமாதல்.
Serv'ice-a-ble-ness, *s.* உதவி, ஒத்தாசை, இணக்கம், உபயோகம்.
Serv'ice-a-bly, *adv.* அனுகூலமாய், பிரயோசனமுள்ளதாய், பலனாய்.
Serv'ile, *a.* குற்றேவலான, ஒடுக்கவணக்கமான, ஒதுக்கமான.
person, தொழும்பன், சிறை, அடிமை, ஈனன், கடையுணி.
spirit, தொழும்புத்தனம், ஏழைத்தன்மை, கீழ்மை, எளியகுணம், ஒடுக்கவணக்கமுள்ளகுணம்.
work, தொழும்பு, சிறைவேலை, தாசிகம், அடிமைவேலை.
Serv'ile-ly, *adv.* அடிமைத்தனமாய், கீழ்மையாய், ஈனமாய்.
Serv'ile-ness, / Ser-vil'i-ty, *s.* பதுக்கம், அடக்கம், கீழ்மை, அடிமைத்தனம், ஒதுக்கம்.
Serv'i-tor, *s.* பணிவிடைகாரன், அடைப்பைக்காரன், குற்றேவல்செய்வோன், சிற்றுள்.

Serv'i-tor-ship, *s.* குற்றேவல், பணிவிடை, ஊழியம்.
Serv'i-tude, *s.* சேவகம், அடிமைத்தொழில், கைங்கரியம், அடிமைத்தனம்.
Ses'a-me, Ses'a-mum, *s.* } எள்ளு, திலம்.
Ses'sion, *s.* கூட்டம், கோஷ்டி, கோட்டி, சங்கம், சமுதாயம்.
as time of council, ஆலோசனைச்சமயம், பஞ்சாயத்தார்கூடுங்காலம், மந்தனவேளை, கோஷ்டிகாலம்.
place of, பஞ்சாயத்தார்கூடுஞ்சாலை, ஆஸ்தானமண்டபம்.
Sess'-pool, *s.* குப்பைக்குழி, நீர்க்குழி.
Set, *s.* சோடு, கூட்டம், இணை.
time, நிரூபணகாலம்.
of tools, ஏர்ச்சீர், சீர், தட்டுமுட்டு, பணிமுட்டு, தளபாடம்.
a dead set, அசையாநிலை, பொறுப்பு.
Set, *v. a.* இடுதல், ஊன்றுதல், நிறுத்துதல், வைத்தல், ஸ்தாபித்தல்.
against, விரோதப்படுத்தல், மூட்டுதல், சார்த்திவைத்தல்.
a-going, தொடக்குதல், முயற்றுதல்.
apart, நியமித்தல், நேர்தல், பிரித்தல், ஏற்படுத்தல், பரிசுத்தப்படுத்தல்.
aside, விலக்கிவைத்தல்.
a boat, ஓடம்விடுதல், வள்ளம்விடுதல்.
a bad example, துன்மாதிரிகாட்டுதல், துன்னெறிகாட்டடல்.
a dislocated joint, சந்துசெய்தல், சுளுக்கெடுத்தல்.
before, முன்வைத்தல்.
a flag, a banner, கொடியேற்றுதல், கொடிகாட்டுதல், கொடிதூக்குதல்.
a good example, நன்மாதிரிகாட்டுதல், நன்னெறிகாட்டடல்.
down or on, பணியவைத்தல், கிடத்தல், வைத்தல், போடுதல்.
in, தொடங்குதல்.
in gold or enchase, தங்கமிடுதல், தங்கமழுத்துதல், தங்கமிழைத்தல்.
in order, செப்பனிடுதல், ஒழுங்குப்படுத்துதல், கிரமப்படுத்தல், அணிவகுத்தல், வரிசையாக்கல்.
a mark, குறித்தல்.
off, அலங்கரித்தல், வன்னித்தல்.
teeth on edge, கூசுதல், கொடுகுதல்.
on fire, தீக்கொளுத்துதல், தீமூட்டுதல், நெருப்புப்பற்றவைத்தல்.
open, வெளியாய்வைத்தல், திறந்துவிடுதல், வெளிப்படுத்தல்.
on, as excite, ஏவுதல், எழுப்புதல், தூண்டுதல், மூட்டுதல்.
on foot, ஏற்படுத்துதல், மூட்டுதல், முயற்றுதல், தொடக்குதல்.
precious stones, அழுத்துதல், பதித்தல், இழைத்தல், கசிதஞ்செய்தல்.
sail, பாய்விரித்தல், பாய்தூக்குதல்.
seeds, தாழ்த்தல், புதைத்தல்.
to work, வேலைகற்பித்தல்.
a snare, கண்ணிவைத்தல், ஒளிவைத்தல், கண்ணிகுத்துதல், கண்ணிபடுத்தல், சுருக்கேற்றுதல்.
a strong guard, காவல்கட்டுபண்ணுதல், காவல்வைத்தல்.
a trap, பொறியேற்றுதல், பொறிவைத்தல், சூதுபண்ணல்.
types, அச்சடுக்குதல், அச்சுக்கோத்தல், எழுத்தடுக்குதல்.
a razor, பூவெழுப்புதல், கதுமையாக்குதல், கூராக்குதல்.
a seal, முத்திரித்தல், முத்திரையிடுதல், முத்திரைபதித்தல்.
up, ஏற்றுதல், கட்டுதல், உயர்த்துதல், நிமிர்த்தல், நிறுத்துதல்.
up slantingly, ஒருக்கணித்தல், ஒருச்சரித்தல், சார்த்துதல்.
upright, நிமிர்த்துதல், நிறுத்துதல்.
as plants, நாட்டுதல், நடுதல்.
as insert, செருகுதல், கடாவுதல், தொற்றுவைத்தல்.
out or transplant grain, &c., பாவுதல், நடுதல், பதித்தல்.
one's face against, எதிர்முகமாக்கல், நேரிட்டுப்பார்த்தல், நேர்முகமாக்கல், முகமாற்றுதல்.
further off, out of the way, &c., ஒற்றிவைத்தல், தள்ளிவைத்தல்.
Set, *v. n.* சாய்தல், படுதல், அத்தமித்தல்.
about, தலையிடுதல், கையிடுதல், தலைப்போடுதல், தொடங்கல்.
out, புறப்படுதல், பெயர்தல், வெளிக்கிடுதல், பிரஸ்தானப்படுதல்.
as the jaws in a fit, கிட்டுதல்.

as the eyes at death, செருகுதல், கண்இடுக்குதல்.
in as monsoon, காற்றுப்பெயர்தல், காற்றுத்தொடங்குதல்.
Set, *a.* வைக்கப்பட்ட, குறிக்கப்பட்ட, நிலையான, தீர்மானமான.
time, நிரூபணகாலம், நியமித்தகாலம்.
Se-tā'ceous, *a.* முண்மயிரடர்ந்த.
Set'-off, *s.* பிரதிகிருத்தியம், பதிற்செய்கை, சரிக்குச்சரிக்கட்டுகை.
Sē'ton, *s.* காரத்திரி.
Set-tee', *s.* சாய்மணையுள்ளபீடம்.
Set'ting, *s.* வைப்பு.
of a current, நீரோட்டம், நீர்ப்பாய்ச்சல், சலப்பெருக்கம்.
pole, மரக்கோல், மரக்கலந்தாங்குகோல், ஊன்றுகோல்.
of the sun, &c., அத்தமனம், அத்தமிப்பு, படுகை.
Set'tle, *s.* சாய்மணையுள்ளபீடம்.
Set'tle, *v. a.* தீர்த்தல், நிறுத்துதல், ஒழுங்குப்படுத்துதல்.
a boundary, எல்லைகட்டுதல்.
a concern, வரையறுத்தல், சிக்கறுத்தல், தீர்ப்புக்கட்டுதல்.
accounts, கணக்குத்தீர்த்தல்.
a daughter, மணமுடித்தல்.
a debt, இறுத்தல், தீர்த்தல்.
a dispute, சமாதானப்படுத்தல், வழக்குத்தீர்த்தல்.
difficulties, &c., ஊடறுத்தல், தீர்த்தல், பிணக்கறுத்தல், ஒப்புரவாக்கல்.
a minister, அபிஷேகஞ்செய்தல்.
a price, விலைதீர்த்தல்.
in one's mind, தீர்மானம்பண்ணுதல், உறுத்துதல், நிச்சயப்படுத்தல்.
one's self, குடியேற்றுதல், குடியிருத்துதல், வாழ்க்கைப்படுத்தல்.
to fix, நிலைப்படுத்தல், நிறுத்தல், திடப்படுத்தல், அஸ்திவாரப்படுத்தல்.
to people, குடியேற்றுதல்.
as adjust, பொருத்துதல், இணக்குதல், இணைத்தல்.
Set'tle, *v. n.* அடைதல், படிதல்.
in a place, தங்குதல், குடியிருத்தல், குடியேறுதல், வதிதல்.
for prey, விழுதல், படிதல்.
on as a bird, படிதல், பதிதல்.
as duel, noise, &c., அடங்குதல், அடைதல், அமர்தல், படிதல், தணிதல்.
as a minister, குருவாகஏற்படுதல், குருப்பிரதிட்டைபெறுதல்.
to marry, மணமுடித்தல்.
as an old building, a post, &c., இருந்துபோதல், தாழ்தல், கீழிறங்குதல்.
Set'tled, *a.* திட்டமான, தீர்க்கமான, நிலையுள்ள, உறுதியான.
price, திடவிலை, தீர்க்கமானவிலை, தீர்ப்பானவிலை, சரிவிலை.
account, தீர்ந்தகணக்கு.
to be settled, தீர்தல், நிலைப்படுதல்.
Set'tled-ness, *s.* நிலைப்பாடு, உறுதி, நிலை, ஸ்திரம்.
Set'tle-ment, *s.* இணக்கம், திருத்தம், திட்டம், தீர்ப்பு, தீர்க்கம், தீர்மானம், நிலை, உறுதி, இல்வாழ்க்கை.
as income, வருமானம்.
of a minister, ஆசாரியபிஷேகம்.
Set'tler, *s.* குடியேறுவோன்.
Set'tling, *s.* படிவு, தீர்ப்பு, தீர்மானம், நிலைப்படுகை.
settlings, மண்டி, கசாளம், கூளம், வண்டல், அடையல்.
Set'tling, *a.* தீர்க்கிற, நிலைப்படுத்துகிற, நிறுத்துகிற, ஸ்திரப்படுத்துகிற.
Sev'en, *a.* ஏழு, சத்தம்.
of or for, each, எவ்வேழு, வகைக்கேழு, ஏழேழு.
Sev'en-fōld, *s.* எழுமடங்கு, ஏழத்தனை.
Sev'en-nīght, *s.* (*see* Sennight.) ஒரு வாரம், ஏழுநாள்.
Sev'en-scōre, *s.* நூற்றுநாற்பது, எழிருபது, சப்தவிமிசதி.
Sev'en-teen, *a.* பதினேழு, பன்னேழு.
Sev'en-teenth, *a.* பதினேழாம்.
Sev'enth, *a.* ஏழாம்.
Sev'enth-ly, *adv.* ஏழாவதாய்.
Sev'en-ti-eth, *a.* எழுபதாம்.
Sev'en-ty, *a.* எழுபது, எழுபான்.
Sev'er, *v. a.* அறுத்தல், கிழித்தல், பிரித்தல், கூறுசெய்தல், சேதித்தல், துண்டித்தல், பிளத்தல், பின்னப்படுத்துதல், பிய்த்தல்.
Sev'er, *v. n.* அறுதல், இறுதல், பிரிதல், பெயர்தல், பிளந்துபோதல், கிழிதல், பிய்தல்.

Sev'er-al, *s.* அனேகம், வெவ்வேறு.
Sev'er-al, *a.* சில, பல, வெகு, அனேக, நானாவித, பற்பல.
persons, பலர், அனேகர், வெகுபெயர், திரண்டோர்.
Sev'er-al-ly, *adv.* பலராய், பலவாய், வெவ்வேறாய், தனித்தனியாய்.
Sev'er-al-ty, *s.* தனிமை, கேவலம்.
Sev'er-ance, *s.* பின்னப்படுத்துகை, வெவ்வேறாக்குகை.
Se-vēre', *a.* உறைப்பான, குரூரமான, கடினமான, கொடிய, அகோரமான, நிட்டூரமுள்ள, உக்கிரமான.
battle, உரத்தபோர், கொடும்போர், அகோரயுத்தம், வல்யுத்தம்.
contest or quarrel, உரத்ததருக்கம், வலுகம்பலை, மகாவாது.
fever, உரத்தகாய்ச்சல், அகோரசுரம்.
pain, பெலத்தநோ.
punishment, கடியவாக்கினை.
reproof, கடுங்கண்டிப்பு, கண்டிப்பு.
to be severe, நெருக்குதல், கற்கசம் பண்ணுதல், கடினமாயிருத்தல், கண்டிப்பாயிருத்தல்.
Se-vēre'ly, *adv.* நெருக்கமாய், கடினமாய், குரூரமாய், அகோரமாய்.
Se-ver'i-ty, *s.* அகோரம், உக்கிரம், உறைப்பு, குரூரம், நெருக்கம், நிட்டூரம், கொடுமை, கடுமை.
Sew, *v. a.* தைத்தல், புரைதல்.
a double seam, கெட்டித்தையல்தைத்தல், கட்டுத்தையல்தைத்தல்.
over and over, துன்னைத்தையல்தைத்தல்.
slightly, நூலோடுதல்.
through, உருவத்தைத்தல், குற்றித்தைத்தல், பீறத்தைத்தல்.
through and through, குற்றிக்குற்றித்தைத்தல்.
a wound, இழைப்பிடித்தல், இரணந்தைத்தல்.
to darn, இழைபோடுதல், இழைக்குற்றுதல், இழையிழைத்தல்.
Sew'er, *s.* தையற்காரன், பாணன், துன்னன்.
Sew'er, *s.* மதகு, சலத்துவாரம்.
Sew'er-age, *s.* கீழ்மதகுள்ளவேலை.
Sew'ing, *s.* தையல், துன்னம்.
silk, பட்டுநூல்.
thread, தைக்குநூல்.
Sex, *s.* பால், இலிங்கம்.
female, பெண்பால், ஸ்திரீலிங்கம்.
male, ஆண்பால், புல்லிங்கம்.
Sex'a-gen-a-ry, *a.* அறுபதுகொண்ட, அறுபதுவயதுள்ள.
Sex-a-ges'i-mal, *a.* அறுபதாம்.
Sex-an'gu-lar, *a.* அறுகோணமுள்ள, சட்கோணமுள்ள.
Sex-en'ni-al, *a.* ஆறுட்டையான, ஆறுவருடத்துக்கொருமுறையான.
Sex'tant, *s* விருத்தசட்டகம், விருத்தசட்டகமாத்திரைக்கோல்.
in astronomy, வட்டத்திலாறிலொன்று, விருத்தசடாம்சம்.
Sex'tile, *s.* விருத்தசட்டகவளவானது, அறுபதுபாகைதூரக்கிரகநிலை, சடாம்சநோக்கு.
Sex'ton, *s.* கோவில்மணியகாரன், கோவில்மூப்பன், கோவிற்பராபத்தியகாரன், கோவில்விசாரணைகாரன்.
Sex'ton-ship, *s.* கோவில்மணியம்.
Sex'tu-ple, *a.* அறுமடங்கான.
Sex'u-al, *a.* ஆண்பால்பெண்பாலுக்கடுத்த, பாலுக்குரிய.
desires, காமம், மோகம், இராகம்.
intercourse, கலவி, புணர்ச்சி.
Shab, *v.* நீக்குதல், விடுதல், மறுத்தல்.
Shab'bi-ly, *adv.* எளிமையாய், அற்பமாய், கோலக்கேடாய், ஈனமாய்.
Shab'bi-ness, *s.* எளிமை, அற்பம், கோலக்கேடு, அலங்கோலம்.
of a garment, பீற்றல்.
Shab'by, *a.* எளிமையான, அற்பமான, அலங்கோலமான, கோலங்கெட்ட, ஈனமான, கூதறையான.
clothes, கந்தை, பீறற்புடைவை.
Shack'le, *v. a.* கட்டுதல், கூட்டிக்கட்டுதல், பூட்டுதல், தளைத்தல்.
to be shackled, பூணுதல், கட்டுண்ணல், தளைப்படுதல்.
Shack'le, } *s.* தளை, விலங்கு, பாசம்,
Shack'les, } பூட்டு, கட்டு, பந்தம், துலங்கு, பிணையல்.
Shad, *s.* உல்லன்மீன், உல்லம்.
Shāde, *s.* நிழல், சாயை.

partial, பூங்காரம், மந்தாரம், மங்குளம், மப்பு, மூய்சாப்பு.
as retirement, இளைப்பாறுமிடம், ஏகாந்தமாயிருக்குமிடம், ஒதுக்கம்.
a screen, மறைவு, ஒத்தாப்பு, படல்.
Shāde, *v. a.* நிழலிடுதல், நிழல்செய்தல்.
Shād'er, *s.* நிழலிடுகிறவன், நிழலிடுகிறது.
Shādes, *s. (pl.)* இருட்டுலோகம், பாதாளலோகம், மரித்தோர்ஸ்தானம்.
Shād'i-ness, *s.* சாயையுள்ளதன்மை, நிழலுடைமை, மூய்சாப்புடைமை.
Shad'ōw, *s.* நிழல், சாயை, விம்பம், பிரதிவிம்பம், மூய்சாப்பு.
Shad'ōw, *v. a.* நிழலிடுதல், சாயைவீசுதல், வெளிச்சத்தைமறைத்தல்.
to foretell, முற்குறித்தல், தெரிவித்தல்.
Shad'ōw-ing, *s.* நிழலிடுகை, மொய்க்கை.
Shad'ōw-y, Shā'dy, *a.* நிழலுள்ள, மந்தாரமான, மங்குளமான.
Shăft, *s.* காம்பு, கால், கோல், சலாகை, அத்திரம், ஆயுதங்களின்பிடி.
of a plow or carriage, ஏர்க்கால்.
as missile, எறியாயுதம்.
Shag, *s.* உரோமக்கட்டு, உரத்தநிறைமயிருடைமை.
Shag, *v. a.* சிலும்புதல், சிலிர்த்தல், உரோமம்பொடித்தல்.
Shag, Shag'ged, Shag'gy, *a.* உரோமக்கட்டுள்ள, நிறைமயிருள்ள.
hair, தூற்றுமயிர், சடை, சடைமயிர், பறட்டைமயிர்.
to be shaggy, சிலும்புதல், தூறுதல்.
Shag'ged-ness, *s.* நிறைமயிருடைமை.
as rough, கரடுமுரடான.
Shāke, *s.* அசைவு, அசைப்பு, குலுக்கு, நடுக்கம், ஆட்டம்.
of the head, சிரகம்பம், தலையாட்டம், தலைதுலுக்கு.
of the hand, கரகம்பம், கைவிதிர்ப்பு.
as earthquake, பூகம்பம்.
Shāke, *v. a.* அசைத்தல், குலுக்குதல், கம்பித்தல், ஆட்டுதல், அலைத்தல்.
a fruit tree, &c., உதிர்த்தல், உலுத்துதல், உலுக்கல்.
off, தட்டுதல், உதறுதல்.
the head, சிரகம்பம்பண்ணுதல், தலையாட்டுதல், தலைதுலுக்குதல், தலைநடுக்குதல்.
to be shaken in purpose, குலைதல், குழம்புதல், தட்டழிதல், சலித்தல்.
to shake hands, வினவுதல்.
the skin topically as a beast does, துணுக்கெறிதல்.
Shāke, *v. n.* குலுங்குதல், அசைதல், ஆடுதல், அலைதல், அதிர்தல், நடுங்குதல், சலித்தல், துடித்தல்.
Shāk'er, *s.* அசைப்போன், குலுக்குவோன், குலுங்குவோன்.
Shāk'ing, *s.* குலுக்கு, அசைவு, ஆட்டம், அலைவு, அதிர்ச்சி, நடுக்கம், சலனம், துடிப்பு, கம்பிதம்.
Shā'ky, *a.* வெடிப்புள்ள.
Shāle, *s.* ஓடு, கோது, உமி, புறணி.
Shall, *(aux. verb.)* வேண்டும், எதிர்காலக்குறிப்பிடைச்சொல்.
Shal'lop, *s.* இருபாய்மரப்படகு.
Shal'lōw, *s.* தாழ்வின்மை, ஆழமின்மை.
wanting sense, புத்தியீனம், புத்திக்குறைவு, மதிக்குறைவு.
at sea, &c., களம், திடல், திட்டி, திட்டு, திடர், பூண்டி.
Shal'lōw, *v. a.* திடராக்கல், மேடாக்கல், திட்டியாக்கல்.
Shal'lōw, *a.* பரவையான, திடலான, தாழ்வற்ற, மிதப்பான.
as dull, மழுங்கின, மந்தமான.
witted, பேதைமையான, சிற்றறிவுள்ள, புல்லறிவுள்ள.
water, மிதப்புத்தண்ணீர், ஆழமில்லாததண்ணீர்.
mortar for pounding, திட்டையுரல்.
Shal'lōw-ly, *adv.* திடலாய், மேலெழுச்சியாய், ஆராய்வின்றி.
Shal'lōw-ness, *s.* திடர், மேடு, ஆழமின்மை, புத்தியீனம்.
Sham, *s.* கள்ளம், தந்திரம், மாயம், எய்ப்பு, எத்து, போலி, அணுப்பு.
Sham, *v. a.* கள்ளம்பண்ணுதல், எய்த்தல், தந்திரம்பண்ணுதல்.
Sham, *a.* கள்ளமான, மாரீசமான, போலியான, மாயவேடமான.
blow, பொய்யடி, கள்ளடி.

court, வியாச்சியம்பழகுமிடம், போலிவியாச்சியம்பழகுமிடம்.
excuses, வீண்போக்கு
fight, பரிகாசப்போர், விளையாட்டுப்போர், இணங்கன்போர்.
sleep, கள்ளநித்திரை, அறிதுயில்.
Sham'bles, s. (pl.) இறைச்சிக்கடை, கசாப்புக்கடை, கறிக்கடை, மாமிசகூலம்.
Sham'bling, s. தள்ளாட்டநடை.
Shāme, s. வெட்கம், நாணம், கூச்சம், இலச்சை, உரோசம்.
to cry shame at a defeat, இகழ்ச்சிக்குறிப்புக்காட்டுதல்.
Shāme, v. a. வெட்கப்படுத்துதல், பங்கப்படுத்துதல், பழித்தல்.
Shāme, v. n. வெட்கப்படுதல், பங்கப்படுதல், அபிமானப்படுதல்.
Shāme'fāc-ed, a. வெட்கமுள்ள, கூச்சமுள்ள, நாணமுள்ள.
Shāme'fāc-ed-ly, adv. கூச்சமாய், வெட்கமாய், நாணமாய்.
Shāme'fāc-ed-ness, s. வெட்கம், நாணிதம், இலச்சை, கோழை, சங்கோசம்.
Shāme'ful, a. வெட்கமுள்ள, நாணமான, இலச்சையான, அவக்கியாதியுள்ள, கூச்சமுள்ள.
Shāme'ful-ly, adv. வெட்கமாய், கூச்சமாய், நாணமாய், மானமாய்.
Shāme'less, a. வெட்கமற்ற, இலச்சைகெட்ட, உரோசமற்ற.
lewdness, மிருகசஞ்சாரம், மிருகமைதுனம், மிருகப்புணர்ச்சி.
person, நாணங்கெட்டவன், உரோசங்கெட்டவன், உரோசமற்றவன்.
Shāme'less-ly, adv. வெட்கமின்றி, இலச்சையீனமாய், நாணக்கேடாய், மானக்கேடாய், உரோசக்கேடாய்.
Shāme'less-ness, s. நாணக்கேடு, வெட்கமின்மை, மானக்கேடு.
Shām'er, s. வெட்கப்படுத்துவோன், நாணங்கெடுப்பது.
Sham'mer, s. எத்தன், தந்திரன், உபாயி.
Sham-poo', v. a. சோம்புமுறித்தல், சரீரத்தினுளைவுமுதலியவைநீக்குதல், ஆயாசந்தீர்த்தல்.
Shank, s. காம்பு, பித்தல், கணைக்கால்.
of a knife, காது, கால்.
of scissors, and nut-cutters, கண்.
of a wheel or grindstone, நாராசம், அச்சு.
as crank, சுழற்றும்அச்சாணி.
Shank'ed, a. காதுள்ள, கண்ணுள்ள, சுழற்றும்அச்சாணியுள்ள.
Shāpe, s. உரு, உருவம், உரூபு, ஆகாரம், வடிவு, சாயல், வடிவம், ஆகிருதி, கோலம், விக்கிரகம், மூர்த்தி.
human, மனுவுரு, மூர்த்தம்.
small, சிற்றுரு.
change of, விகாரரூபம்.
Shāpe, v. a. உருவாக்குதல், உருப்படுத்துதல், சாயலாக்குதல்.
to be shaped, உருவாகுதல், உருப்படுதல், சாயலாகுதல்.
Shāpe'less, a. அரூபமான, உருபமற்ற, வடிவற்ற, சாங்கமற்ற.
Shāpe'less-ness, s. அழகு, உருவம், சவுந்தரியம், சுந்தரம், சாங்கம்.
Shāpe'ly, adv. வடிவாய், சாங்கமாய், அழகாய், உருவாய்.
Shärd, s. கலவோடு, உடைந்தஓட்டுத்துண்டு, சல்லி.
as frith, சமுத்திரவாய்க்கால்.
Shāre, s. பங்கு, கூறு.
of land, நிலப்பங்கு.
of a plough, கொழு, காறு.
the larger share, கதித்தபங்கு.
an equal share, சரிபங்கு, சமபங்கு.
Shāre, v. a. பங்கிடுதல், பகிருதல், ஈதல், பிரித்தல், பாசனஞ்செய்தல், பாதுசெய்தல்.
to go shares, சமபாகஞ்செய்தல், சரிபங்கனுபவித்தல்.
Shāre, v. n. பகுதல், பிரிதல்.
Shāre'hōld-er, s. பங்காளி, வாரக்காரன்.
Shār'ing, s. உடந்தை, பங்கு, பாகம், பாது, உரித்து, தாயம்.
Shār'er, s. உடந்தைக்காரன், உடன்பங்காளி, தாயக்காரன்.
Shärk, s. சுறு, மகரம், சுறுமீன்.
charmer, புலால்கட்டி.
an artful fellow, நளுவி, உபாயி.
Shärk, v. n. திருடுதல், கவருதல், நளுவுதல், ஏய்த்தல், பறித்தல்.
Shärk'er, s. பறிகாரன், கவருவோன்.

Shärk′ing, *s.* பறிப்பு, கவருகை, வெளவுகை, நளுவுகை, சூறையாடுகை.
Shärp, *s.* கூர்மை, நுண்மை.
Shärp, *v. a.* கூராக்குதல்.
Shärp, *a.* கூருள்ள, கூர்மையுள்ள, கருக்குள்ள, நுண்மையுள்ள.
contest, வலுதர்க்கம், சண்டை.
pungent, உறைப்புள்ள, கரிப்புள்ள.
too sharp, கடுங்கூர்மையான, அறக்கூர்மையான, கடுங்காரப்புள்ள.
to be sharp or severe, உறைத்தல், கூருதல், கார்த்தல்.
Shärp′en, *v. a.* கூராக்குதல், கருக்காக்குதல், தீட்டுதல், சாணைபிடித்தல்.
as taper, நுணுக்குதல், நுணித்தல்.
to be sharpened, கூர்தல், நுணுகுதல்.
Shärp′er, *s.* தந்திரவியாபாரி.
Shärp′ly, *adv.* கூர்மையாய், சூசனையாய், நுட்பமாய்.
Shärp′ness, *s.* கூர், நுதி, கூர்மை.
of intellect, விவேகம், குசாக்கிரபுத்தி, தெளிந்தபுத்தி.
Shärp′-set, *a.* ஆவலான, அங்கலாய்ப்புள்ள, அவாவுள்ள.
Shärp′-sight-ed, *a.* கண்கூர்மையுள்ள, கூர்ந்தபார்வையுள்ள.
Shärp′-wit-ted, *a.* விவேகமுள்ள, கூர்ந்தபுத்தியுள்ள, நுண்ணியபுத்தியுள்ள.
Shas′ter, *s.* சாஸ்திரி.
Shat′ter, *s.* இடிவு, தகர்வு, தகர்ச்சி.
Shat′ter, *v. a.* இடித்தல், தகர்த்தல், பொடித்தல், நொருக்குதல்.
Shat′ter, *v. n.* இடிதல், தகர்தல், பொடிதல், நொருங்குதல்.
Shat′ters, *s. (pl.)* சல்லித்துண்டுகள், சின்னபின்னங்கள்.
Shat′ter-y, *a.* உடையத்தக்க, முறியத்தக்க, நொருங்கத்தக்க, பொடியடத்தக்க.
Shāve, *s.* சீவுகிறவாள், சீவுங்கத்தி.
Shāve, *v. a.* சௌளம்பண்ணுதல், சவரம்பண்ணுதல், சிரைத்தல்.
wood, இழைத்தல், சீவுதல்.
off, கதுவுதல், களைதல், கழித்தல், சீவுதல், செதுக்குதல்.
Shāv′er, *s.* நாவிதன், சவரகன், மயிர்வினைஞன், திவாகீர்த்தி.
sharp dealer, கண்டிதவியாபாரி.
as pillager, கொள்ளையிடுவோன்.
as a boy, பையன், வாலிபன்.
Shāv′ing, *s.* சிரைப்பு, சீவுகை.
Shawl, *s.* சால்வை, உத்தரீயம், அங்கவத்திரம், ஏகாசம், மேற்போர்வை.
She, *pro.* அவள்.
in composition with, as camel, goat, lion, &c., பெட்டை, மறி, பிணு.
Shēaf, *s.* அரிக்கட்டு, கதிர்க்கட்டு.
Shēaf, *v. a.* அரிகதிர்சேர்த்துக்கட்டுதல்.
Shēar, *v. a.* மயிர்முதலியகத்தரித்தல், கொய்தல், குறைத்தல்.
Shēar′er, *s.* கத்தரிப்பவன், கொய்வோன், மயிர்வினைஞன்.
Shēars, *s.* கத்திரிகை.
Shēath, *s.* உறை, கூடு, புட்டில், தடறு.
in botany, மடற்பாளை, பொத்தி, மடல், உறை.
Shēathe, *v. a.* உறையிற்போடுதல், உறையிலிடுதல், சுற்றியடைத்தல்.
Shēath′y, *a.* உறையிலிடுகிற, உறையுள்ள, மூடலுள்ள.
Shed, *s.* குடிசை, குடில், குச்சு, கொட்டில், கோட்டம்.
open, பந்தல், பந்தர்.
Shed, *v. a.* சொரிதல், கொட்டுதல், ஒழுக்குதல், உகுத்தல், தூவுதல்.
fragrance, light, &c., வீசுதல்.
out as corn, &c., சொரிதல், கொட்டுதல், விழுத்தல்.
the skin, கழற்றுதல்.
tears, சிந்துதல், சிதறுதல்.
as moult, உதிர்த்தல்.
Shed, *v. n.* ஒழுகுதல், வழிதல்.
Shed′der, *s.* சிந்துபவன், சிதறுபவன், வருஷிப்பவன்.
of blood, இரத்தஞ்சிந்துபவன்.
Sheen, *s.* பிரபை, சோதி, மினுக்கம்.
Sheen, *a.* பிரகாசமுள்ள, மினுக்குள்ள, வேடிக்கையான.
Sheep, *s.* செம்மறியாடு, துருவை, செச்சை, மை, கொறி.
fleecy, குறும்பாடு, சடையாடு.
penned, அடைத்தஆடு, கிடையிலாடு.
stalled, கொழுத்தாடு, தனியனுடு.
young, குட்டியாடு, பறழ்.
wild, காட்டாடு.
Sheep′cot, Sheep′fōld, *s.* ஆட்டுக்கிடை, ஆட்டுப்பட்டி.

Sheep'ish, *a.* வெட்கமுள்ள, நாணித்த, இலச்சையுள்ள, கூச்சமுள்ள.
to be sheepish, ஒஞ்சித்தல், உலோபித்தல்.
Sheep'ish-ly, *adv.* வெட்கமாய், உலோபமாய், ஒஞ்சிப்பாய்.
Sheep'ish-ness, *s.* ஒஞ்சிப்பு, நாணம், உலோபம், வெட்கம்.
Sheep's'-eye, *s.* நாணப்பார்வை, நேசநோக்கு, அமுதபார்வை.
Sheep'-shēar-er, *s.* ஆட்டுமயிர்கத்தரிப்போன், ஆட்டுமெயிர்களைவோன்.
Sheep'-shēar-ing, *s.* ஆட்டுரோமங்கத்தரிக்கை, ஆட்டுமயிர்கத்தரிக்குங்காலம், மயிர்கத்தரிக்கும்போதிருக்கும்பண்டிகை.
Sheer, *v. n.* நெறிதப்புதல், வழிவிலகுதல், வக்கிரித்தல்.
Sheer, *a.* துப்புரவுள்ள, சுத்த, கலப்பற்ற, தனித்த, தீர்ந்த, படு.
Sheer, *adv.* சுத்தமாய், துப்புரவாய், தீர்மானமாய், தீர்க்கமாய்.
Sheet, *s.* துப்பட்டி, கட்டிற்றுப்பட்டி.
of paper, கடுதாசித்தாள், காகிதம்.
of water, நீர்ப்பரப்பு, நீர்ச்செறிவு.
as expansion, விரிவு, விபுலம்.
sheet-iron, இருப்புத்தகடு.
sheet-lead, ஈயத்தகடு, தகட்டீயம்.
as sheet of tin, துத்தநாகத்தகடு.
Sheet'-anch-or, *s.* பெருநங்கூரம், பிரதானதாபரம்.
Sheet'ing, *s.* துப்பட்டிப்புடைவை.
Shek'el, *s.* ஓர்நாணயம்.
of silver, ௰அ. அணுமட்டு.
of gold, ௰அவ. ரூபாமட்டு.
Shelf, *s.* தட்டு, பரண், அட்டாலை, இதணம், கழுது.
hanging shelf, ஏதண்டை.
at sea, திடர், பார், பாறை.
Shelf'y, *a.* தட்டுள்ள, திடருள்ள, பாறையுள்ள.
Shell, *s.* ஓடு, கூடு, ஓரிசைக்கருவி, செய்துமுற்றாவீடு.
of fish, சிப்பி, இப்பி, சோகி, கவடி.
as bomb, வெடிக்குண்டு.
Shell, *v. a.* ஓடுகழற்றுதல், உடைத்தல், தொலித்தல்.
Shell, *v. n.* ஓடுவிட்டுக்கழலுதல், தெரிவிநீங்கல், முகிழ்விடுதல், சொரிதல்.
Shell'-fish, *s.* மட்டிமுதலியபுறவோடுள்ளசலசரம், இப்பி, சிப்பி.
Shell'-wŏrk, *s.* அழுக்காமையோட்டுவேலை, இப்பிவேலை.
Shel'ter, *s.* தாவரம், புகலிடம், ஒதுக்கிடம், ஆதரவு, சார்பு, தஞ்சம், அடைக்கலம், சேமம்.
from wind, காற்றொதுக்கு.
to fly for shelter, சரண்புகுதல், அபயமிடுதல், அடைக்கலம்புகுதல்.
Shel'ter, *v. a.* ஆதரித்தல், காத்தல், சேர்த்தல், அணைத்தல்.
as a hen her chickens, ஒதுக்குதல், தாங்குதல், தாபரித்தல், கூட்டிச்சேர்த்தல், பாலித்தல்.
Shel'ter-less, *a.* புகலிடமில்லாத, தஞ்சமற்ற, அநாதமான, பாழான.
Shelve, *v. n.* சாய்தல், தாழுதல், இறங்குதல், பதிதல்.
Shelv'ing, *a.* சாய்கிற, இறங்குகிற.
Shelv'y, *a.* பாருள்ள, கல்லுள்ள, பாறையான, படையுள்ள.
Shep'herd, *s.* ஆட்டுமேய்ப்பன், ஆட்டுக்காரன், ஆட்டிடையன், கோபாலன்.
in scripture, குரு, தேசிகன், தேவ்கோபாலன், ஆசாரியன்.
Shep'herd-ess, *s.* ஆட்டிடைச்சி.
Shep'herd-ly, *a.* இடையனுக்குரிய.
Sherd, *s.* (*see* Shard.) ஓடு.
Sher'if, Sher'iff, *s.* ஊர்த்தலைவன், நாட்டாண்மைக்காரன், ஆராய்ச்சி, ஊர்காவற்காரன்.
Sher'ry, *s.* ஓர்வகைமுந்திரிகைரசம், ஓர்வகைத்திராட்சரசம்.
Shew, *s.* காட்சி, வேடிக்கை, வேஷம், மாரீசம், போலி, அட்டோலிக்கம்.
bread, (*see* show.) தேவசமுகத்தப்பம், நைவேத்தியபூரிகை.
Shew, *v. a.* காட்டுதல், காண்பித்தல், சுட்டுதல், தெரிவித்தல்.
Shib'bo-leth, *s.* குழூஉக்குறி, சத்தவித்தியாசத்தினாலறிகுறி.
Shiēld, *s.* பரிசை, கேடகம், வேதிகை, தோற்பரம்.
as defence, காவல், தஞ்சம், மூடி.
as protection, பாலனம்.

Shiēld, *v. a.* காத்தல், தற்காத்தல், பாது காத்தல், பாலித்தல்.
Shift, *s.* நிலைதடுமாற்றம், தந்திரம், நழுவுகை, அபாயோபாயம்.
as change, பெயர்ச்சி, வேற்றுமை.
as garment, மகளிருள்ளுடை, மகளிருட்சட்டை, உள்ளங்கி.
Shift, *v. a.* திரித்தல், புரட்டுதல், மாற்றுதல், உழற்றுதல்.
off, evade, நழுவுதல், கடத்துதல்.
sail, பாய்மாற்றுதல்.
Shift, *v. n.* திரிதல், மாறுதல், புரளுதல், பெயர்தல், பிரிதல்.
about, திரிதல், நிலைதிரிதல், ஈடாடுதல், அலைதல்.
as wind, காற்றுத்திரும்புதல், காற்று மாறுதல், பெயர்தல்.
Shift'er, *s.* நழுவி, தந்திரி.
Shift'ing, *a.* நழுவலான, பிடிகொடாத, உபாயமுள்ள.
Shift'less, *a.* தஞ்சமற்ற, சீவனக்குறைவான, ஏதில்லாத, யூகமற்ற, விவேகமற்ற, உபாயமற்ற.
Shil'ling, *s.* எட்டுஅணுக்கொண்டகாசு.
Shī'ly, *adv.* (*see* Shyly.) கூச்சமாய், கோழையாய், வெருட்சியாய்.
Shin, *s.* கெண்டைக்கால், கணைக்கால்.
bone, முன்காலின்குதிரையெலும்பு.
Shīne, *s.* பிரகாசம், பிரபை, ஒளி, சோபை, பகரம், மினுக்கம், துலக்கம்.
sun-shine, வெயில்.
Shīne, *v. n.* பிரகாசித்தல், ஒளிவீசுதல், சதிர்வீசுதல், மினுங்குதல், ஒளிர்தல், துலங்குதல், இலங்குதல்.
Shī'ness, *s.* (*see* Shyness.) கூச்சம்.
Shin'gle, *s.* வீடுவேய்பலகை.
shingles, அரையாப்பு.
Shin'gle, *v. a.* பலகையினால்வீடுவேய்தல், பலகையால்மூடல்.
Shīn'ing, Shīn'ing-ness, *s.* காந்தி, துலக்கம், பிரகாசம், மினுக்கம், தேசு, ஒளி.
Ship, *s.* கப்பல், மரக்கலம், படவு, நாவாய், நவ்வு.
ballast for, ஞாலம், ஞானம்.
rolling or rocking of, மறிதல், ஆடுதல்.
to go on board a ship, கப்பலேறிப்போதல், கப்பல்யாத்திரைபண்ணல்.
to let a ship drive, அடையவிடுதல்.
Ship, *v. a.* கப்பலிலேற்றுதல், கப்பலிலேற்றிக்கொண்டுபோதல்.
Ship'bōard, *adv.* கப்பல்வழியாய், கப்பலேறி, மரக்கலயானமாய்.
Ship'-build-er, *s.* கப்பல்செய்வோன், மரக்கலவினைஞன், ஓடாவி.
Ship'-mäs-ter, *s.* கப்பற்றளகத்தன், சம்பானோட்டி, மாலுமி.
Ship'māte, *s.* கப்பலிலேகூடவேலைசெய்வோன்.
Ship'ment, *s.* கப்பலிலேற்றுகை, கப்பற்சரக்கு, கப்பற்சாமான்.
Ship'-mŏn-ey, *s.* கப்பற்ருபரிப்புக்காகக்கொடுக்கும்பணம்.
Ship'ping, *s.* மரக்கலவகை, கப்பல்கள்.
to take shipping, கப்பலேறிப்போதல், கப்பல்யாத்திரைபண்ணுதல்.
Ship'-shāpe, *adv.* சரியாய், ஒழுங்காய்.
Ship'wreck, *s.* கப்பற்சேதம், கப்பலஅக்கப்பாடு, கப்பல்மோசம்.
Ship'wreck, *v. a.* கப்பற்சேதப்படுத்தல்.
Ship'wrīght, *s.* கப்பல்செய்பவன், ஓடாவி.
Shīre, *s.* சிறுநாடு, தேசம், ஊர்.
Shĭrk, *s.* (*see* Shark.) நழுவி, உபாயி, அவதந்தரி.
Shĭrk, *v. n.* நழுவிப்போதல், உபாயஞ்செய்தல், தந்திரம்பண்ணுதல்.
Shĭrt, *s.* உள்ளங்கி, உள்ளுடை, உட்சட்டை.
Shĭrt, *v. a.* உள்ளங்கியணிதல்.
Shĭrt'less, *a.* உள்ளங்கியில்லாத, உள்ளுடையில்லாத, நிருவாணமான.
Shīve, *s.* சீவல், வகிர், கீற்று, கிலம்.
a fragment, சிறுதுண்டு.
Shives, *s.* (*pl.*) of hemp, flax, கூளம்.
Shiv'er, *s.* தகர்வு, நெரிவு, நொறுங்கு, பொடி, முறிவு.
Shiv'er, *v. a.* இடித்தல், சிதறடித்தல், தகரடித்தல், தகர்த்தல், நெரித்தல், நொறுக்குதல், பொடிப்படுத்துதல், தூளித்தல், பொடித்தல்.
to be shivered, சிதறுதல், நொருங்குதல், சில்லபொல்லமாதல்.
Shiv'er, *v. n.* இடிதல், தகர்தல், நெரிதல், நருங்குதல், உடைதல்.

in a fever or in fits, குலைப்பனுதறு தல், குளிர்நடுங்குதல்.
Shiv'er-ing, s. நருக்குகை, நொருக்குகை, கிடுகிடுப்பு, நடுக்கம், குலைப்பனுதறுகை, குளிர்நடுங்குகை.
Shiv'er-y, a. நொருங்கின, பொடிபட்ட.
Shōal, s. இனம், கிளை, குலம், திரள், மொய்ப்பு, கூட்டம்.
at sea, களம், திடல், திடர், பார், மிதப்பு, மேடு.
of fish, மீன்றிரள், மீன்மொய்.
Shōal, v. n. கூட்டங்கூடல், ஆழமில்லாதிருத்தல்.
Shōal, a. ஆழமில்லாத, தாழ்வற்ற.
Shōal'i-ness, s. பரவை, மிதப்பு, ஆழமில்லாமை.
Shōal'y, a. திட்டியான, மிதப்பான, திடரான, மேடான.
Shock, s. அதிர்ச்சி, அதிர்ப்பு, அதிர், தாக்கு, இடி.
of grain, சூடு, சும்மை, அரிக்குவை, போர்.
as amaze, திகைப்பு, திடுக்காட்டம், திடுக்கீடு, திகில், பிரமிப்பு.
Shock, v. a. அதிர்த்தல், தாக்குதல், இடித்தல், திகைப்பித்தல், திடுக்கிடப்பண்ணுதல், ஏங்கச்செய்தல்.
to be shocked, ஏங்குதல், திகைத்தல், திடுக்கிடுதல், நெஞ்சிடித்தல்.
Shock'ing, a. கொடுமையான, துட்டத்தனமுள்ள, திகைப்பான.
Shock'ing-ly, adv. கொடுமையாய், துட்டத்தனமாய், திகைப்பாய், திடுக்காட்டமாய், கோரமாய்.
Shöe, s. பாதரட்சை, பாதங்காப்பு, தொடுதோல், செருப்பு.
flower, செம்பரத்தை, மந்தாரை.
of a horse, பறளை, இலாடன்.
of a sleigh, பற்றிரும்பு, பண்டியின் விற்காற்பறளை.
Shöe, v. a. செருப்பிடுதல், பாதரட்சைபோடுதல், தொடுதோலிடுதல்.
a horse, இலாடமடித்தல், பறளைபோடுதல், பறளைபூட்டுதல், இலாடந்தைத்தல், பற்றிரும்பிடுதல்.
Shöe'black, s. பாதரட்சைமினுக்குவோன், தொடுதோல்துடைப்போன்.
Shöe'māk-er, s. செம்மான், சக்கிலியன், தோல்வேலைக்காரன், தோற்றுன்னன், செருப்புக்கட்டி.
Shö'er, s. செருப்பிடுகிறவன், பாதரட்சைபோடுபவன்.
Shöe'string, s. செருப்பின்வார், பாதரட்சையின்வார்.
Shoot, s. முளை, தளிர், கிளை, கொழுந்து, குருத்து, மஞ்சரி.
as a young hog, பன்றிக்குட்டி, இளம்பன்றி.
Shoot, v. a. எய்தல், ஏவுதல், எறிதல், விடுதல், செலுத்துதல், வெடிவைத்தல்.
out, தள்ளுதல், பிதுக்குதல், பீர்ச்சுதல், உறக்குதல்.
rays, தாரைவீசுதல், கிரணங்காலுதல்.
with a bow, எய்தல், பிரயோகித்தல்.
out as corn from a bushel, &c., கொட்டுதல், சொரிதல்.
out ears of corn, கக்குதல், கதிரெறிதல், கதிர்விடுதல், கதிர்வீசுதல்.
balls, marbles, &c., from a bow, சுண்டுதல், தெறித்தல்.
Shoot, v. n. முளைத்தல், அரும்புதல், கிளைத்தல், கொழுந்துவிடுதல், தழைத்தல், தளிர்த்தல், துளிர்த்தல்.
ahead, முந்துதல், எழும்புதல்.
down as corn in the earth, &c., சொரிதல், பெய்தல்.
forth, as water, &c., பாய்தல்.
out as roots, ஓடுதல், ஊன்றுதல்.
out as pulp, puss, &c., பிதுங்குதல், புறப்படுதல், துன்னுதல்.
with ears of corn, கதிரெறிதல், கதிரீனுதல், கதிர்வீசுதல்.
up as a tree, sprout, &c., எழும்புதல், கிளம்புதல், முளைத்தல், இலிர்த்தல், தளிர்த்தல், கிளைத்தல்.
up high, ஓங்குதல், உயர்தல், நிமிர்தல், எழும்புதல்.
as a boil, வீங்குதல், தடித்தல்.
as cold through the system, கூதலோடுதல், குளிர்பிடித்தல்.
as grain half eared, விக்கல்கக்கலாயிருத்தல், பொத்திகொள்ளல்.
as move swiftly, பறத்தல், கதியாய்ப்போதல், பாய்தல்.
as pain, குத்துதல், நொதித்தல்.

as wings, சிறகுமுளைத்தல், அரும்புதல்.

Shoot'er, *s.* வெடிவைப்போன், எய்வோன், வேட்டுவன்.

Shoot'ing, *s.* எறிகை, வேட்டைவிளையாட்டு, முளைக்கை.

as a bud, &c., துளிர்ப்பு, தளிர்ப்பு.

Shop, *s.* கடை, ஆவணம், அங்காடி, கிரயக்கிரகம், விபணி.

to shut up or close the shop, கடைபூட்டுதல், கடைகட்டுதல்.

Shop, *v. n.* கடைக்குப்போதல்.

Shop'bōard, *s.* கடைச்சாமான்விலாசப்பலகை.

Shop'book, *s.* வியாபாரியின்கணக்குப்புத்தகம், கடைக்கணக்கு.

Shop'keep-er, Shop'man, *s.* கடைக்காரன், வியாபாரி.

Shōre, *s.* கடற்கரை, கடலோரம், கரை, நீர்க்கரை, வாரம்.

as prop, தாண், ஆதரவு, மிண்டு, தாங்கி.

Shōre, *v. a.* மிண்டுகொடுத்தல்.

Shōr'ed, *a.* மிண்டுகொடுக்கப்பட்ட, தாங்கப்பட்ட, உதைகாலிடப்பட்ட.

Shōre'less, *a.* கரையற்ற, வரம்பில்லாத, எல்லையில்லாத.

Short, *a.* குறுகின, குள்ளமான, சுருக்கமான, அடக்கமான, கட்டையான, குட்டையான, குறளான.

breath, குறுமூச்சு.

female, குட்டைச்சி, கட்டைச்சி.

person, குட்டையன், குள்ளன், வாமனன், குறளன்.

in weight, measure, &c., குறைதல், சுருங்குதல், ஒடுங்குதல்.

brittle, நொருங்குகிற, உதிருகிற.

as petulant, வெடுவெடுப்புள்ள, குறும்பான, கோபமுள்ள.

to be short, குறுகுதல், சுருங்குதல், எஞ்சுதல், குறைதல்.

Short'cŏm-ing, *s.* குறை, தாழ்ச்சி.

Short'en, *v. a.* குறுக்குதல், அடக்குதல், சுருக்குதல், குறைத்தல், மருவுதல்.

Short'en, *v. n.* குறுகுதல், சுருங்குதல், எஞ்சுதல், குறைதல், மருவுதல், சிதைதல்.

Short'-hand, *s.* குறிப்பெழுத்து, யூகாட்சரம்.

Short'-līv-ed, *a.* குறுகினஆயுளுள்ள, குறுவாழ்க்கையான, அற்பாயுளுள்ள.

Short'ly, *adv.* குறுக்காய், குறைய, குறைவாய், சீக்கிரமாய், சுறுக்காய்.

Short'ness, *s.* குறுக்கம், குறைவு, குறுமை, சுருக்கம்.

Short'-sīght-ed, *a.* கீழ்ப்பார்வையுள்ள, கிட்டினபார்வையுள்ள, குறுகினபார்வையுள்ள, அணுமைநோக்கு.

Short'-sīght'ed-ness, *s.* குறும்பார்வையுடைமை, கிட்டினபார்வை.

Short'-wāist-ed, *a.* குறுகினஇடுப்புள்ள.

Short'-wind-ed, *a.* குறுமூச்சுள்ள.

Short'-wit-ted, *a.* விவேகமில்லாத, குறட்புத்தியுள்ள, மந்தபுத்தியுள்ள.

Shot, *s.* சன்னம், இறவை.

distance, வெடிச்சன்னம்பாயுந்தூரம், குண்டுபாயுந்தூரம்.

Shōte, *s.* (*see* Shoot.) ஒர்மீன், இளம்பன்றி, வாலைப்பன்றி.

Shough, *int.* சொ, ஷொ.

Should, *aux.* வேண்டியது, வேண்டும்.

Shōul'der, *s.* புயம், தோள், கைமூலம், வாகு, மொய்ம்பு.

blade, கைப்பட்டை, தோட்பட்டை, கைச்சிப்பு, வாகு.

bone, தோளெலும்பு, பூணரஎன்பு.

knot or epaulette, வாகுவலயம், அங்கதம், தோளணி.

arm below, கோகு, வாகு.

arm below the elbow, முன்கை.

of meat, முன்சந்திறைச்சி.

to draw away the shoulder, நழுவுதல், உழற்றுதல், கழற்றுதல்.

Shōul'der, *v. a.* தோட்சுமையெடுத்தல், காவுதல், தோளில்வைத்தல்.

to push, தோளாலிடித்தல்.

Shōul'der-belt, *s.* போர்ச்சேவகரின் தோட்கச்சு, தோட்கச்சு.

Shout, Shout'ing, *s.* ஆர்ப்பரிப்பு, அதிர்ப்பு, ஆரவாரம், கொக்கரிப்பு.

of battle, கெம்பீரிப்பு.

of victory, கெக்கலி, குலிலி.

and dancing, கொக்கரித்தாடல், ஆவலங்கொட்டல்.

Shout, *v. a.* ஆர்ப்பரித்தல், ஆரவாரித்தல், கொய்யோக்கூறல், கெம்பீரித்தல்.

in order to scare, வெருட்டிஆர்த்தல்.

for the battle, போர்க்கறைகூவல்.
Shŏve, s. தள்ளு, தாக்கு.
Shŏve, v. a. தள்ளுதல், செலுத்துதல், தாக்குதல், உந்துதல்.
Shŏv'el, s. சளகுப்பாரை, சோழியப்பாரை, கனித்திரம்.
Shŏv'el, v. a. கிண்டுதல், கல்லுதல்.
Shōw, s. ஆடம்பரம், இடம்பம், பூச்சியம், ஒய்யாரம், வேடிக்கை.
bread, தேவசமுகத்தப்பம், பரிசுத்த அப்பம், நைவேத்தியபூரிகை.
in dress, குசால், கோப்பு, பிலுக்கு.
as likeness, போலி, பாவனை.
Show, v. a. காட்டுதல், காண்பித்தல், தோனறப்பண்ணுதல், தோற்றுவித்தல், பாவனைகாட்டுதல், குறித்தல், சுட்டுதல்.
off, கணிசங்காட்டுதல், கோப்புக்காட்டுதல், பாவனைகாட்டுதல்.
minutely, சுட்டிக்காட்டுதல், நுட்பமாய்க்காட்டுதல்.
novelties, நூதனங்காட்டுதல், விடுப்புக்காட்டுதல், வேடிக்கைகாட்டுதல்.
signs, குறிகாட்டுதல்.
the way, வழிகாட்டுதல்.
the reason, நியாயஞ்சொல்லுதல், நியாயங்காட்டுதல்.
Shōw'bill, s. விளம்பரமொட்டியபலகை.
Show'er, s. அஞ்சல்மழை, பாட்டமழை.
bath, சல்லடைவழியாய்ச்சொரிநீர், முழுக்கு.
intermittant, பாட்டம், அஞ்சல்.
of flowers, பூமாரி, புட்பாஞ்சலி.
of gold, பொன்மாரி.
of sand, மண்மாரி, மண்மழை.
Show'er, v. a. சொரிதல், பெய்தல்.
as rain, மழைசொரிதல், அஞ்சலஞ்சலாய்ப்பெய்தல்.
to bestow liberally, பூரணமாயீதல், பொழிதல்.
Show'er-y, a. பாட்டம்பாட்டமாய்ப்பெய்கிற, விட்டுவிட்டுப்பெய்கிற.
Shōw'i-ly, adv. ஆடம்பரமாய், வேடிக்கையாய், குசாலாய்.
Shōw'i-ness, s. ஆடம்பரம், வேடிக்கை, குசால், இடம்பம்.
Shōw'y, a. பிலுக்கான, வீண்புகழ்ச்சியான, குசாலுள்ள.

Shred, s. கந்தை, கிழிவு, துணி, சிலும்பல், சிலுவல், கீலம்.
Shred, v. a. கிழித்தல், தாறுதாறாய்க்கிழித்தல், கீலமாக்குதல்.
Shred'ding, s. கீலமாக்குகை.
a piece, கீற்று, கீலம்.
Shrew, s. வெடுவெடுப்புக்காரி, பசாரி, முரண்டுக்காரி, விவாதசீலி.
mouse, மூஞ்சூறு, சுண்டன், சுந்தரி.
Shrewd, a. குள்ளத்தனமுள்ள, சம்பிரதாயமுள்ள, சாதுரியமுள்ள, சாமர்த்தியமான, உபாயமான.
person, குள்ளன், உபாயி, யூகி, யுத்திக்காரன்.
Shrewd'ly, adv. உபாயமாய், யூகமாய்.
Shrewd'ness, s. சித்திரப்பேச்சு, சாதுரியம், சாமர்த்தியம், யூகம், உபாயம், யுத்தி, குசாக்கிரபுத்தி.
Shrew'ish, a. கடுகடுப்பான, இடக்கான, விவாதமான.
Shrew'ish-ly, adv. கடுகடுப்பாய், வெடுவெடுப்பாய்.
Shrew'ish-ness, s. வெடுவெடுப்புக்குணம், வெடுக்கு.
Shriēk, s. கிறீச்சிடு, கீச்சிடு.
Shriēk, v. a. கிறீச்சிடுதல்.
Shrill, a. கிறீச்சென்ற, சில்லென்றொலிக்கிற.
voice, கீச்சுக்குரல், சில்லொலி.
Shrill'ness, s. கிறீச்சென்றொலி, சில்லென்றொலி.
Shrimp, s. இறால், இறவு.
Shrīne, s. பூசைப்பெட்டி, பெட்டகக்கோயில்.
as tomb, கோரி, கல்லறை.
Shrink, s. சுருங்குகை, திரைவு.
Shrink, v. a. சுருக்குதல், திரைத்தல்.
Shrink, v. n. சுருங்குதல், ஒடுங்குதல், திரைதல், குறுவுதல்.
back, பிந்துதல், பின்னிடுதல்.
from duty, நழுவுதல், பின்னிடுதல், கூசுதல், நாணுதல், பின்வாங்குதல்.
as boards, ஒடுங்குதல், சுருங்குதல்.
Shrink'er, s. கூச்சப்படுவோன், பின்னிடுவோன், பின்வாங்குவோன்.
Shrink'ing, s. சுருக்கம், திரைவு, பின்னிடுகை.

back, நாணம், கூச்சம், பின்னீடு, பதுக்கம், ஒதுக்கம்.
Shriv'el, v. a. சுருக்குதல், சுருட்டுதல், திரைத்தல்.
Shriv'el, v. n. சுருங்குதல், ஒடுங்குதல், குறுகுதல், சுருளுதல், திரைதல்.
a shrivelled person, ஒட்டலன், ஒல்லியன், மெலிந்தவன், நோய்ஞ்சி.
shrivelled grains, சக்கல், சப்பி, சாவி, கருக்கல், பதர்.
Shroud, s. மூடி, முகத்தீடு, பிரேதாலங்காரப்புடைவை.
as ropes of a ship, தாமான்கயிறு, பாய்மரக்கயிறு.
Shroud, v. a. மூடுதல், புதைத்தல், கரத்தல், மொய்த்தல்.
for the grave, முகத்தீடு.
shrouds of a ship, பாய்மரக்கயிறுகள்.
Shrub, s. செடி, பூண்டு.
Shrub'ber-y, s. தூறு, பாறை.
Shrub'ber-y, a. செடியான, தூறுன, பூண்டுள்ள.
Shrub'by, a. பூண்டுநிறைந்த, செடியுள்ள.
Shrug, s. தோளையசைத்தல்.
Shrug, v. a. தோள்குலுக்குதல்.
Shud'der, s. திடுக்காட்டம், நடுக்கம், ஏக்கம், அருக்களிப்பு.
Shud'der, v. n. ஏங்குதல், திடுக்கிடுதல், நடுங்குதல், திகைத்தல்.
Shuf'fle, s. நழுவுகை, கடத்துகை, கலக்குகை.
Shuf'fle, v. a. கலத்தல், புரட்டுதல், குழப்புதல்.
off, தள்ளுதல், கடத்துதல்.
Shuf'fle, v. n. புரளுதல், கலத்தல், குழம்புதல், கபடஞ்செய்தல்.
over work, வேலைகடத்துதல், சரவைவேலைசெய்தல்.
Shuf'fler, s. கபடன், நழுவி, புரட்டன், வஞ்சகன்.
Shuf'fling, s. கபடம், கள்ளம், புரட்டு, புரளி.
in play, கள்ளவிளையாட்டு.
Shuf'fling-ly, adv. கரவடமாய், கள்ளமாய், புரட்டாய்.
Shun, v. a. தவிர்த்தல், ஒழித்தல், விலக்கிவிடுதல்.
Shut, s. அடைப்பு.
Shut, v. a. அடைத்தல், பூட்டுதல், சார்த்துதல், மூடுதல்.
a book, மூடுதல்.
the eyes, கண்மூடுதல்.
the mouth, வாய்மூடுதல், வாய்பொத்துதல், வாயடைத்தல்.
out, அகற்றுதல், வெளியேவிடுதல்.
an umbrella, &c., சுருக்குதல்.
up a shop, கடைகட்டுதல்.
Shut, v. n. அடைக்கப்படுதல், மூடப்படுதல், பொத்தப்படுதல்.
as a flower or leaf, கூம்புதல், மடிதல், மடங்குதல்.
partly, ஒருக்கணித்தல், நீக்கிவிடுதல், ஒருச்சாய்த்தல்.
Shut'ter, s. மூடி, கதவு, கபாடம்.
Shut'tle, s. நாடா, தூஞழி.
Shut'tle-cock, s. விளையாட்டுக்கருவி, ஓர்விளையாட்டு.
Shy, a. கூச்சமான, நாணமுள்ள, கோழையுள்ள, சங்கோசமுள்ள.
person, கூச்சக்காரன், கோழையன்.
to be shy, கூசுதல், கூச்சப்படுதல், நாணுதல், கோழைப்படுதல்.
Shy'ly, adv. கூச்சமாய், நாணமாய்.
Shy'ness, s. நாணம், கூச்சம், வெருட்சி, கோழை, ஒதுக்கம்.
as cold, reserved, மெட்டு.
Sib'i-lant, a. நாநுனியாற்பிறக்கிற.
letters, நுனிநாநுனியண்ணங்களினுற்பிறக்குமெழுத்துக்கள்.
Sib-i-lā'tion, s. நாநுனியாற்பிறக்கை.
Sib'yl, s. குறிகாரி, கட்டுக்காரி.
Sic'ca-tive, a. உலர்த்தத்தக்க, காயப்பண்ணுகிற, வரட்டத்தக்க.
Sic'ci-ty, s. வரள்வு, உலர்வு.
Sick, a. வியாதியுள்ள, துன்பமுள்ள, நோஞ்சலான, பிணியுள்ள.
person, நோயாளி, பிணியாளி.
Sick'en, v. a. வியாதிப்படுத்துதல், நோய்ப்படுத்துதல், உவட்டிக்கச்செய்தல்.
Sick'en, v. n. வியாதிப்படுதல், நோயாதல், ஒக்காளித்தல், மெலிதல்.
to be sick of, வெறுத்தல், விதனப்படுதல், அருவருத்தல்.
Sick'ish, a. உவட்டான, வாந்திப்பான.
Sick'le, s. அரிவாள், கருக்கரிவாள், கொடுவாள், கூன்வாள்.

Sick'li-ness, *s.* நைவு, பிணி, நோய், பீடை, தோஷம்.
Sick'ly, *a.* நையலான, நோய்ஞ்சலான, பிணியான.
corn, கருகின, தேய்ந்த, வாடின.
person, நையற்காரன், பிணியாளி.
as nausea, ஓக்காளமுள்ள, உவட்டுகிற, வாந்திக்கிற.
to be sickly and bloated, காமாலைபிடித்த, வீங்கின.
Sick'ly, *adv.* இளைப்பாய், நைவாய், மெலிவாய், வாட்டமாய்.
Sick'ness, *s.* உவட்டு, நோய், பிணி, துன்பம், பீடை.
Sīde, *s.* பக்கம், புறம், புடை, சார்.
under the arm, கக்கம், அக்கிள், கைக்குழி, கமுக்கட்டு.
of the body, அர்த்தாங்கம்.
of a mountain, மலையடிவாரம், மலைப்பக்கம், மலைச்சாரல்.
of the way, &c., அருகு, ஓரம், விளிம்பு, பக்கம், கங்கு.
as party, திறம், கட்சி, பக்கம், பகுதி, பங்கு, கன்னை.
Sīde, *v. n.* அடைதல், சேர்தல், சார்தல்.
with, கூடுதல், கட்சிப்படுதல்.
Sīde, *a.* பக்கமான, அருகான.
judge வியாச்சியகுல்லியன்.
Sīde'bōard, *s.* சுவருகேவைக்கும் பீடம்.
Side'-box, *s.* பக்கப்பெட்டி, பக்காசனம், பக்கபீடம்.
Sīde'-glance, *s.* அபாங்கம், கடைக்கண் பார்வை, கடாட்சம்.
Sīde'long, *a.* ஓரமான, ஒருச்சாய்ந்த.
Sīde'long, *adv.* ஒருச்சாய்ப்பாய்.
Sī-dē're-al, Sid'er-al, *a.* நட்சத்திரத்துக்கடுத்த, நட்சத்திரத்தைநோக்குகிற, தாரகைக்கேற்ற.
year, நட்சத்திரவருடம்.
Sid-er-ā'tion, *s.* பயிர்நமு, பயிர்நோய்.
as apoplexy, கிறுதி, மயக்கு.
Sid'er-īte, *s.* காந்தம், சும்பகம்.
Sid-er-o-graph'ic, Sid-er-o-graph'ic-al, *a.* உருக்குத்தகட்டிற்கொத்தினஎழுத்துக்குரிய.
Sid-er-og'ra-phy, *s.* உருக்குத்தகட்டிற்கொத்தினஎழுத்து.

Sīde'-sad-dle, *s.* ஒருபக்கப்படிச்சேணம், மகளீர்சேணம்.
Sīde'wāys, Sīde'wīse, *adv.* ஓரமாய், ஒருச்சரிவாய்.
as indirect, பக்கவழியாய், பக்கமாய்.
Sī'dle, *v. n.* ஒருச்சாய்த்தோடுதல்.
Siēge, *s.* முற்றிக்கை, அரண்வளைப்பு, உரோதம், அபரோதம், முத்திக்கை.
Siēve, *s.* சல்லடை, அரிதட்டு, முறம்.
Sift, *v. a.* அரித்தல், கொழித்தல், தாற்றுதல், புடைத்தல், தெரித்தல், தெள்ளுதல், தூற்றுதல்.
a thing, கிண்டிப்பார்த்தல், ஆராய்ந்துபார்த்தல், தேர்தல்.
with fingers, பீராய்தல், தெரித்தல்.
to sift a subject or person, சோதித்தறிதல், பரிசோதித்தல்.
Sift'er, *s.* சோதிப்போன், அரிப்புக்காரன், சல்லடை.
Sift'ing, *s.* அரிப்பு, கொழிப்பு, சோதனை, பரீட்சை.
fan, அரிதட்டு, சுளகு, தூற்றுக்கூடை.
Sīgh, *s.* பெருமூச்சு, நெட்டுயிர்ப்பு.
Sīgh, *v. n.* பெருமூச்செறிதல், நெடுமூச்செறிதல், நெட்டுயிர்ப்பெறிதல், புலம்புதல்.
after or for, வாஞ்சைப்படுதல், தவித்தல், தாகங்கொள்ளுதல், ஆவலித்தல்.
Sīgh'er, *s.* பெருமூச்சுவிடுவோன், நெட்டுயிர்ப்போன்.
Sīght, *s.* பார்வை, திட்டி, தோற்றம், நோக்கம், நோக்கு.
as spectacle, கண்காட்சி, வேடிக்கை.
of a great person, தரிசனம்.
to take sight, இலக்குப்பார்த்தல், இலக்குப்பிடித்தல்.
as subject, தோற்றம், காட்சி, விளம்பரம், பிரத்தியட்சம்.
as eye, கண், நயனம், அட்சம்.
Sīght'less, *a.* பார்வையில்லாத, பார்வைகுறைந்த, கட்புலனற்ற, அதரிசனமான.
Sīght'li-ness, *s.* கண்ணுக்குச்சிறப்பாய்த்தோன்றுகை, நேத்திரோற்சவம்.
Sīght'ly, *a.* பார்வைக்கின்பமான, கண்ணுக்குத்திருத்தியுள்ள, காட்சியான.
Sig'il, *s.* கையெழுத்து, அடையாளம், முத்திரை.

Sīgn, *s.* அடையாளம், குறி, அறிகுறி, சூசனை, இலாஞ்சனை.
bad sign, அவக்குறி, துன்னிமித்தம், துற்குறி.
good sign, நற்குறி, நன்னிமித்தம், நற்சகுனம்.
of ideas, நினைவுகளின்குறி, நினைப்புக்குறி.
manual, கைக்கீறு, கைநாட்டு.
of the zodiac, இராசி, பவனம்.
made by the hand, சைகை, கைப்பயில், கைச்சாடை.
made by the head, சிரகம்பம், தலையசைப்பு.
Sīgn, *v. a.* கையெழுத்துப்போடுதல், பெயரெழுதுதல், குறியிடுதல், குறிபோடுதல்.
Sig'nal, *s.* அடையாளம், குறிப்பு, பயில், சாடை, எழில், குறி, சைகை.
of the hand, கைப்பயில்.
of the head, சிரகம்பம், சிரக்கம்பனம்.
to give a signal, சைகைகாட்டுதல், பயில்காட்டுதல்.
Sig'nal, *a.* பெரிய, பேரான, நினைக்கப்படத்தக்க, மதிக்கத்தக்க, எண்ணத்தக்க, விசேடித்த.
affair, &c., தருங்காரியம், பெருங்காரியம், அதிகாரியம்.
Sig'nal-īze, *v. a.* பேராக்குதல், பிரபலப்படுத்தல், மேன்மைப்படுத்தல், மகிமைப்படுத்தல்.
Sig'nal-ly, *adv.* மேன்மையாய், பெயராய், கீர்த்தியாய்.
Sig'na-ture, *s.* கையெழுத்து, கையொப்பம், கைச்சாத்து, அடையாளம், முத்திரை.
false, கள்ளக்கையெழுத்து.
to a bond, &c., தலையேட்டெழுத்து, முகவிலாசம்.
Sīgn'er, *s.* கையெழுத்துப்போடுகிறவன்.
Sig'net, *s.* முத்திரை, இலாஞ்சனை.
Sig-nif'i-cance, Sig-nif'i-can-cy, *s.* கருத்து, பொருள், சத்து, பயன்.
as force, பெலன், தாக்கம்.
Sig-nif'i-cant, *a.* குறிப்பான, கருத்துள்ள, பொழிப்பான.
transaction, குறிப்பானசெய்கை, மேலானசெய்கை, பெரியசெய்கை.

Sig-nif'i-cant-ly, *adv.* குறிப்பாய், கருத்தாய்.
Sig-ni-fi-cā'tion, *s.* பயன், அருத்தம், பொருள், கருத்து, பலன்.
Sig-nif'i-ca-tive, *a.* குறிப்பான, கருத்துள்ள, பொழிப்பான.
Sig-nif'i-ca-tive-ly, *adv.* கருத்தாய், ஆழமாய், குறிப்பாய்.
Sig-ni-fi-cā'tor, *s.* கருத்துக்கொள்வது.
Sig-nif'i-ca-to-ry, *a.* காட்டுகிற, குறிக்கிற, தெளிவிக்கிற.
Sig'ni-fy, *v. a.* பயன்கொள்ளுதல், அருத்தங்கொள்ளுதல், கருதுதல், குறித்தல், காட்டுதல்.
Sīgn'-pōst, *s.* படந்தூக்கியகம்பம், குறிப்புத்தறி, விளம்பரமொட்டியதூண்.
Sī'lence, *s.* பேசாமை, மௌனம், மோனம், அடக்கம், அமைதி.
Sī'lence, *v. a.* அமர்த்தல், அமையச்செய்தல், மௌனமாக்குதல், அடக்குதல்.
Sī'lence, *int.* பேசாதிரு.
Sī'lent, *a.* அமைதியான, தொனியாத, பேசாத, மோனமான.
letters, ஊமையெழுத்து, ஓசையற்றவெழுத்து, தொனியாதவெழுத்து.
Sī-len'tia-ry, *s.* மவுனமாயிருங்களென்றுகூறுவோன், பகிரங்கம்பண்ணமாட்டேனென்றுஆணையிட்டவன்.
Sī'lent-ly, *adv.* அமைதியாய், மவுனமாய், மோனமாய்.
Sī'lex, *s.* தீய்க்கால்கல்லு, காந்தக்கல்லு, ஸ்படிகமூலம்.
Sī-li'cious, *a.* தீய்க்கால்கல்லுக்குரிய, ஸ்படிகமூலமுள்ள.
Sil'i-cle, Sil-ic'u-la, *s.* நெற்று, கோது.
Si-lic'u-lōse, *a.* நெற்றுள்ள, ஓடுள்ள.
Sil'i-qua, Sil'ique, *s.* நெற்று, கோது.
Silk, *s.* பட்டு, பட்டுநூல், இறலிநூல்.
cloth, பட்டுச்சீலை.
cord, பட்டுநூற்கயிறு.
tassels, பட்டுக்குஞ்சம், பட்டுக்குச்சு.
thread, பட்டுநூல்.
worm, பட்டுநூற்பூச்சி, இறலி.
yellow, or interwoven with gold, பீதாம்பரம், பொற்புடைவை.

Silk'en, Silk'y, *a.* பட்டுநெசவுள்ள, பதமையான, பட்டாலாய.
Silk'i-ness, *s.* பதமை, பட்டுப்புடைவைத்தன்மை.
Silk'-wēav-er, *s.* பட்டுநெய்வோன்.
Sill, *s.* வாயிற்படி, கதவுநிலையின்கீழ்ப்படி.
Sil'la-bub, *s.* பாலுமிரசமுங்கலந்தபானம், அதிபானம்.
Sil'li-ly, *adv.* புத்தியீனமாய், பைத்தியமாய், மதிகேடாய்.
Sil'li-ness, *s.* பைத்தியம், மதியீனம்.
Sil'ly, *a.* புத்திகெட்ட, மதிகெட்ட, விவேகமற்ற, பைத்தியமான.
Sil'van, *a.* காடுசெறிந்த, வனம்நெருங்கிய, வனவாசமான, வனசரிதமான.
Sil'ver, *s.* வெள்ளி, வெண்பொன், சுல்லு, பஞ்சலோகத்தொன்று.
Sil'ver, *v. a.* வெள்ளிபூசுதல், இரசம்பூசுதல், வெள்ளிமுலாமிடுதல்.
Sil'ver, *a.* வெண்மையான, வெள்ளியாலாய, வெள்ளிமுலாமிட்ட.
coin, வெள்ளிநாணயம்.
lace, வெள்ளிக்கெண்டை.
plate, வெள்ளித்தகடு, வெள்ளித்தட்டம், வெள்ளிக்கலம், இரசதபாத்திரம்.
as a prize, வெகுமதியாகக்கொடுபட்ட வெள்ளிப்பாத்திரம்.
thread, வெள்ளிச்சரடு, வெள்ளிக்கம்பி, வெள்ளிச்சரிகை.
Sil'ver-ing, *s.* வெள்ளிப்பூச்சுவித்தை, வெள்ளிப்பூஷணம்.
Sil'ver-ly, *adv.* வெள்ளிபோன்மையாய்.
Sil'ver-smith, *s.* தட்டான், பொன்வினைஞன், பொன்செய்கொல்லன், சொன்னகாரன், அக்கசாலையன்.
Sil'ver-y, *a.* இரசதபூஷணமான, வெளுத்த, நரைத்த.
Sim'i-lar, *a.* ஒப்பான, சரியான, சமமான, போன்ற, ஒத்த, நிகர்த்த.
idea, ஓர்புடைக்கருத்து.
Sim'i-lar-ly, *adv.* ஒப்பாய், இணையாய், நிகராய், போன்மையாய்.
Sim'i-le, *s.* ஒப்பனை, உவமானம்.
Sim-i-lar'i-ty, Si-mil'i-tude, *s.* உவமை, ஒப்பனை, ஒப்பு, இணை, சமானம், போலி.
Sim'mer, *v. n.* நொய்கொதிப்படுதல்.

Si-mō'ni-ac, *s.* கோயிற்சிரேட்டாதிகாரவியாபாரி, சற்பிரசாதவியாபாரி.
Sim-o-nī'ac-al, *a.* கோயில்மானியவியாபாரத்துக்குரிய.
Sim-o-nī'ac-al-ly, *adv.* கோயில்மானியவியாபாரமாய்.
Si-mō'ni-ous, *a.* சற்பிரசாதக்கிரயம்பண்ணுகிற.
Sim'on-y, *s.* கோயில்மானியவியாபாரம், தேவப்பிரசாதவியாபாரம், சற்பிரசாதவியாபாரம்.
Si-moon', *s.* அரபிமுதலானதேசங்களில்வீசுஞ்சுடுகொற்று, நச்சுக்காற்று.
Sim'per, *s.* இளிப்பு, சிரிப்பு, நையாண்டிச்சிரிப்பு, பரிகாசம்.
Sim'per, *v. n.* சிரித்தல், புன்னகைசெய்தல், குறுநகைகொள்ளுதல்.
Sim'per-er, *s.* குறுநகைசெய்வோன்.
Sim'per-ing-ly, *adv.* இளிவாய், சிரிப்புக்கிடமாய், நகைப்புக்கிடமாய்.
Sim'ple, *s.* ஒருமை, கலப்பின்மை, ஒற்றுமையானது, தனிமை.
Sim'ple, *a.* பேதையான, பேதைமையான, ஒருமையான, கலப்பற்ற.
idea, ஒருபொருள், தனிப்பயன், ஏகார்த்தம், ஒரேயெண்ணம்.
as single, தனிமையான, ஒருமையான, தனித்த, ஒற்றுமையான.
as unmixed, &c., சுத்தமான, கலப்பில்லாத, தனித்த, சுத்த.
as without guile, கபடமற்ற, வஞ்சனையில்லாத, தெளிந்த.
as natural, இயல்பான.
hearted person, வஞ்சகமற்றவன், தெளிந்தநெஞ்சன்.
Sim'ple-ness, *s.* பேதைமை, ஏழைமை, தனிமை, ஒற்றுமை.
Sim'ple-ton, *s.* பேதை, அறிவில்லான், ஏழை, அவிவேகி, மந்தன்.
Sim-plic'i-ty, *s.* ஏழைமை, பேதைமை, அவிவேகம்.
as artlessness, கபடமின்மை.
Sim-pli-fi-cā'tion, *s.* கலப்பில்லாமற்பண்ணுகை, பிரித்தெடுக்கை.
Sim'pli-fy, *v. a.* தெளிவாக்கல், வெளியாக்கல், ஒழுங்காக்கல், சிக்கறுத்தல்.
Sim'ply, *adv.* கபடமின்றி, பேதைமையாய், மாத்திரம், தனியே.

Sim'u-lāte, *v. a.* மாமாலம்பண்ணுதல், மாயம்பண்ணுதல், போலிபண்ணல்.
Sim'u-late, *a.* மாமாலமுள்ள, போலித்தனம்பண்ணுகிற.
Sim-u-lā'tion, *s.* மாமாலம், வேஷம், மாயம், கபடம், போலி.
Sī-mul-tā'ne-ous, *a.* ஒருமிக்கநடந்த, ஒருமுறையான, உடனான.
Sī-mul-tā'ne-ous-ly, *adv.* ஒருமுறையிலே, உடனே, ஒருமிக்க.
Sī-mul-tā'ne-ous-ness, *s.* ஒரேகாலத்தின்செய்கை, சமசம்பவம், தற்காலசம்பவம்.
Sin, *s.* பாவம், தீமை, துரோகம், தோஷம், பழி, நீதிகேடு.
Sin, *v. n.* பாவஞ்செய்தல், தேவகட்டளையைமீறுதல்.
Since, *prep.* or *adv.* பின்பு, தொட்டு, தொடங்கி, படியால்.
as in the interim, இடையிலே.
from the time, அக்காலந்துவக்கி, அதுமுதற்கொண்டு, அன்றுதொட்டு, அந்நாட்டொடங்கி.
he is come, அவன்வந்தபடியால்.
Sin-cēre', *a.* உண்மையுள்ள, வஞ்சகமற்ற, நேர்மையுள்ள, உத்தமகுணமுள்ள, கபடமற்ற.
man, நேராளி, நிதார்த்தன், நிதானி, உத்தமன், யதார்த்தன்.
Sin-cēre'ly, *adv.* நேராய், நிசமாய், உண்மையாய், மெய்யாய்.
Sin-cer'i-ty, *s.* உண்மை, உத்தமம்.
Sīne, *s.* அத்தசா, சிவம், சா, சியை, துவிச்சா, துவிச்சியை.
of the sun's greatest declination, பரமாபமச்சா.
cosine of an angle, கோடிச்சியை, கோடிச்சா.
versed sine, உற்கிரமச்சா, உத்தரச்சா.
versed sines of declination, அபமோத்தரச்சா, அபமோற்கிரமச்சா.
of declination, கிராந்திச்சா, கிராந்திச்சியை.
of a planets' declination, கிரகாபமச்சா, கிரமச்சியை.
table of the sines, மூலச்சாவாக்கியம்.
Sī'ne-cure, *s.* வேலையின்றிவரவுள்ளபட்டம், உம்பளமுள்ளபட்டம்.
Sī'ne-cūr-ist, *s.* உம்பளிக்கைபெற்றவன், நன்கொடைச்சம்பளகாரன்.
Sī'ne dī'e, *adv.* தவணையின்றி, தவணைகுறியாமல்.
Sī'ne quā non, *s.* அவசியமானது, காரியத்துக்குவேண்டியது, தவிர்க்கக்கூடாதது, விலக்கக்கூடாதது.
Sin'ew, *s.* நரம்பு, நாடி, தசைநார்.
Sin'ew, *v. a.* பலப்பித்தல், உரப்பித்தல், நரம்பிணலிறுக்குதல்.
Sin'ew-ed, *a.* நரம்புவிசியுள்ள, உரமான.
Sin'ew-less, *a.* நரம்புப்பிடியற்ற, பெலனற்ற, வலியற்ற.
Sin'ew-y, *a.* நரம்புப்பிடியான, பெலனுள்ள, வலியுள்ள.
Sin'ful, *a.* பாவமுள்ள, அசுத்தமான.
Sin'ful-ly, *adv.* பாவமாய், ஆகாமியமாய், அசுத்தமாய்.
Sin'ful-ness, *s.* பாவத்தன்மை, பாவக்குணம், பாவத்தனம்.
Sing, *v. a.* கீதம்பாடுதல், இராகம்பாடுதல், இசைத்தல்.
congratulatory songs, சோபனம்பாடுதல், மங்கலம்பாடுதல், பல்லாண்டுகூறுதல், வாழ்த்துதல்.
melodiously, இராகமாய்ப்படித்தல், சாயலாய்ப்படித்தல், இன்னிசையாய்ப்பாடல், ஓசையாய்ப்பாடுதல்.
out, குரல்விட்டுப்படித்தல்.
with expression, குனிப்பாய்ப்பாடுதல், மெட்டாய்ப்பாடுதல்.
as birds, கூவுதல், துழனியிடுதல், பட்சிபாடுதல்.
Singe, *s.* பொசுக்குகை, கருக்குகை, கருகுகை, வறுகை.
Singe, *v. a.* கருக்குதல், பொசுக்குதல், சுடுதல், தீய்த்தல்.
to be singed, கருகுதல், பொசுங்குதல், காந்துதல், தீய்தல்.
Sing'er, *s.* பாடகன், சங்கீதக்காரன், பாடுவான், பாணிகன்.
Sing'ing, *s.* கீதம், பாட்டு, படனம்.
men, பாடகர், பாட்டுவாளி.
women, பாடகிகள்.
Sing'ing-mäs-ter, *s.* கீதநாதன், சாரீரன்.

Sin'gle, *v. a.* வெவ்வேறாக்கல், ஒவ்வொன்றாய்ப்பிரித்தல்.
Sin'gle, *a.* ஒற்றையொற்றையான, தனித்த, வெவ்வேறான.
a single one, ஒற்றை, தனித்தது, ஒன்றேயொன்று, ஒன்றி.
combat, தனியுத்தம், தனிப்போர்.
eye, ஒற்றைக்கண்.
eye, in a Bible sense, துலக்கம், தெளிவு, கலப்பில்லாமை.
man, ஒன்றி, தனியாள்.
person, ஒற்றையாள், தனியாள், தனியன், பிரமசாரி.
to be single, தனித்தல், கேவலமாதல், ஒன்றிப்பாதல்.
Sin'gle-ness, *s.* தனிமை, கேவலம், ஒருமை, ஒற்றுமை.
as sincerity, மனநேர்மை, மனவுண்மை, மனநிதார்த்தம்.
of purpose, ஏகசிந்தை, ஏகமனம்.
Sin'gly, *adv.* தனியே, தனித்தனியே, வெவ்வேறே, ஒற்றையாய்.
Sing'-song, *s.* இழுத்திழுத்துவாசிக்கை.
Sin'gu-lar, *a.* ஒருமையான, வழக்கமில்லாத, உத்தமமான, நூதன.
as odd, நூதனமான.
number, ஒருமையெண், தனியெண்.
person, நூதனன், நூதனி.
Sin'gu-lar'i-ty, *s.* நூதனம், விற்பன்னம், விசித்திரம்.
Sin'gu-lar-ly, *adv.* பிரதானமாய், நூதனமாய், வழங்காவழியாய்.
Sin'is-ter, *a.* கள்ளக்கருத்துள்ள.
as corrupt, கெட்ட, பாழான.
as dishonest, நிதார்த்தமற்ற.
aspect, அசுபநோக்கு.
on the left, இடப்பக்கமுள்ள, அபசவ்வியமான.
view, கள்ளக்கருத்து, துற்சகுனம்.
Sin'is-ter-ly, *adv.* மாறுபாடாய், மதியீனமாய், புத்திக்கேடாய்.
Sin'is-trous, *a.* முரண்டான, வழங்காத, இடதான.
Sink, *s.* நீர்வாய்க்கால், நீர்த்தொட்டி, கோமுகி, நீர்த்தூம்பு.
Sink, *v. a.* தாழ்த்தல், அமிழ்த்துதல், ஆழ்த்தல், புதைத்தல், அமுக்குதல்.
a well, கிணறுதோண்டுதல்.
to make holes, குழித்தல், தொடுதல், தொளைத்தல்.
to depress, பணித்தல், பதித்தல்.
Sink, *v. n.* தாழ்தல், புதைதல், அமிழ்ந்துதல், படிதல், இறங்குதல்.
in, as the belly, ஒட்டுதல், வற்றுதல்.
as the eyes, கண்குழிதல், கண்ணுறைபுகுதல், கண்தாழ்தல்.
as fall gradually, இருத்தல், இறங்குதல், அடைதல்.
as ink in writing, ஊறுதல், சுவறுதல்.
as the spirits, குறுவுதல், சலித்தல், கோடுதல், வாடுதல்.
as a stick, &c., புதைதல்.
as a vessel or other floating body, தாழ்தல், அமிழ்தல்.
to sink or slump in as a post, இருந்துவிடுதல், இறங்குதல்.
Sink'ing, *s.* அமிழ்ப்பு, மூழ்குகை, அமிழ்த்துகை.
Sink'ing-fund, *s.* கடனிறுக்கும்படிஸ்தாபித்தவருமானம்.
Sin'less, *a.* பாவமில்லாத, பொல்லாங்கற்ற, கறையற்ற, மாசற்ற.
Sin'less-ness, *s.* பாவமில்லாமை, பொல்லாப்பின்மை, தோஷமின்மை.
Sin'ner, *s.* பாவி, துரோகி, குற்றவாளி, நேரஸ்தன், அக்கிரமி.
Sin'-of-fer-ing, *s.* பாவப்பலி, பாவம்போக்கும்பலி, பாவநிவிர்த்திப்பலி, பாவப்பிராயச்சித்தப்பலி.
Sin'u-āte, *v. a.* இலைகள்கருக்குவைத்தல்.
Sin-u-ā'tion, Sin-u-os'i-ty, *s.* நெளிவு, வளைவு, வணர், சற்பாகாரம்.
Sin'u-ous, *a.* நெளிவுள்ள.
Sī'nus, *s.* கடற்குடா.
in anatomy, அவடி, குழி.
Sip, *s.* ஒருமுறையுறிஞ்சத்தக்கது.
Sip, *v. n.* உறிஞ்சுதல்.
Sīpe, *v. n.* பொசிதல்.
Sī'phon, *s.* வளைந்தகுழல், நீர்வாங்குங்குழல்.
Sĭr, *s.* ஐயன், சுவாமி, ஓர்பட்டப்பெயர்.
Sīre, *s.* பிதா, அப்பன், தந்தை.
Sī'ren, *s.* நீரரமகள், சலதேவதை.
as enticing woman, மையற்காரி, மோகினி, வசீகரகாரி.

Sī'ren, *a.* மயக்குகிற, மோகஞ்செய்கிற.
Si-rī'a-sis, *s.* உட்டணரோகம்.
Sir'i-us, *s.* அக்கினிநட்சத்திரம், உலுத்தகநட்சத்திரம்.
Sĭr'loin, *s.* பிற்சந்திறைச்சி.
Si-roc'co, *s.* சோழகக்கொண்டல், தென்கீழ்காற்று.
Sir'rah, *int.* எட, எ, கோ.
Sir'up, *s.* சீனிப்பாகு, பாணி, பாணிவற்றல், இனிப்புக்குழம்பு.
Sir'up-y, *a.* பாணிபோன்ற.
Sis'ter, *s.* சகோதரி, உடன்பிறந்தாள்.
elder, அக்காள், மூத்தசகோதரி.
younger, இளையாள், தங்கை.
own, உடன்பிறந்தாள், சகோதரி.
in law, மைத்துனி, கொழுந்தி.
hood, சகோதரித்தன்மை, சகோதரிப்பாங்கு.
sisters in law are to each other, ஓரகத்தி, ஓய்ப்பிடியாள்.
Sis'ter-ly, *a.* சகோதரியடைவான, சகோதரிபோன்ற.
Sit, *v. n.* இருத்தல், உட்காருதல்.
on eggs, அடைகாத்தல், அடைகிடத்தல், அபயங்காத்தல்.
on the heels, குந்துதல்.
a little further, தள்ளியிருக்குதல், ஒற்றியிருத்தல்.
as birds, படிதல், வதிதல்.
to sit up, நிமிர்ந்திருத்தல்.
Sīte, *s.* இடம், தலம், தானம், நிலையம், நிலை.
of a house, வீட்டுநிலையம், வீட்டுநிலம், கிரகஸ்தானம்.
Sit'ting, *s.* உட்காருகை, இருக்கை.
on eggs, அடைகாப்பு, அபயங்காப்பு, அடைவைத்திருக்கை.
on a seat, வீற்றிருக்கை.
at one sitting, இருந்தஇரையில்.
Sit'u-ate, *a.* வைக்கப்பட்ட, நிறுத்தப்பட்ட, நிலைகொண்ட.
Sit-u-ā'tion, *s.* இடம், தானம், நிலையம்.
as office, உத்தியோகம்.
in life, நிலைமை, நிலைவரம்.
of a planet, கிரகநோக்கு, கிரகநிலை.
Six, *a.* ஆறுவதான, ஆறும்.
of each, or by sixes, அவ்வாறு, அவ்வாறாய், ஆறாறாய்.
Six'fōld, *a.* அறுமடங்கான.
Six'scōre, *s.* ஆறிருபது, நூற்றிருபது, சடவிம்சதி.
Six'teen, *s.* பதினாறு, சோடசம்.
Six'teenth, *a.* பதினாறும்.
Sixth, *a.* ஆறும், ஆறுவதான.
Sixth'ly, *adv.* ஆறுவதாய்.
Six'ti-eth, *a.* அறுபதாம்.
Tent′ed, *a.* கூடாரமிடப்பட்ட, கூடாரம்விரிக்கப்பட்ட.
Tent′er, Tent′er-hook, *s.* புடைவையிறுக்கும் விசைக்கம்பின்கொளுக்கி.
Tent′er, *v. a.* புடைவைவிரித்திறுக்குதல், விசைக்கம்புஊன்றல்.
Tenth, *s.* பத்திலொன்று, தசமபாகம்.
Tenth, *a.* பத்தாவதான, பத்தாம்.
Tenth′ly, *adv.* பத்தாவதாய்.
Te-nū′i-ty, *s.* நொய்மை, மென்மை, மிருது, சுகுமாரம்.
Ten′u-ous, *a.* நொய்மையான, மிருதுவான, மென்மையான.
Ten′ure, *s.* ஆட்சி, பிடிப்பு, பற்று, பராமரிப்பு, காணியாட்சி.
Tep-e-fac′tion, *s.* அனலாக்குகை, சூடுபடுத்துகை.
Tep′e-fy, *v.* அனலாக்குதல், வெப்புக்காட்டுதல், அனலாகுதல்.
Tep′id, *a.* செஞ்சூடான, சிறுசூடான.
Te-pid′i-ty, Tep′id-ness, Tē′por, *s.* இளஞ்சூடு, நகச்சூடு, சிறுசூடு, மென்சூடு.
Ter′a-phim, *s.* குலதெய்வம், மனைத்தெய்வம், கிரகதேவதை.
Terce, *s.* நூற்றறுபத்தெட்டுச்சேர்கொள்ளுமோர்பீப்பா.

Ter-e-bin'thine, *a.* ஓர்வகைத்தைலமுள்ள.

Ter'e-brāte, *v. a.* தொளைத்தல், தமரிடுதல், பீறச்செய்தல்.

Ter-e-brā'tion, *s.* தொளைக்கை, தமரிடுகை, பீறஅரிகை.

Ter-gem'in-ous, *a.* மும்மடங்கான, மும்மடியான.

Ter'gi-ver-sāte, *v. n.* நழுவுதல், கடத்துதல், மாறுபாடுசெய்தல்.

Ter-gi-ver-sā'tion, *s.* மாறுபாடு, போக்கு, பெயர்ச்சி, திரிவு.

Term, *s.* தவணை, எல்லை, முறை, தரம், தடவை, கந்தாயம்.
 a word, சொல், சீர், கிர்.
 in arithmetic, இராசி.
 to fix a term, தவணைகுறித்தல்.

Terms, *s.* (*pl.*) குழூஉக்குறிச்சொற்கள், சங்கேதம்.
 as condition of agreement, பொருத்தம், ஒப்பந்தம்.
 in algebra, உறுப்பு.
 in college, &c., தவணை.
 in grammar, இலக்கணமொழி, இலக்கணச்சொல்.

Term, *v. a.* பெயரிடுதல், பெயர்தரித்தல்.

Ter'ma-gan-cy, *s.* முரண்டு, தறுகுறும்பு, துடுக்கு, துடியாட்டம்.

Ter'ma-gant, *s.* தறுகுறும்பி.

Ter'ma-gant, *a.* தறுகுறும்புள்ள, சண்டைபிடிக்கிற, பொல்லாங்குள்ள.
 woman, ஆண்மாரி, கம்பலைமாரி, விவாதசீலி, சண்டைக்காரி.

Ter'mēs, *s.* கறையான், சிதலை, செல்.
 winged, ஈசெல்.

Term'in-a-ble, *a.* முடியக்கூடிய.

Term'in-āte, *v. a.* முடித்தல், தீர்த்தல், எல்லைப்படுத்துதல், தொலைத்தல்.

Term'in-āte, *v. n.* முடிதல், தீருதல்.

Term'in-ā-ted, *a.* முடிந்த, முற்றின.
 verb, முற்றுவினை.

Term-in-ā'tion, *s.* முடிவு, ஈறு, இறுதி, எல்லை, கடை, பரியந்தம், அந்தம்.
 in grammar, விகுதி.
 as the act of finishing, முடிப்பு.

Term-in-ā'tion-al, *a.* முடிகிற, அந்தமுள்ள, ஈறுள்ள, கடையான.

Term'in-a-tive, *a.* முடிக்கக்கூடிய.

Term-in-ol'o-gy, Term-on-ol'o-gy, *s.* சொற்பொருணூல்.

Ter'min-us, *s.* எல்லை, அந்தம், முடிவு.

Ter'mīte, *s.* (*see* Termes.) கறையான்.

Tern'a-ry, Ter'ni-on, *s.* மூன்று, திறி.

Ter'race, *s.* மதிலுண்மேடை, பதனம், உப்பரிகை, மேற்றளம், பிராசாதபிருஷ்டம், அரமியம்.
 of a house, மேல்வீடு, மேன்மாடம், மெத்தைவீடு, நிலாமுற்றம்.
 to have a terrace, நிலாமுற்றங்கட்டுதல், அரமியமிடுதல்.

Ter-rā'que-ous, *a.* கடலுநிலமுமுள்ள, பூமிக்கடுத்த.
 globe, நிலமுநீருமுள்ளபூமியுண்டை, அம்புவி, பூகோளம்.

Ter-reen', *s.* ஓர்பாத்திரம்.

Ter-rēne', Ter're-ous, *a.* பூமிக்கடுத்த, பூகோளத்துக்கடுத்த, தரைக்கடுத்த, சகத்துக்கடுத்த.

Ter-res'tri-al, *a.* பூமிக்கடுத்த, நிலத்துக்கடுத்த, லௌகிக.
 body, பூமிக்குரியசரீரம்.
 globe, பூகோளம், புவனகோசம்.
 equator, நிரக்ஷம், மேகலாரேகை.
 latitude, அட்சம், அக்ஷம்.

Ter-res'tri-al-ly, *adv.* பூமிக்குரியதாய்.

Ter-res'tri-ous, *a.* பூமிக்குரிய.

Ter'ri-ble, *a.* அச்சமுண்டாக்கத்தக்க, பயங்கரமான, நடுநடுங்கத்தக்க, திடுக்கிடத்தக்க, கெடிமண்டத்தக்க, கெடியுள்ள, திகில்கொடுக்கிற.

Ter'ri-ble-ness, *s.* பயங்கரம், திடுக்காட்டம், கெடி, அதிகதிகில்.

Ter'ri-bly, *adv.* பயங்கரமாய், பலாக்காரமாய், கெடியாய்.

Ter-rif'ic, *a.* அச்சமுண்டாக்கத்தக்க, பயப்படுத்தத்தக்க, திடுக்கிடப்பண்ணத்தக்க, கெடிமண்டுவிக்கத்தக்க.

Ter'ri-fy, *v. a.* பயப்படுத்துதல், திடுக்கிடப்பண்ணுதல், வெருட்டுதல், பயமுறுத்துதல், கெடிக்கப்பண்ணுதல், திடுக்கிடப்பண்ணுதல்.

Ter-ri-tō'ri-al, *a.* தேசப்பிரிவுக்கடுத்த, திசைக்கடுத்த, இராச்சியத்துக்கடுத்த.

Ter'ri-to-ry, *s.* தேசம், தேயம், இராச்சியம், சீமை, சீமைப்பற்று.

Ter'ror, s. அச்சம், திகில், திகைப்பு, திடுக்காட்டம், கெடி, பயங்கரம்.
to be terror-struck, திடுக்கிடுதல், திகைத்தல், திகிலடைதல்.
Terse, a. ஒழுங்கான, நேற்றியான, செம்பாகமான, சுருக்கமான.
Terse'ly, adv. ஒழுங்காய், செம்பாகமாய், சீராய், தெளிவாய், செப்பமாய்.
Terse'ness, s. வாசகவொழுங்கு, வாசகத்தெளிவு, வாசகப்பொழிப்பு.
Ter'tian, s. முறைக்காய்ச்சல், முறைமாறன், மூன்றாம்முறைச்சுரம்.
Ter'tian, a. முறைச்சுரத்துக்குரிய.
Ter'tia-ry, a. மூன்றாம்.
Ter'tiāte, v. a. மூன்றுமுறைசெய்தல்.
a gun, துப்பாக்கிபரிசோதித்தல்.
Tes'sel-āte, v. a. சதுர்க்கோணமாக்குதல், சதுக்கப்படுத்தல்.
Tes'sel-ā-ted, Tes-se-rā'ic, a. பலவன்னச்சதுர்க்கோடுள்ள, சதுரங்கமனையுள்ள, நாற்கோணஅறையுள்ள.
Test, s. சோதனை, பரீட்சை, பரிசோதனை, பரிசோதனம்.
in chemistry, சோதனைமருந்து.
on the touchstone, உரை, உரைப்பு, கீறு, தேய்மானம்.
Test, v. a. சோதித்தல், பரீட்சித்தல், உரைத்துப்பார்த்தல், தேய்த்தறிதல்.
Tes'ta, s. ஓடு.
Test'a-ble, a. மரணசாதனவழியாற்கொடுக்கக்கூடிய.
Tes-tā-ce-ol'o-gy, s. ஓடுள்ளசெந்துக்களைப்பற்றியநூல்.
Tes-tā'ceous, a. ஓடுள்ள.
Test'a-ment, s. மரணசாதனம், உடன்பிடிக்கை, ஏற்பாடு.
Test-a-ment'a-ry, a. மரணசாதனமான, உடன்படிக்கையான, ஏற்பாடான.
Test-a-ment-ā'tion, s. மரணசாதனஞ்செய்துகொடுக்கை.
Test'ate, a. மரணசாதனங்கொடுத்திருக்கிற.
Test-ā'tion, s. மரணசாதனங்கொடுக்கை.
Test-ā'tor, s. மரணசாதனம்பண்ணுகிறவன்.
Test-ā'trix, s. மரணசாதனம்பண்ணினவள்.

Test'ed, a. சோதித்த, பரீட்சைபண்ணின, அறிந்த, தேர்ந்த.
Tes'ter, s. மேற்கட்டி, கூடாரம், பன்றுங்கு, விதானம்.
Tes'ti-cle, s. பீசம், அண்டம், விதை.
Test-i-fi-cā'tion, s. சாட்சியிடுகை, அத்தாட்சிப்படுத்துகை.
Test'i-fi-cā-tor, s. சாட்சியிடுவோன்.
Test'i-fī-er, s. சாட்சிக்காரன், சாட்சி.
Test'i-fy, v. a. சாட்சியிடுதல், சாட்சிகொடுத்தல், சத்தியம்பண்ணுதல்.
Test'i-ly, adv. வெடுவெடுப்பாய், மூர்க்கமாய், உக்கிரமாய்.
Test-i-mō'ni-al, s. சாட்சிப்பத்திரம், சிபாரிசுப்பத்திரம்.
Test'i-mo-ny, s. சாட்சி, அத்தாட்சி, திட்டாந்தம், பிரமாணம், பத்திரம்.
external, புறச்சாட்சி.
internal, அகச்சாட்சி.
written, எழுத்துவழியாய்வந்தசாட்சி, எழுத்துச்சாட்சி.
Test'i-ness, s. வெடுவெடுப்பு, மூர்க்கம், உக்கிரம், குரூரம்.
Tes-tu-din'e-ous, a. ஆமையோடுபோன்ற, ஓடுள்ள.
Tes-tū'do, s. ஆமை, கூர்மம்.
for soldiers, பரிசை, கேடகம்.
Test'y, a. வெடுவெடுப்பான, சினக்குணமான, கோபமுள்ள.
Tet'a-nus, s. ஈர்ப்பு, இசிவு, வலி.
Tete, s. பொய்மயிர், முடிமயிர்.
Tete'-a-tete', adv. கொள்கையாய், சங்காத்தமாய், கூட்டமாய்.
Teth'er, s. தாமணி, தாம்பு.
Teth'er, v. a. மேயக்கட்டுதல்.
Tet'rad, s. நான்கு, நாலு, சதுர்.
Tet'ra-gon, s. சதுர்க்கோணம், நாற்கோணம், சதுர்ச்சிரம்.
in astrology, கிரகநோக்கு, கேந்திரநோக்கு.
Te-trag'on-al, a. சதுர்க்கோணமுள்ள.
Te-tram'e-ter, s. நாலடிக்கவிதை.
Te-tram'e-ter, a. நாலடிக்கவிதைக்குரிய, நாற்சீர்க்கவிக்குரிய.
Tet-ra-pet'al-ous, a. நாலிதழுள்ள.
Tē'trärch, s. காற்பங்குதேசாதிபதி.
Tet-ra-syl'la-ble, s. நாலசைச்சொல்.
Tet'ter, s. கரப்பன், தேமல்.

Tew, *v. a.* வேலைசெய்தல், இழுத்தல், அலைக்கழித்தல், தொல்லைபண்ணல்.
Text, *s.* முகவுரைவாக்கியம், மூலவாக்கியம், ஆரம்பவாக்கியம்.
book, பொழிப்புரைப்புத்தகம்.
Text'-hand, *s.* பெரியெழுத்து.
Text'ile, *a.* பின்னப்பட்ட, நெய்யப்பட்ட, நெய்யப்படக்கூடிய.
Tex-tō'ri-al, Text'rine, *a.* நெசவுக்குரிய, பின்னலான.
Text'u-a-ry, *a.* முகவுரைக்குரிய, முகவுரையிலடங்கிய, பாயிரமுள்ள.
Text'ure, *s.* நெசவு, பின்னல்.
of wood, cloth, &c., சாயல், இயல்பு, தன்மை, குணம், மாதிரி.
Than, *adv.* பார்க்கிலும், பார்க்க, இல், பார்க்கில், காட்டிலும்.
this is more than that, அதிலுமிது அதிகம், அதற்கிதுமிச்சம்.
Thank, *v. a.* நன்றிசெலுத்துதல், உபசாரஞ்சொல்லுதல், புகழுதல், துதித்தல், துதிசொல்லுதல்.
Thank'ful, *a.* நன்றியான, நன்றியுள்ள.
Thank'ful-ly, *adv.* நன்றியாய்.
Thank'ful-ness, *s.* நன்றியறிகை, நன்றியுணர்வு, நன்றியுடைமை.
Thank'less, *a.* நன்றியற்ற, நன்றிகெட்ட, நன்றியீனமான, நன்றிமறந்த.
as not gaining thanks, நன்றிபெறாத, நன்றியடையாத.
Thank'less-ness, *s.* நன்றியீனம்.
Thanks, *s.* (*pl.*) நன்றி, தோத்திரம்.
Thanks-giv'er, *s.* நன்றிசெலுத்துவோன், துதிசெலுத்துவோன்.
Thanks-giv'-ing, *s.* தோத்திரஞ்செலுத்துகை, புகழ்ச்சிகூறுகை.
day of, தோத்திரப்பெருநாள்.
Thank'wŏr-thy, *a.* நன்றிசெலுத்தப்படத்தக்க, புகழப்படத்தக்க.
That, *pro.* அது, அஃது, அ, அந்த.
That, *con.* என்று, என.
Thatch, *s.* வீடுவேயும்புல், வீடுவேயும்வைக்கோல்.
Thatch, *v. a.* வீடுவேய்தல்.
Thatch'er, *s.* வீடுவேய்வோன்.
Thau'ma-tur-gy, *s.* அதிசயசெய்கை.
Thaw, *s.* உருக்குகை, உருகுகை.
Thaw, *v. a.* கரைத்தல், உருக்குதல்.
Thaw, *v. n.* உருகுதல், கரைதல், நீராதல், நீராளமாதல்.
The, *art.* அந்த, இந்த, உந்த, அ, இ, உ.
Thē'a-ter, Thē'a-tre, *s.* கழகம், அபிநயசாலை, நாடகசாலை, மல்லகசாலை, அரங்கம், களரி.
The-at'ric, The-at'ric-al, *a.* நாடகவரங்கத்துக்கடுத்த, களரிக்குரிய.
gesture, கைமெய்காட்டு, பயில்.
representation, கூத்து, கூத்துவேஷம்
The-at'ric-al-ly, *adv.* அபிநயத்துக்குரியதாய், நாடகத்துக்குரியதாய்.
Thee, *pro.* உன்னை, நின்னை.
Theft, *s.* களவு, திருட்டு, கரவடம், கள்ளம், பட்டிமை.
Their, *pro.* அவர்களுடைய, அவைகளுடைய.
Thē'ism, *s.* கடவுளொருவனுண்டென்னுங்கோட்பாடு, ஏகேச்சுரவாதம்
Thē'ist, *s.* கடவுளொருவனுண்டென்றுசாதிப்போன், ஏகேச்சுரவாதி.
The-ist'ic, The-ist'ic-al, *a.* கடவுளொருவனுண்டென்னுங்கோட்பாட்டுக்குரிய, ஈச்சுரவாதமுள்ள.
Them, *pro.* அவைகளை, அவர்களை.
Thēme, *s.* காரியம், மூலம், நோக்கம், எண்ணம், பீடிகை.
Them-selves', *pro.* தாங்களே, தங்களே, தம்மையே, தாங்கடாமே.
Then, *adv.* அந்நேரம், அப்பொழுது, அவ்வேளை, அச்சணம், அக்காலம், பின்னை, அப்படி, அப்படியிருக்க, அதன்பின், பிற்பாடு.
Thence, *adv.* அதினின்று, அங்கிருந்து, அதுதொடங்கி, அன்றுதொடங்கி, ஆகையால், ஆதலால், அதனால்.
forth, அன்றுதொடக்கமாய்.
forward, அதுமுதலாய், அன்றுதொட்டு, அதுமுகனையாய்.
The-oc'ra-cy, *s.* தேவாதிபத்தியம், தேவாளுகை, தேவரசாட்சி.
The-o-crat'ic, The-o-crat'ic-al, *a.* தேவாளுகைக்கடுத்த.
The-od'o-līte, *s.* நிலஅளவைக்கடுத்தஆயுதம், கோணமளக்குங்கருவி.
The-og'o-ny, *s.* தெய்வஉற்பத்தி.
The-o-lō'gi-an, *s.* வேதசாத்திரி, வேதாப்பியாசி, வேதபாரகன்.

The-o-log′ic, The-o-log′ic-al, *a.* வேதசாத்திரத்துக்கடுத்த, வேதத்துக்குரிய, வைதீகத்துக்குரிய.
The-o-log′ic-al-ly, *adv.* வேதசாத்திரமுறையாய், அளவைப்பிரமாணமாய்.
The-ol′o-gist, *s.* வேதாப்பியாசி.
The-ol′o-gīze, *v. a.* வேதசாத்திரமுறைப்படிசொல்லல்.
The-ol′o-gy, *s.* வேதசாத்திரம்.
natural, பிரபஞ்சநூல், பதார்த்தநூல்.
revealed, வைதீகநூல், வேதம்.
of a sect, சமயகோட்பாடு, சமயசாத்திரம், சமயாசாரம்.
Thē′o-rem, *s.* சூத்திரம், துருவம்.
in mathematics, நியாயபிரசினம்.
The-o-re-mat′ic, The-o-re-mat′ic-al, *a.* நியாயபிரசின, நியாயமாத்திர.
The-o-ret′ic, The-o-ret′ic-al, *a.* சூத்திரத்துக்கடுத்த, உத்தேசமான.
Thē′o-rist, Thē′o-rīz-er, *s.* சூத்திரங்கட்டுகிறவன், மனோரதியன்.
Thē′o-rīze, *v. n.* உத்தேசித்தல், யோசித்தல், மனோரதியம்பண்ணல்.
Thē′o-ry, *s.* துணிவு, எண்ணம, கோட்பாடு, நூல், மனோராச்சியம், மனோரதியம், அபிப்பிராயம்.
The-o-soph′ic, The-o-soph′ic-al, *a.* யோகசித்தியுள்ள.
The-os′o-phy, *s.* யோகசித்தி, யோகானுபவம், யோகாஞ்ஞை.
Ther-a-peū′tic, *a.* பதார்த்தசாரத்துக்கடுத்த, வஸ்துதத்துவத்துக்கடுத்த.
Ther-a-peū′tics, *s.* பதார்த்தசாரநூல்.
There, *adv.* அங்கு, அவ்விடம், அங்ஙனம், ஆங்கு.
There-ā-bout′, *adv.* அவ்விடங்களில், அங்ஙனமாய், கிட்டத்தட்ட.
There-äft′er, *adv.* அந்தப்பிரகாரமாக, அதுபோல, அதன்மேல், அதன்பின், அதற்குப்பிற்பாடு.
There-at′, *adv.* அந்தவிடத்தில், அதில், அதின்பேரில்.
There-by′, *adv.* அதினால், அதைக்கொண்டு, அதால், அதுமூலமாய்.
There-fore, *adv.* ஆகையால், ஆதலால், அப்படியிருப்பதினால்.
There-from′, *adv.* அதினின்று, அதினால்.
There-in′, There-into′, *adv.* அந்தவிடத்தில், அதுசமயத்தில், அதுகாரியத்தில், அதில், அதற்குள்.
There-of′, *adv.* இதைப்பற்றி, அதைப்பற்றி, அதிலிருந்து, அதனுடன்.
There-on′, *adv.* அதன்பேரில், இதன்பேரில், அதன்மேல்.
There-out′, *adv.* அதிலிருந்து, அதைவிட்டு, அதினின்று.
There-to′, *adv.* அதற்கு, அத்துடன்.
There-un′der, *adv.* அதின்கீழ்.
There-up-on′, *adv.* அதன்பேரால், உடனே, அதனால்.
There-with′, *adv.* அத்துடன், இத்துடன்.
Thē′ri-ac, *s.* நஞ்சுக்குமாற்று.
Thē′ri-ac, The-rī′ac-al, *a.* மருந்துக்கடுத்த, வைத்தியத்துக்குரிய.
Ther′mal, *a.* அனலான, சூடுள்ள.
Ther-mom′e-ter, *s.* உட்டணசீதளங்காட்டுங்கருவி, சீதளஉட்டணப்பிரமாணிகை.
Ther-mo-met′ric-al, *a.* உட்டணசீதளங்காட்டுகிற, உட்டணசீதளம்பிரமாணிக்கிற.
Thēse, *pro.* இவர்கள், இவை, இவைகள், இஃதுகள்.
Thē′sis, *s.* காரியம், கோட்பாடு, காரியமூலம், தாட்டாந்தரம்.
Thet′ic-al, *a.* இட்டுக்கொண்ட, வைத்துக்கொண்ட.
Thē′ur-gy, *s.* அற்புதசத்தி, தேவதத்துவம், கட்டாட்டு.
They, *pro.* அவர்கள், தாம், தாங்கள், அவை, அவைகள்.
Thick, *s.* பருப்பம், கனப்பு.
Thick, *a.* கனமான, பருமையுள்ள, பொலிவுள்ள, தடிப்புள்ள, தடித்த.
cloth, உரப்பானபுடைவை, பருக்கன்புடைவை, கடுத்தமானபுடைவை.
darkness, காரிருள், கனவிருள், பேரிருள், அந்தகாரம்.
lips, பருத்தஉதடு, தடித்தஅதரம்.
paper, உரத்தகடுதாசி, தடித்தகடுதாசி, பருக்கன்தாள்.
trees, செறிவு, அடர்த்தி, நெருக்கம்.
voice, கனத்தகுரல், மந்தநாதம்.
as dull, மந்தமான, தூக்கமான.

to be thick as foliage, hair, &c., செறிதல், சடையாதல், அடர்தல், கிளைத்தல், அடர்ந்திருத்தல்.
Thick, *adv.* தடிப்பாய், நெருக்கமாய், அடர்த்தியாய், கனமாய்.
Thick'en, *v. a.* இறுக்கமாக்குதல், தடிப்பாக்குதல், உரப்பாக்குதல், கடுத்தமாக்கல், கனப்பாக்கல்.
Thick'en, *v. n.* உறைதல், தடித்தல், பருத்தல், கனத்தல், பாரித்தல், நெருங்குதல், கிளைத்தல், அடர்தல்.
Thick'et, *s.* காடு, வனம், சோலை, தோப்பு.
Thick'ly, *adv.* அடர்த்தியாய், நெருக்கமாய், இறுக்கமாய், கிளைப்பாய்.
Thick'ness, *s.* கனம், பருமை, தடிப்பு, உரம், நெருக்கம், செறிவு, அடர்த்தி.
Thick'set, *a.* நெருக்கமான, குறுத்துப் பருத்த, அடர்த்தியான.
Thick'skin, Thick'skull, *s.* மந்தம், மந்தன், திமிரன்.
Thick'skull-ed, *a.* மந்தமுள்ள, பேதைமையுள்ள, திமிர்ப்புள்ள.
Thiēf, *s.* கள்ளன், திருடன், சோரன், சூறைக்காரன், பட்டிதன்.
Thiēve, *v. a.* களவுசெய்தல், சோரஞ்செய்தல், திருடுதல், சூறையாடுதல், கொள்ளையிடுதல்.
Thiēv'er-y, *s.* களவு, கள்ளம், சோரம், திருட்டு, பட்டிமை.
Thiēv'ish, *a.* கள்ளத்தனமுள்ள, சோரக்குணமுள்ள, திருட்டுக்குணமுள்ள.
Thiēv'ish-ly, *adv.* கள்ளக்குணமாய், திருட்டுத்தனமாய், பட்டிமையாய்.
Thiēv'ish-ness, *s.* கள்ளம், கள்ளக்குணம், கரவு, திருட்டுக்குணம்.
Thīgh, *s.* தொடை, குறங்கு, வாமம்.
Thill, *s.* ஏர்க்கால்.
Thim'ble, *s.* விரற்புட்டில், அங்குலபாலணி, விரலுறை.
Thin, *v. a.* ஐதாக்கல், நெருக்கமற்றதாக்கல், மெல்லிதாக்கல்.
Thin, *a.* மென்மையான, சுள்ளலான, நுண்மையான, நொய்தான, சீவலான, ஐதான, மெல்லிய.
person, ஒஞ்சட்டையன், சுள்ளலன், ஒல்லியன், மெலிந்தோன், வற்றலன்.
to grow thin, மெலிதல், இடைதல்.
Thin, *adv.* ஐதாய், ஒஞ்சட்டையாய், மெல்லிதாய்.
Thīne, *pro.* உன்னுடைய, உனது, நினது, உன்.
Thing, *s.* பொருள், வஸ்து, பண்டம், பதார்த்தம், உடைமை.
affair, காரியம், அலுவல், கவ்வை.
Think, *v. a.* நினைத்தல், எண்ணுதல், கருதுதல், உணர்தல், உன்னுதல்.
to counsel, ஆலோசித்தல், உத்தேசித்தல், யோசித்தல்.
Think'er, *s.* நினைக்கிறவன், எண்ணுகிறவன், யோசிக்கிறவன்.
Think'ing, *s.* நினைவு, எண்ணம், நினைப்பு, சிந்தனை, யோசனை.
Thin'ly, *adv.* ஐதாய், சீவலாய், மெல்லிசாய், மென்மையாய்.
Thin'ness, *s.* நொய்மை, ஐது, மென்மை, மெல்லிமை.
Thĭrd, *a.* மூன்றும், மூன்றுவதான.
a third, மூன்றிலொன்று, திரிபாதம்.
Thĭrd'ly, *adv.* மூன்றுவதாய்.
Thĭrds, *s.* (*pl.*) மூன்றிலொருபங்கு.
Thĭrst, Thĭrst'ness, *s.* விடாய், தாகம், தவனம்.
for any thing, தவிப்பு, அவா, ஆவல்.
for knowledge, கல்வித்தகா, கல்விவாஞ்சை, கலாவிருப்பு.
Thĭrst, *v. a.* விடாய்த்தல், தாகமெடுத்தல், தாகித்தல், அவாக்கொள்ளல்.
for a thing, தவித்தல், ஆசித்தல்.
Thĭrst'y, *a.* விடாயுள்ள, தாகமுள்ள, தவிப்புள்ள, அவாவுள்ள.
Thĭr'teen, *s.* பதின்மூன்று, திரயோதசம்.
Thĭr'teenth, *a.* பதின்மூன்றும்.
Thĭr'ti-eth, *a.* முப்பதாம்.
Thĭr'ty, *s.* முப்பது, முப்பான், முப்பஃது.
This, *pro.* இது, இந்த, இ.
This'tle, *s.* குருக்குத்தி, முள்ளி, நெரிஞ்சில்.
This'tly, *a.* முள்ளுள்ள, கடுவுள்ள.
Thith'er, Thith'er-ward, *adv.* அங்கே, அவ்விடத்தில்.
Thong, *s.* வார், வள், விசி.
braided, வார்க்கயிறு, சவுக்கு, கசை.
Tho-rac'ic, *a.* மார்புக்குரிய.
Thō'ral, *a.* படுக்கைக்குரிய.

Thō'rax, s. நெஞ்சு, மார்பு, மருமம், மார்பெலும்பு.
Thorn, s. முள், கடு.
apple, ஊமத்தை.
tree, முண்மரம், முண்டகம், முள்ளி, முளரி, கண்டகி.
Thorn'y, a. முள்ளுள்ள.
Thŏr'ōugh, a. தீர்க்கமான, திறமான, திருத்தமான, திட்டமான.
learning, தீர்ந்தகல்வி, கசடற்றகல்வி.
scholar, நிபுணன்.
villian, தீர்ந்தகள்ளன், படுகள்ளன்.
to become thorough, பூரணமாதல், திருந்துதல், தேறுதல், தெளிதல்.
Thŏr'ōugh-fāre, s. போக்குவரத்தானவழிப்பாதை, நடமாடும்பாதை.
Thŏr'ōugh-gō-ing, a. திறமான.
Thŏr'ōugh-ly, adv. தீர்க்கமாய், தீர, தீர்மானமாய், முற்றாய்.
Thŏr'ōugh-pāc-ed, a. எடுத்ததைநிறைவேற்றுகிற, எடுத்ததைமுடிக்கிற.
Thŏr'ōugh-sped, a. சித்தியான, பூரணம்பெற்ற, திருத்தியடைந்த.
Thou, pro. நீ, நீர், நீங்கள்.
Thōugh, adv. ஆகிலும், இருந்தும்.
Thought, s. நினைவு, எண்ணம், கருத்து, ஆலோசனை, யோசனை, சிந்தனை.
as secret thoughts, அபிப்பிராயம், உள்ளெண்ணம், உட்கருத்து.
Thought'ful, a. அவதானமுள்ள, நினைப்புள்ள, கருத்துள்ள, யோசனையுள்ள, கவனமுள்ள, சிந்தனையுள்ள.
Thought'ful-ly, adv. அவதானமாய், சிந்தனையாய், யோசனையாய்.
Thought'ful-ness, s. அவதானம், நினைப்பு, கருத்து, சிந்தனை.
Thought'less, a. நினைப்பில்லாத, யோசனையில்லாத, கருத்தற்ற.
as dull, மந்தமான, சுறுசுறுப்பற்ற.
Thought'less-ly, adv. நேர்ந்தபடி, எழுந்தபடி, நினையாமல், யோசனையின்றி.
Thought'less-ness, s. நினையாமை, எண்ணாமை, யோசியாமை, பராக்கு.
Thou'sand, s. ஆயிரம், சகத்திரம்.
Thou'sandth, a. ஆயிரத்து.
part, ஆயிரத்திலொன்று.
Thrall, s. அடிமை, சிறை, சிறைத்தனம், தாசிகம், அனிட்டம்.

Thrall'dŏm, s. அடிமைத்தனம், சிறையிருப்பு, தாசிகம்.
Thrash, v. a. போரடித்தல், சூடுமிதித்தல், கதிரடித்தல்.
to beat, பெலனாயடித்தல்.
Thrash'ing, s. போரடி, சூட்டுமிதி.
Thrash'ing-flōor, s. சூட்டுக்களம், கதிர்க்களம், தானியக்களம்.
Thra-sŏn'ic-al, a. வீம்புபேசுகிற, பெருமைபாராட்டுகிற.
Thra-son'ic-al-ly, adv. வீம்பாய், பெருமையாய், வீறுப்பாய்.
Thread, s. நூல், இழை, தந்து.
bare, சிலும்பல், நசிவு, கரைவு, தேய்வு, உரைவு, சிம்பு.
a ball of, நூற்பந்து, நூற்கழி.
a skein of, நூற்கழி.
of a discourse, பிரசங்கஒழுங்கு.
of a screw, புரி.
Thread, v. a. கோத்தல், கோவைசெய்தல்.
to pass in a narrow way, செல்லல், இடுக்கவழியாய்ச்செல்லல்.
Thread'y, a. நூல்போன்ற, மெல்லிய.
Threat, s. பயமுறுத்துகை, அச்சுறுத்துகை, உறுக்குகை, வெருட்டுகை.
Threat'en, v. a. பயமுறுத்துதல், உறுக்குதல், அச்சுறுத்தல்.
Threat'en-er, s. பயமுறுத்துவோன், வெருட்டுவோன்.
Threat'en-ing, s. பயப்படுத்துகை, பயமுறுத்துகை, வெருட்டுகை.
Three, s. மூன்று, திறி, திறயம்.
of, to, or for each, மும்மூன்று.
fold, மும்மடங்கான, திரிமடங்கான, மும்மடியான.
quarters, முக்கால், நாலில்மூன்று.
score, அறுபது, மூவிருபது, திறிவிம்சதி.
times, மூன்றுதரம், மூன்றுமுறை.
Thresh, v. a. (see Thrash.) சூடுமிதித்தல், போரடித்தல், கதிரடித்தல்.
Thresh'er, s. சூடுமிதிப்போன், போரடிப்போன், கதிரடிப்போன்.
Thresh'ing, s. சூடுமிதிக்கை.
floor, சூட்டுக்களம், கதிர்க்களம்.
Thresh'ōld, s. வாய்தற்படி, வாயிற்படி, வாயில், கீழ்வாயிற்படி.
Thrīce, s. மும்முறை, மூன்றுதரம்.

Thrift, } s. Trift'i-ness, } பெருக்கம், பொலிவு, செழிப்பு, வர்த்திப்பு, வாழ்வு, விருத்தி.
Thrift'i-ly, *adv.* செழிப்பாய்.
Thrift'less, *a.* செழிப்பற்ற, வரண்ட, வாடின, விருத்தியற்ற.
Thrift'y, *a.* உழைப்புள்ள, செழிப்பான, கட்டுமட்டான.
Thrill, *s.* (*see* Drill.) கடுத்தலூசி.
of horror, &c., திகில், நெஞ்சிடி.
Thrill, *v. a.* (*see* Drill.) தொளைத்தல், தமரிடுதல், துவாரமறுத்தல்.
Thrīve, *v. n.* செழித்தல், தழைத்தல், உண்டாகுதல், மதர்த்தல்.
as families, குடிதழைத்தல், வர்த்தித்தல், தலைப்படுதல்.
as vegetables, உண்டாகுதல், செழித்தல், பலித்தல், பொலிதல்.
by industry, வர்த்தித்தல், விருத்தியாதல், பெருகுதல்.
Thrīv'er, *s.* வர்த்திப்போன், சம்பாதிப்போன், விருத்தியாளன்.
Thrīv'ing, *a.* உழைப்புள்ள, பசுமையான, செழிப்பான, தழைவான, சம்பாதிக்கிற, விருத்திக்கிற.
person, உழைப்புக்காரன், தேட்டக்காரன், சம்பாத்தியன்.
Thrōat, *s.* தொண்டை, கண்டநாளம், மிடறு, குரல்வளை.
Throb, *v. n.* துடித்தல், இடித்தல், பதறுதல், மனங்கொதித்தல்.
as boils, கொதித்தல், சுண்டுதல், விறுவிறுத்தல்.
as the head, தலையிடித்தல், தலைநோதல், தலைவலித்தல்.
as the heart, இரத்தாசயந்துடித்தல்.
Throb, } s. Throb'bing, } துடிப்பு, இடிப்பு, கொதிப்பு, விறுவிறுப்பு, நோ, வலிப்பு, எரிவு.
of the head, தலையிடி, தலைநோ, தலைவலி, தலைக்குத்து.
of the heart through fear, நெஞ்சிடி, திடுக்காட்டம், ஏக்கம்.
Thrōe, *s.* நோ, நோக்காடு, அம்பாயம்.
in childbirth, பிரசவவேதனை, பிரசூதவேதனை, வயாவருத்தம்.
Thrōe, *v. a.* நோப்படுதல், நோவடைதல், கருமாரிப்படுதல்.

Thrōne, *s.* சிங்காசனம், பத்திராசனம், இராசாசனம், பீதாசனம்.
as sovereign power, கர்த்தத்துவம், கர்த்தவ்வியம், ஆளுகை.
Thrōne, *v. a.* இராசாபிஷேகஞ்செய்தல், கிரீடஞ்சூட்டுதல்.
Throng, *s.* சனநெருக்கம், சனக்கூட்டம்.
Throng, *v. a.* நெருக்குதல், இடுக்குதல், சங்கடப்படுத்தல், மொய்த்தல்.
Throt'tle, *s.* குரல்வளை, மிடறு.
Throt'tle, *v. a.* கழுத்துத்திருகுதல், தொண்டைநெரித்தல், குரல்வளைநெரித்தல், கழுத்தைஇறுக்குதல்.
Thrö̆ugh, *prep.* ஆல், ஆன, கொண்டு.
Thrö̆ugh, *adv.* ஊடே, உருவ, பீற, உள்ளே, ஊடாக, முற்றும்.
to carry through, முற்றமுடியச்செய்தல், முடிவுகாணல்.
to go through, சகித்தல்.
Thrö̆ugh-out', *adv.* முழுதும், ஏகத்துக்கு, சமஸ்தஇடமும்.
Thrōw, *s.* எறி, உச்சு, வீச்சு.
of dice, உருட்டு.
a stones throw, கல்லெறிதூரம்.
Thrōw, *v. a.* எறிதல், எற்றுதல்.
about, தூற்றுதல், தூவுதல், சிந்துதல்.
back, as a bent tree, &c., எஃகுதல், விசைத்தல், நிமிர்தல்.
dice, கவறுருட்டுதல், பார்ச்சிக்கைபோடுதல், தாயக்கட்டைஎறிதல்.
down, போடுதல், எறிதல், வீசுதல்.
earth, grain, &c., கொட்டுதல், பெய்தல், சொரிதல்.
in, உட்பாய்ச்சுதல், போடுதல், செலுத்துதல், புகுத்தல்.
in wrestling, வீழ்த்துதல்.
or cast on, சாட்டுதல், ஏற்றுதல், சுமத்துதல், சார்த்துதல்.
out or off, தள்ளுதல், எறிந்துவிடுதல், கழற்றுதல், நீக்கல்.
stones, கல்லெறிதல்.
up water, as with the hand, எற்றுதல்.
up, மேலெறிதல், எற்றுதல், உயரஎறிதல், எழுப்புதல்.
out ears of corn, கதிர்வீசுதல், கதிரீனுதல், கதிர்க்குதல்.
out water, &c., ஊற்றுதல், சொரிதல், நீர்பாய்தல்.

out branches, கிளைவிடுதல்.
Thrōw'er, s. எறிகிறவன்.
Thrum, s. குறைப்பா,நெய்துவிட்டபா, பாவின்விடுதலைப்பு.
at the beginning, முகதலை.
at the end, சமைத்லை.
Thrum, v. a. நெய்தல், இழைத்தல், பின்னுதல்.
Thrum, v. n. இசைக்கருவியியக்குதல், தந்திரிமீட்டல், தம்புருவிற்சுண்டுதல்.
Thrum'ming, s. வீணைவாசிக்கை, யாழ்மீட்டை, நரப்புக்கருவியியக்கல்.
Thrush, s. ஒருகுருவி.
the disease, வாய்க்கிரந்தி.
Thrust, s. தள்ளு,குற்று,தாக்கு,பாய்ச்சு.
Thrust, v. a. தள்ளுதல், குற்றுதல், தாக்குதல், பாய்ச்சுதல்.
with a sharp instrument, செலுத்துதல், பாய்ச்சுதல், குற்றுதல்.
Thrust'er, s. பாய்ச்சுவோன், குற்றுவோன், தைக்கச்செய்வோன்.
Thumb, Thum, s. கைப்பெருவிரல், அங்குட்டம்.
Thumb, v. a. கையளைதல். கையளாவுதல்.
Thump, s. குத்து, அடி, மொத்து, அறை.
Thump, v. a. குத்துதல், மொத்துதல்.
reiteratively, மாறிமாறிமோதல்.
Thump'er, s. குத்துகிறவன், அடிக்கிறவன், மோதுகிறவன்.
as club, பொல்லு, தண்டு.
Thump'ing, s. மோதுகை, மொத்து, அறை, உலக்கையடி.
Thun'der, s. முழக்கம்.
Thun'der, v. முழங்குதல்.
Thun'der-bōlt, s. இடியேறு, இடி.
Thun'der-clap, s. இடிமுழக்கம்.
Thun'der-er, s. முழங்குவோன்.
Thun'der-ing, s. இடிமுழக்கம்.
Thun'der-ous, a. முழக்கமுண்டாக்குகிற, முழங்குகிற.
Thun'der-show-er, s. முழக்கமும்மழையும், இடியும்மழையும்.
Thun'der-storm, s. முழக்கமும்புயலும்.
Thun'der-strīke, v. இடியிடித்தல்.
Thun'der-struck, a. ஏக்கமான, திடுக்காட்டமுள்ள, ஏங்கின, திடுக்கிட்ட.
to be thunder-struck, ஏங்குதல், திகைத்தல், பிரமித்தல், கெடித்தல்.

Thu-rif'er-ous, a. தூபங்காட்டுகிற.
Thurs'day, s. வியாழக்கிழமை, குருவாரம்
Thus, adv. இப்படியே, இவ்விதமாய், இவ்வண்ணமாய்.
thus far, இம்மட்டும், இவ்வளவும்.
Thwack, s. சாட்டையடி.
Thwack, v. a. சாட்டையாலடித்தல்.
Thwart, v. a. குறுக்கேதடுத்தல், குறுக்கேமறித்தல், விக்கினஞ்செய்தல்.
a design, கலைத்தல், அபத்தமாக்கல்.
to be thwarted in a plan, எண்ணங்குலைதல், தவறுதல், அபத்தமாதல்.
Thwart, a. குறுக்கான, தடையான.
Thwart, adv. குறுக்காய், விக்கினமாய்.
Thwart'ing, s. இடறு, குறுக்கிடுகை, தடுப்பு, இடையூறு, விரோதம்.
Thwart'ness, s. மாறுபாடு, முரண்டு, அமைபாமை, விக்கினம்.
Thy, a. உன்னுடைய, உனது.
Thyme, s. சமுத்திராப்பூண்டு.
Thy'my, a. சமுத்திராப்பூண்டுநிறைந்த.
Thy-self', s. நீதானே, உன்னைத்தானே, நீயே, உன்னையே.
Tī-ā'ra, s. தலைப்பாகை, குல்லா.
Tib'i-al, a. குதிரையெலும்புக்கடுத்த.
Tick, s. கைகடன், நாணயக்கடன்.
the insect, உண்ணி.
sheep tick, தவிட்டுண்ணி.
wood tick, சருகுண்ணி.
skin tick, தோலுண்ணி.
of a bed, மெத்தையினுறை.
as credit, நம்பிக்கை.
Tick, v. தட்டுதல், திக்குத்திக்கெனல்.
to trust, நம்புதல்.
Tick'et, s. துண்டு, சீட்டு, கிள்ளாக்கு, கைச்சார்த்து, வெகுமதிச்சீட்டு.
in a lottery, தாயச்சீட்டு, பந்தயச்சீட்டு, ஒட்டச்சீட்டு.
Tick'le, v. a. கூச்சங்காட்டுதல், அக்கிட்பாய்ச்சுதல்.
Tick'le, v. n. கூசுதல், கூச்சப்படுதல், கிளுகிளென்றுசிரித்தல்.
Tick'ler, s. பகிடிக்காரன், கூச்சம்பண்ணுகிறவன், அக்கிட்பாய்ச்சுகிறவன்.
Tick'ling, s. கூச்சப்படுத்துகை.
Tick'lish, a. கூச்சமுள்ள.
tottering, தள்ளாடுகிற, அசைகிற.
Tick'lish-ness, s. கூச்சம்.

Tid, *a.* மெல்லிய, நொய்ய, நேற்றியான.
Tid'bit, *s.* தித்திப்புள்ளது, மதுரித்தது.
Tīde, *s.* ஏற்றம், வற்றம்.
ebb, நீர்வற்றம், வற்று.
flow, ஏற்றம், நீரேற்றம், நீர்ப்பெருக்கு.
gate, மதகு, சலதாரை.
waiter, கரைதுறைக்காவற்காரன், துறைமுகங்காப்போன்.
Tīde, *v. a.* நீர்ப்பெருக்கில்தோணியோட்டுதல்.
Tī'di-ly, *adv.* துப்புரவாய், பவித்திரமாய், சுத்தமாய், சுசியாய்.
Tī'di-ness, *s.* பவித்திரம், சிறப்பு, அலங்காரம், சீர், சுத்தம்.
Tī'dings, *s. (pl.)* சங்கதி, விசேஷம், செய்தி, விருத்தாந்தம், வர்த்தமானம், சமாசாரம், புதினங்கள்.
Tī'dy, *a.* காலபோகமான, தற்சமயமான, தற்காலசம்பவமான.
as neat, பவித்திரமான, சீருள்ள.
Tīe, *s.* கட்டு, தளை, பாசம், பந்தம், பிணை.
of hair, குடுமி, முடிச்சு.
of friendship, நேசபந்தம்.
Tīe, *v. a.* கட்டுதல், முடித்தல், பந்தித்தல், இசைத்தல், தொடுத்தல்.
a man's hair in a knot, குடுமிமுடித்தல், மயிர்கட்டுதல்.
on a charm, காப்புக்கட்டுதல், இரட்சாபந்தனந்தரித்தல், கெவிடுகட்டுதல், இழைகட்டுதல்.
up a pack, &c., பொதிகட்டுதல்.
Tiēr, *s.* அடுக்கு, நிரை, ஒழுங்கு, பத்தி, வரிசை, பந்தி.
Tiff, *s.* வெடுவெடுப்பு.
Tif'fin, *s.* சிற்றுண்டி, சிற்றுணவு, இடைப்போசனம்.
Tī'ger, *s.* புலி, வேங்கை.
young, புலிக்குட்டி, புலிப்பறழ்.
Tī'ger-ish, *a.* புலிக்குணமுள்ள, புலிபோன்ற, கொடுமையுள்ள.
Tīght, *a.* இறுக்கமான, நெருக்கமான.
Tīght'en, *v. a.* இறுக்குதல், விசித்தல், நெருக்குதல், பந்தித்தல்.
Tīght'en-ed, *a.* இறுக்கின, நெருக்கின.
Tīght'ly, *adv.* இறுக்கமாய், நெருக்கமாய், அழுத்தமாய், பந்தமாய்.
Tīght'ness, *s.* இறுக்கம், நெருக்கம், அழுத்தம், பந்தம்.
as stinginess, பிசுனம், லோபம், ஒறுப்பு, விடாமை.
Tī'gress, *s.* பெண்புலி, புலிப்பிணை, புலிப்பிணவு.
Tī'grish, *a.* புலிபோன்ற, புலிக்குணமுள்ள, கொடுமையுள்ள.
Tīke, *s.* நாட்டான், அனப்பியாசி.
Tīle, *s.* ஓடு, வீடுவேயோடு.
flat, தட்டோடு, தளவரிசைக்கல்.
Tīle, *v. a.* ஓடுபோடுதல், ஓட்டால்வேய்தல், ஓட்டால்மூடல்.
Tīl'er, *s.* ஓடுவேய்கிறவன், ஓடுமூடுகிறவன், வேய்தற்காரன்.
Tīl'ing, *s.* ஓடுவேய்கை.
Till, *s.* களை, புல்.
of a desk, &c., கள்ளறை.
Till, *v. a.* கமஞ்செய்தல், செய்கைபண்ணுதல், நிலம்பண்படுத்தல்.
Till, *adv.* மட்டும், அளவும், வரைக்கும்.
to-day, இன்றளவும், இன்றுவரைக்கும், இற்றைவரைக்கும்.
Till'a-ble, *a.* செய்கைபண்ணத்தக்க, பயிரிடத்தக்க, கிருஷிசெய்யத்தக்க.
Till'age, *s.* உழவுதொழில், கமத்தொழில், நிலச்செய்கை, வேளாண்மை.
Till'er, *s.* பயிரிடுகிறவன், பண்படுத்துகிறவன், வேளாளன்.
as young shoots, நொரு, மட்டம்.
as lever, சுக்கான்பிடி.
as till, கள்ளறை.
Tilt, *s.* கூடாரம், மேற்கட்டி.
a large hammer, சம்மட்டி.
in military exercise, சிலம்பம்.
a thrust, குற்று, பாய்ச்சுகை.
as inclination, ஒருச்சரிப்பு.
Tilt, *v. a.* ஒருச்சரித்தல், ஒருச்சாய்த்தல்.
to thrust, குத்துதல்.
to hammer, சம்மட்டியாலடித்தல்.
to cover, மூடுதல்.
Tilt, *v. n.* சரிதல், சாய்தல், சிலம்பம்பண்ணல், பாய்தல்.
Tilt'er, *s.* சிலம்பக்காரன், ஆயுதம்பாய்ச்சுவோன்.
Tim'ber, *s.* மரம், உத்திரம்.
hard, வைரமரம்.
soft, சோற்றிமரம்.
the heart of the palmyra, &c., சோற்றி, மரக்குடர்.

of tamarind, &c., ஷவரம், காழ்.
the white or sap of, சோற்றி.
Tim'ber, v. a. வீட்டுக்குமரம்போடுதல்.
Tim'ber-tree, s. வேலைக்குத்தகுந்தமரம்.
Tim'brel, s. (*see* Tabor.) மேளம், தண்ணம், பறை, மிருதங்கம்.
Tīme, s. நேரம், காலம், வேளை, பொழுது, போழ்து.
apparent, சூரியோதயம்.
favorable time, வாய்ப்பானசமயம், நற்சமயம், நற்காலம்.
future, வருங்காலம், எதிர்காலம்.
past, செல்காலம், இறந்தகாலம்.
piece, நாழிகைவட்டம்.
present time, நிகழ்காலம்.
a set time, தவணை, குறித்ததவணை.
as seasonably, ஏற்றகாலத்தில், தற்காலத்தில்.
life-time, வாழ்நாள், ஆயுள், ஆயுள்நாள்.
from time to time, வரவர, நாளுக்குநாள், காலத்துக்குக்காலம்.
unfavorable, துற்காலம்.
at the very time, அந்நேரமே, அச்சணமே, தற்சமயத்தில்.
in music, தாளப்பிரமாணம், தாளமாத்திரை.
in the mean time, இடையிலே, அதற்குள்ளே, அப்படியிருக்க.
in his time, அவன்காலத்திலே, அவனிருந்தநாளில்.
to lose time, காலந்தப்பவிடுதல், பிந்துதல், பின்போடுதல்.
to improve one's time, நன்றாய்க்காலக்ஷேமம்பண்ணுதல்.
Tīme, v. a. நேரங்குறித்தல், காலவரிசைப்படுத்தல்.
well-timed, வேளைக்கேற்ற, தற்காலசம்பவமான.
to give time, அவகாசங்கொடுத்தல், சமயந்தருதல்.
to set a time, தவணைகுறித்தல்.
to regulate, ஒழுங்குப்படுத்தல்.
Tīme'less, a. காலந்தவறின, தற்காலத்திற்செய்யாத.
Tīme'li-ness, s. தற்சமயம், ஏற்றகாலம்.
Tīme'ly, a. சமயத்துக்கடுத்த, தற்சமயமான, வேளைக்கடுத்த.
Tīme'-serv-er, s. சமயங்கண்டுநடக்கிறவன், இச்சகம்பேசுகிறவன்.
Tīme'-serv-ing, s. பேச்சுக்கெடுபடுகை.
Tīme'-serv-ing, a. வேளைகண்டுநடக்கிற, வேளைக்குத்தக்க, பேச்சுக்கெடுபடுகிற, பார்வைக்கூழியஞ்செய்கிற.
Tim'id, Tim'or-ous, a. கூச்சமுள்ள, கோழையுள்ள, ஒஞ்சிப்புள்ள, அச்சமுள்ள, வெருளுள்ள.
person, கூச்சமுள்ளவன், சங்கோசகாரன், கோழையன், வெருளி.
to be timid, ஒஞ்சித்தல், கூசுதல், கோழைப்படுதல், வெருளுதல்.
Tim'id-ness, Ti-mid'i-ty, s. ஒஞ்சிப்பு, கூச்சம், கோழை, அச்சம், சங்கோசம், உரோசம்.
Tim'or-ous-ly, adv. கூச்சமாய், கோழையாய், உரோசமாய்.
Tim'or-ous-ness, s. ஏழைமை, கூச்சம், கோழை, சங்கோசம், அச்சம்.
Tin, s. ஈயம்பூசினஇரும்பு, தகரம்.
plate, ஈயம்பூசப்பட்டஇரும்புத்தகடு, தகரத்தகடு.
Tin, v. a. ஈயம்பூசுதல், ஈயமிடுதல், தகரத்தால்மூடுதல்.
Tinc'ture, s. கஷாயம், குடிநீர்.
as tinge, நிறம், வன்னம்.
as any thing added, ஊட்டப்பட்டது, சேர்க்கப்பட்டது.
Tinc'ture, v. a. நிறமூட்டுதல், நிறப்பித்தல், உருசிப்படுத்தல்.
with smoke, புகையூட்டுதல்.
Tin'der, s. சீலைச்சாம்பல், சக்கிமுக்கிக்காந்தல்.
to be burnt to tinder, கருகுதல்.
Tin'der-box, s. தீத்தட்டி, தீத்தட்டிக்குடுக்கை, சக்கிமுக்கி.
Tīne, s. கவரிஞேர்கரு, கூர்.
Tin'-foil, s. மெல்லியஈயத்தகடு.
Tinge, s. இளநிறம், சாயம், வன்னம்.
Tinge, v. a. சாயமூட்டுதல், நிறங்கொடுத்தல், வன்னமூட்டடல்.
Ting'ent, a. சாயமூட்டுகிற.
Tin'-glass, s. ஓர்லோகம்.
Tin'gle, v. n. சுணைத்தல், சொறியெழல், சுள்ளிடுதல், உறைத்தல், எரிதல்.
ear tingle, அதிருதல்.

Tin'gling, s. கணைப்பு, சொறி, சன்னீ டு, உறைப்பு, எரிவு.
Tink, v. n. கிண்ணிடுதல்.
Tink'er, v. a. பாத்திரங்களைப்பழுதுபா ர்த்தல், புதுப்பித்தல்.
Tink'er, s. பாத்திரங்களைப்பழுதுபார்ப் போன்.
Tink'le, Tink'ling, s. } கிலுகிலுப்பு, கிணுகிணு ப்பு.
Tink'le, v. கிலுகிலுத்தல்.
Tin'man, s. ஈயவேலைகாரன், ஈயம்பூசி னஇரும்புப்பாத்திரவேலைகாரன்.
as a trader, ஈயம்பூசினஇரும்புப்பா த்திரவியாபாரி, தகரவியாபாரி.
Tin'ner, s. தகரச்சுரங்கத்தில்வேலைசெ ய்வோன்.
Tin'ning, s. ஈயப்பூச்சு, துத்தநாகவேலை.
Tin'sel, s. காக்காய்ப்பொன், கஞ்சத்த கடு, இரேக்கு.
Tin'sel, v. a. கஞ்சத்தகட்டால்மூடுதல், கஞ்சத்தகடுறுத்தல்.
Tin'sel, a. பிரகாசமுள்ள, சிறப்புள்ள, பளபளப்பான.
Tint, s. நிறம், இளநிறம், சாயம், வன்னம்.
Tin'y, a. சொற்பமான, சின்ன, சிறிய, அற்ப, கிஞ்சிலான.
Tip, s. நுனி, தலைப்பு, முனை, கூர்.
of the nose, நாசிநுனி, நாசாக்கிரம், மூக்காங்கொழுந்து.
of the tongue, நுனிநா.
Tip, v. a. நுனியாக்கல், கூரிடுதல், கூ ராக்கல்.
Tip'pet, s. கம்பளியுத்தரீகம், ரோமத்தா ற்செய்தஉத்தரீகம்.
Tip'ple, v. a. மஸ்துண்ணல், மதுபான ம்பண்ணல், அதிபானம்பண்ணல்.
Tip'pler s. மதுபானி, குடிகாரன்.
Tip'pling-house, s. மஸ்துக்கடை, மஸ் துச்சாலை.
Tip'sy, a. வெறிகொண்ட, மஸ்துள்ள.
Tip'tōe, s. நுனிக்கால், குந்துகால்.
to stand or walk on tiptoe, குந்துகா லில்நடத்தல், குந்துகாலில்நிற்றல்.
Tip'top, s. அறவுச்சம், தீர்ந்தஉச்சம்.
Ti-rāde', s. வல்லபிரசங்கம்.
Tīre, s. சில்வளையம், பண்டிவளையம், சக்கரவளையம்.
for the head, தலைப்பா, தலைப்பாகை.
for war, இரஸ்து, முஸ்தீது.
Tīre, v. a. தளர்த்தல், தொய்யப்பண்ண ல், இளைக்கச்செய்தல்.
by application, அலட்டுதல், தலைய டிபண்ணுதல்.
to be very tired, ஆயாசப்படுதல், ஓ ய்தல், தளர்தல்.
Tīre, v. n. தொய்தல், இளைத்தல்.
to tire out, தொய்ந்துபோதல், அலுத் துப்போதல்.
Tīr'ed-ness, s. இளைப்பு, தொய்வு, ஆ யாசம், சோர்வு.
Tīre'sŏme, a. அலுப்பான, ஆயாசமா ன, தொய்வான, அலைக்கழிவான, தொந்தரவான, இளைப்பாக்குகிற.
to be tiresome, அலுத்தல், சலித்தல், இளைத்தல், சோர்தல்.
Tīre'sŏme-ness, s. அலுப்பு, இளைப்பு, ஆயாசம், சோர்வு.
Tis'ic, Tis'ic-al, s. } (see Phthisic.) ஈழைக்க டுத்த, காசத்துக்குரிய.
Tis'sue, s. சரிகைப்புடைவை, கெண் டைப்புடைவை.
as series, தொடர், தொடை, தோ ரணி, கிரமம், நிரை.
of evils, தீமைத்தொடர்ப்பு.
Tis'sue, v. a. சரிகையிழைத்தல், சரி கைதொடுத்தல், பலவன்னப்படுத்தல்.
Tĭt'bit, s. (see Tidbit.) அதிருசியான து, மதுரமுள்ளது.
Tīth'a-ble, a. இறைக்குட்பட்ட, தீர் வைக்குட்பட்ட, ஆயங்கொடுக்கிற, வரிவைக்கத்தக்க, தசமபாகங்கொடு க்கக்கூடிய.
Tīthe, s. பத்திலொன்று, அடை, தசம பாகம், தீர்வை, ஆயம்.
Tīthe, v. a. தசமபாகம்வைத்தல், இறை வைத்தல், ஆயங்குறித்தல்.
Tīth'er, s. தசமபாகஞ்சேர்ப்போன்.
Tīth'ing, s. தசமபாகவரிகற்பிக்கை.
Tīth'ing-man, s. தசமபாகவிசாரணைகா ரன், ஊரதிகாரி, தலையாரி.
Tit'il-lāte, v. கூச்சங்காட்டுதல், அக் கிட்பாய்ச்சுதல்.
Tit-il-lā'tion, s. அக்கிட்கூச்சம்.
Tī'tle, s. பட்டம், பட்டப்பெயர், வக் கணை.
of a book, புத்தகப்பெயர், நூற்பெயர்.

of an estate, &c., ஆட்சிப்பத்திரம், காணியுறுதி.
to confer a title, பட்டங்கட்டுதல், பட்டஞ்சூட்டுதல்.
as a bond, உறுதி, சாதனம், சாதனபத்திரம்.
Tī'tle, *v. a.* பட்டந்தரித்தல், நாமஞ்சூட்டுதல், வக்கணைதரித்தல்.
as entitle, உரித்தாக்குதல்.
Tī'tle-pāge, *s.* தலைவாசகவொற்றை, முகவேடு, பாயிரவொற்றை.
Tī'tled, *a.* தலைவாசகமுள்ள, பட்டந்தரிக்கப்பட்ட.
Tit'ter, *s.* கிளுகிளுப்பு, உட்சிரிப்பு.
Tit'ter, *v. n.* கிளுகிளுத்தல், அடக்கிச்சிரித்தல், உள்ளேசிரித்தல்.
Tit'tle, *s.* குற்று, புள்ளி, அட்சரத்தினுறுப்பு, அற்பம், சொற்பம்.
Tit'tle-tat'tle, *s.* பசபசப்பு, பிதற்று.
Tit'u-lar, Tit'u-la-ry, *a.* பட்டப்பெயருள்ள, வக்கணையுள்ள.
Tit'u-lar-ly, *adv.* பட்டப்பெயர்மாத்திரமாய், வக்கணையாய்.
Tö, *prep.* கு.
and fro, அங்குமிங்கும்.
day, இன்று, இன்றைக்கு.
night, இன்றிரவு, இரவைக்கு.
morrow, நாளை, நாளைக்கு.
Tōad, *s.* மண்டூகத்தவளை, மண்டூகம்.
Tōad'-ēat-er, *s.* இச்சகன், முகத்துதிபேசுகிறவன், கீழ்மகன்.
Tōad'-stool, *s.* பேய்க்காளான், நிலக்காளான்.
Tōast, *s.* வாட்டினஅப்பம், சூடுகாட்டினஅப்பம்.
in drinking, மஸ்துவாழ்த்து.
Tōast, *v. a.* கருக்குதல், சுடுதல், வறுத்தல், வாட்டுதல்.
to be toasted, கருகுதல், வறுதல்.
in drinking, மஸ்துவாழ்த்துப்பெறல்.
To-bac'co, *s.* புகையிலை.
pipe, சுங்கான், உக்கா.
To-bac'co-nist, *s.* புகையிலைவத்தகன்.
Toc'sin, *s.* எறிமணி, சேமக்கலம்.
Tod'dy, *s.* கள்ளு, மது, சொல்விளம்பி, மாலி, சுமாலி, சுரை.
drinker, கள்ளுக்குடியன், சுராபானி, மதுவுண்போன்.
not intoxicating, கருப்புநீர், பதநீர்.
medicated, ஏரா.
to gather, கள்ளுச்சேர்த்தல், கருப்பநீர்ச்சேர்த்தல், பதநீர்வடித்தல்.
Tōe, *s.* கால்பெருவிரல்.
rings, கால்மோதிரம, காலாழி.
Tō'gā-ted, Tō'ged, *a.* போர்வையணிந்த.
To-geth'er, *adv.* கூடி, ஒருமிக்க, ஒக்க, ஒருசேர, கூட, ஒருங்காய்.
with, ஒடு, உடனே, அணு.
Toil, *s.* பிரயாசம், உழைப்பு, கடையாட்டம், வேலை.
as snare, தடம், கண்ணி, சுருக்கு.
Toil, *v. n.* பிரயாசப்படுதல், உழைத்தல், கடையாட்டப்படுதல், வேலைசெய்தல், வருந்திச்செய்தல்.
Toil'er, *s.* பிரயாசப்படுவோன்.
Toil'et, *s.* அலங்காரபூஷணபீடிகை, அணிகலபீடம்.
Toil'sŏme, *a.* பிரயாசமான், கடையாட்டமான, வருத்தமான.
Toil'sŏme-ness, *s.* அலுப்பு, வருத்தம், பிரயாசம், தொல்லை.
Tō'ken, *s.* அடையாளம், குறிப்பு, அறிகுறி, நிமித்தம், ஞாபகக்குறி.
with the eyes, கண்சாடை, சயிக்கினை, கண்சிமிட்டு.
with the hand, சமிக்கை, பயில், சைகை, சாடை, கைப்பயில்.
in printing, ஊறும் தாள்.
Tō'ken, *v. a.* குறித்தல்.
Tōle, *v. a.* தகாக்காட்டிவசப்படுத்தல்.
To-lē'do, *s.* கட்கம், வாள்.
Tol'er-a-ble, *a.* தரமான, நடபடியான, தரவழியான, ஒப்புரவான, நடுராசியான, மட்டான.
Tol'er-a-ble-ness, *s.* மட்டு, நடுத்தரம், சமநிலை, பொறுக்கத்தக்கநிலை.
Tol'er-a-bly, *adv.* உள்ளத்துக்குள்ளே, ஒருமட்டாய், ஒப்புரவாய்.
Tol'er-ance, *s.* சமர்த்து, சகிப்பு, தாங்குகை, பொறுமை.
Tol'er-ant, *a.* சகிக்கிறகுணமுள்ள, தாங்கும்பலமுள்ள, பொறுமையுள்ள.
Tol'er-āte, *v. a.* தாங்குதல், பொறுத்தல், சகித்தல், இடங்கொடுத்தல்.

Tol-er-ā'tion, s. தாங்குகை, பொறுதி, பொறுமை, சகிப்பு.
Tōll, s. ஆயம், கடமை, சுங்கம், தீர்வை.
gate, ஆயத்துறை, சுங்கச்சாவடி.
money, தீர்வைப்பணம்.
in milling, மாவரைக்குங்கூலி.
Tōll, v. a. சவமணியடித்தல்.
Tōll'-gath-er-er, s. ஆயக்காரன்.
Tom'a-hawk, s. கைக்கோடாலி, மழு, கண்டகோடாலி.
To-mā'to, s. தக்காளி, தக்காளிப்பழம்.
Tŏmb, s. சவக்குழி, பிரேதவறை, கல்லறை, கோரி, சவச்சேமம்.
Tŏmb, v. a. (see Entomb.) பிரேதஞ்சேமஞ்செய்தல், அடக்குதல்.
Tŏmb'less, a. கோரியில்வைக்கப்படாத, செமம்பண்ணப்படாத.
Tom'boy, s. தறுகுறும்பன், மூர்க்கன்.
a female, ஆண்மாரி, மூர்க்கைக்காரி.
Tŏmb'stōne, s. கோரித்துவாரக்கல், பிரேதமனைவாய்தறகல், மரணரேகைச்சிலை, கல்வெட்டு.
Tōme, s. புத்தகம், தோம்பு, ஏடு.
To-mor'rōw, s. நாளை, நாளைக்கு.
Tom'rig, s. ஆண்மாரி, தறுகுறும்பி.
Tom'tom, Tam'tam, s. பறை, மேளம், இடக்கை, மிருதங்கம்.
Tŏn, s. ஓர்நிறை.
Ton, s. நாகரீகம்.
Tōne, s. தொனி, இசை, நாதம்.
of the gamut, சரளி, சுரம்.
in prosody, ஓசைவேற்றுமை, சந்தவிகற்பம், சந்தம்.
as in medicine, வயிற்றின்குணம், குணபேதம்.
Tōn'ed, a. தொனியுள்ள.
Tongs, s. (pl.) குறடு, இடுக்கி, கொடிறு.
goldsmith's tongs, இலைக்குறடு.
Tŏngue, s. நா, நாக்கு, சிங்குவை, தாலு, தாரை.
as language, பாஷை, பாடை.
Tŏn-gu'ed, a. பாஷையுள்ள, நாவுள்ள.
Tŏngue'-tī-ed, a. கொன்னையுள்ள, நாத்திக்குள்ள, நாத்தெற்றுள்ள.
Ton'ic, s. சீரணமருந்து, கடுகம்.
in music, சுதி, மெட்டு.
Ton'ic, a. பெலப்படுத்துகிற, சீரணிப்பிக்கிற, தொனிக்கடுத்த.

To-nīght', adv. இன்றிரவு, இரவைக்கு.
Tŏn'nage, s. ஒருதோணிகொள்ளும்பாரம், தோணிகொள்ளளவு.
as duty, தோணியிறை.
for transportation, கேள்வு.
Ton'sil, s. உண்ணாக்கு.
Ton'sure, s. சவரம், சவுளம்.
Too, adv. உம், கூட, அளவுக்குமிஞ்சி, மீதகையாய், அதிகமாய்.
he too was there, அவனும்அங்கேயிருந்தான்.
Tool, s. கருவி, தளவாடம், ஆயுதம், எத்தனம், தட்டுமுட்டு, பணிமுட்டு.
set of tools, பணிமுட்டு, எர்ச்சீர்.
Tooth, s. பல், தந்தம், எயிறு, முறுவல்.
decayed, சூத்தைப்பல்லு.
drawers, தந்தகருஷணி, பற்பிடுங்கி, தந்தம்வாங்கி.
as fangs, கோரப்பல், நச்சுப்பல், வக்கிரதந்தம், வேட்டைப்பல்.
of a fork, &c., கூர், கரு, தலை, கவர்.
of a sickle, &c., கரு, கருக்கு, கூர்.
of a saw, பல், கருக்கு.
Tooth, v. a. பல்லராவுதல், பல்லுப்பல்லாய்க்கீறுதல்.
Tooth'-āche, s. பற்கொதி, பல்வலி.
Tooth'-brush, s. பற்குச்சு, தந்ததாவனக்குச்சு.
Tooth'-draw-er, s. பல்வாங்கி, பற்பிடுங்கி, தந்தகருஷணி.
Tooth'ed, a. பல்லுள்ள, பல்லுமுளைத்த.
Tooth'less, a. பல்லில்லாத.
man, பொழ்வாயன், பொக்குவாயன்.
Tooth'pick, s. பற்குத்தி.
Tooth'sŏme, a. ருசியுள்ள, சுவையுள்ள.
Top, s. தலை, நுனி, உச்சி, கூர், முனை.
of a carriage, கூடாரம்.
of the head, தலையுச்சி.
of a slant roofed house, முகடு, விடங்கம், விடபி, எலியோடி.
of a flat roof, மேற்றளம், உப்பரிகை, நிலாமுற்றம், மேல்மச்சு.
of a mountain, கொடுமுடி, சிகரம்.
of a temple, தூபி, சிகரம்.
to play with, பம்பரம்.
Top, v. முனைபண்ணுதல், தூபிவைத்தல், மேற்படுதல், முடிசூட்டுதல்.

as cover, அடைத்தல், மூடுதல், வேய்தல், மூய்த்தல்.
Tō'paz, s. புருடராகம், புட்பராகம்.
Tōpe, s. ஓர்சுறு, சுறவு.
as a grove, தோப்பு, சோலை.
Tōpe, v. a. மிகக்குடித்தல், அதிபானம் பண்ணுதல்.
Tō'per, s. குடிகாரன், அதிபானி, வெறியன், மதுபானி.
Top'-heav-y, a. தலைக்கனமுள்ள, தலைப்பாரமான.
Tō'phet, s. நரகம், சுடுகாடு.
Top'ic, s. பேசஎடுத்துக்கொண்டகாரியம், பிரசங்கநோக்கு.
in medicine, பூச்சுமருந்து, பற்று, துவாலை.
Top'ic-al, a. இடத்துக்குரிய, இடத்தைப்பற்றிய, தலத்துக்கடுத்த.
Top'ic-al-ly, adv. இடத்துக்குரியதாய்.
Top'-knot, s. சிறப்பானது, அழகானது.
Top'mōst, a. உச்சமான.
To-pog'ra-pher, s. தலவியாக்கியானி, தேசவர்த்தமானவியார்த்திகன்.
Top-o-graph'ic, Top-o-graph'ic-al, a. தேசவர்த்தமானத்துக்கடுத்த.
To-pog'ra-phy, s. தலவிபரம், தேசவர்த்தமானம், ஊர்ச்சங்கதி.
Top'ple, v. n. பிள்ளைகள்தத்திநடந்துவிழுதல், தத்தடியிடுதல்.
Top'sy-tur'vy, adv. அடிதலைதடுமாற்றமாய், தலைகீழாய், மேல்கீழாய்.
Torch, s. சூள், தீவத்தி, பந்தவிளக்கு.
bearers, தீவத்திக்காரர்.
Torch'-līght, s. பந்தவெளிச்சம்.
Tōre, s. செத்தற்புல்லு, செற்றை.
Tōre, pret. (see Tear.) கிழித்தல்.
Tor'ment, s. வேதனை, வாதை, நோக்காடு, ஆக்கினை, பீழை, தண்டனை.
unceasing, யாதனை, நரகாக்கினை.
Tor-ment', v. a. வேதனைசெய்தல், வாதித்தல், வதைத்தல், ஆக்கினைப்படுத்தல், வருத்தப்படுத்தல்.
Tor-ment'er, Tor-ment'or, s. வேதனைசெய்வோன், ஆக்கினைபண்ணுகிறவன், யாதனைகாரன்.
Tōrn, a. (see Tear.) சிலும்பலான, கிழிந்த, பீற்றலான, பீறலான.
garment, கந்தைத்துணி.
to be torn, சிலும்பலாதல், கிழிதல், பீறலாதல்.
Tor-nā'do, s. பிரசண்டமாருதம், சூறை, சூறுவளி, சுழல்காற்று.
Tor-pē'do, s. இடி, மின்.
as an engine, யுத்தக்கப்பல்களையுடைக்கும்படியிட்டுவைக்குங்குண்டு.
Tor'pent, a. விறைக்கச்செய்கிற.
Tor-pes'cence, s. விறைப்பு, திமிர், முறைப்பு, மரப்பு, திமிர்ப்பு.
Tor-pes'cent, a. விறைத்த, மரத்த, திமிர்த்த, மந்தமான, முறைப்பான.
Tor'pid, a. மந்தமான, திமிரான, இயக்கமற்ற, அசைவற்ற.
Tor-pid'i-ty, Tor'pid-ness, Tor'pi-tude, s. திமிர், திமிர்ப்பு, மந்தம், விறைப்பு, மரப்பு, முறைப்பு.
Tor'por, s. திமிர், திமிர்ப்பு, மரப்பு.
of system, mind, or body, மூடம், மந்தம், திமிர், விறைப்பு.
Tor-re-fac'tion, s. காய்ச்சுகை.
Tor're-fy, v. a. காய்ச்சுதல், வாட்டுதல், தீய்த்தல், வறுத்தல், உணக்கல்.
Tor'rent, s. நீரோட்டம், நீர்ப்பாய்ச்சல், தாரை, மிகுத்துவம்.
of rain, விடாமழை, சோனைவாரி, சோனைமழை, பெருமழை.
Tor'rent, a. நீரோட்டமுள்ள.
Tor'rid, a. உட்டணமான, வெப்பமான, காங்கையான, அனலான.
zone, உட்டணபூமி, உட்டணதிசை.
Tor'rid-ness, s. வரட்சி, அனல், அழல்வு, காங்கை, காந்தி, வெப்பம்.
Tor'sel, s. முறுக்கப்பட்டது, பின்னப்பட்டது, திரிக்கப்பட்டது.
Tor'sion, s. முறுக்கு, பின்னல், தெற்று.
Tort, s. சேதம், நட்டம், தீங்கு.
Tort'ile, a. முறுக்கப்பட்ட, திரிக்கப்பட்ட, வளையமாடப்பட்ட.
Tor'tious, a. சேதமான, நட்டமுள்ள.
Tor'toise, s. ஆமை, கூர்மம், உறுப்படக்கி.
jungle, காட்டாமை, காட்டுப்பட்டி.
land, சருகாமை, பறையாமை.
sea, கடலாமை.
shell of, அமுக்காணமயோடு.
Tort-u-ōse', Tort'u-ous, a. திருகலான, பின்னலான், திருகல்முறுகலான, புரிவிழுந்த.

Tort-u-os'i-ty, } s. } திருகல், பின்னல், திருகல்முறுகல், புரி, திருக்கு.
Tort'u-ous-ness,
Tort'ure, *s.* வேதனை, தண்டனை, அம்பாயம், வாதனை.
for the hand, கிட்டி, இடுக்குத்தடி.
on a rack, சக்கரவேதனை.
for the neck, அரிகண்டம்.
Tort'ure, *v. a.* சக்கரத்தில்வைத்துத்திரித்தல், வதைத்தல், வேதனைப்படுத்தல்.
Tort'ur-er, *s.* வேதனைப்படுத்துவோன்.
Tor'vi-ty, *s.* கருகினமுகம், கோட்டமுகம், வாட்டமுகம்.
Toss, *s.* எற்று, உச்சு, உந்துகை, எறி.
of the head, தலையசைப்பு.
Toss, *v. a.* அலைத்தல், எற்றுதல், உதறுதல், எறிதல், உந்துதல்.
a ball, எறிதல், உந்துதல்.
of waves, அலையெறிதல், திரைவீசுதல், அலைமோதுதல், அலையுந்துதல்.
Toss, *v. n.* அலைதல், தள்ளாடுதல், ஆடுதல், அக்கப்பாடுபடுதல், உழலுதல், புரளுதல், சுழலுதல்.
Tos'sel, *s.* (*see* Tassel.) குஞ்சம், தூக்கம், தொங்கல், தொங்கணி.
Toss'er, *s.* அலைப்போன், எற்றுவோன்.
Toss'ing, *s.* அலைவு, ஆட்டம்.
of a boat, தோணியாட்டம், அக்கப்பாடு, தளப்பம்.
Tō'tal, *s.* முழுத்தொகை, மொத்தம், அடங்கல், ஆகத்தொகை.
Tō'tal, *a.* முற்றின, முழு, சமஸ்த.
eclipse, முழுக்கிரகணம்.
To-tal'i-ty, *s.* மொத்தம், தொகை.
Tō'tal-ly, *adv.* முழுவதுமாய், முற்றாய், மொத்தமாய், தீர.
Tot'ter, *v. n.* அலைதல், ஆடுதல், தளம்புதல், அசைதல், தள்ளாடுதல்.
as a house, &c., தள்ளம்பாறுதல், நிலைகுலைதல், அசைதல்.
Tot'ter-ing, *a.* தளர்நடையுள்ள, அசைவுள்ள, தள்ளாட்டமான.
old man, தள்ளாட்டமுள்ளகிழவன், தளர்நடைக்கிழவன்.
Tŏuch, *s.* ஊறு, பரிசம், தொடுகை.
of a pencil, &c., ரேகை, கீறு, வரி.
Tŏuch, *v. a.* தொடுதல், தீண்டுதல், பரிசித்தல், ஒற்றுதல்.
the feelings, உறைக்கச்செய்தல், குற்றுதல், தைக்கச்செய்தல்.
on a touch-stone, உரைத்தல், தேய்த்தல், கீறிப்பார்த்தல்.
to touch up, புதுப்பித்தல், சிறப்பித்தல், திருத்துதல்.
to play on a musical instrument, வாசித்தல், கொட்டுதல்.
if you touch me I will strike you, நீ தொட்டுக்காட்டினால்நான்இட்டுக்காட்டுவேன்.
Tŏuch, *v. n.* உறுதல், முட்டுதல், பொருந்துதல், படுதல்.
Tŏuch'a-ble, *a.* பரிசிக்கக்கூடிய.
Tŏuch'hōle, *s.* பற்றுவாய், தீவாய்.
Tŏuch'i-ly, *adv.* வெடுவெடுப்பாய், பொருமையாய், கோபமாய்.
Tŏuch'i-ness, *s.* வெடுவெடுப்பு, வெடுக்கு, கோபம், பொருமை.
Tŏuch'ing, *pp.* தொட்டு, பற்றி, குறித்து, சுட்டி, இட்டு.
Tŏuch'ing, *a.* உணர்ச்சியுள்ள, படத்தக்க, உருக்கத்தக்க.
Tŏuch'ing-ly, *adv.* உணர்ச்சியாய்.
Tŏuch'-me-not, *s.* தொட்டாற்சுருங்கி.
Tŏuch'-nee-dle, *s.* உரையாணி, மாற்றுணி.
Tŏuch'stōne, *s.* உரைகல், கட்டளைக்கல்.
the metal as seen on the stone, தேய்மானம், சேதாரம்.
Tŏuch'wood, *s.* அக்கினிமூளத்தக்கஉக்கல்மரம்.
Tŏuch'y, *a.* வெடுவெடுப்புள்ள, வெடுக்குள்ள, கோபமுள்ள.
Tŏugh, *a.* உரமுள்ள, பலமுள்ள, முறியாத, இறுக்கமான, ஒடியாத.
to be tough, பலத்தல், உரத்தல், இறுகுதல், முறியாமை.
Tŏugh'en, *v. a.* வலிக்கப்பண்ணுதல், உரப்பித்தல், வைரப்படுத்தல், பெலப்படுத்தல், ஸ்திரப்படுத்தல்.
Tŏugh'en, *v. n.* வலித்தல், வைரித்தல், பெலப்படுதல், திரப்படுதல்.
Tŏugh'ly, *adv.* வைரமாய், உரமாய்.
Tŏugh'ness, *s.* பலம், முறியாமை, இறுக்கம், ஒடியாமை.
Tŏur, *s.* பயணம், பிரயாணம்.

Töur'ist, s. பயணக்காரன், யாத்திரைபண்ணுகிறவன், பிரயாணி, தேசாந்திரி, பரதேசி.
Tŏurn'a-ment, s. இராவுத்தர்சிலம்பம், குதிரைவீரரின்விளையாட்டு, மாவுத்தர்யுத்தாப்பியாசம்.
Tŏurn'i-quet, s. நரம்புகளைஇறுக்கிஇரத்தந்தடுக்கிறசூத்திரம்.
Touse, s. கிழிப்பு, இழுப்பு, ஈர்ப்பு.
Touse, v. a. இழுத்தல், ஈர்த்தல், கிழித்தல்.
Tou'sel, Tou'sle, v. a. குழப்புதல், சிக்குப்படுத்தல்.
Tōw, s. சணற்சிம்பு, சணற்றும்பு.
Tōw, v. a. கட்டியிழுத்தல், இழுத்தல்.
Tōw'age, s. இழுத்துக்கொண்டுபோகுகை, இழுவைக்கூலி.
price paid for, இழுவைக்கூலி.
Tō'ward, Tō'wards, adv. எதிரே, நேரே, சார்பாக, பக்கமாக, திக்காக, நோக்காக.
as nearly, கொஞ்சங்குறைய.
Tō'ward-li-ness, Tō'ward-ness, s. பயிற்றப்படத்தக்கதன்மை, அமைவு.
Tō'ward-ly, a. பயிற்றப்படக்கூடிய, அமையக்கூடிய, படியக்கூடிய.
Tow'el, s. ஈரமுதலியதுடைக்குந்துண்டுப்புடைவை, கைக்குட்டை, பரிவட்டம், ஒற்றுடை.
for wiping idols, திருவொற்றுடை.
Tow'er, s. கோபுரம், தூபி, முடி.
as strong hold, துருக்கம்.
hemispheric, on temples, பண்டிகை.
including the building below, விமானம்.
Tow'er, v. n. உன்னதமாயெழும்புதல், உயருதல், ஓங்குதல்.
Tow'er-ing, a. உயரமான, உயர்ச்சியுள்ள, உன்னத, உச்சமுள்ள.
Tōw'-līne, s. இழுவைக்கயிறு, தொடுவைத்தாம்பு, இழுவைவடம்.
Town, s. பட்டணம், நகரி, நகரம்.
suburbs of, பேட்டை, பக்கணம்.
walled, நகரம், நகரி, புரம், புரி.
Town'-bred, a. நாகரீகமான, பட்டணப்பழக்கமான.
Town'-clerk, s. நகரிக்கணக்கன், கோயிற்கணக்கன், நகரவிருத்தாந்தலேககன், தேசசங்கதிஎழுதுவோன்.
Town'ship, s. கோயிற்பற்று.
Towns'man, s. நகரத்தான், நகரியான், பட்டணத்தான், நாகரீகன், சதுரன்.
Town'-talk, s. ஊர்க்கதை.
Tōw'-rōpe, s. இழுவைவடம், தொடுவைக்கயிறு.
Toy, s. விளையாட்டுடைமை, விளையாட்டுக்கருவி, சுசுலம்.
Toy, v. n. சருவுதல், கைச்சரசம்பண்ணுதல், கிரீடைபண்ணுதல், லீலையாடுதல்.
Toy'er, s. விநோதி, இலீலாவிநோதன்.
Toy'ish, a. இலீலாவிநோதமுள்ள.
Toy'ish-ness, s. இலீலாவிநோதம்.
Toy'man, s. சுசுலவியாபாரி, விளையாட்டுடைமைகள்விற்போன்.
Toy'shop, s. சுசுலவியாபாரசாலை.
Tōze, v. a. (see Touse.) இழுத்தல், கிழித்தல், வலித்திழுத்தல்.
Trāce, s. சுவடு, அடிச்சுவடு.
Trāce, v. n. தொடருதல், துருப்பிடித்துப்போதல், அடிச்சுவடுபிடித்துப்போதல், குறிபிடித்துப்போதல்.
letters, &c., எழுத்தின்மேலெழுதுதல், மாதிரிப்படிவரைதல்.
Trāce'a-ble, a. அடிச்சுவடுபிடிக்கக்கூடிய, சுவடுபிடிக்கக்கூடிய.
Trā'cer, s. அடிச்சுவடுபிடிப்போன், துருப்பிடிப்போன்.
Trā'cer-y, s. சிலாசித்திராலங்காரம், கற்சித்திராலங்காரம்.
Trā'ces, s. (pl.) குதிரைக்கழுத்துவட்டவார், இழுவைவார்.
Trā'che-a, s. குரல்வளை, மிடறு.
Track, s. காலடி, சுவடு, அடிச்சுவடு.
a mark, குறி, அடையாளம்.
a road, பாதை, வழி.
of beasts, இறக்கம், சுவடு.
Track, v. a. அடிபிடித்துத்தொடருதல், சுவடுபிடித்துப்போதல், மணம்பிடித்துப்போதல், துருப்பிடித்துப்போதல்.
Track'less, a. அடிச்சுவடில்லாத.
Tract, s. சிறுபுத்தகம், பத்திரிகை, பத்திரம், கையேடு.
of land or country, தேசம், நாடு, நிலம், ஊர்.
Tract-a-bil'i-ty, Tract'a-ble-ness, s. பயிலக்கூடியதன்மை, கீழ்ப்படிவு, அமைவு, படிவு.

Tract'a-ble, *a.* படியத்தக்க, பழக்கப்பட த்தக்க, சாதுவான.
to be tractable, சொற்கேட்டல், படிதல், அமைதல்.
Tract'a-bly, *adv.* அமைவாய், கீழ்ப்படிவாய், படிவாய்.
Tract'ate, *s.* பத்திரம், பத்திரிகை, சிறுபுத்தகம், கையேடு.
Tract'ile, *a.* அடித்துநீட்டக்கூடிய, தட்டிநீட்டக்கூடிய.
Tract-il'i-ty, *s.* அடித்துநீட்டக்கூடியதன்மை, நெகிழத்தக்கதன்மை.
Tract'ion, *s.* இழுக்கை, ஈர்க்கை.
as attraction, கவர்ச்சி, இழுப்பு, வாங்குகை, வலிப்பு.
Trāde, *s.* வியாபாரம், தொழில், செட்டு, கச்சவடம், வாணிகம்.
by a company or firm, கூட்டுவர்த்தகம், கூட்டுவியாபாரம்.
Trāde, *v.* வியாபாரஞ்செய்தல், வாணிகஞ்செய்தல், தனவசியம்பண்ணல்.
by buying and selling, கொள்வன, விற்பன, வாணிகம்.
as managing business, செட்டுத்தொழில், வியாபாரம், வாணிகம்.
Trād'er, *s.* வர்த்தகன், வியாபாரி, செட்டி, கச்சவடக்காரன், வணிகன்.
Trādes'man, *s.* தொழிலாளி, வியாபாரி, வர்த்தகன், வணிகன்.
Trāde'-wind, *s.* காலபோகக்காற்று, பருவக்காற்று, முறைமைக்காற்று.
Tra-di'tion, *s.* பாரம்பரை, ஐதிகம்.
belief in, பாரம்பரியநம்பிக்கை.
Tra-di'tion-al, Tra-di'tion-a-ry, *a.* கன்னபாரம்பரையான, தொன்றுதொட்டுக்கேள்வியால்வந்த.
Tra-di'tion-al-ly, *adv.* பாரம்பரையாய், பரவணியாய்.
Tra-di'tion-er, Tra-di'tion-ist, *s.* பாரம்பரைநியாயவாதி, ஐதீகவாதி.
Trad'i-tive, *a.* பாரம்பரியமாய்வரக்கூடிய, பரவணியாய்வருகிற.
Tra-dūce', *v. a.* பழித்தல், குற்றஞ்சாற்றல், கோட்சொல்லல், பின்புறணிபேசுதல், அலர்தூற்றுதல்.
Tra-dūce'ment, *s.* அலர்தூற்றுகை, குற்றஞ்சாற்றுகை, பழிகூறுகை.

Tra-dūc'er, *s.* குற்றஞ்சாற்றுபவன், கோட்காரன், கோட்சொல்லி, அலர்தூற்றுவோன், பின்புறணிக்காரன்.
Tra-duc'tion, *s.* பரப்புகை, பிறப்பிக்கை, பாரம்பரியம்.
Tra-duct'ive, *a.* பரம்பக்கூடிய, ஒன்றினின்றுதொற்றக்கூடிய.
Traf'fic, *s.* வர்த்தகம், வாணிகம், வியாபாரம், செட்டு, கச்சவடம்.
by a company, கூட்டுவியாபாரம்.
Traf'fic, *v.* வியாபாரஞ்செய்தல், கொள்வனவுவிற்பனவுசெய்தல், பண்டமாற்றல், வர்த்தகஞ்செய்தல்.
Traf'fick-er, *s.* வர்த்தகன், வாணிகன், தனவசியன், செட்டி.
Tra-gē'di-an, *s.* நாடகக்காரன், அபிநயன், கூத்தாடி, நாடகப்புலவன்.
Trag'e-dy, *s.* நாடகம், வாசாப்பு, வேஷக்கூத்து, பிராணசேதசம்பவம்.
Trag'ic, Trag'ic-al, *a.* சீவனேவதைக்கத்தக்க, புலம்பலான, துக்கமான, பிரலாபமுள்ள, பிராணசேதமான.
Trag'ic-al-ly, *adv.* பிரலாபமாய், புலம்பலாய், சாவுக்குரித்தாய்.
Trag'ic-al-ness, *s.* மரணத்துக்குரிமை, புலம்பு, பிராணமோசம்.
Trag-i-com'e-dy, *s.* வேஷக்கூத்து.
Trag-i-com'ic-al, *a.* வேஷக்கூத்தான.
Trag-i-com'ic-al-ly, *adv.* வேஷக்கூத்தாய், வேஷமரணமாய்.
Trāil, *s.* அடிச்சுவட்டின்மணம்.
of a garment, தோகை, தொங்கல்.
of arms, துப்பாக்கிகைவாருய்க்கொண்டுபோகை.
Trāil, *v. a.* மணம்பிடித்துப்போதல், இழுவைக்குறிபார்த்துப்போதல், அடிச்சுவடுபொர்த்துப்போதல், இழுபடல்.
the leg in walking, காலிழுத்துநடத்தல், கால்சீய்த்துநடத்தல்.
Trāin, *s.* ஒழுங்கு, கிரமம், கோவை, தொடர்ச்சி, நிரை, அடுக்கு, பத்தி.
of gun-powder, தீவாய்மருந்து, பற்றுவாய்மருந்து, இரஞ்சகம்.
of a garment, (*see* Trāil.) தோகை, நிலந்தோய்தொங்கல்.
as life-guard, மெய்காவலர், கஞ்சுகர், பரிவாரம், மெய்காப்பாளர்.

as retinue, பரிசாரசனம், பரிவாரம், தண்டு, சூழ்வோர்.
Trāin, *v. a.* வளர்த்தல், இயக்குதல், ஒழுங்குப்படுத்துதல், சிட்சித்தல், திருத்துதல், படிப்பித்தல், பயிற்றுதல்.
up, பதப்படுத்துதல், பயிற்றுதல், பழக்குதல், நடத்தல், சிட்சித்தல்.
to draw, இழுத்தல்.
to be trained, படிதல், பழகுதல், பயிலுதல், அப்பியாசப்படுதல்.
Trāin'a-ble, *a.* வசப்படுத்தக்கூடிய, படிவிக்கக்கூடிய, பயிற்றக்கூடிய.
Trāin'-beār-er, *s.* தோகைதாங்கி, தொங்கலேந்திச்செல்பவன்.
Trāin'er, *s.* வளர்க்கிறவன், படிப்பிக்கிறவன், பழக்குகிறவன், இயக்குகிறவன், பயிற்றுவோன்.
Trāin'ing, *s.* வளர்க்கை, பயிற்றுகை, படிவிக்கை, அப்பியாசப்படுத்துகை.
Trāin'-oil, *s.* திமிங்கலநெய்.
Trāipse, *v. n.* (*vul.*) குதலைக்கேடாய் நடக்குதல், அசுத்தமாய்நடக்குதல்.
Trāit, *s.* குறி, வரி, ரேகை, போங்கு.
of character, நடை, நடைப்போங்கு.
Trāi'tor, *s.* கள்வன், வஞ்சகன், நம்பிக்கைத்துரோகி, இராசதுரோகி; சதிகாரன், பாதகன், கர்த்தத்துரோகி, பட்சவிரோதி, பட்சபாதகன்.
Trāi'tor-ous, *a.* வஞ்சகமுள்ள, நம்பிக்கைத்துரோகமான, இராசதுரோகமான, சதியுள்ள, பட்சபாதகமுள்ள.
Trāi'tor-ous-ly, *adv.* வஞ்சகமாய், நம்பிக்கைத்துரோகமாய், சதியாய்.
Trāi'tor-ous-ness, *s.* நம்பிக்கைத்துரோகத்தனம், சதியுடைமை.
Trāi'tress, *s.* நம்பிக்கைத்துரோகி, பாதகி, பட்சவிரோதி, இராசதுரோகி.
Tra-ject', *v. a.* எறிதல், வீசுதல்.
Tra-jec'tion, *s.* உருவப்பாய்ச்சுகை.
Tra-ject'o-ry, *s.* தூமகேதுகட்சம்.
Tram'mel, *s.* கட்டு, விலங்கு, வல்லி, நிகளம், தொடை, கண்ணி, வலை, பாகபாத்திரக்கொளுவி, பந்தனம்.
as shackles, தளை, விலங்கு.
Tram'mel-ed, *v. a.* கட்டுதல், பிடித்தல், பிணைத்தல், தடுத்தல், விலங்குபோடுதல், தொழுவிலடைத்தல்.
Tra-mon'tane, *s.* பரதேசி, அன்னியன்.
Tra-mon'tane, *a.* அன்னியமான, மலைக்கப்பாலுள்ள, காட்டுத்தனமான.
Tramp, *v. a.* பிரயாணம்பண்ணுதல், தேசாந்திரியாய்ப்போதல்.
